T.N.L.C. Debates

Official Report

1983

No.: 1, 2, 3

D
1,32'N83
83.202.1-3;1
43195

[ISSUED 4—4—1984

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

TUESDAY 1st NOVEMBER 1983

Volume 202 (No. 1)

©
GOVERNMENT OF TAMIL NADU
1984

Legislative Council Department
Fort St. George, Madras-600 009.

Price: 2.75 Paise

பொருளடக்கம்


| | பக்கங்கள் |
| --- | --- |
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | |
| (ii) தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. | vii |
| (iii) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல் | ix—xi |
| தமிழ் மாநிலம் அமைந்து 26 ஆண்டு நிறைவினையொட்டிப் பாராட்டு .. | 1—4 |
| வினாக்கள்— விடைகள் | 4—27 |
| அறிவிப்புகள்— | |
| (1) பாரதியார் பல்கலைக் கழகப் பேரவைக் குழுவிற்கு உறுப்பினர் தேர்தல் .. | 27 |
| (2) பாரதிதாசன் பல்கலைக் கழகப் பேரவைக் குழுவிற்கு உறுப்பினர் தேர்தல் .. | 27 |
| கவன ஈர்ப்பு— | |
| கன்னியாகுமரி மாவட்டத்தில் மழையின்மையால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து. | 27—29 |
| தனி உறுப்பினர் அலுவல்— | |
| (1) சட்ட முன்வடிவு— | |
| தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குபடுத்தல்) திருத்த சட்ட முன்வடிவு .. | 29—30 |
| (2) தனி உறுப்பினர் தீர்மானம்— | |
| கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு அரசுப் பணிகளின் நியமனத்தில் முன்னுரிமை வழங்குவது குறித்து—தொடர்ச்சி | 30—84 |
| அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் | 85 |

143195
D
V211,321N83
N83 · 812·1-311



# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU.

THIRU SUNDARLAL KHURANA.

*Members of the Council of Ministers.*

1. THIRU (DR) M. G. RAMACHANDRAN, Chief Minister Minister in charge of Public, General Administration, Indian Administrative Service and other All-India Services, District Revenue Officers, Deputy Collectors, Police Prevention of Corruption, Planning, Molasses, Archaeology and Excise.

2. THIRU (DR.) V. R. NEDUNCHEZHIYAN, Minister in charge of Finance, Legislature, Elections, Food, Youth Service Corps, Price Control and Ex. Servicemen.

3. THIRU S. RAMACHANDRAN, Minister in charge of Electricity, Iron and Steel Control.

4. THIRU K. A. KRISHNASAMY, Minister in charge of Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. THIRU S. D. SOMASUNDARAM, Minister in charge of Revenue, Commercial Taxes and Census.

6. THIRU R. M. VEERAPPAN, Minister in charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and Grant of Liquor Permits.

7. THIRU C. ARANGANAYAGAM, Minister in charge of Education including Technical Education, Official Language.

8. THIRU K. KALIMUTHU, Minister in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. THIRU C. PONNAIYAN, Minister in charge of, Law Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. THIRU P. KULANDAIVELU, Minister in charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. THIRU S. RAGHAVANANDHAM, Minister in charge of Labour, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. THIRU (DR.) H. V. HANDE, Minister in charge of Health.

13. THIRU S. MUTHUSAMY, Minister in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

14. THIRU S. THIRUNAVUKKARASU, Minister in charge of Large Scale Industries, Mines and Minerals and Textiles and Handloom.

15. THIRU S. N. RAJENDRAN, Minister in charge of Prohibition excluding grant of liquor permits, Passports, P.W.D. and Establishment matters relating to Public Works Department.

16. THIRU M. VIJAYASARATHI, Minister in charge of Adi-Dravidar Welfare, Stationery and Printing, Government Press. News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment Training.

17. THIRU R. SOUNDARARAJAN, Minister in charge of Nutritious Meals.

18. THIRU S. R. RADHA, Minister in charge of Environmental Pollution Control, Housing and Slum Clearance Board.

19. THIRU M. R. GOVENDHAN, Minister in charge of Backward Classes.

20. THIRUMATHI GOMATHI SRINIVASAN, Minister in charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians, Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

21. THIRUMATHI VIJAYALAKSHMI PALANISAMY, Minister in charge of Khadi.

22. THIRU Y. S. M. YUSUF, Minister in charge of Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

23. THIRU R. ARUNACHALAM, Minister in charge of Rural Industries including Village, Cottage and Small Industries.

24. THIRU K. KALAIMANI, Minister in charge of Fisheries.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

---

### தமிழ்நாடு ஆளுநர் :

திரு. சுந்தர்லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் இதர அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல் மற்றும் ஆயத்துறை.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—நிதி, சட்ட மன்றம், தேர்தல்கள், உணவு. இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—மின்சாரம் மற்றும் இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (பால்வளத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பால், பால்பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—வருவாய், வணிக வரிகள் மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலைய அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத்தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சிமொழி மற்றும் கைத்தறி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் வேளாண்-பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றிய சட்டம், குழுமங்கள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம் மற்றும் கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—நகராட்சி நிர்வாகம், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராம தானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நல அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர் நலம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—மக்கள் நல்வாழ்வுத்துறை.

13. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

14. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (தொழில்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பெருந்தொழில்கள், சுரங்கமும் கனிவளமும் மற்றும் நெசவாலைகள்.

15. மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் (பொதுப்பணித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக), கடவுச்சீட்டு, பொதுப்பணித்துறை மற்றும் பொதுப்பணித்துறை அலுவல்கள் சம்பந்தமாக.



16. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—ஆதி திராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், செய்தித் தாளிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத்தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

17. மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் (சத்துணவுத் திட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—சத்துணவுத் திட்டம்.

18. மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா (சுற்றுப்புறச் சூழல் தடுப்பு அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—சுற்றுப்புறச் சூழல் தடுப்புத்துறை, வீட்டுவசதி மற்றும் குடிசைமாற்று வாரியம்.

19. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—பிற்பட்டோர் நலன்.

20. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, இரவலர் இல்லம், அனாதை இல்லம், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

21. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—கதர்.

22. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (நீர்ப்பாசனத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட நீர்ப்பாசனம் மற்றும் வஃபு.

23. மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் (ஊரகத் தொழில்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—கிராம, குடிசை மற்றும் சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

24. மாண்புமிகு திரு. க. கலைமணி (மீன்வளத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—மீன்வளம்.

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

---

**மாண்புமிகு மேலவைத் தலைவர்**

டாக்டர் ம. பொ. சிவஞானம்

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்**

புலவர் புலமைப்பித்தன்.

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

1. திரு. எஸ். முத்து
2. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
3. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்
4. திரு. ஏ. ஜே. தாஸ்.

**மேலவைச் செயலாளர்**

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ. பி.எல்.

**சார்புச் செயலாளர்**

திரு. த. ப, டில்லிதுரை, பி.எஸ்சி., பி.எல்.

**விவாதப் பதிப்பாளர்**

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

**தலைமை நிருபர்**

திரு. ச. சுவாமிநாதன், எம்.ஏ.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 1 அருணாசலம், திரு. க. .. | நியமனம். |
| 2 ஆறுமுகம், திரு. சோ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 3 ஆனந்தம், திரு. வி.வி.வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 4 இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்). .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5 இராதா, திரு. எஸ். ஆர். (சுற்றுப்புற சூழல் தூய்மைக்கேடு கட்டுப்பாடு அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 6 இராமமூர்த்தி, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 7 இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 8 கண்ணப்பன், திரு. காடுவெட்டி .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 9 கலைமணி, திரு. க. (மீனளத் துறை அமைச்சர்) .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 10 சங்கரலிங்கம், திரு. ம. .. | திருநெல்வேலி—கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 11 சந்தோஷம், திரு. த. | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 12 சனார்த்தனம், டாக்டர் இரா. .. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 13 சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 14 சிவஞானம், டாக்டர் ம. பொ. (மாண்புமிகு தலைவர்). .. | நியமனம். |

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 15 | சீத்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 16 | சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி. | நியமனம். |
| 17 | சுப்பிரமணியம், திரு. எம். பி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 18 | சுவாமிநாதன், திரு. ஜி. | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 19 | தாமஸ், திரு. பி. ஆர். .. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 20 | தாமோதரன், திரு. ஏ. ஆர். .. | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 21 | தாரா செரியன், திருமதி. | நியமனம். |
| 22 | தாஸ், திரு. ஏ. ஜே. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 23 | நல்லசிவன், திரு. ஆ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 24 | புலமைப்பித்தன், புலவர் (மாண்புமிகு துணைத் தலைவர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 25 | மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி. | நியமனம். |
| 26 | மாணிக்கம், திரு. ப. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 27 | மியாகான், திரு. ஜே. எம். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 28 | மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர், — திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி. |
| 29 | முத்து, திரு. எஸ். .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 30 | முத்துசாமி, திரு. செ. .. | சேலம்—தர்மபுரி,-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 31 | முத்தையா செட்டியார், டாக்டர் எம். ஏ. | நியமனம். |
| 32 | முனுசாமி, திரு. பி. .. | நியமனம். |



| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 33 | யூசுப், திரு. யா. சை. மு. (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்) .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 34 | லீலாவதி, செல்வி ஆ. .. | சென்னை—செங்கல்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 35 | லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. .. | வடஆற்காடு - தென்ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 36 | வசந்த பை, திரு. ஜி. .. | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 37 | வலம்புரி ஜான், திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 38 | வள்ளிமுத்து, திரு. ஈ. வெ. அ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 39 | வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 40 | வெங்கடேசன், திரு. ஈ. எஸ். | நியமனம். |
| 41 | ஜேப்பியார், திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 42 | ஹண்டே, டாக்டர் எச். வி. (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) .. | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 43 | வெற்றிடம் .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 44 | ஷை | ஷை |
| 45 | ஷை | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46 | ஷை | ஷை |
| 47 | ஷை | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 48 | ஷை | ஷை |
| 49 | ஷை | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 | ஷை | செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். | | தொகுதி. |
|---|---|---|
| (1) | | (2) |
| 51 | வெற்றிடம் | கோயம்புத்தூர்—நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 52 | ஷை | ஷை |
| 53 | ஷை | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54 | ஷை | ஷை |
| 55 | ஷை | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56 | ஷை | ஷை |
| 57 | ஷை | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 | ஷை | ஷை |
| 59 | ஷை | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 | ஷை | ஷை |
| 61 | ஷை | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 | ஷை | ஷை |
| 63 | ஷை | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

**செவ்வாய்க்கிழமை, 1983 நவம்பர் 1.**

**ஐப்பசி 15, ருத்ரோத்காரி, திருவள்ளுவராண்டு-2014.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில், மாண்புமிகு மேலவைத் தலைவர் (**டாக்டர் ம. பொ. சிவஞானம்**) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. தமிழ் மாநிலம் அமைந்து 26 ஆண்டு நிறைவினையொட்டிப் பாராட்டு.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு மேலவை உறுப்பினர்களே, இன்று நவம்பர் முதல் நாளாகும், இந்த நாளிலேதான் சரியாக 26 ஆண்டுகளுக்கு முன்பு—1956 ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாளிலே, மொழி அடிப்படையில், தென்னகம் நாலு வேறு மாநிலங்களாகத் திருத்தியமைக்கப் பட்டது.

அந்த முறைப்படி, கேரள மாநிலம் தன்னிடமிருந்த கன்னியாகுமரி மாவட்டத்தைத் தமிழ் நாட்டுக்குத் தந்தது. அதன் விளைவாக இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக திரு. சங்கரலிங்கம் அவர்களும், நம்முடைய அவையின் கொறடாவாக திரு. ஜேப்பியார் அவர்களும் இருக்க முடிகிறது. அது மட்டுமல்ல ;

முப்பெரும் கடலால் சூழப்பட்ட ஒப்பற்ற கன்னியாகுமரி, சங்க காலத்திலிருந்து "வடவேங்கடம் தென் குமரி" என்று ஏட்டளவில் கல்லூரிகளில் பாடபோதனை அளவிலே மட்டும் இருந்து வந்த அந்தத் தென்குமரி முனை, இந்த நாளில்தான் தமிழகத்திற்குத் திரும்பி வந்தது. இயற்கை அழகொழுகும் அந்தப் பகுதியைத் தமிழராகிய நாம் திரும்பவும் பெற்றோம்.

அது மட்டுமல்ல, 1953 அக்டோபர் 1-ல் ஆந்திரம் பிரிந்துபோன பிறகும், சென்னை நகரத்தின் மீது ஆந்திரர்கள் உரிமை கொண்டாடிக் கொண்டேயிருந்தார்கள். மாநிலப் புனரமைப்புக் கமிஷனுக்குக் கூட மனு கொடுத்தார்கள். ஆனால், நீதிபதி பசல் அலி கமிஷன் தீர்ப்புப்படி, இந்த நவம்பர் முதல் தேதியில்தான் சென்னை நகரம் தமிழகத்திற்குத்தான் சொந்தம் என்பது உறுதி செய்யப்பட்டு, தமிழகத்தின் தலைநகரம் ஆனது. அன்று இந்தத் தமிழகம் அமைந்த காரணத்தால்தான், நாம் இன்றைக்கு எத்தனையோ சிறப்புகளை எய்தி வருகிறோம். நூற்றாண்டு விழாக்கள், உலகத் தமிழ் மாநாடு, இப்படி எத்தனை எத்தனையோ விழாக்களை நடத்தி வருகிறோம்.

ஸ்ரீலங்காவிற்காக இந்த அரசு பெரிய அளவுக்கு அக்கறை எடுத்துக்கொண்டு பாடுபடுகின்றது. இதெல்லாம் தமிழகம் தனி அரசு மாநிலமாக அமைந்ததன் விளைவுகளாகும்.

கடந்த 26 ஆண்டுகளில் தமிழர்களாகிய நாம் புதிய வாழ்வைப் பெற்றோம், புனர் வாழ்வைப் பெற்றோம். புரட்சிகரமான மாறுதல்களை நமக்காக நாமே நடைமுறைப்படுத்த முடிந்தது. இந்தப் புனித நாள் நாம் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டிய நாளாகும். கேரளத்தில், ஆந்திரத்தில், கருநாடகத்தில் இது அரசு விடுமுறையோடு கூடிய நாளாகக் கொண்டாடப்படுகிறது. நமக்கு இது ஒரு வேலை நாளானதால், இந்த அவையிலேயே நான் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கேனும் தெரியும், மற்றவர்கள் மறந்திருந்தாலும்—எத்தனையோ தடைகளைத் தாண்டி, எத்தனையோ சதிகளைத் தாண்டி, எத்தனையோ எதிர்ப்புகளைக் காத்து இந்தத் தமிழ் மாநிலத்தை அமைக்க வேண்டியிருந்தது. பத்தாண்டுக் காலம் தொடர்ந்து பாடுபட வேண்டியிருந்தது. ஆண்டவன் இன்று என்னை வாழ வைத்ததால், இங்கே அமர வைத்ததால், இந்தப் புனிதமான நாளிலே மகிழ்ச்சியை அடைய முடிகிறது, உங்களோடு பங்கிட்டுக் கொண்டு—இந்த அவையும் என்னோடு பங்கிட்டுக் கொள்ளும் என்று நினைக்கிறேன்.

புதிய தமிழகத்திற்கு என்னுடைய வாழ்த்துக்களையும் தமிழ் மக்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களையும் 26 ஆண்டுகளுக்கு முன்பு அமைந்த இந்தத் தமிழக அரசுக்கும் தெரிவித்து—இது என்றென்றும் கலையாமல், குறையாமல்—தமிழகம் தனி அரசை நிலையாகப் பெற்றிருக்க வேண்டும் என்று வாழ்த்து கூறுகிறேன்.

*** மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஒரு மிகச் சிறந்த, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நாளைப்பற்றிய நினைவை, இந்த அவையில் தாங்கள் நினைவுகூர்ந்து, இந்த நாளைப் பெற்று, இந்த நாள் நமக்கு வந்ததனாலே நன்மைகளையும் பெற்று, அவைகளை அனுபவித்து, சிறப்போடு ஆட்சியை நடத்துவதற்கு அமைந்திருக்கிற தமிழகத்தைப்பற்றி, இந்த நல்ல நாளில் அது தமிழகம் என்று அழைக்கப் படுகிற சூழ்நிலைக்காகப் பாடுபட்டவர்களில் முதல் வரிசையில், தலைமை யேற்றுப் பாடுபட்ட தாங்களே இந்த மன்றத்திற்கும் தலைமையேற்று இந்த நாளை நினைவுபடுத்துகிற ஒரு மிகச் சிறந்த, வரலாற்றுச் சிறப்புமிக்க நாளில் நான் தமிழக அரசின் சார்பிலும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர்





புரட்சித் தலைவர் அவர்கள் சார்பிலும், குறிப்பாக இந்த அவை முன்னவர் என்கிற, என்னுடைய தகுதிக்கு மீறிய, அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற அந்தச் சூழ்நிலையில், தாங்கள் தெரிவிக்கிற வாழ்த்துக்களோடு எங்களுடைய வாழ்த்துக்களையும், நன்றியையும் இணைத்து, எங்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம், ஆந்திர, கருநாடக, கேரள அரசுகள் தங்களுக்கென்று ஒரு மாநிலம் அமைந்த நாளை, தனி மாநிலம் அமைந்த நாளை, விடுமுறை அளித்து, விழாவாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். சில நேரங்களில், 10 மாதம் சுமந்த தாய், அந்தக் குழந்தையை பெறுகிறபோது அடைகிற மகிழ்ச்சியிருக்கிறதே, தன் துன்பத்தையெல்லாம் மறந்து, அந்த மழலை முகத்தைப் பார்த்த உடனே அந்தத் தாய் பெறுகிற மகிழ்ச்சி இருக்கிறதே, அது மற்றவர்களாலே அடைய முடியாத மகிழ்ச்சியாகும். அப்படிப்பட்ட மகிழ்ச்சியைத் தாய் மட்டுமே அடைய முடியும். அப்படித்தான், தாங்கள் இங்கே ஒரு தாயாக இருந்து இந்தத் தமிழ் மாநிலம் அமைய வேண்டும் என்பதற்காகப் பாடுபட்டு—10 மாதம் சுமந்து பெற்ற தாயாக இங்கே நீங்கள் விளங்கி—இதை நீங்கள் நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறீர்கள், நம்முடைய பேறிஞர் அண்ணா அவர்கள் இந்த மாநிலத்திற்கு ‘தமிழ் நாடு’ என்று பெயர் வைத்தார்கள். அந்தப் பெயரை வைத்துவிட்டு, அந்தப் பெயர்சூட்டு விழா நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வருகிறபோது, அவரைப் பார்த்து மருத்துவர்கள் அதில் கலந்து கொள்ளக்கூடாது என்று தடுத்தார்கள். ஆனால், இப்படிப்பட்ட ஒரு விழாவில் கலந்து கொண்டு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவிக்காமல் நான் இருக்க வேண்டிய அவசியமில்லை. இந்த மகிழ்ச்சியிலே, இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்வதற்கு என்னுடைய உடல் நலக் குறைவு தடையாக இருக்குமானால், அதைப்பற்றியும் நான் கவலைப்படமாட்டேன் என்று சொல்லி, தங்களையே வைத்து அந்த விழாவில் பாராட்டி மகிழ்ந்ததை இந்த நல்ல நேரத்தில் நான் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ் நாடு என்று அமைந்ததற்குப் பிறகுதான், இந்த மாநிலத்தினுடைய மொழி தமிழ் மொழி என்கிற உரிமையை நம்மாலே நிறைவேற்ற முடிந்தது. இல்லையானால், தெலுங்கும், கன்னடமும், மலையாளமும் நம்முடைய மாநிலத்தில் ஒன்றாக இணைந்திருந்தபோது, ஆங்கிலமோ அல்லது வேறு ஒரு மொழியோதான் இந்த மாநில மொழியாக இருந்திருக்க முடியும், நம்முடைய தாய் மொழியை வலியுறுத்த நமக்கு வாய்ப்புகூட கிடைத்திருக்காது.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், பெருந்தலைவர் காமராஜர் போன்றவர்கள், இதற்கு முன்னாலே இருந்த நம்முடைய டாக்டர் கலைஞர் கருணாநிதி போன்றவர்கள் இன்றைக்கு இருக்கிற நம்முடைய தமிழகத்தின்

[திரு. இராம. வீரப்பன்] [1983 நவம்பர் 1

நாயகர், மாண்புமிகு புரட்சித் தலைவர் போன்றவர்கள் ஒரு தமிழ் மாநிலத் தினுடைய முதல்வராக வர முடியும் என்ற நம்பிக்கையே தமிழ் மாநிலம்—தமிழ் மொழியை ஆட்சி மொழியாகக் கொண்ட மாநிலம்—அமைந்ததற்குப் பிறகுதான் அதற்கான அஸ்திவாரமே இடப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதனுடைய தொடர்ச்சியாகத்தான், இந்த அவையில் அவை முன்னவராக, தமிழைக்கூட சரியாகப் படிக்காத, படிக்கும் வாய்ப்பிழந்த ஒரு சாதாரண மனிதனான நான் இங்கே நிற்கும் சிறப்புப் பெற்றிருக்கிறேன். இவைகளெல்லாம், வரலாற்றில் இடம் பெற வேண்டிய நிகழ்ச்சிகள், நிச்சயமாக இடம் பெற்றுக் கொண்டிருக்கிற நிகழ்ச்சிகள், இடம் பெறப் போகிற நிகழ்ச்சிகள். எனவே, தமிழகம் இதை ஒரு விடுதலை நாளாக அல்லது விடுமுறை விட்டு கொண்டாடப்படும் விழா நாளாகக் கொண்டாடவில்லை என்றாலும், அந்த விடுதலை உணர்வு, விழா உணர்வு நம்முடைய அனைவருடைய மனதிலும் இருக்கிறது. அதற்காகப் பாடுபட்டவர்கள் அனைவரையும் தங்களுடைய உருவத்தில் பார்க்கிறோம். அவர்களையெல்லாம் வணங்குகிறோம். அவர்களுக்கெல்லாம் தலைமையேற்று நடத்தி, அந்த உரிமையைப் பெற்றுத் தந்த, 'தமிழ், தமிழ், தமிழ்' என்று ஒலிக்க வைத்துக் கொண்டிருக்கிற உங்களுடைய தலைமையில் இந்த அவையில் இந்த நாளை நினைவுபடுத்தி பெருமை பெறுவதில் தமிழக அரசும் இந்த அவையும் தங்களுடைய மகிழ்ச்சியையும் அதற்கெல்லாம் காரணமாக இருந்த தங்களுக்கு வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது என்று கூறி அமைகிறேன். வணக்கம்.

## 2. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Revision of Pay of Agriculture Graduates.*

*11 *Q.*—THIRU F. R. THOMAS and THIRU C. R. LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether there is any disparity in the scale of pay of Agriculture Demonstrators in Agriculture Department and that of Agriculture Graduates in High Schools having bifurcated courses; and

(*b*) if so, the reasons therefor ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) மற்றும் (இ) ஆம். விவசாய பட்டதாரி ஆசிரியர்களின் ஊதிய விகிதத்தை மாற்றுவது குறித்த கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.



1983 நவம்பர் 1]

(முற்பகல் 9-40)

**திரு. பா. ரா. தாமஸ்:** பி.எஸ்ஸி. (அக்ரி.) என்ற விவசாயப் பாடத்தைப் படித்த ஆசிரியப் பெருமக்கள் கல்வித் துறையில் இருமுனைப் பாடத் திட்டத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பி.டி. ஆசிரியர்களுக் குரிய ஊதிய விகிதம் தரப்பட்டது. இப்போது அவர்களுக்கு ரூபாய் 450 என்ற அடிப்படைச் சம்பளம்தான் தரப்படுகிறது. ஆனால் வேளாண்மைத் துறையிலே அவர்களுக்கு 525 ரூபாய் அடிப்படைச் சம்பளம் வழங்கப்படுகிறது. இருமுனைப் பாடத்திட்டத்திலே நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் மேலும் பி.டி. பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இந்தக் காரணத்தை அடிப்படையாக வைத்தும், அதிகமான பதவி உயர்வு பெறக்கூடிய வாய்ப்பு இல்லை யென்பதாலும், அதற்கு ஈடாக ஊதிய விகிதம் கொடுக்கக் கூடிய வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழி செய்வார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** விவசாயப் பட்டதாரி ஆசிரியர் களுக்கு தற்போதுள்ள ஊதிய விகிதம் ரூபாய் 525—25—625—30—855—35—925. துணை வேளாண்மை அலுவலர்களுக்குள்ள ஊதிய விகிதம் ரூபாய் 600—30—750—35—890—40—1,050 என்று இருக்கிறது. இதுமாதிரி வித்தியாசம் இல்லாமல் தர வேண்டுமென்பது கோரிக்கை. வித்தியாசம் இருப்பதற்குக் காரணம்—விவசாயப் பட்டம் பெற்று ஆசிரியர்களாக இருக்கின்றவர்களைவிட விவசாயத் துறையிலே பணியாற்றுகிறவர்களுக்குப் பணி கொஞ்சம் அதிகமாக இருப்பதுதான். இதனால்தான் இந்த வித்தியாசம் இருந்து வந்தது. இருந்தாலும் அவர்களுக்குப் பணி உயர்வு போன்ற நிலைமைகள் இருக்கிற காரணத்தால், நமக்கு ஆசிரியர்கள் இங்கே விரும்பி வரக்கூடிய நிலைமையைத் தோற்றுவிக்கும் பொருட்டும், அந்த அடிப்படையிலே கோரிக்கை வந்திருக்கிற காரணத்தாலும், இப்போது நாம் அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** 1948 ஆம் ஆண்டில் முதன் முதலாக பள்ளிகளில் விவசாயப் படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து பி.எஸ்ஸி. (அக்ரி.) கல்வித் தகுதி நிர்ணயிக்கப்பட்டதால், வேளாண்மைத் துறையில் பி.எஸ்ஸி. (அக்ரி.) படித்தவர்களுக்கு வழங்கப்பட்ட ஊதிய விகிதமே நிர்ணயிக்கப்பட்டு, 30—9—1972 வரை அதே ஊதிய விகிதம் கல்வித் துறையிலும் வழங்கப்பட்டு வந்தது. இடைக் காலத்திலே பி.எஸ்ஸி. (அக்ரி.) கிடைக்காத காரணத்தாலே பி.எ. (அக்ரி.) படித்தவர்களும். பி.எஸ்ஸி. (பாட்டனி) படித்தவர்களும் நியமிக்கப்பட்டார்கள். 1972-க்குப் பிறகு வேளாண்மைத் துறையில் விவசாயப் பட்டதாரிகள் வாங்கிய ஊதியத்தை

கல்வித் துறையில் பெற்றுக் கொண்டிருந்த நிலை மாறி, இவர்களுக்குக் குறைவான ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் பொதுப் பணித் துறையில் பொறியியல் பட்டம் பெற்றவர் வாங்கிய ஊதியம் கல்வித் துறையில் பொறியியல் போதிக்கின்ற இன்ஸ்டரக்டர்களுக்கும் தரப்பட்டு ஆணை வெளியிடப் பட்டுள்ளது. இந்த வேறுபாடுகளைக் கருத்திற் கொண்டு, பரிசீலனை செய்ய வேண்டும். பல ஆண்டுகளாக ஆசிரியர்கள் அரசுக்கு முறையீடு செய்திருக் கிறார்கள். இந்த முறையீட்டைப் பரிசீலனை செய்வதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்காக, என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பரிசீலனையில் ஆசிரியர்களுக்குச் சாதகமான முடிவைத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** 1972 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வேளாண்மைத் துறையின் ஆணையின்படி, மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி, இந்த வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதைத் தவிர்க்க வேண்டுமென்று சில கோரிக்கைகளைப் பரிசீலித்துக் கொண்டிருக் கிறார்கள். துறையிலே பரிசீலித்துக் கொண்டிருக்கிறபோது, என்னவென்று தெரியாமல், நான் இங்கே பதில் சொல்லுவது சரியாகாது. பரிசீலனையை விரைவுபடுத்த வேண்டுமானால், நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. பா. ரா. தாமஸ்:** பள்ளிகளில் பணியாற்றுகிற இந்த ஆசிரியர்களுடைய எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. அரசுக்கு இதனால் அதிகமாக நிதி நெருக்கடி ஏற்படாது. தொழிற் கல்வி சிறப்பாக நடைபெற வேண்டு மென்றால், தகுதியுள்ள திறமைமிக்க ஆசிரியர்கள் வேண்டும். அந்த அடிப்படையை மனதிலே கொண்டு இதை அரசு விரைவிலே அமுல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** எண்ணிக்கை குறைவாக இருக்கிறது அல்லது அதிகமாக இருக்கிறது என்ற வாதத்தை வைத்து நாம் பேசவில்லை. பிரச்சினைகளை ஆராய்ந்து தக்க முடிவுகளை எடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். நம்முடைய நோக்கம் வித்தியாசம் இருக்க வேண்டுமா கூடாதா என்பதல்ல. இந்தப் பதவிக்கு விரும்பி வரக்கூடிய அளவிற்கு இருக்க வேண்டும். அப்படியில்லை என்றால், இங்கே வருகிறவர்கள் வேறு வேலைக்குப் போனால், அங்கே அதிக ஊதியம் கிடைக்கும் என்ற நிலைமை ஏற்படும். தொழிற் கல்வியை விரிவுபடுத்திச் சிறப்பாக நடத்த வேண்டுமென்ற சூழ்நிலையில் இந்தப் பரிசீலனையை விரைவுபடுத்தி நல்ல முடிவு எடுக்க முயற்சி செய்வோம்.





**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய உறுதிமொழிக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தேர்வுநிலைக்கான அரசாணை வெளியிட்டபோதும், இந்த விவசாய ஆசிரியர்களைப்பற்றிக் குறிப்பிட மறந்துவிட்டார்கள். விடுபட்டதன் காரணமாகவோ அல்லது மறதியின் காரணமாகவோ தொழிற் கல்வி போதிக்கும் விவசாய ஆசிரியர்கள் விடுபட்டிருக்கிறார்கள். இதையும் மனதிலே கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு முடிவு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** என்னிடத்திலே தரப்பட்டிருக்கிற விவரப்படி, இவர்களுக்கும் தேர்வுநிலை உண்டு. 600—30—750—35—890—40—1,050 என்று பெறுகிறார்கள். சிறப்பு நிலை இல்லையென்றால், அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

## சைனிக் பள்ளி, அமராவதி

*12 **வினா.—திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், அமராவதியில் உள்ள சைனிக் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு, நபர் ஒன்றுக்கு, உணவிற்கு நாளொன்றுக்கு எத்தனை ரூபாய் அனுமதிக்கப்படுகிறது?

(இ) இத்தொகை எந்த ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்டது?

(உ) இத்தொகை ஒருநாள் உணவிற்குப் பற்றாக்குறையாக இருப்பதால், மாணவர்களது உடல்நலம் பாதிக்கப்பட்டு இராணுவத் தேர்வில் புறக்கணிக்கப் படுகின்றனர் என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(எ) ஆம் எனில், உணவுத் தொகையை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இருக்கிறதா?

(ஐ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ரூபாய் நான்கு.

(இ) மே 1978.

(உ) இல்லை.

(எ) மற்றும் (ஐ) 6—7—1982 அன்று நடைபெற்ற சைனிக் பள்ளிக் கழகத்தின் ஆளுநர் குழுக் கூட்டத்தில் சைனிக் பள்ளி மாணவர்களுக்கு தற்பொழுது உணவிற்காக ஓர் மாணவனுக்கு நாளொன்றிற்கு ஒதுக்கப்

பட்டிருக்கும் ரூ. 4 மிகக் குறைவாக உள்ளதால் அதனை ரூ. 7-ஆக உயர்த்தலாம் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. இம்முடிவை ஒட்டி பள்ளி முதல்வர் மேற்கண்டவாறு உணவுத்தொகையை உயர்த்துவது குறித்து அனுப்பியுள்ள கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** சைனிக் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு உணவிற்காக நாள் ஒன்றுக்கு நான்கு ரூபாய் கொடுப்பதால் அவர்கள் மற்ற மாணவர்களோடு போட்டியிட்டு வெற்றிபெற முடியாத நிலையில் கடந்த நான்கைந்து ஆண்டுகளாக இருந்து வருகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. 1978-ல் நிர்ணயிக்கப்பட்ட இதை ஏழு ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று வந்த கோரிக்கை அரசின் பரிசீலனையில் எவ்வளவு நாள் இருக்கிறது? பரிசீலனை அவர்களுக்குச் சாதகமாகப் போய்க் கொண்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தம்முடைய அமராவதி சைனிக் பள்ளியில் மட்டுமல்லாமல், எல்லாப் பள்ளிகளிலும் இந்த நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. 6—7—1982 அன்று சைனிக் பள்ளிகள் குழுவினுடைய ஆளுநர் கூட்டம் டில்லியில் நடைபெற்றபோது, நாள் ஒன்றுக்குக் கொடுக்கும் நான்கு ரூபாயை ஏழு ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். இதிலே மத்திய அரசு பணம் தருவது பற்றிய பிரச்சினைகள் இருந்து கொண்டிருப்பதால், பரிசீலனை முடிவுறவில்லை. அதை விரைவுபடுத்தி தக்க முடிவை எடுக்குமாறு துறைக்கு எடுத்துச்சொல்வோம்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மத்திய அரசை எத்தனை சதவீதம் தர வேண்டும்? மாநில அரசு எத்தனை சதவீதம் தர வேண்டும்? டில்லியில் கூட்டிய சைனிக் பள்ளிகளின் ஆளுநர் கூட்டத்தில் முடிவு செய்ததில் மத்திய அரசு தர ஒத்துக் கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** சைனிக் பள்ளி மாணவர்களின் உணவுக்காக இதுவரையில் மைய அரசு எந்த உதவியும் மாநில அரசிற்கு அளித்ததில்லை. ஆனால், தற்போது அளிக்கப்பட்டு வரும் உணவுக் கட்டணத்தை ரூ. 7 ஆக உயர்த்துவதன் பொருட்டு படிப்புதவித் தொகையில் ஏற்படும் கூடுதல் செலவில் பாதியை மைய அரசு ஏற்றுக்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. பா. ரா. தாமஸ் :** தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் இந்தப் பள்ளியில் படித்துவிட்டு இராணுவத்திற்குச் செல்லும்போது தகுதியற்றவர்கள் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறதா? இதனால் எந்த அளவிற்கு நமது மாநிலம் பாதிக்கப்பட்டிருக்கிறது?





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பாதுகாப்புப் படையில் சேர்வதற்கு, உடல் ஆரோக்கியத் தேர்வு மட்டுமல்லாமல் நேர்முகத் தேர்வு, பரீட்சையில் தேர்வு போன்று பல கட்டங்களைத் தாண்ட வேண்டியுள்ளது. கோவை சைனிக் பள்ளியிலிருந்து சென்ற மாணவர்கள் சத்துணவு குறைவு என்ற காரணத்திற்காக நிராகரிக்கப்படவில்லை என்று அப்பள்ளியின் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

## தேசிய முதியோர் கல்வித் திட்டம்

● 13 வினா.—**திரு. க. அருணாசலம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1979-80 மற்றும் 1980-81 ஆம் ஆண்டுகளில், தேசிய முதியோர் கல்வித் திட்டத்தின்கீழ் பயன்பெற்றோர், மாவட்ட வாரியாக எத்தனை பேர்?

(இ) இவர்களின் தொடர்கல்விக்கு, மாநில அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ), (இ) மற்றும் (உ) ஒரு விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. க. அருணாசலம் :** தேசிய முதியோர் கல்வித் திட்டத்தில் படிப்பவர்கள் எல்லாம் 15 வயதிற்கு மேற்பட்டு இருப்பவர்கள். ஏற்கெனவே பல பேர் தொழில் செய்கிறவர்கள். சிலர் விவசாயத் தொழிலைச் செய்கிறவர்கள். பத்து, பதினைந்து சதவீதம் பேர் கிராமக் கைத்தொழிலைச் செய்கிறவர்கள். அவர்களுக்கு மேலும் அந்தத் தொழிலில் சிறப்பான பயிற்சியைக் கொடுத்து, தன்னிறைவுத் திட்டம், வேலைக்கு உணவுத் திட்டம் போன்றவைகளையெல்லாம் சேர்த்து முழு நேரமாக அவர்களுக்குத் தொழில் திறமையோடு கூடிய பயிற்சி கொடுத்தால், அரசு ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய தொழிற் கல்வியும் வெற்றிபெறும், அவர்களும் பயனடைவார்கள். ஆகவே ஓரிரு வட்டாரங்களிலாவது இத்திட்டத்தை பரிட்சார்த்தமாக அரசு எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

**திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, தொழிற் கல்வி, தொழிற் பயிற்சி தருவது என்பதை வேறு திட்டங்களின் மூலம் கிராம இளைஞர்களுக்குத் தந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் முதியோர் கல்வித் திட்டத்தின்

---

@ 86-87 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

கீழ் இது தொடர் கல்வி எனப்படும். இதில் பத்து மாதம் படித்துவிட்டு, பிறகு நாம் அவர்களைக் கவனிக்காமல் விட்டுவிட்டால், படித்ததை மறந்து பழைய நிலைக்கு வந்துவிடுவார்கள் என்பதைக் கருத்திலே கொண்டு, அதைத் தடுப்பதற்கு இந்த முதியோர் தொடர் கல்வி மையங்களை குறிப்பிட்ட சில இடங்களிலே மாத்திரம் தொடர்ந்து நடத்தி வருகிறோம். அதையே பரவலாக நடத்த வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, முதியோர் கல்வி என்பது ஒரு சிறந்த திட்டம். கல்வி அறிவின்மையைப் போக்க அரசே மிகக் கூடுதலான தொகையைச் செலவு செய்து அதைப் பரப்பி வருகிறது. இந்த நேரத்திலே அரசினுடைய திட்டத்தைக் கேலி செய்கின்ற வகையிலே, அதிலே ஒரு தவறான நோக்கம் இருப்பதாக, அதற்காக முதியோர் கல்வி நிலையத்திற்கு வருகிறார்கள் என்பது போலவும், அந்தத் தவறான நோக்கத்திற்காக வந்து, அது அங்கே நடைபெறவில்லை என்று அவர்கள் எல்லாம் பள்ளியைக் காலி செய்துவிட்டுச் சென்றுவிடுகிறார்கள் என்பதுபோலவும் சொல்கின்றார்கள். 15 வயது முதல் 35 வயது வரை உள்ளவர்களுக்கு இந்தக் கல்வி போதிக்கப் பட்டு வருவதாக நம்முடைய திட்டம் இருந்தாலும், 60, 70 வயதான கிழவர்கள் எல்லாம்கூட அதிலே வந்து உட்கார்ந்து பால் உணர்ச்சிக்கு என்று வந்து விட்டுத் திரும்புவதாக 'முந்தானை முடிச்சு' என்ற படம் வந்திருக்கிறதே அதில் அதற்காக வந்து திரும்புவதாகவே சித்தரிக்கப் பட்டிருக்கிறதே, அந்தப் படத்தை தடை செய்ய அரசு முயற்சி செய்யுமா? அந்தப் பகுதியையாவது வெட்டிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமா? இது ஆசிரியர்களை இழிவுபடுத்துவதாக இருக்கிறது. நம்முடைய திட்டத்தையும் கேவலப்படுத்துவதாக இருக்கிறது. இது அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, நாடெங்கும் சினிமாவிலே சில பகுதிகள் கேலி, கிண்டல் செய்வதுபோல அமைவது நாம் எங்கும் பார்த்து வருகின்ற ஒன்றுதான். அதையெல்லாம் வெட்டுவது, தடை செய்வது என்று ஆரம்பித்துவிட்டால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களோ தானோ சினிமா பார்க்கின்ற வாய்ப்பையே இழந்துவிடுகின்ற நிலைதான் வரும். அப்படிப்பட்ட நிலைமைக்கு நாம் வரவேண்டியதில்லை. அதுவும் கிண்டல், கேலி என்றால் அதை அவர்களே பார்த்து ரசித்துக்கொண்டிருக் கிறார்கள் என்றுகூட கருத வேண்டியிருக்கிறது. அதற்காக யாரும் அந்தத் தரப்பிலேயிருந்து வந்து சொல்லவில்லை. மிகவும் தவறு, எங்களையெல்லாம் மிகவும் கேவலமாகச் சொல்லுகின்றார்கள் என்று அந்தத் தரப்பிலிருந்து





எதுவும் வரவில்லை. உறுப்பினர் அவர்கள்தான், இப்போது இதைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஆனால் மற்றவர்கள் அதை ரசித்துக்கொண்டிருக்கின்றார்கள் என்று நான் கருதுகிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, 6,100 முதியோர் கல்வி மையங்கள் தமிழகத்திலே இருந்தன. அது இன்று 100 மையங்களாகக் குறைக்கப்பட்டு, மத்திய அரசு உதவி இல்லை என்று காரணம் காட்டுவதால், நம்முடைய மாநிலத்தினுடைய முதியோர் கல்வித் திட்டத்திலே பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே மத்திய அரசை அணுகி மீண்டும் வலியுறுத்தி, முதியோர் கல்வித் திட்டத்திற்கு 1979-80-லே கொடுத்த அதே தொகையை மீண்டும் மத்திய அரசு தொடர்ந்து கொடுக்கின்ற முயற்சியை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, 6,100 மையங்கள் என்று போடப்பட்டிருப்பது ஆரம்ப நிலையில், அதாவது முதல் 10 மாதம் பயிற்சி பெறுவது, கல்வி பெறுவது. இந்த 100 மையங்கள் என்பது அந்த முதல் 10 மாதம் படித்த பிறகு, அவர்கள் அதை மறந்துவிடாமல் இருப்பதற்காக தொடர் கல்வி மையங்கள் என்று புதிதாக நாம் ஆரம்பித் திருக்கிறோம். நாம் அப்படி 100 மையங்கள் ஆரம்பித்திருக்கிறோம். அதிகமாக ஆரம்பிக்கவேண்டிய தேவை இருக்கிறது. மற்றபடி அந்த முதியோர் கல்வி நிலையங்கள் ஒவ்வொரு பகுதியிலும் ஆரம்பித்து, அவர்கள் படித்த பிறகு வேறு இடத்திலே அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் அளவுக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், மாநில அரசின் செலவில் தான் 6,100 மையங்கள் நடைபெறுகின்றன. இடையில் மத்திய அரசு தொண்டு நிறுவனங்களுக்கு, சமூக சேவா ஸ்தாபனங்களுக்குத் தருகின்ற நிதி உதவியை நிறுத்தியதால்தான் கொஞ்சம் மையங்கள் குறைகின்றன. மறுபடியும் அவர்கள் தர ஆரம்பித்திருக்கின்றார்கள்.

## *Worshop Assistants.*

*14. *Q.*— THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf Thiru D. SANTOSHAM) and Thiru P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that skilled and Workshop Assistants, who joined any of the Government Polytechnics in the State within the period from 1960 to 1964, still remain in the same post, while their juniors have been promoted.

(b) if so, the reasons therefor; and

(c) the action proposed to be taken thereon ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(இ) 25—11—1960 மற்றும் 19—8—1964 அன்று பணியில் அமர்ந்த இருவர் போதிய கல்வித் தகுதி பெற்றிராத காரணத்தால் பதவி உயர்வு தரப்படவில்லை.

(உ) கல்வித் தகுதி பெற்றபின் அவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, பொதுவாக தொழில் நுட்பத் துறையிலே பணியாற்றுகிற ஆசிரியப் பெருமக்களுக்கு அவரவர்கள் பதவிக்கேற்ற படிப்புத் தகுதி இருந்தும்கூட, அவ்வப்போது அவர்களுக்குப் பணியிலே உயர்வு தரப்படாமல் இருக்கின்றார்கள். வெளியிலேயிருந்தும் எடுக்கப்படும் நிலை உருவாகியிருக்கிறது. உதாரணமாக, ஓர்க்ஷாப் இன்ஸ்ட்ரக்டர்ஸ், போர்மேன், போர்மேன் இன்ஸ்ட்ரக்டர்ஸ் என்ற இந்த மூன்று பணிகளில் இருப்பவர்கள் உயர்வு பெறக்கூடியவர்களாக இருந்தும், அவர்களுக்கு வாய்ப்பை மறுத்து வெளியிலே இருந்து எடுக்கிறார்கள். இந்த நிலையை மாற்ற அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இது மாணவர்களுக்குப் போதிக்கக்கூடிய ஒரு பதவியாக இருப்பதால், இந்தக் கல்வித் தகுதி, தொழிற் பயிற்சித் தகுதியைத் தளர்த்துகின்ற பிரச்சினையிலே மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அவர்களிடத்திலே படிக்கின்ற மாணவர்களுக்குத் தரமான கல்வி கிடைக்காது. அதற்குப் பிறகு அப்படிப் படித்து வருகின்ற மாணவர்கள் ஆசிரியர்களாக வரும்போது, அவர்களிடம் படிக்கின்றவர்களுடைய தரம் இன்னும் தாழ்ந்ததாகப் போய்விடும். ஆகவே இந்தத் தகுதிகளைத் தளர்த்துவது என்பது மிகவும் கடினமான ஒன்று. ஆனால் இப்போது இருக்கின்ற கருத்தின்படி, பல பேர்களுக்குத் தளர்த்தித் தந்து விட்டோம். அதுவும் இப்போது இருப்பவர்கள் இரண்டு பேர்கள். அவர்களும் இங்கு சாதாரண தகுதிகளைப் பெற்றுக்கொள்வார்களானால், பதவி உயர்வு தரலாம். எட்டாவது வகுப்பு தேறியிருக்க வேண்டும். கீழ்க்கண்ட தொழில் அல்லது தொழில் நுட்பக் கல்வி பெற்றிருக்க வேண்டும் :—

1. தொழில் நுட்பக் கல்வி சர்டிபிகேட்,

2. தொழில் பள்ளி சர்டிபிகேட்,



3. தேசிய தொழில் கல்வி சர்டிபிகேட்,

4. தேசிய பயிற்சி சர்டிபிகேட்.

மற்றும் பல தொழில் தொழிலகத்தில் பதவிகள் அல்லது சமமான பதவிகளில் குறைந்தது ஐந்து ஆண்டுகளாவது பணியாற்றியிருக்க வேண்டும். இந்தத் தகுதிகளைப் பெறுவது ஒன்றும் கடினம் இல்லை. அதுவும் அங்கே இருக்கின்ற காரணத்தினாலேயே இதைப் பெற்றுவிட்டார்களானால், நாம் உடனடியாகப் பதவி உயர்வைத் தரலாம். தந்திருக்கின்றார்கள். இரண்டு பேர்தான் பாக்கி இருக்கின்றார்கள்.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, தொழில் நுட்பத் துறையிலே அண்மையிலே தொழில் நுட்ப அறிவு, படிப்பு உள்ளவர்களை நேரடியாக தொழில் நுட்பக் கல்லூரிகளில் பயிற்றுவிக்க எடுக்க வேண்டும் என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையிலே, எடுப்பதாக பத்திரிகையிலே வந்தது. ஆனால் நம்முடைய தொழில் நுட்பத் துறையிலேயிருந்து சில துறைகளுக்கு, பி.டபிள்யூ.டி., அக்ரிகல்சர் துறைகளுக்குப் போன பொறியாளர்கள் எல்லாம் திரும்ப மீண்டும் தொழில் நுட்பக் கல்வித் துறைக்கு, கல்லூரிக்கு வர விரும்பு கிறார்கள். அவர்களுக்கு உடனுக்குடன் அனுமதி வழங்கி திரும்பவும் மீண்டும் எடுத்துக்கொள்ளக்கூடிய ஆணைகளை வழங்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் கவனித்து, அத்தகைய வேண்டுகோள்கள் இருந்தால், அதைத் துரிதப்படுத்த ஏற்பாடு செய்து, அவர்களை மீண்டும் தாய்த் துறைக்கு வருவதற்கு ஆவன செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே பாலிடெக்னிக்குகளைப் பொறுத்தவரைக்கும், நமக்கு இருக்கின்ற பெரிய பிரச்சினையே, ஆசிரியர்கள் கிடைக்கவில்லை என்பதுதான். முழுமையாக எல்லா ஆசிரியர்களையும் போட்டு நடத்தக்கூடிய நிலைமைகளை நாம் அடைய முடியவில்லை என்பதுதான் பாலிடெக்னிக் கல்வியைப் பொறுத்த வரையில் இருக்கின்ற கருத்து. ஆகவே அவர்கள் வரவேண்டுமென்று விரும்பினால், அவர்களை மனப்பூர்வமாக வரவேற்கத் துறை தயாராக இருக்கிறது. அதிலே ஏதாவது காலதாமதம் இருக்கும் என்றால், அதை உடனடியாக நிவர்த்தி செய்து, அவர்கள் எல்லாம் பாலிடெக்னிக்குக்கு வருவதற்கான நிலையை ஏற்படுத்தித் தருமாறு அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப் படுவார்கள்.

[1983 நவம்பர் 1

## தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் பின்னலூர் கிராமத்திற்கு வசதிகள்

* 15 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிதம்பரம் வட்டம், புவனகிரி பஞ்சாயத்து ஒன்றியத்தில் உள்ள பின்னலூர் கிராமத்திற்கு "தன்னிறைவுத் திட்டத்தின்கீழ்" வசதிகள் செய்து தர வேண்டுமென்று 26—5—1982-ல், அந்தக் கிராம மக்களிடமிருந்து அரசுக்கு முறையீடு எதும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம்.

(இ) மேல்புவனகிரி ஊராட்சி ஒன்றியம் 1981-82-ம் ஆண்டு இரண்டாவது கட்டத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு, பின்னலூர் கிராமத்தில் அடிப்படை வசதிகளான சாலை மேம்படுத்துதல், பாலம் கட்டுதல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டன. மேலும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் பின்னலூர் கிராமத்தில் தெருக்கள் பராமரிப்பும், வாய்க்கால் ஆழப்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. இது தவிர, குடிநீர் வடிகால் வாரியம் மூலம் புதியதாக குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் துறையின் மூலமாக எடுத்துக்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் குடிநீர் வடிகால் வாரியக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு ஓராண்டுக்கு மேலாகியும் அவைகள் இன்று வரையிலே செயல்படாமல் இருக்கின்றன. ஆகவே அமைச்சர் அவர்கள் அதைச் செயல்படுத்துவதற்கு தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே. எனக்குக் கொடுக்கப்பட்ட குறிப்புகளின்படி, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக புதியதாக குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு நேரடியாகத் தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி வடிகால் வாரியத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். குழாய்க் கிணறு சரியாக வேலை செய்யவில்லையென்றால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே தண்ணீர் வசதியை பின்னலூர் கிராமத்திற்குக் கொடுப்பதிலே உண்மையிலேயே மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அதற்குரிய நடவடிக்கைகள் உரிய காலத்தில் எடுக்கப்படும்.



3 நவம்பர் 1]

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர் ங்கி வந்த மின்சார மோட்டார் பழுதடைந்து ஐந்து ஆண்டுகளுக்கு மேல் றது. இன்றுவரை அது பழுது பார்க்கப்படவில்லை. தெருக் குழாய்கள்கூட து பார்க்கப்படாமல் அந்த மக்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். க்கப்பட்ட முடிவையும் செயல்படுத்துவதிலே காலதாமதம் ஏற்படுகிறது று நினைக்கிறேன். ராஜன் கால்வாய், வாலாஜா ஏரி மிகவும் சரிந்து க்கின்றன. வெள்ள காலத்திலே அபாயம் ஏற்படக்கூடிய நிலை இருக்கிறது. குறித்தும், மனுவிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தப் பிரச்சினையைப் றி இதுவரை நடவடிக்கை எடுக்காததால், அதுகுறித்தும் நடவடிக்கை ப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, குடிநீர் வழங்கி த அந்த மின்சார மோட்டார் அந்த ஊரிலே பழுதடைந்து விட்டதாக பினர் அவர்கள் சொன்னார்கள். அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப் ம். ஏரிகளைப் பொறுத்தவரையில், ஊராட்சி ஒன்றியங்களுக்கான ஏரிகளும் க்கின்றன. பொதுப் பணித் துறைக்கான ஏரிகளும் இருக்கின்றன. ண்புமிகு உறுப்பினர்கள் சொல்லக்கூடிய ஏரிகள் ஊராட்சி ஒன்றியங் க்குச் சம்பந்தப்பட்ட ஏரியாக இருந்தால், உடனடியாக நடவடிக்கை க்கப்படும்.

## *Exmeption From Payment of Property Tax.*

*16. *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of Thiru . SANTOSHAM) : Will the Hon. the Minister for Local dministration be pelased to state :—

(*a*) whether the managements of Private Charitable Edu- tional Institutions in Madurai have made any representation bout the hardship felt by them in paying the property tax vied by the Corporation of Madurai, and requested amendment the Madurai Corporation Act, so as to enable them to be empted from payment of Property Tax; and

(*b*) if so, the action taken thereon ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு மேலவைத் தலைவர் வர்களே, "இல்லை".

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, இவ்வாறு தனியார் கல்வி றக்கட்டளைகளால் நடத்தப்படுகின்ற கல்வி நிறுவனங்கள் பல மதுரை நகரில் இருக்கின்றன. அவைகளின் பரப்பளவு, கட்டிடங்கள் ஆகியவற்றை

மதிப்பீடு செய்து சொத்து வரி விதிக்கவேண்டியிருக்கிறது. பல லட்சக்
கணக்கான ரூபாய்களை அவர்கள் வரியாக வழங்கவேண்டியிருக்கிறது.
விதிவிலக்கு அளித்தால், மாணவர்களிடமிருந்து பணம் பெற முடியாது. அதற்கு
தொடர்ந்து ஆறு மாதத்திற்கு ஒரு முறை தங்களுடைய நிர்வாகம் ரூ. 50
ஆயிரம் சொத்து வரி கட்ட வேண்டும், ரூ. 75 ஆயிரம் சொத்து வரி கட்ட
வேண்டும் என்று நோட்டீஸ் மாநகராட்சியிடமிருந்து வருகிறது. கல்வித்
தொண்டை ஆற்றும் நிறுவனங்களுக்கு விதிவிலக்கு அளிக்க ஒரு சட்ட
முன்வடிவைக் கொண்டு வந்து விரைவிலே அதை அமுல்படுத்துவார்களா
என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, இந்தக் கல்வி
நிறுவனங்களுக்குச் சொத்து வரி விதிக்கப்பட்டது என்பது மதுரை
மாநகராட்சியாக மாற்றப்பட்ட கடந்த 1971 ஆம் ஆண்டிலேதான் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு முன்பு, நகராட்சியாக இருந்தபோது,
கல்வி நிறுவனங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. மதுரை மாநகராட்சி
ஆக்கப்பட்டபோது, 1971-லே சட்டம் இயற்றப்பட்டு, அசெஸ்மென்ட் செய்ய
வேண்டுமென்று சொல்லி, வரி விதிப்பு மேற்கொள்ளப்பட்டது. கிருத்துவர்கள்
நடத்தும் பல்வேறு பள்ளிகளில்தான் இந்த நிலைமைகள் இருக்கின்றன. வேறு
பள்ளிகளிடமிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று கோரிக்கை வரவில்லை.
எண்பதுக்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்களிடமிருந்து ஏறத்தாழ 30 லட்சம்
ரூபாய் வரியாகப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். முப்பத்தெட்டு பேர்கள்
வரி கட்ட மாட்டோம் என்று உயர்நீதி மன்றம் சென்று, உயர்நீதி மன்றமும்
அவர்களுடைய அப்பீலைத் தள்ளுபடி செய்துவிட்டது. இவர்களுக்கு இந்த
வரி விதிப்பிலிருந்து விலக்களித்தால், வருகின்ற 30 லட்சம் ரூபாயும் வராமல்
போய்விடும். மதுரை மாநகராட்சிக்கு ஏற்கெனவே நிதி வசதி இல்லாத நிலை
ஏற்பட்டுள்ள நிலையில், வரி விலக்கு அளிப்பது சரியாக இராது என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன். முப்பத்தெட்டு பேர் கொடுக்க வேண்டிய வரி பாக்கி
17½ லட்சம் ரூபாய். அவர்களிடம் அது 'அரியர்ஸ்' ஆக இருந்து கொண்டிருக்
கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய மேலான
யோசனையை அவர்களுக்குச் சொல்லி, மாநகராட்சிக்கு நிதி வசதி குறைவாக
இருப்பதால், அந்தக் குறைவை நிறைவு செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ள
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** தனிப்பட்ட முறையிலே மாண்புமிகு அமைச்சரவர்கள்
சொல்லும் கருத்துக்களை முழுமையாக நான் ஏற்றுக்கொள்கிறேன். வரியைக்
கட்டிவிட்டுத்தான் மேல் முறையீடு செய்ய வேண்டும். இத்தகைய கல்வி



நிறுவனங்கள் ஒருகாலத்திலே வெளி நாடுகளில் இருந்து ஏராளமான
பணத்தைக் கொண்டுவந்து, நடத்தினார்கள். இன்றைக்கு அந்தப் பணம்
இல்லை. இன்றைக்கு தமிழ் மக்களின் பிள்ளைகளின் கல்விக்காகப் பணத்தைச்
செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள். அதோடு அரசும் கோடிக் கணக்கில்
செலவழித்துக் கொண்டிருக்கிறது. இத்தகைய நிறுவனங்களுக்கு இருக்கும்
சொத்துக்களை வைத்து வரி போட வேண்டுமென்றால், அதுகுறித்து அரசு
சட்டத்தைத் தளர்த்த முடியாது என்றால், இந்த நிறுவனங்களின் கட்டிடங்
களையும், நிலங்களையும் உள்ளாட்சித் துறையே ஏற்க வேண்டிய நிலைமை
ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை மனதிலே கொண்டு
பெருமனதோடு, தாராள நோக்கோடு, அருள்கூர்ந்து இவர்களுக்கு விதிவிலக்கு
அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 'அருள்கூர்ந்து'—அமைதியான
பார்லிமென்டரி வார்த்தை.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** ஏறத்தாழ 118 கல்வி நிறுவனங்கள்
மதுரை மாநகராட்சியிலே இருக்கின்றன. அதிலே 80 நிறுவனங்கள் ஒழுங்காக
வரியைச் செலுத்திக் கொண்டிருக்கின்றன. முப்பத்தெட்டு பேர்கள் சரியாகச்
செலுத்தவில்லை. பெரும்பான்மையானவர்கள் செலுத்தி வருகின்ற நேரத்தில்,
குறைந்தபட்சமாக இருக்கிறவர்கள் வரி செலுத்த மாட்டோம் என்று
சொல்லுவது, கட்டுகின்ற பெரும்பான்மையானவர்களையும் வரி செலுத்த
வேண்டாமென்று சொல்லுவதுபோல இருக்கிறது. இருக்கிற சட்டத்தைத்
திருத்தினால் ஒழிய, விலக்கு அளிக்க முடியாது. இப்போது மதுரை
மாநகராட்சிக்குப் போதுமான நிதி வசதி இல்லை என்பது தெரியும்.
அடிப்படை வசதிகளையே மக்களுக்குச் செய்து கொடுக்கவில்லை என்று
ஆதங்கத்தோடு பேசும் மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அப்படிப்
பட்ட நிலையில் கொடுக்க வேண்டிய பாக்கிகளை உடனடியாகக் கொடுக்க
வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### சென்னை மாநகரில் மினி பஸ்கள்

*** 17 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு போக்குவரத்துத்
துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க
வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில் எந்தெந்த வழித்தடங்களில் எல்லாம் மினி
பஸ்கள் விடப்பட்டுள்ளன?

(இ) நகரில் மேலும் பல வழித்தடங்களில் மினி பஸ்கள் விடுவதற்கான செயற்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** இதுகுறித்த விவர அறிக்கை@ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, சென்னைப் பெருநகரில் தற்போது 27 வழித் தடங்களில் 31 மினி பேருந்துகள் இயக்கப்படுகின்றன என்றும், ஏழு வழித் தடங்களிலே புதிதாகச் செலுத்துவதற்கு உரிய செயற் குறிப்பு பரிசீலனை செய்யப்பட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. பொதுவாக மினி பஸ்கள் விடுவதால் லாபம் வருகிறதா அல்லது நஷ்டம் வருகிறதா என்று அறிய விரும்புகிறேன். இந்த வழித் தடங்களில் மினி பஸ்கள் போட்டிருக்கக் காரணம், வசூல் அடிப்படையிலா அல்லது தடம் குறுகியதாக இருக்கிறது என்ற காரணமா என்பதை அறிய விரும்புகிறேன். சில தடங்கள் அகலமாக இருக்கின்றனவே, அங்கே பெரிய பஸ்கள் விடுவதுபற்றி அரசு யோசிக்குமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், சிறிய பேருந்தாக இருந்தாலும், பெரிய பேருந்தாக இருந்தாலும், எல்லாமே நஷ்டத்தில்தான் ஓடுகின்றன. பெரிய இடங்களில், பெரிய பேருந்துகள் போக முடியாத இடங்களிலே சிறிய பேருந்துகளை விட்டிருக்கிறோம். சில இடங்களில், பெரிய பேருந்துகள் போகும் இடங்களில் சிறிய பேருந்துகளை விட்டிருக்கிறோம். ஏனென்றால் தேவை அவ்வளவுதான். பேருந்தில் பயணம் செய்யும் பிரயாணிகள் குறைவாக இருப்பதால், அது போதும் என்று விடப்பட்டிருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** நகரத்திலே ஓடுகின்ற பேருந்துகளிலே எந்த நேரத்திலும் கூட்டம் அதிகமாக இருக்கிறது. அதிலே மக்கள் தொத்திக்கொண்டு போகும் நிலை இருக்கிறது. இந்த நிலையிலே அதிலே நஷ்டம் ஏற்படுகிற தென்று சொல்லக் காரணம் என்ன? நிர்வாகத்திலே கோளாறா? வசூலிக்கப் படுவது இல்லையா? 'வித்தவுட்'-ல் போகிறார்களா? இதையெல்லாம் அமைச்சரவர்கள் ஆராய்ந்து, அதற்குரிய நடவடிக்கைகள் எடுப்பாரா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** நாம் பார்ப்பதிலேதான் கோளாறு. நிர்வாகத்திலே கோளாறு இல்லை. நிறையப் பயணிகள் ஏறிப் போகும்போது தான் பார்க்கிறார்கள். மதியத்தில் பேருந்திலே பயணிகள் இல்லாமல், பேருந்து

@ 87-89 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



மட்டும் போய்க் கொண்டிருக்கும். அதை நிறுத்தினால்கூட, அதை விட்டுவிட பொதுமக்கள் தயாராக இல்லை. பொதுமக்கள் விட்டால்கூட, சில அமைப்புகள் அதை விடத் தயாராக இல்லை. மேலும் மற்ற இடங்களில் ஓடும் பேருந்து களுக்கும், இதற்கும் வேறுபாடு உண்டு. இங்கே 'டிராபிக்' அதிகமாக இருப்பதால், பேருந்துகளை நிறுத்தி, நிறுத்தி ஓட்ட வேண்டியிருக்கிறது. அப்படி இயக்கும்போது, அதிக டீசல் செலவு, டையர் தேய்மானம் எல்லாம் ஏற்படுகிறது. அதனால் செலவு அதிகமாக வ்ாய்ப்பு இருக்கிறது. இப்படி பல்வேறு காரணங்களாலே நஷ்டம் ஏற்படுகிறது. நிர்வாகத்தைப் பொறுத்த வரையில், எல்லா இடங்களையும்விட, பல்லவன் போக்குவரத்துக் கழகம் சிறப்பாக இருக்கிறது என்று நான் சொல்லவில்லை, மற்ற மாநிலங்களிலிருந்து வருகிறவர்கள் அப்படிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. இராமலிங்கம்:** பட்டியலைப் பார்க்கும்போது, என்னுடைய சைதை தாலுக்காவிலே பெரும்பாலான மினி பஸ்கள் விடப்படுகின்றன என்பது தெரிகிறது. புரட்சித் தலைவர் அவர்கள் எம்.எல்.ஏ.-வாக இருந்த நேரத்திலே, இவற்றுக்காக மனுச் செய்தோம். இன்றைக்கு அந்தக் கோரிக்கைகள் நிறைவேறி இருக்கின்றன. அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். வட சென்னையில் மணலி, சேக்காடு, வட பெரும்பாக்கம் போன்ற பகுதிகளில் மினி பஸ்கள் இல்லை என்று சொல்லுகிறார்கள். அதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** அப்படிப்பட்ட கோரிக்கை அரசுக்குக் கொடுக்கப்படுமானால், அது தேவையா என்பதை அறிந்து, ஆவன செய்யப் படும்.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன்:** மினி பஸ்கள் எல்லாம் பல்லவன் போக்கு வரத்துக் கழகத்தாலேயே தயாரிக்கப்படுவதாக நான் அறிகிறேன். பல்லவன் போக்குவரத்துக் கழகம் தயாரிப்பதற்கும், புதிதாக விலைக்கு வாங்குவதற்கும் இடையிலே உள்ள விலை வித்தியாசம் என்ன? அப்படி ஏதாவது இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** பல்லவன் போக்குவரத்துக் கழகம், அதனிடத்திலே இருக்கும் பழைய பேருந்துகளைச் சிறிய பேருந்துகளாக மாற்றுவதை மிக நல்ல முறையிலே செய்து கொண்டிருக்கிறது. அதற்கு 70 ஆயிரம் ரூபாய் ஆகிறது. அடிச் சட்டத்திற்கும் கணக்குப் போட்டு

மொத்தத்தில் 70,000 ரூபாய் ஆகிறது. புதிதாக அடிச் சட்டம் வாங்கு வதென்றால் 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபாயாகும். 65,000 ரூபாய் 'பாடி' கட்ட செலவாகும். மொத்தம் 1 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் ஆகிறது. இதுதான் வித்தியாசம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: நமக்கு ஏற்படக்கூடிய நஷ்டத்தைக் குறைப்பதற்கு, தவிர்ப்பதற்கு சிக்கன அடிப்படையிலே, இருக்கைகள் இல்லாமல், பயணிகள் நின்று கொண்டு செல்லும் அளவுக்கு பேருந்துகள் இருக்க வேண்டும். வேறு சில இடங்களிலே அப்படி விட்டிருக்கிறார்கள். அதைப் போல பேருந்துகளைவிட ஏதேனும் திட்டம் அரசின் கருத்தில் இருக்கிறதா?

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: நின்றுகொண்டு பயணிகள் பேருந்துகளில் பயணம் செய்யக்கூடிய நிலை இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறார். அப்படி என்றால், இருக்கைகள் இருந்து பின்னால் அந்த வசதி இல்லாமல், இருக்கைகள் காணாமல் போய்விட்டனவா அல்லது வேறு காரணமா என்பது தெரியவில்லை. ஆனால் அந்த முயற்சி ஒரு முறை செய்யப் பட்டது. பிறகு இங்குள்ள பொதுமக்கள் அந்த முறையை ஏற்றுக் கொள்ளாததால், அதனை நாம் நடைமுறைப்படுத்தவில்லை. பிறகு 40 பேர் உட்கார்ந்துகொண்டும் கணிசமானவர்கள் நின்றுகொண்டும் போகக்கூடிய வகையில் ஏற்பாடு செய்தோம். அதுவும் ஏற்றுக்கொள்ளப்படாததால் கைவிடப்பட்டது.

திரு. செ. முத்துசாமி: சட்டமன்ற விடுதியிலிருந்து ரெயில் நிலையம் செல்ல இப்போது பேருந்துக்கான வசதி இல்லை. தவிரவும் டாக்சி மற்றும் ஆட்டோ கிடைக்காத நிலையும் இருக்கிறது. சிறிய மினி பஸ்களை உறுப்பினர்களின் நலன் கருதி சட்டமன்ற விடுதியிலிருந்து ரெயில்வே நிலையத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடுவதற்கு ஏற்பாடு செய்வார்களா? உறுப்பினர்களுக்குப் பேருந்து வசதியும் இல்லை, கார், ஆட்டோ போன்ற வசதிகளும் இல்லை. மிகவும் சங்கடமான சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இதற்குத் தகுந்த ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: சபை துவங்குகிற நாளிலேயும் முடிகிற நாளிலேயும் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட வசதிகளைச் செய்யத் தயாராக இருக்கிறது. எல்லா நாட்களிலும் அப்படி பேருந்துகளை விட்டால், இரண்டொரு உறுப்பினர்கள்தான் அதில் செல்லக்கூடிய நிலை ஏற்படும். அப்படி நாம் செய்வது நாட்டுக்கு ஒருவகையில் நஷ்டம் என்பதை மாண்புமிகு



உறுப்பினர் அவர்கள் நன்றாக உணர்வார்கள். அந்த அடிப்படையில் இக்கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் வலியுறுத்தமாட்டார் என்று நான் நம்புகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: 'பீக் அவ்வர்ஸ்' தவிர மற்ற மத்தியானம் போன்ற நேரங்களில் பெரிய பேருந்துகள் ஓடுகின்ற இடங்களில் எல்லாம் மினி பஸ்களைவிட அரசு பரிசீலனை செய்யுமா? பெரிய சேஸிஸ்-ல் இருந்து மாற்றுகிற விஷயம் அல்ல நான் சொல்வது. ஜீப்பில் இருப்பது போல் மினி பஸ்ஸைப் பயன்படுத்தினால் இலாபம் வரும். கூட்ட நெரிசல் இல்லாத வேளையில் 10, 15 பேர்தான் பயணம் செய்வார்கள். அந்த வகையில் அரசுக்கும் இலாபம் வரும். இதுபற்றிப் பரிசீலிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற யோசனை சரியான யோசனை. அதில் இருக்கிற சிக்கல்களையும் பார்க்க வேண்டும். இப்போது நாம் ஒரு பேருந்துக்கு வரி கட்டுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறபடி செய்தால், இரண்டு பேருந்துகளுக்கு வரி கட்ட வேண்டி வரும். இதிலே ஒரு நாளைக்கு ஒரு பேருந்தில் நான்கு தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். மினி பேருந்துகளை 'பீக் அவ்வர்ஸ்' அல்லாத நேரத்தில் விட்டால், எட்டு தொழிலாளர்கள் தேவைப்படுவார்கள். இதன்மூலம் வேலைவாய்ப்புகள், வசதிகள் ஏற்படும். ஆனால் இலாபம் நிச்சயமாக வராது. இன்னும் கூடுதலாகத்தான் நஷ்டம் ஏற்படும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: எல்லோரும் இந்தப் பக்கத்திலிருந்து கை தூக்குவதால் ஒரே இருட்டாக இருக்கிறது. (சிரிப்பு) (கரவொலி).

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு தலைவர் அவர்கள் கண்ணாடி போட்டிருப்பதால், ஒருவேளை இருட்டாகத் தெரிகிறதோ என்னவோ. (சிரிப்பு)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நான் கண்ணாடி போட்டிருந்தாலும், எனக்கு இருட்டும் வெளிச்சமும் நன்றாகத் தெரியும்.

திரு. செ. முத்துசாமி: 'லைட்'-ஐப் போடுங்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அதுகுறித்து முதலமைச்சருக்குக் கடிதம் எழுதுங்கள்.

**திரு. ஜேப்பியார்:** தூங்குகிற வசதியுள்ள பேருந்துகளை விடுகிறார்களே, அது இலாபகரமாக இருக்கிறதா? இலாபகரமாக இருக்கிறது என்றால், மற்ற இடங்களிலும் இப்பேருந்து விடப்படுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** பரிசோதனை முறையில்தான் அதனை நாம் இயக்கியிருக்கிறோம். எல்லா இடங்களிலும் அதனை விடலாமா என்று சில தடங்களில் ஆய்வு நடத்தி வருகிறோம். அதுபற்றி நன்றாகத் தெரிந்த பிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஏ. ஜே. தாஸ்:** சென்னை நகரில் பல சாலைகளில், நான்கு, ஐந்து அடி பள்ளங்களுக்கு இடையே பேருந்துகள் செல்வதால், பேருந்துகளுக்கு அதிகமாகச் சேதம் ஏற்படுகிறது. அதனால் இத்துறைக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே சாலைகளில் பள்ளங்கள் இல்லாத நிலையை உருவாக்குவதுபற்றி கவனிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** ஏதோ சில சாலைகளில் பள்ளங்கள் தவிர்க்க முடியாததால் ஏற்பட்டிருக்கலாம். அதுகுறித்து நகராட்சி நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

### நாகப்பட்டினம்-காரப்பிடாகை பேருந்து

* 18 **வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டினத்திலிருந்து காரப்பிடாகை வரும், தடம் எண் 8 உள்ள பேருந்தினை ஏகராசபுரம் வழியாக தலைஞாயிறுக்கு விடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போது முதல் அமல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டினத்திலிருந்து காரப்பிடாகை வரும், தடம் எண் 8 உள்ள பேருந்தினை ஏகராசபுரம் வழியாக தலைஞாயிறுக்கு விட வேண்டுமென்ற கோரிக்கை [illegible]





ஒன்று. ஏகராசபுரத்திலுள்ள மக்கள் பேருந்தைப் பார்க்காத சூழ்நிலை இருக்கிறது. இப்போது அந்தத் தடத்தில் பேருந்து விடுகின்ற திட்டம் இல்லாவிட்டால்கூட வருங்காலத்திலாவது இதுபற்றி அரசு பரிவுடன் பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** பரிவு காட்ட வேண்டிய அவசியமில்லை. உறுப்பினர்கள் கேட்டாலே, உடனே நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எங்களுக்கு உண்டு. அது 31 கிலோ மீட்டருக்கு மேல் இருப்பதால், நடவடிக்கை எடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆனால் முடியுமா என்று ஆய்வு செய்யலாம், உத்தரவாதம் தர முடியாது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** நகரப் பேருந்துகளைப் பொறுத்தவரையில், இந்த எல்லைக்கு அப்பால் இருந்தால் அல்லது இத்தனை கிலோ மீட்டருக்கு அப்பால் இருந்தால், நகரப் பேருந்துகளை வேண்டுமானால் விடாமல் இருக்கலாம். ஆனால் வேறு பேருந்துகளை விடுவதில் தவறில்லை. நான் கேட்டபடி, அந்தக் கிராமத்திற்கு பேருந்து வழித்தடத்தை இணைத்து, அந்தக் கிராமத்திற்குரிய வசதிகளைச் செய்துகொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? அதோடுகூட நான் கேள்வி கேட்டால், கேள்வி கேட்கின்ற வழித் தடத்தில் ஓடுகிற பேருந்து நின்று விடுகிறதே, அதற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** அப்படிப்பட்ட நிலைமை நிச்சயமாக இருக்காது. ஆனால் ஏதாவது வழித் தடங்களில் பேருந்துகள் மாற்றியமைக்கப்பட்டதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்கிறார்களோ என்னவோ, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருப்பது தட எண் 8 பற்றி. ஏற்கெனவே அங்கு 23 கிலோ மீட்டர் தொலைவிற்குப் பேருந்து ஓடிக்கொண்டிருக்கிறது. அதற்கு மேல் எழு கிலோமீட்டர் தொலைவிற்கு அதனை நீட்டிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இன்னொரு பேருந்தை விட்டால்கூட, இரண்டும் பாதிக்கப்படும். வசூலும் இருக்காது. இருந்தாலும் அந்தக் கிராமத்திலுள்ளவர்கள் பேருந்தையே பார்க்காத சூழ்நிலை இருக்கிறது என்றும், வசதியில்லாமல் இருக்கிறார்கள் என்றும் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டபடியால், அதுகுறித்து உத்தரவாதம் ஒன்றும் தர முடியாது. ஆனால் ஆய்வு செய்யப்படும்.

[1983 நவம்பர் 1

## ஸ்ரீலங்கா அகதிகள்

***19. வினா—திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 1980-81-ல், தமிழகம் வந்து, பின் கேரள மாநிலம் வண்டி பெரியார் அருகே உள்ள 'கெவி' என்ற மலைத்தோட்டத்திற்கு அனுப்பப்பட்ட 108 ஸ்ரீலங்கா அகதிகள் குடும்பத்தினர், கேரளத்தில் வேலையிலிருந்து வெளி யேற்றப்பட்டதால், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர் அலுவலக வளைவினுள் 1982 மார்ச்சு மாதம் குடியேறினர் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** (அ) ஏலக்காய் தோட்டத்தில் குடியேற்றப்பட்ட 108 குடும்பங்கள் நிர்வாகத்தினரால் வெளியேற்றப்பட வில்லை. அவர்களில், 35 நபர்கள் தாங்களாகவே வேலையை விட்டுவிட்டு, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர் அலுவலக வளைவினுள் வந்து, தங்களது குறைகளை முறையீடு செய்தனர்.

(இ) ஏலக்காய் தோட்டந் தொழிலாளர் நலங்களுக்கான விதிகள், குடியிருப்பு, வேலை வாய்ப்பு முதலியவைபற்றி, மாவட்ட ஆட்சியாளர் எடுத்துக்கூறி, அவர்களை மீண்டும் வந்த இடத்திற்கே, அரசு செலவில், அனுப்பி வைத்துள்ளார்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** கேரளா மாநிலத்தில் வண்டி பெரியார் அருகே உள்ள 'கெவி' என்ற மலைத் தோட்டத்திற்கு அனுப்பப்பட்ட ஸ்ரீலங்கா அகதி கள் அங்கு சரியாக வேலை பார்க்க முடியவில்லை, சரியாகச் சம்பளம் கிடைக்க வில்லை, உரிய வசதிகள் அளிக்கப்படவில்லை, ஏதாவது கேட்டாலும் வெளியே போய்விடுங்கள் என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது என்கிற காரணங் களால், அவர்கள் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர் அலுவலக வளைவி னுள் குடியேறினார்கள். இப்போது அவர்களை அழைத்து அங்கே கொண்டு போய்ச் சேர்த்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இப்போது அங்கே வேலைக்குச் சென்றவர்கள் குடும்பத்துடன் பாதுகாப்பாக இருக்கிறார்களா, நல்ல முறையில் வேலை செய்கிறார்களா என்பதுபற்றி இந்த அரசு பரிசீலித்ததா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** அங்கு அவர்கள் நல்லமுறையில் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பை கோளூ கோட்டத்தில் உள்ள நிர்வாக அலுவலர் செய்து கொடுக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்.



983 நவம்பர் 1]

## உடல் ஊனமுற்ற ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு தனிச் சலுகை

***20. வினா—திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு சமூக நலத்துறை மைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு றேன்—

(அ) உடல் ஊனமுற்ற ஆசிரியர்களின் குழந்தைகளுக்குக் கல்வி, வேலை ாய்ப்பு போன்றவற்றில் தனிச்சலுகை வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ாய்வில் உள்ளதா ?

(இ) இல்லை எனில், தனிச் சலுகை வழங்க இனியேனும் அரசு ரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** (அ) இல்லை.

(இ) பரிசீலனை செய்யும் உத்தேசம் அரசுக்கு இப்பொழுது இல்லை.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது ல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால், பரிசீலிக்கப்பட்டிருக் றது. தற்போது இல்லையென்று சொல்வதிலிருந்து, பரிசீலிப்பதற்கான மனம் ருப்பது தெரிகிறது. ஆசிரியர்களுடைய குடும்பத்திற்கு இந்தச் சலுகையை ப்போது அளிக்க இருக்கிறார்கள், இதுபற்றி எப்போது சிந்திக்க ருக்கிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** உடல் ஊனமுற்றோர்களுக்காக ப்போது பல சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் உடல் னமுற்ற ஆசிரியர்களின் பிள்ளைகளும் உடல் ஊனமுற்றவர்களாக இருந்தால் ிச்சயமாக அவர்களுக்கு அரசுச் சலுகைகள் வழங்கப்படும். இப்போது உடல் னமுற்ற ஆசிரியர்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. வ்வொரு ஆண்டும் செப்டம்பர் 5 ஆம் தேதி ஆசிரியர் தினத்தன்று கொடி ின் விற்பனை செய்து, அதன் மூலம் வருகின்ற வசூல் கூட ஆசிரியர் நல திியில் தான் சேர்க்கப்படுகிறது. அந்த அடிப்படையில் அவர்களுக்கு என்று னியாக ஒரு நிதி ஒதுக்கீட்டுக்குக் கூட வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ந்தச் சலுகையிலிருந்து ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கும் உதவிகள் வழங்கப் டலாம். ஆனால் ஆசிரியர்களின் பிள்ளைகள் ஊனமுற்றவர்களாக இருந் ால், நிச்சயமாக அவர்களுடைய நிலை கவனிக்கப்படும். அது பரிசீலிக்கப் ட வேண்டியது. ஆகவே, உடல் ஊனமுற்றவர்களுக்கு இந்த அரசு எல்லாச் லுகைகளையும் ஏற்கெனவே வழங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக் ்கொள்கிறேன்.

[1983 நவம்பர் 1

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே ஆசிரியையாகப் பணியாற்றி விட்டு அமைச்சராக வந்திருக்கிறார்கள். உடல் ஊனமுற்ற ஆசிரியர்களின் குழந்தைகளுக்குச் சலுகைகள் வழங்க முடியாது என்று சொல்வதை விட்டுவிட்டு, அந்த ஆசிரியர்கள் உடல் ஊனமுற்ற நிலையில் எவ்வளவு தூரம் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பார்கள் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இது குறித்து அனுபவரீதியாகத் தெரிய வாய்ப்பு இல்லாவிட்டாலும் கூட, நீண்ட நாட்கள் ஆசிரியையாகப் பணியாற்றியவர்கள் என்கிற வகையில், உடல் ஊனமுற்ற ஆசிரியர்களின் நிலையை நன்றாகப் பார்த்திருக்கக்கூடும். இவர்களுக்காக என்று எந்த நிதியிலிருந்தாவது உதவி செய்வதற்கு ஆலோசிக்க வேண்டும். அப்படி இந்தப் பிரச்சினையை அணுகக் கூடிய மனம் படைத்த, தாயுள்ளம் கொண்டவர்களாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருப்பதால், அருள்கூர்ந்து அந்த வகையில் இதனை அணுகி, இச்சலுகையை வழங்க முன் வருவார்களா ?

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** அப்படி ஏதாவது செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் ஆசிரியர் நல நிதி என்று வைத்திருக்கிறார்கள். அதிலிருந்துதான் அவர்களுடைய குழந்தைகளுக்கு, அவர்கள் படிக்கிற போதும், பிறகு வேலைவாய்ப்பு என்று வருகிறபோதும் சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. உடல் ஊனமுற்றவர்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்காக தனிப்பட்ட சலுகைகள், திட்டங்கள் வகுக்கப்பட்டு, அதற்காக இன்றைக்கு ரூ. 1 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, ஊனமுற்ற மாணவர்கள் தொழிற் கல்வியில் பயிலும்போது மத்திய அரசு உதவி கடந்த ஆண்டு கொடுக்கப்படவில்லை. இதனால் 900 மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அதைப்பற்றி அரசு பரிசீலித்து, இந்தத் தாமதத்திற்கு காரணம் என்ன என்பதை அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, எல்லாச் செயல் முறைகளையும், சமூக நலத் துறை இயக்குநர் எடுத்துக் கொண்டு வருகிறார்கள். மத்திய அரசோடு, அதாவது தலைமைக் கணக்காய் [illegible]



1983 நவம்பர் 1]

ஆணைகள் வந்தபின், நிச்சயமாக அதை ஏற்றுக் கொண்டு நடவடிக்கை எடுப்பார்கள். மற்ற ஊனமுற்றவர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படும். மத்திய அரசு ரூ. 10 லட்சம் இந்தப் பணிக்காகக் கொடுக்க உறுதியளித்திருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 3. அறிவிப்புகள்

### (1) பாரதியார் பல்கலைக் கழகப் பேரவைக் குழுவிற்கு உறுப்பினர் தேர்தல்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பாரதியார் பல்கலைக் கழகப் பேரவைக் குழுவிற்கு திரு. ஆர். டி. சீத்தாபதி, எம்.எல்.சி. மட்டுமே போட்டியிட்டதால், உரிய முறைப்படி அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதனை இவ்வவைக்குத் தெரிவிக்கிறேன்.

### (2) பாரதிதாசன் பல்கலைக் கழகப் பேரவைக் குழுவிற்கு உறுப்பினர் தேர்தல்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பாரதிதாசன் பல்கலைக் கழகப் பேரவைக் குழுவிற்கு திரு. வலம்புரி ஜான், எம்.எல்.சி. மட்டுமே போட்டியிட்டதால், உரிய முறைப்படி, அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதனை இவ்வவைக்குத் தெரிவிக்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு

### கன்னியாகுமரி மாவட்டத்தில் மழையின்மையால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் தாம் கொடுத்துள்ள கவனஈர்ப்புத் தீர்மானத்தை முன்மொழிவார்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, "1983 ஜூன் முதல் செப்டம்பர் முடிவடையும் முதல் போகப் பருவத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மழையின்மையால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பயிராகாமலும், பயிரான நிலங்களில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்

[திரு. ம. சங்கரலிங்கம்] [1983 நவம்பர் 1

களிலுள்ள பயிர்கள் தண்ணீரின்றி வாடி அழிந்ததாலும் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் பூசன நோயால் தாக்குண்டு அழிந்ததாலும் விவசாயிகளுக்கு ஏற்பட்ட பிரச்சினை குறித்து" அரசுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அவைமுன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த விளக்க அறிக்கையில் 6,500 ஹெக்டேர் நிலங்கள் பயிராகவே இல்லை என்றும், 4,900 ஹெக்டேர் பயிரான நிலங்களில் பயிர்கள் பாழ்பட்டு விவசாயிகள் பாதிக்கப்பட்டார்கள் என்றும் குறிப்பு இருக்கிறது. 11,400 ஹெக்டேர், அதாவது கிட்டத்தட்ட 25 ஆயிரம் ஏக்கர் நிலங்களை உடைய விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயத் துறை என்ன பாதுகாப்பு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று இதில் சொல்லப்பட்டிருக்கிறது. பொதுவாக கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு விவசாயி ஒரு ஏக்கர் பயிர் செய்வதே பெரிது. அப்படியானால் கிட்டத்தட்ட 30 ஆயிரம் விவசாயிகள் இதில் ஈடுபட்டிருந்தார்களே, அவர்களுக்கு என்ன நிவாரண உதவி செய்யப்பட்டது என்பது குறித்து இதிலே இல்லை. என்ன நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டது என்றும் சொல்லவில்லை. விவசாயத் துறை எடுத்த முயற்சிகள் குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே நான் அவர்களுடைய அவல நிலையைக் குறித்துத்தான் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அதற்குப் பதில் இல்லை. விவசாயத் துறை என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்ற அறிக்கையை இப்போது இல்லாவிட்டாலும், இனிமேலாவது தா-- முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு தலைவர் அவர்களே, வறட்சி நிவாரணப் பணியின் கீழ் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதிலே இந்தத் துறையின் மூலமாக என்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதுபற்றி இந்த விளக்க அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. விதைக்கு மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. பூச்சி மருந்து மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே வறட்சி தொடர்பான நடவடிக்கைகளை இந்தத் துறையைத் தொடர்ந்து வேறு பல துறைகளும் மேற்கொள்கின்றன.

---

@ 90-91 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1983 நவம்பர் 1]

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, விவசாயத் துறையினர் இந்த முயற்சிகளை எடுத்திருக்கிறார்கள். நான் அதை நன்கு அறிவேன். ஆனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கடன் வாங்கி பயிர் செய்து, இந்த விளைவுகளால் 2 போகம் குறைந்து போனதன் காரணமாக மீண்டும் விவசாயமே செய்ய முடியாமல் கடனுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவர்களுக்கு மானியம் கொடுத்து உதவுவதுடன், மீண்டும் பயிர் செய்வதற்கு கடன் உதவி மட்டுமல்லாமல், விதை போன்றவைகளையும் மானியமாகக் கொடுப்பதற்கு, வருவாய்த் துறையுடன் விவசாயத் துறை தொடர்பு கொண்டு, அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்படி மானியம் கொடுப்பதைக்கூட, டிசம்பர் வரையிலும் நீட்டித்திருக்கிறோம். அனைத, பாதிக்கப்பட்ட விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம். அவர்கள் பெற்ற கடன்களுக்கு இந்தத் துறை பொறுப்பேற்க இயலாது. அந்தக் கடன்களைப் பொறுத்தவரையில், கூட்டுறவுத் துறைக்குத் தனியாக விண்ணப்பித்து, பலனைப் பெறலாம்.

## 5. தனி உறுப்பினர் அலுவல்.

### (1) சட்ட முன்வடிவு.

### தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குபடுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** "தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குபடுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை" அறிமுகம் செய்ய மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் டி. சந்தோஷம், பா. ரா. தாமஸ், சி. ரா. லெட்சுமிகாந்தன் ஆகியோர் அனுமதி கோரியுள்ளார்கள். அவர்களின் சார்பாக திரு. பா. ரா. தாமஸ் அனுமதி கோருவார்.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குபடுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" என்று கோருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (ஒழுங்கு படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

[1983 நவம்பர் 1

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (ஒழுங்கு படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை மேலவையில் அறிமுகம் செய்கிறேன்.

சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

## (2) தனி உறுப்பினர் தீர்மானம்.

## கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு அரசுப் பணிகளின் நியமனத்தில் முன்னுரிமை வழங்குவது குறித்து—தொடர்ச்சி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** "கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு அரசுப் பணிகளின் நியமனத்தில் முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும், அவர்களின் குழந்தைகளுக்கு கல்லூரி வரையில் இலவசக் கல்வி வழங்கவேண்டுமென்றும் இந்த மன்றம் அரசுக்குப் பரிந்துரை செய்கிறது" என்ற தீர்மானத்தில் திரு. செ. முத்துசாமி அவர்கள் நீண்ட நேரம் பேசியிருப்பதால், இப்போது சற்று சுருக்கமாக தனது உரையைத் தொடர்ந்து பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தின் மீது அன்று முடிவு பெறாத நிலையில் இப்போது சில கருத்துக்களை நான் ஒழுங்குபடுத்தி இங்கே வைக்க விரும்புகிறேன். சமுதாயத்தில் இருக்கக்கூடிய கேடுகளுக்குக் காரணமாக இருப்பது, ஜாதி மதங்கள் என்பதை எல்லாத் தலைவர்களும் பொதுவாகச் சொன்னாலும் கூட அவற்றுக்கு ஒரு நிவாரணத் திட்டத்தைக் கண்டுபிடிக்க முடியாமலேயே தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள்.

நான் சமீபத்தில் ஜூன் மாதத்தில் சோஷலிச நாடுகளுக்கு ஒரு பயணம் சென்றேன். உலக சமாதான மாநாட்டில் கலந்துகொள்ள ஒரு வாய்ப்பு கிடைத்தது. செக்கோசுலோவாக்கியா மற்றும் ரஷ்யாவுக்குச் சென்றிருந்தேன். அங்கே அரசுப் பணிகளில் இருப்பவர்களுக்கு கலப்புத் திருமணம் செய்துகொள்ளுவதற்கு வாய்ப்பு வேண்டுமா என்ற பிரச்சினையே எழவில்லை. சமுதாயத்தில் மனிதன் மகிழ்ச்சியோடு வாழ வேண்டுமென்று சொன்னால், அவனுக்கு உத்தியோகம் இருக்க வேண்டும். சோஷலிச நாடுகளில் வேலையில்லாதோர் என்ற பேச்சுக்கே இடம் இல்லை. எல்லோருக்கும் வேலை தந்திருக்கிறார்கள். ஆண், பெண் என்ற வேறுபாடே இல்லை. ஆணுக்குப்



1983 நவம்பர் 1] [திரு. செ. முத்துசாமி]

பெண் சரி நிகர் சமானமாய் வாழ வேண்டுமென்று நமது புலவர்கள் கண்ட கற்பனையை அங்கே நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆகவே இந்தப் பிரச்சினைகள் அங்கே எழவில்லை.

ஒரு மனிதன் வாழ்வதற்கு, அவன் உழைப்பதற்கு, கை கால்கள் திறனோடு இருப்பதற்கு, ஒரு நல்ல ஆட்சி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பல்லாண்டுக் காலம் படித்து பல பட்டங்களைப் பெற்று, உடல் உரத்தோடு இருந்தும், நாம் இன்றுவரை அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்காமல் வேலையில்லாத் திண்டாட்டம் பற்றிப் புள்ளி விவரம் எடுத்துக்கொண்டு, "வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவோம், வறுமையை அகற்றுவோம்" என்ற பழைய கோஷங்களையே தொடர்ந்து போட்டுக் கொண்டிருக்கக் கூடிய ஒரு பரிதாபமான நிலையை இந்த ஜனநாயகத்தில் பார்க்கிறோம். ஆனால் அங்கே இதுமாதிரி நிகழ்ச்சிகளைப் பார்க்க முடியவில்லை. இங்கே பல்வேறு பூசல்களையும், போட்டிகளையும், சண்டைகளையும், சங்கடங்களையும், சமுதாயத்தில் ஒருவரோடொருவர் மோதிக்கொண்டிருக்கிற சூழ்நிலையையும், ஜாதி மதங்களின் பெயரால் சமுதாயத்தை அழித்துக் கொண்டிருக்கிற சூழ்நிலையையும் தான் பார்க்க முடிகிறது. சென்ற கூட்டத் தொடரில் மிகத் தெளிவாக இந்திய நாட்டில் எங்கெங்கு இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன என்ற கருத்தைச் சொன்னேன். இவற்றுக்கு அடிப்படையாக, சமுதாயம் அழிவதற்கான சூழ்நிலையாக ஜாதி மத பேதங்கள் நம்மிடையே இருக்கின்றன என்றும் சொன்னேன். ஒரு ஜாதியைவிட்டு இன்னொரு ஜாதிக்குச் செல்லுதல், ஒரு மதத்திலிருப்பவர்கள் இன்னொரு மதத்திற்குச் சென்று விடுதல், அப்படிச் சென்ற பிறகு திருமணம் செய்து கொள்வது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக இருக்கிறது. இந்த மதமும் வேண்டாம், இந்த ஜாதியும் அந்த ஜாதியும் வேண்டாம் என்றால், அதற்கு கலப்புத் திருமணம் செய்வதுதான் ஒரே வழியாக இருக்கும். அதைத் தான் நாம் ஏற்றுக்கொள்ள முடியும். அப்படிச் செய்தால் இந்தச் சமுதாயத்தில் வாழ முடியுமா என்பது கேள்விக் குறியாக இருக்கிறது.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 10-30)

சமுதாயத்தினுடைய கட்டுக் கோப்பு, ஜாதி உணர்ச்சிகள், மற்ற மற்ற ஆதிக்கங்கள், ஜாதித் தலைவர்கள் இத்தகைய கலப்புத் திருமணங்களைச் செய்து கொண்டவர்களைப் பார்த்து, 'இங்கே வரக்கூடாது, அங்கே வரக்கூடாது, கோயிலுக்கு வரக்கூடாது' என்றெல்லாம் கட்டுப்படுத்துவது, ஜாதி

நிறுவனங்களுக்கு, மற்ற பொது இடங்களுக்கு வரக்கூடாது என்றெல்லாம் கட்டுப்படுத்துவது என்பன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே இப்படிப்பட்ட கொடுமைகளிலிருந்து அவர்களைக் காப்பாற்ற, அவர்களெல்லாம் வாழ்வதற்கு ஒரு வழி ஏற்படுத்தித் தருவதற்காகத்தான் இந்த ஆட்சிப் பொறுப்பில் உள்ள அரசு அவர்களுக்கெல்லாம் உத்தியோகங்களை வழங்குவதில் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று கேட்கிறேன். அரசு நியமனங்களில், அரசுப் பதவிகளில் அத்தகைய கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கும், அவர்களுடைய பிள்ளைகளுக்கும் முதன்மை தர வேண்டும். ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் ஒரு உத்தியோகம் கிடைத்துவிட்டால், பிறகு அவன் தலை நிமிர்ந்து வாழ்ந்திட முடியும்.

நாம் இங்கே பேசும்போது, தன்னாண்மையைப்பற்றியும், சுயமரியாதையைப் பற்றியும் பேசுகிறோம். மனித சுயமரியாதையைப்பற்றி, தந்தை பெரியார் அவர்கள் மக்கள் மத்தியில் எவ்வளவோ எடுத்துச் சொல்லியிருக்கிறவர்கள். இன்றையதினம் நாட்டு மக்கள் மத்தியில் சுயமரியாதை இல்லை, மூடத் தனம் மிகுந்திருக்கிறது, சுபிட்சம் இல்லை, இவைகளெல்லாம் கிடைக்கும்வரை திராவிடர் கழகத் தொண்டர்கள் கறுப்புச் சட்டை அணிந்திருக்க வேண்டும் என்று ஆணையிட்டார்கள். இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஸ்ரீலங்கா வாழ் தமிழர்களின் துன்பம் போக்கப்படும்வரை, அவர்களுக்கு நல்வாழ்வு கிடைக்கிறவரை, தம் கட்சித் தொண்டர்கள் கறுப்புச் சட்டை அணிய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி தந்தை பெரியார் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் சமுதாயத்தில் சாதி ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டவைகளாகும். இப்படி சாதி ஒழிப்புக்கு மிக முக்கியமானது கலப்புத் திருமணங்கள்தான் என்பதையும் அவர் நீண்ட காலமாகப் பிரச்சாரம் செய்து வந்தார்கள். ஆனால் நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். பிரச்சாரத்தின் மூலமாக மட்டும் மனிதர்கள் தங்கள் வாழ்க்கையில் ஏற்படும் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாது. எனவே தான் அவர்களுக்கு உத்தியோகம் வழங்கப்பட வேண்டும் என்று கேட்கிறேன். இவ்வாறு கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு, வேறு யாருக்குக் கொடுக்கப்படும் பிரையாரிட்டியைக் காட்டிலும், வேறு யாருக்குக் கொடுக்கப் படும் முன்னுரிமையைக் காட்டிலும் முதன்மையான இடத்தைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, அவர்களுடைய குழந்தைகளுக்கு, கல்லூரிகளிலும், பயிற்சிப் பள்ளிகளிலும், என்ஜினியரிங் கல்லூரி, மருத்துவக் கல்லூரி போன்ற உயர்ந்த படிப்புகளிலும் முன்னுரிமை



வழங்கப்பட வேண்டும். இத்தகைய பாதுகாப்புகளையும் முன்னுரிமைகளை யும் கொடுத்து ஊக்கப்படுத்தினால்தான், நாட்டிலே கலப்புத் திருமணங்கள் பெருகும்.

இப்போதுகூட பார்க்கிறோம். சில பேர் தங்களுடைய சாதிகளை, ஆதி திராவிடர்களோடு இணையாக ஆக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் தங்களுடைய சாதியையும் இணைக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். காரணம் அதன் மூலமாகக் கல்விச் சலுகை, உத்தி யோகச் சலுகை போன்றவற்றை அவர்கள் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று கருதுவதாகும். சிலர் தங்களுடைய சாதிகளை பிற்பட்டோர் வகுப்பில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கிறார்கள். அவர்களெல் லாம் ஏன் அத்தகைய உணர்வைப் பெறுகிறார்கள் என்றால், சமுதாயத்தில் அதன் மூலம் சில சலுகைகள் கிடைக்கும் என்பதால்தான். எனவே கலப்புத் திருமணம் செய்து கொள்கிறவர்களுக்கும் இத்தகைய சலுகைகள் வழங்கப்படுமானால், அது நிச்சயமாக அதிகரிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்படுகிற சலுகைகள் போல் இத்தகைய கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கும் வழங்கப்படுமென்றால், நிச்சயமாக கலப்புத் திருமணம் செய்வோரின் எண்ணிக்கை நாட்டில் அதிகரிக் கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அவர் களுடைய குழந்தைகளுக்கும் இத்தகைய சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்பதையும் இந்தத் தீர்மானத்தில் முதன்மைப்படுத்திச் சொல்லியிருக்கிறேன். இன்றையதினம் இதற்கெல்லாம் பொறுப்பேற்றிருக்கிற, இத்துறையின் அமைச்சர் அவர்கள், பதில் சொல்வதற்கான அனைத்துக் குறிப்புகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவரே கூட இன்னும் திருமணம் ஆகாத இளைஞர். அவர் கூட திருமணம் செய்து கொள்ளுகிறபோது, கலப்புத் திருமணமாகச் செய்வதாக முடிவெடுக்க வேண்டும். அதுதான் சரியாக இருக்கும் என்று இந்த அவையில் சிபாரிசு செய்ய விரும்புகிறேன். அவர் அப்படிச் செய்வார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. என்றாலும், இதையே ஒரு வேண்டுகோளாக விடுக்கவும் விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் திருமணம் செய்து கொள்ளும்போது, கலப்புத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்து தெரிவித்தார்கள். அவரே அதற்கான நடவடிக்கை எடுத்து, நல்ல

பெண்ணாகப் பார்த்துத் தருவார்களானால், வருகிற தை மாதத்திலேயே கூட நான் திருமணம் செய்து கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அப்படிப்பட்ட பொறுப்பை நான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறார். அவர் சார்ந்திருக்கிற கட்சியின் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பொறுப்பையே என்னை நம்பிக் கொடுப்பதற்காக நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திருமணத்தை நடத்தி வைக்கிற பெருமை மாண்புமிகு தமிழக முதல்வருக்குத்தான் இருக்கிறது. பெண்ணைப் பார்க்க வேண்டிய பொறுப்பைத்தான் மாண்புமிகு உறுப்பினரிடம் ஒப்படைக்கிறேன் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** மிக்க மகிழ்ச்சி.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இன்றைக்கு ஒன்றுக்கு ஒப்புக் கொண்டால், இனி இதுவே மாண்புமிகு உறுப்பினருக்கு வேலையாகப் போய் விடும். . .

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் ஒரு எச்சரிக்கையை விடுக்கிறார்கள். இப்போது இதை ஒப்புக்கொண்டால் இதே வேலையாகப் போய்விடும், அதனால் வேறு வேலையைப் பார்க்க முடியாது. விரைவில் தேர்தல் வர இருக்கிறது. இந்த வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தால், இனி அந்த வேலையைப் பார்க்க முடியாது என்று சூசகமாகத் தெரிவிக்கிறார்கள். அந்த வேலையை நான் முடித்துக் கொண்டு—அதுவரை அவர் திருமணம் செய்து கொள்ளும் முயற்சியைத் தள்ளிப் போடுவாரானால்—நிச்சயமாக அவருக்கு நான் துணை செய்யத் தயாராக இருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாகத் தை மாதத்திலேயே வைத்துக்கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். மேலவைக்கான தேர்தல் ஏப்ரல் மாதத்தில்தான் நடைபெறும். எனவே அந்த வேலையோடு இந்த வேலையையும் சேர்த்தே செய்து விடலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இதுகூட ஒரு 'இடைத்' தேர்தல்தான். . .





**திரு. செ. முத்துசாமி:** ஒரு நேரத்தில் ஒரு காரியத்தைச் செய்வதில் சரியாக ஈடுபட்டால்தான், வெற்றியைக் காண முடியும். எனவே என்னைப் பொறுத்த வரையில், இதை இரண்டாவது வேலையாகத்தான் கொள்ள வேண்டியிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்மீது வைத்திருக்கிற நம்பிக்கைக்கு, அந்த அளவுக்கு நம்பிக்கைக்குப் பாத்திரமாக நினைத்ததற்கு நான் என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்வதோடு, என்னுடைய பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சலுகைகளை வழங்குவதைப் பொறுத்த வரையில், அதனைச் செய்வதன் மூலம்தான் சமுதாயத்தில் கலப்புத் திருமணத்திற்கு ஒரு நல்ல ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளிக்க முடியும் என்பதை என்னுடைய நம்பிக்கையாகத் தெரிவித்து, அந்த நம்பிக்கையை நிறைவேற்றுவதற்கு, ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் முயல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த காலத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் வழங்கியிருக்கிறார்கள். உங்கள் காலத்திலும் கொஞ்சம் வழங்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் மேலும் சில முன்னுரிமைகளைக் கொடுப்பதன் மூலமாகத்தான் இதனை ஊக்கப்படுத்த முடியும் என்பதனாலே, ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இந்த அமைச்சரவையும் இதுகுறித்து முறையாகச் சிந்தித்து ஒரு நல்ல முடிவுக்கு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தனி நபராக நான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருந்தாலும், இது ஒரு சிறந்த தீர்மானமாக இருக்கிற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்களே இதை முன்நின்று நிறைவேற்றித் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. ஆகவே இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், நான் ஏற்கெனவே விரிவாகப் பேசியிருக்கிறேன். மற்ற உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். இங்கே எழுப்பப்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் விரிவாகப் பதில் சொல்கிற வாய்ப்பு பின்னாலே எனக்கு இருக்கிறது என்ற காரணத்தால், இதோடு முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு சமுதாயம் நல்ல சமுதாயமாக அமைய வேண்டும். "எல்லோருக்கும் எல்லாம் என்ற இடம் நோக்கி நகருகிறது இந்த வையம்" என்று பாரதிதாசன் சொன்ன அந்தச் சமுதாயத்தை நோக்கிச் செல்வதற்கு இந்தச் சமுதாய மாற்றம் ஏற்பட்டாலொழிய இன்றைக்கு சோஷலிச நாடுகளில் இருக்கிற சமுதாயத்தைப் போல் யாருக்கும் சொத்து இல்லை. சொத்தெல்லாம் அரசுக்கே சொந்தம், மக்களெல்லாம் அரசாங்கத்திற்குச் சொந்தமானவர்கள். அவர்கள்

நலன்களெல்லாம் அரசாங்கத்தாலே பாதுகாக்கப்படும் என்கிற ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்கிட, இந்த ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறவர்களும், அமைச்சரவையும் சேர்ந்து என்றைக்கு முன்வருகிறார்களோ அன்றைக்குத் தான் நாட்டு மக்களுக்குச் சுபிட்சம் ஏற்படும் என்று தெரிவித்து, அதுவரை இதுபோன்ற கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்க இந்தச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்து விடை பெறுகிறேன், வணக்கம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் முன்மொழிந்து பேசிய இந்தத் தீர்மானத்தை நான் ஆதரித்துப் பேச விரும்புகிறேன்.

கலப்புத் திருமணத்தின் மூலமாக சாதி வேறுபாடுகளை அகற்றி, சமுதாய ஏற்றத் தாழ்வுகளை நீக்கி, ஒப்பற்ற ஒரு புதிய சமுதாயம், ஜாதி பேதமற்ற சமுதாயம் உருவாக வேண்டும் என்றுதான் நாம் அனைவரும் ஆசைப்படுகிறோம். அவ்வாறு ஆசைப்படுகிற இந்த நேரத்தில் கலப்புத் திருமணம் செய்துகொள்ள முன்வருகிறவர்களுக்கு ஏற்படுகிற பிரச்சினைகள், அதனால் ஏற்படுகிற விளைவுகள் அல்லது தொல்லைகள் இவற்றிலிருந்து தக்க பாதுகாப்பு அளிக்கக்கூடிய வகையில் அவர்தம் தீர்மானத்தை முன்மொழிந்து அவர்களுக்கெல்லாம் சில உரிமைகளை, சலுகைகளை அரசு கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அதன் மூலமாக சாதி பேதமற்ற, ஒரு சமுதாயத்தை உருவாக்க முடியும் என்று நாம் நம்புகிறோம்.

இந்தத் தீர்மானத்தை ஒட்டிப் பேசுகிற நேரத்தில், தற்போது கலப்புத் திருமணத்தைக் குறித்து அரசு தருகிற விளக்கத்தைப் பொறுத்த வரையில், எனக்கு ஒரு கருத்து வேறுபாடு இருக்கிறது.

கலப்புத் திருமணம் என்றால், ஆண் பெண் ஆகிய இருவரில் யாரேனும் ஒருவர் ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்ற ஒரு நிபந்தனை இப்போது இருக்கிறது. எனவே கண்டிப்பாக இருவரில் ஒருவர் ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, திருமணம் செய்து கொள்கிறவர்களுக்குத்தான், கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கான சலுகைகள் அளிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட ஒரு நிபந்தனை சரியல்ல என்பதுதான் என்னுடைய கருத்தாகும். காரணம் கலப்புத் திருமணம் என்பது பல்வேறு சாதிகளிடையே நடக்கிற திருமணங்களாகும். இந்தச் சமுதாயத்தில் பிற்பட்டவர்கள்,





தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் இதர சமூகத்தினர் என்று 3 வகையாகப் பிரித்து வைத்திருக்கிறோம். இப்படி பிரிக்கப்பட்ட ஒவ்வொரு பிரிவிலும் கூட பல்வேறு சாதிகள் இருக்கின்றன. அப்படி ஒவ்வொரு பிரிவிலும் பல்

(முற்பகல் 10-40)

வேறு சாதிகள் இருக்கும் போது, கல்வி ரீதியாக, பொருளாதார ரீதியாக ஏற்றத்தாழ்வுகள் ஒரே சாதிக்குள்ளேயே இருக்கின்றன. ஆகவே அப்படிப்பட்ட பொருளாதார, கல்வி, சமூக ரீதியில் ஏற்றத் தாழ்வுகள் பல் வேறு சாதிகளிடையே இருக்கும்போது முற்போக்குச் சாதியாக இருந்தாலும், அல்லது பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், தாழ்த்தப் பட்ட சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், இரண்டு சாதிகளுக்கிடையே நடைபெற்ற திருமணங்களை நாம் கலப்புத் திருமணங்களாக அங்கீகாரம் செய்ய வேண்டும். மேலே நான் குறிப்பிட்ட நிபந்தனை கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள். ஆகவே இரண்டு வெவ்வேறு சாதிகளிடையே நடைபெறக்கூடிய கலப்புத் திருமணத்தை உரிய முறையில் கலப்புத் திருமணமாக அங்கீகாரம் தர அரசு ஆணைகளைப் பிறப்பிக்க வேண்டும். இதற்குரிய விதிமுறைகளில் மாற்றம் அல்லது திருத்தத்தை உடனடியாகச் செய்ய அரசு முன்வர வேண்டுமென்று ஆரம்பத்திலேயே சொல்ல விரும்புகிறேன்.

இங்குள்ளவர்கள் அனைவருக்கும் வரலாறு தெரியும். வேத காலத்திலே ஆரியர்கள் இந்த நாட்டை ஆட்சி செய்யும்போது, எவ்வாறு சாதியை உருவாக்கினார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆரம்பக் கட்டத்திலே இன்னின்ன தொழில்களைச் செய்தவர்கள் இன்னின்ன சாதிகள் என்று நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. ஆனால் இதிகாச காலத்திலே அந்தந்தத் தொழிலைச் செய்பவர்களைச் சார்ந்தவர்கள் அந்தச் சாதிக்காரர்கள் என்றும், அந்தச் சாதியைச் சார்ந்தவர்கள் அந்தந்தத் தொழிலைத்தான் செய்ய வேண்டும் என்றும் கட்டுப்பாடு சமூதாயத்தில் வளர ஆரம்பித்தது. பிற்காலத்திலே காலத்திற்கேற்ப சூழ்நிலை மாறி, கட்டுப்பாடுகள் தளர்ந்து, இந்த நான்கு பிரிவினரிடையே பல கலப்புத் திருமணங்கள் நடந்தன. வேத காலத்திலே ஏற்பட்ட அந்த நான்கு பிரிவினரிடையே ஏற்பட்ட கலப்புத் திருமணத்தின் காரணமாகத்தான் இன்றுள்ள நூற்றுக்கணக்கான சாதிகள் உருவாகியிருக்கின்றன என்ற அடிப்படை உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது. ஆகவே இதைக் கருத்திற்கொண்டு பார்க்கும்போது, இவ்வாறு சலுகைகளைக் கொடுக்கும்போது ஒரு வரைமுறை செய்துகொள்ள வேண்டும் என்று ஏற்கெனவே அரசாணை இருக்கிறது என்று நினைக்கிறேன். கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்குப் பிறக்கக் கூடிய குழந்தைகள் எந்தச் சாதியைச் சார்ந்த

வர்கள் என்று வரையறை கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் விரும்பினால் தகப்பனுடைய சாதியை வேண்டுமானாலும் கூறலாம், அல்லது தாயின் சாதியை வேண்டுமானாலும் கூறலாம் என்று அரசாணை இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். அவ்வாறு கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுடைய குழந்தைகள் தன்னுடைய தந்தை சாதி அல்லது தாய் சாதி ஆகியவற்றுள் எதை வேண்டுமானாலும் கூறலாம் என்ற நிலையை நடைமுறைக்குக் கொண்டு வரும்போது, நாம் எவ்வாறு சாதியை அகற்றப் போகிறோம், ஒழிக்கப்போகி றோம் என்பது சந்தேகமாக, கேள்விக்குறியாக இருக்கிறது. ஆகவே கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்குச் சலுகைகள் தர வேண்டுமென்ற நிலை வரும்போது, எந்தச் சாதியைச் சார்ந்தவர்கள் என்று குறிப்பிடக்கூடிய நிபந்தனை வரக்கூடாது. அவர்கள் சாதியற்றவர்களாக இருக்கக் கூடிய வகையில் விண்ணப்பப் பாரங்கள் இருக்க வேண்டும். ஆகவே இந்தக் கருத்தை அரசு பரிசீலனை செய்ய வேண்டும். குழந்தைகளுக்குச் சாதி உணர்வுகள் குடும்பத்திலிருந்துதான் உருவாகின்றன என்பதை நாம் மறந்து விடக்கூடாது. குறிப்பாக சாதி போதனை பெற்றோரால் மறைமுகமாகவும், நேரிடையாகவும் போதிக்கப்படுகிறது. சமுதாய ரீதியில், கல்விக் கூடங் களில் வேலைவாய்ப்புகள் போன்ற சலுகைகளைக் கொடுக்கும்போது, பல்வேறு விண்ணப்பப்படிவங்களில் சாதியைக் குறிப்பிடும்படி கோருவதால், மாணவப் பருவத்திலேயே அப்படிப்பட்ட உணர்வு இந்தச் சமுதாயத்தில் உருவாக்கப்படுகிறது. இதைக் கருத்திற்கொண்டு பார்க்கும்போது, கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள்—கணவனும், மனைவியும் சாதிபேதமற்ற வர்கள் என்ற ஒரு பிரிவினராக இருக்க வேண்டும். அதே போல அவர் களுடைய குழந்தைகளும் கூட சாதிபேதமற்ற பிரிவினராக இருக்க வேண்டு மென்ற நிலையை அரசு ஆணைகளின் மூலமாக உருவாக்குவதற்கு, சட்டங் களின் அடிப்படையில் ஆராய்ந்து ஒரு மாற்றத்தை ஏற்படுத்தினாலொழிய, கலப்புத் திருமணம் செய்துகொள்வதன் மூலமாக நாம் எதிர்பார்க்கக்கூடிய சாதிபேதமற்ற சமுதாயத்தை உருவாக்க முடியாது, சாதியை அழிக்க முடி யாது. ஆகவே கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுடைய குழந்தை களுக்கு, மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தில் குறிப்பிட்டிருப்பதைப் போல, அரசு சலுகைகளைக் கொடுக்க வேண்டும் என்று வாதாடும் நேரத்தில், நான் சொல்லக்கூடிய இந்தக் கருத்துக் களையும் அரசு பரிசீலனை செய்து தக்க திருத்தங்களைக் கொண்டுவர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். பல்வேறு பிரிவினர்கள் அவர்கள் எந்தச் சாதியாக இருந்தாலும், திருமணம் செய்து கொள்ளும்போது, கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்கள்தான் என்று சட்ட பூர்வமான அங்கீகாரத்



தைக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சமயத்தில் விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கருத்தை நல்ல முறையில் பரிசீலனை செய்து அது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதிபேதமற்ற வாழ்க்கை என்பது எல்லோருடைய உள்ளத்திலும் இருக் கிறது. இது அனைத்துத் தரப்பு அரசியல் தலைவர்கள் உள்ளத்திலும் நீங்காத இடம் பெற்றிருக்கிறது. அதிலே இரண்டு கருத்துக்கள் கிடையாது. ஆனால் நடைமுறைக்கு வரும்போது, செயல்படுத்தும்போது, அரசியல் ரீதி யாக சில பிரச்சினைகளை அணுகும்போது அல்லது தேர்தல் காலங்களில் அல்லது வெவ்வேறு சமுதாயப் பிரச்சினைகள் ஏற்படும்போது, சாதிக்கு முக்கியத்துவம் தந்தாக வேண்டுமென்ற ஒரு நிபந்தனைக்கு ஆட்சியில் இருப் பவர்களும், அரசியல் கட்சித் தலைவர்களும் தள்ளப்படுகிறார்கள் என்ற நிலைமை இந்தச் சமுதாயத்தில் இப்போது இருக்கிறது. அதை நாம் மறந்துவிடக்கூடாது. இல்லையென்றும் நாம் மறுத்துவிட முடியாது. ஆகவே தேர்தல் நேரங்களில் அல்லது அரசியல் கண்ணோட்டத்தில் சாதிபேத நோக்கோடு யாரும் ஈடுபடக்கூடாது என்று அனைத்துச் சமுதாயத் தலைவர் களும், அனைத்து மதத் தலைவர்களும், அனைத்து அரசியல் கட்சித் தலைவர் களும் உறுதியான முடிவிற்கு வர வேண்டும். அப்படிப்பட்ட உறுதியான முடிவிற்கு வந்து தலைமை வகிப்பவர்கள் செயல்படாத நிலையில், சாதியை அகற்ற முடியாது. இந்த வேறுபாடு சாதி, மதம் மாறுகிறவர்களிடையே கூட இருக்கிறது. இந்து மதத்திலிருந்து இஸ்லாம் மதத்தைச் சேரும்போது, அல்லது கிறித்துவ மதத்தைத் தழுவும்போது கூட அவர்கள் சாதியை மறப்ப தில்லை. அந்த அடிப்படையில்தான் சில கோரிக்கைகள் வருகின்றன. வேறு மதத்திற்கு மாறினாலும்கூட ஏற்கெனவே இருந்த சாதியையே சார்ந்தவ ராக இருப்பதால், அவர்கள் ஏற்கெனவே பெற்று வந்த சலுகைகளை நிறுத் தாமல் கொடுக்க வேண்டுமென்று கோரி வருகிறார்கள், அதற்காக நாமும் ஆணையைப் பிறப்பிக்கிறோம். அண்மையில்கூட அரசு அவ்வாறு ஆணை பிறப்பித்திருக்கிறது. ஆட்சியில் இருப்பவர்கள் எப்படி நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்படுகிறார்கள் என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான் நான் இதைச் சொல்லுகிறேன். இதைப் போல கோரிக்கைகள் தொடர்ந்து அரசுக்கு வரும். மதம் மாறிய வேறு சாதிக்காரர்கள் எங்களுக்கும் சலுகை தாருங்கள் என்று கேட்பார்கள். அப்படிக் கேட்கும்போது, மறுக்க முடியாத சூழ்நிலை அரசுக்கு வரத்தான் போகிறது. ஆகவே மதம் மாறியவர்களாக இருந்தாலும், சாதிகள் அடிப்படையில் மதப் பாகுபாடு இல்லாமல் அவர்களுக்கு உரிய

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1983 நவம்பர் 1

சலுகைகளைக் கொடுக்க வேண்டுமென்ற நிலைக்கு அரசு தள்ளப்படுகிற சூழ்நிலை உருவாக்கப்படுகிறது. அப்போது நிச்சயமாக பல ஆணைகளை அரசு வெளியிட்டாக வேண்டும். சமுதாய அமைப்பிலுள்ள அடிப்படைக் கோளாறுகளை நீக்காத வரையில், இப்படிப்பட்ட சலுகைகளைக் கொடுத்து நாம் ஒருபுறம் சாதிகளை ஒழிக்கவேண்டுமென்று சொன்னாலும் மறுபுறம் சாதி உணர்வுகளுக்குத் தூண்டுகோல் போடக்கூடிய அளவிற்கு மறைமுகமாக ஆதரவு தரக்கூடிய பரிதாபகரமான நிலையில் நாம் இருக்கிறோம் என்பதை அனைத்துப் பிரிவினரும் மறந்துவிட முடியாது. ஆகவே இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகின்ற அதே நேரத்தில் நான் சொல்லுகிற இந்தக் கருத்துக்களை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் சமுதாயக் கோளாறுகளை நீக்குவதற்கு முட்டுக்கட்டையாக இருக்கக் கூடிய சூழ்நிலையை அகற்ற அரசு பல்வேறு தரப்பினர்களையும் கலந்து ஆலோசித்து, நல்ல முடிவுகளை எடுக்க வேண்டும். இந்தச் சலுகைகளைத் தர வேண்டும் என்பதை நான் ஆதரிக்கும் நேரத்தில், கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள் எந்தச் சாதியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், சலுகைகளைப் பெறலாம் என்ற முடிவை அரசு எடுக்க வேண்டுமென்று குறிப்பாக வலியுறுத்தி அமர்கிறேன்.

(முற்பகல் 10-50)

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொண்டு வந்திருக்கின்ற "கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுக்கு அரசுப் பணிகளின் நியமனத்தில் முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும், அவர்களின் குழந்தைகளுக்கு கல்லூரி வரையில் இலவசக் கல்வி வழங்கவேண்டுமென்றும் இந்த மன்றம் அரசுக்குப் பரிந்துரை செய்கிறது" என்ற தீர்மானத்தினை நான் வழி மொழிந்து ஆதரித்துப் பேசுவதற்கு விரும்புகிறேன்.

பொதுவாக, சாதியற்ற சமுதாயம் அமைய வேண்டுமென்று இன்று நேற்று அல்ல, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி மிகப் பெரிய சொற்பொழிவையே நீங்கள் நிகழ்த்தியிருக்கிறீர்கள். அது மட்டுமல்ல, அந்தக் காலத்திலேயே

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு
ஒவ்வா செய்தொழில் வேற்றுமையான்"

என்று வள்ளுவர் சொல்லிச் சென்றிருக்கிறார்.



983 நவம்பர் 1] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

'சாதி இரண்டொழிய வேறில்லை' என்று ஔவையும் சொல்லிச் சென்ருக்கிறார்.

'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று பாரதியாரும் பாடிச் சென்றிருக்றார்.

"இருட்டறையில் உள்ளதடா உலகம்,
சாதி இருக்கிறது என்பானும் இருக்கின்றானே"

ன்று பாரதிதாசனும் குமுரியிருக்கிறார்.

பெரியார் சாதி ஒழிப்பு மகாநாடே நடத்திப் பார்த்திருக்கின்றார். க்டர் கலைஞர் காலத்திலே கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுக்குத் ங்கப் பதக்கம் வழங்கவேண்டுமென்ற ஒரு திட்டத்தக் கொண்டு வந்தார்கள். தவைத் திருமணம் செய்தவர்களுக்குப் பரிசு தரவேண்டும் என்ற திட்டத்தை ல்லாம் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்படி கடந்த காலம் தொட்டு ன்று வரையிலே சாதியை ஒழிக்க வேண்டும், அதற்காக இப்படி நடவடிக்கை லே ஈடுபட வேண்டுமென்று அனைவரும் பேசிக் கொண்டிருக்கிறோம். னால் நாம் பேசிக்கொண்டிருக்கின்றோமே தவிர, நடைமுறையில் அதைச் ய்கின்றோமா என்றால், இல்லை. அதுதான் இதற்குள்ளே உள்ள கோளாறு க்கு அடிப்படையாகும். இதை நடைமுறையிலே கொண்டு வருவதில் க்கல்கள் ஏராளமாக இருக்கின்றன. தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள்கூட ந இடத்திலே சொல்லியிருக்கின்றார்.

"ஒளிந்துகொண்டிருக்கும் சாதி, ஒலித்துக்கொண்டிருக்கும் சாதி, அவ்வப் ாது அழிந்துகொண்டிருந்து, அது அலைக்கழிக்கிறது மக்களை" என்று ால்லி, அது ஒழித்துக் கட்டப்படவேண்டிய ஒன்று என்று அவர்கள் ால்லியிருக்கிறார்கள். தமிழ்த் தென்றல் திரு. வி. க. நூற்றாண்டு விழா டைபெறுகின்ற இந்தக் காலத்திலே நாம் அதை நினைவு கூர்வதற்குக் மைப்பட்டிருக்கிறோம். ஆகவே எந்தப் பிரிவினர் ஆனாலும், சாதிகள் நீக்கப்பட வேண்டுமென்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. து ஒழிக்கப்பட வேண்டும் என்று சொல்கின்றோம். ஆனால் நிலைமை ப்படி இருக்கிறது? ஒரே ஒரு உதாரணத்தை மட்டும், ஒரு சிறிய சம்ப த்தை மட்டும் சொல்கிறேன். நான் ஆசிரியன். அதுவும் தொடக்கப் பள்ளி சிரியன். நான் ஒரு ஊருக்குத் தொடக்கப்பள்ளி ஆசிரியனாகப் பொறுப் ற்கச் சென்றிருந்தேன். அப்படி இருக்கின்ற நாட்டாண்மை பஞ்சாயத்தில் ப்பவர் யாரோ. அவரை அந்த கிராமத்திலே பார்த்து அவரைக் காக்காய் டித்துக்கொண்டால்தான். அந்த ஊரிலே நிலையாக சில காலத்திற்காவது க்க முடியும் என்ற நிலை நாட்டிலே இருப்பது உறுப்பினர்களுக்கு

ன்றாகத் தெரியும். ஆகவே அந்த வகையிலே அந்த ஊரிலே இருப்பவர் யார் என்று பார்த்து, அவருடைய குலம் கோத்திரம் எல்லாம் பார்த்துத் தெரிந்து கொண்டு, அங்கே எப்படியாவது நிலையாக இருக்க வேண்டுமே என்று கருதி அவர்களிடம் போனேன். தயவுசெய்து யாரும் கோபித்துக்கொள்ளக்கூடாது, ஒரு குறிப்பிட்ட சாதியைச் சொல்வதாக. அங்கே நடந்த சம்பவத்தைத்தான் சொல்கிறேன். அங்கே இருக்கின்ற அவரைப்பற்றி புரிந்துகொண்டு சென் றேன். நான் சொல்வது, இந்த கிராமத்திலே நிலையாக இருக்க வேண்டுமென் றால், அந்த சாதிக்காரன் என்று நானே போய்ச் சொல்லியாக வேண்டும் என்று கருதிக்கொண்டு, நான் அவரிடம் சென்றேன். அங்கே போனவுடனே வாத்தியார் வந்திருக்கிறார்' என்று ஒருவர் அறிமுகப்படுத்தினார். உடனே அவர் 'என்ன வாத்தியார்?' என்றார். 'நான் தொழில் வாத்தியார் அல்ல. நான் ஆசிரியர்' என்று சொன்னேன். "வாத்தியார் என்றால், யாரோ என்று நினைத்துக்கொள்ளாதீர்கள். நான் ஆசிரியர்" என்று சொன்னேன். "என்ன அதிகப்பிரசிங்கித்தனமாகப் பேசுகின்றீர்களே" என்று அவர் என்னைக் கேட்டு விட்டு, "என்ன வர்ணம்?" என்று கேட்டார்கள். என்ன வர்ணம் என்று கேட்ட வுடனே ஒன்றும் எனக்குப் புரியவில்லை. நான் என் உடலைப் பார்த்துவிட்டு, 'கறுப்பு வர்ணம்' என்றேன். "நான் அதைக் கேட்கவில்லை ஐயா. நீ என்ன சாதி?" என்று கேட்டார். அவர் சாதிபற்றி நான் ஏற்கெனவே விசாரித்து விட்டுத்தான் போனேன். அதைச் சொன்னேன். 'முதலியார் சாதி' என்று சொன்னேன். "ஆமாம், அதிலே இரண்டு உண்டே" என்றார். எனக்குப் புரியவில்லை. "அதிலே இரண்டு உண்டே" என்றார். "அது என்ன?" என்று கேட்டேன். "அதாவது தொண்டை மண்டலம், ஆற்காடு" என்று இருக்கிறது என்றார். "நீ என்ன பிரிவு?" என்று கேட்டார். அவர் சாதியைப்பற்றி ஏற் கெனவே விசாரித்துக்கொண்டு போனேன். ஆகவே அதையும் சொன்னேன். "தொண்டைமண்டலம்" என்று சொன்னேன். "ஆமாம், அதிலே இரண்டு உண்டே" என்றார். "அது என்ன?" என்றேன். "விபூதி பூசுகிறது, நாமம் போடுகிறது" என்றும் "அதில் எது?" என்றும் கேட்டார். நான் அவர் முகத் தைப் பார்த்தேன். அவர் நாமம் போட்டிருந்தார். நான் "நாமம் போடுகிறது" என்றேன். "அதிலேயும் இரண்டு உண்டே" என்றார். ஒன்று "வால் போட்டு போடுவது, மற்றொன்று இப்படிப் போடுவது" (மாண்புமிகு உறுப்பினர் சைகை காட்டிச் சொன்னார்கள்) என்று சொன்னார். "ஆமாம் அதிலேயும் இரண்டு உண்டே" என்றார். "அது என்ன?" என்றேன். "சைவம்; அசைவமா" என்றார். நான் "சைவம்" என்றுதான் சொன்னேன். "அப்படியா, நம்ம பையன்தான், உட்காருங்கள்" என்று சொன்னார்கள். ஆக ஒரு சாதிக்குள்ளேயே இத்தனை பிரிவுகள் இருக்கின்றன.



**திரு. சி. இராமலிங்கம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தொண்டைமண்டலம் என்பவர்களில் அசைவமே கிடையாது. எல்லோரும் சைவம்தான்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** அந்தக் காலத்திலே அப்படி இருந்திருக்கலாம். இந்தக் காலத்திலே இப்படி ஆகிவிட்டிருக்கலாம். ஆக இந்தப் பிரிவிலே அசைவம் ஆனவர்கள் இருக்கிறார்கள். அப்படி ஆனவர்கள் இருக்கலாம் என்றும் கருதலாம் அல்லவா? ஆகவே சாதிக்குள்ளே துணைப் பிரிவுகள் இருக்கின்ற காரணத்தினாலே, எந்த சாதியை எடுத்துக்கொண்டாலும், அது தாழ்ந்த சாதியானாலும் சரி, உயர்ந்த சாதியானாலும் சரி, பல உட்பிரிவுகள் இருக்கின்றன. பிராமணர்கள் மற்றவர்களில்கூட இருக்கின்றார்கள். பிரா மணர்களில் சிலரை மட்டமாகக் கூறுகிறார்கள். அடுத்தவர் அடுத்தவரை மட்டமாகக் கருதுகிறார்கள். அவர்களுக்குக் கீழே இருப்பவர்களை மட்ட மாகக் கூறிக்கொண்டிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட பிரிவுகளை ஒழிக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால் அரசியலுக்கும் மற்ற வாழ்வுக்கும் இன்றைக்குத் தேவைப்படுவது சாதி. அதுதான் பிரச்சினை. நாம் இன்றைக்கு எடுத்துக்கொண்டால்கூட, இங்கே இருப்பவர்கள்பற்றி மற்ற விவரங்கள் தெரியாவிட்டாலும்கூட, யார் யார் என்ன என்ன சாதி, எந்த எந்த அமைச்சர் எந்த எந்த சாதி, எந்த எந்த உறுப்பினர் எந்த எந்த சாதி என்று பார்க்கிறார்கள். சாதிக்கு ஒருவர் இருக்கிறாரா என்று பார்த்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு இன்றைக்கு அரசியலில் நிலைமைகள் போய்க்கொண்டிருக்கின்றன என்பது மிகத் தெளிவாகத் தெரிந்த ஒன்று. சாதியை ஒழிப்பதும் கலப்புத் திருமணம் செய்வதும் ஒன்றுதான். அந்த கலப்புத் திருமணத்தை எப்படிக் கொண்டு வருவது என்றால், விரும்பி வருகின்றவர்கள் மட்டும்தான் செய்துகொள்ள வேண்டும் என்று இருக்கக் கூடாது. உண்மையிலே நான் நினைக்கிறேன். நான் அப்படி எல்லாம் வர முடியாது. இருந்தாலும், நான் ஒரு சர்வாதிகாரியாக இருந் தால், "ஒரே சாதியில் திருமணம் எவரும் செய்யக்கூடாது" என்று ஒரு உத்தரவு இட்டுவிடுவேன். "என்ன, இப்படிச் சொல்கிறேன்" என்று கருதா தீர்கள். என்னுடைய எண்ணத்தைத்தான் நான் சொல்லிக்கொள்கிறேன். ஒரே சாதியிலே திருமணம் செய்துகொள்ளக் கூடாது. அப்படி யாராவது திருமணம் செய்துகொள்வதாக இருந்தாலும்கூட, அவர்களின் பெற்றோர்கள் விடுவது இல்லை அல்லவா? எனவே அந்த நிலைமையை மாற்ற வேண்டும். தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் ஒரு வார்த்தை சொல்லியிருக்கிறார்கள். ஒரு வீட்டிற்குள்ளேயே இந்துவாக ஒருவரும், முஸ்லீமாக ஒருவரும், கிருத்துவ ராக ஒருவரும், புத்த மதத்தைச் சேர்ந்தவர் ஒருவரும், ஜைன மதத்தைச்

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1983 நவம்பர் 1

சேர்ந்தவர் ஒருவரும், இப்படி எல்லா மதத்தினைச் சேர்ந்தவர்களும் ஒரு வீட்டிற்குள்ளே இருக்க வேண்டும். சாதி என்ற வார்த்தையைச் சொல்லிப் பார்க்கலாம். சாதி என்ற வார்த்தையைப் பிரியுங்கள். 'சா' பிளஸ் 'தி', அதாவது சாவதற்குத் தீயிலே தூக்கிப் போடக்கூடிய ஒன்று என்றுகூட நம்மாலே சொல்ல முடியும். மதம் என்று சொன்னால் மதம் பிடித்தவன் என்று சொல்ல லாம். மதம் என்று சொன்னால் திமிர் பிடித்தவன் என்றும் சொல்லலாம். ஆகவே மதமும் சாதியும் நம்முடைய நாட்டை அலைக்கழிக்கின்ற ஒன்று. அவைகள் அலைக்கழித்து வருகின்றன. அதை மாற்றுவதற்கு இந்தக் கலப்புத் திருமணம் மிக மிக அவசியமானது. ஆனால் அந்தக் கலப்புத் திரும ணத்தைச் செய்து கொண்டவர்கள் எல்லாம் பிற்காலத்திலே வாழ்க்கையிலே சுகமாக இருக்கிறார்களா என்று பார்த்தால், அவர்கள் சுகமாக இருப்பதற்கான வழிவகைகளை நாம் வகுத்திருக்கிறோமா என்று பார்த்தால், அது இல்லை. அந்த அடிப்படையிலே அவர்களுக்கு எப்படிப்பட்ட சலுகைகளை வழங்க வேண்டும். அதனால் அவர்கள் எப்படி சுகமாக இருக்கலாம் என்று பார்க்க வேண்டும். அந்தக் கொள்கையைப்பற்றிக் கேட்காமலேயே அவர்கள் கலப்புத் திருமணம் செய்துகொள்கின்றார்கள். தெரிந்தோ, தெரியாமலோ அவர்கள் சமூகத்திற்கு நன்மை செய்கின்றார்கள். அப்படிச் செய்துகொள்ளக்கூடியவர் களுக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையிலே, மற்றவர்களும் அவர்களைப் பார்த்துச் செய்யவேண்டும் என்று எண்ணக்கூடிய அளவிலே அதை மாற்றியாக வேண்டும். ஒரு காலத்திலே மதம் மாறியவர்களுக்கு சலுகைகளைக் கொடுத்தார்கள் அந்தந்த மதத்தைச் சேர்ந்தவர்கள். கிருத்துவ மதத்திலே சேர்ந்தால் போதும், அவர்களுக்கு இப்படிப்பட்ட சலுகைகள் எல்லாம் உண்டு என்று சொல்வார்கள். அது நாம் கண்கூடாகக் கண்ட உண்மை. இப்போது கூட முஸ்லீமாக மாறிவிட்டால், ஏதேதோ உதவிகள் செய்வதாகக்கூட, வேறு வேறு வகையிலே செய்வதாகக்கூட, நம்முடைய கடந்த காலச் சம்பவங்களிலிருந்து நமக்குத் தெரிவிக்கப்பட்டது. அது நமக்கு நன்றாகத் தெரியும். ஆகவே அவர்கள் மதத்தை வளர்க்க அவர்கள் செய்கின்றார்கள். ஆகவே அரசாங்கம் அந்த சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்குவதற்கு இப்போது முடியாவிட்டாலும்கூட, வருங்காலத்திலாவது உருவாக்குவதற்கு இந்தக் கலப்புத் திருமணத்தைச் செய்துகொண்டவர்களுக்கு என்ன நன்மைகள் செய்ய இருக்கின்றார்கள்? ஏற் கெனவே தங்கப் பதக்கம் தர ஆணை பிறப்பிக்கப்பட்டது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சாதி மத பேதம் இருக்கக்கூடாது என்று சொல் கின்றாரா? சாதி இருக்கக்கூடாது, மதம் இருக்கக்கூடாது என்று சொல்கின் றாரா என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1983 நவம்பர் 1]

திரு. க. மீனாட்சிசுந்தரம்: என்னைப் பொறுத்தவரையில், மதமே இருக்கக் கூடாது, சாதியும் இருக்கக்கூடாது என்னைப் பொறுத்தவரையில், எந்த மதத்தையும் நான் விரும்புகின்றவன் அல்ல. ஆகவே அந்த வகையிலே சொல் கிறேன். ஆக மதம் என்றால், யாரையோ சொல்லிவிட்டால், அப்படி ஏதாவது பகை வந்துவிடுமே என்று நான் அஞ்சத் தேவையில்லை. எந்த மதமும் இருக்கக்கூடாது, சாதி இருக்கக்கூடாது என்பதுதான், என்னைப் பொறுத்த வரையில், சொல்லிக்கொள்ள முடியும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். எனவே கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்க கலப்புத் திருமணம் செய்து கொண்டு அவர்கள் பிற்காலத்தில் நன்கு வாழ்வதற்கு வழி செய்ய வேண்டும். அவர்கள் சந்ததியினர் வாழ வழி செய்ய வேண்டும். அவர்கள் கலப்புத் திருமணம் செய்துகொண்ட பிறகு, உற்றார் உறவினர் அவர்களை விட்டுவிடுகி றார்கள். அவர்களை விலக்கி வைத்து விடுகிறார்கள். அதற்குப் பின்னாலே அவர்களுக்கு எந்தவிதமான உதவியும் உற்றார் உறவினர், சுற்றத்தார் கொடுப்ப தில்லை. அப்படி ஒரு நிலை ஏற்படுகிறது அவர்கள் வாழ்வதற்கு. நெருக்கடி ஏற்படுகிறது.

திரு. சி. இராமலிங்கம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவராக இருக்க ஆசைப்படுகிறார்?

திரு. க. மீனாட்சிசுந்தரம்: சாதியற்ற சமுதாயத்தில்தான் நான் ஒருவனாக இருக்க ஆசைப்படுகிறேன். இப்போதுள்ள நிலைமை நான் சாதியில்லை என்று எழுதி வைத்தால், பிற்காலத்திலே என்னுடைய குழந்தைகளுக்கு எந்தச் சலுகையும் கொடுப்பதில்லை என்ற நிலைமை இருக்கிறது.

(முற்பகல் 11-00)

தமிழன்' என்று எழுதிவிட்டு, அதற்குப் பின்னால் வேண்டுமானால் 'கலப்புத் திருமணம்' என்பதற்கு 'க. தி.' என்று அடைப்பிற்குள் போடுவதற்கு பள்ளி களிலே ஏற்பாடு செய்து, கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களின் குழந்தைகளுக்கு அதிகச் சலுகைகள் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான், சாதியற்ற சமுதாயம் உருவாக ஊக்குவிப்பதாக அமையும்.

கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்கள், முதலிலே வாழ்க்கையில் மிகவும் சங்கடப்படுகிறார்கள் என்று சொன்னேன். கலப்புத் திருமணம் செய்துகொண்டால், யாரும் அவர்கள் பக்கத்தில் வருவதில்லை. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல, ஒருவர் தாழ்த்

தப்பட்ட பிரிவினராக இருந்தால்தான் செல்லும் என்ற நிலைமைகூட இருக்கக் கூடாது. எந்தப் பிரிவாக இருந்தாலும், வேறு எந்த சாதிக்காரரையாவது கலப்புத் திருமணம் செய்துகொண்டாலும், அது ஊக்குவிக்கப்பட வேண்டும். சைவ வேளாளர் ஒருவர், வன்னியர் குலத்தில் கல்யாணம் செய்துகொண்டாலும் அவர்களுக்கு வன்னியர் குலத்தில் இருக்கிறவர்கள் ஒத்துழைப்பு தருவதில்லை. அதைப்போன்று ஐயங்கார் ஒருவர் ஐயர் குடும்பத்திலிருந்து மணம் செய்து கொண்டாலும், ஒத்துழைப்பு கிடைப்பதில்லை. எனவே ஒருவர் உயர்ந்த சாதியாக இருக்க வேண்டும். ஒருவர் தாழ்ந்த சாதியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை கொள்கையை நிறைவேற்றாது. எந்த சாதியாக இருந்தாலும் கலப்புத் திருமணம் செய்துகொண்டால், அவர்கள் வாழ வகை செய்ய வேண்டும். அவர்களுக்கு 5 ஏக்கர் நிலம் தர வேண்டும். அவர்களுக்கு வீடு இல்லை என்றால், வீடு தர வேண்டும். அரசாங்கம் அதைத் தர வேண்டும். திருமணச் செலவையே அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டும். அப்படியெல்லாம் செய்தால்தான், சாதியை நம்மாலே ஒழிக்க முடியுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். படிப்பு உதவித் தொகை மட்டுமல்ல, அவர்கள் தொழில் செய்வதற்குக் கூட நிதி தர வேண்டுமென்பது முக்கியமானது. அரசு கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களின் குடும்பத்திற்குத் தர வேண்டும். உடனே தர வேண்டும். வேண்டுமானால், அவர்கள் வசதி படைத்தவர்களாக இருந்து, வேண்டாமென்றால், அவர்களை விட்டுவிடலாம். கலப்புத் திருமணத்தை மனதார வரவேற்கிறோம் என்பதை மெய்ப்பிக்க வேண்டுமென்றால். மற்ற துறையினருக்கு இல்லாத அளவுக்கு இவர்களுக்குச் சலுகைகள் அனைத்தும் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்த விரும்புகிறேன். அவர்கள் தொழில் செய்ய நிதி ஆதாரம் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்குக்கூட தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், என்று பள்ளிச் சான்றிதழ்களில் குறிக்கும் சூழ்நிலை இருக்கிறது. தமிழன், திராவிடன், இந்தியன் என்று சொன்னாலும், சாதி இல்லை என்று சொன்னாலும், அப்படியே எழுதிக்கொண்டு, கலப்புத் திரு திருமணம் செய்து கொண்டவர் என்பதை மட்டும் 'க. தி.' என்று அடைப்பிற்குள் எழுத ஏற்பாடு செய்து, அவர்களுடைய சந்ததியினருக்குச் சலுகைகள் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆக இந்த சங்கடங்களைப் போக்கும் வகையிலே, இதையெல்லாம் செய்தால்தான் நல்லது. நாம் நிறையப் படித்தோம், படித்ததைக் கடைப்பிடித்தோம்— அதுதான் மிக முக்கியமானது. பெரியோர்கள் வழி நின்றோம் என்று சொல்வதோடு, அதை உண்மையிலேயே கடைப் பிடித்தோமா? இதை அனைத்துப் பிரிவினரும் உணர வேண்டும். அப்படி உணரப்படுகிறதா என்றால்



ணரப்படவில்லை என்பதை மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை உருவாக்கும் வகையிலே தனியார் ர்மானம் வந்திருக்கிறது. தனியார் தீர்மானம் என்று வந்தாலே, அதை ரசுத் தரப்பிலே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அது மரபு. "அதை ங்களே செய்கிறோம், அதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம், பின் ாங்கிக்கொள்ளுங்கள், திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று சொல்வது ழக்கம். அரசே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றலாம். ண்மையிலேயே "மனதார" என்றால், அவரவர்கள் நெஞ்சிலே கை வைக்க வண்டும். வீடு வரையிலே, வாசல் வரையிலே பேசுகிறோம். உள்ளே பானால் அடுப்பங்கரைக்கு அழைத்துக்கொண்டு போக மாட்டோம். வாசற் டி வரை நிற்கிறது. பெரிய மனிதர்கள் வீட்டுக்குப் போனால், படியிலிருந்து றங்கி வாசலுக்கு வந்து, வணக்கம் சொல்லுவார்கள். இவனை மேலே ட்டால் சுப்பு என்று கீழே வந்து அனுப்புவார். இவ்வளவு தூரம் இறங்கி ந்து, வணக்கம் சொல்கிறாரே என்று இவர் நினைப்பார். இந்த நிலைகளை ல்லாம் நாம் களைய நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி சாதிகளைப் ின்பற்றுகிற, சாதிக் கொடுமைகள் செய்கிற யாராக இருந்தாலும், அவர்கள் து கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு வழிவகை காண வேண்டு என்று சொல்லி, தீர்மானத்தை வழி மொழிந்து, அமைகிறேன்.

* திரு. சி. இராமலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு அரசுப் பணிகளின் நியமனத்தில் முன் னுரிமை வழங்க வேண்டுமென்றும், அவர்களின் குழந்தைகளுக்குக் கல்லூரி ளையில் இலவசக் கல்வி வழங்க வேண்டுமென்றும் இந்த மன்றத்தில் மாண்பு கு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் தனி நபர் தீர்மானத்தைக் கொண்டு ந்திருக்கிறார்கள். அதன்மீது பேசும் வாய்ப்பு அளித்ததற்காக நான் நன்றி லந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் ரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் நல்ல கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சான்னார்கள். கேட்பதற்கு இனிமையாக இருந்தது. ஆனால் வற்றைப் பின்பற்றி நடக்க சமுதாயத்திலே இன்றைக்கு இடமில்லை. வள்ளுவர் காலத்திலேயே 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற குறளைச் சொன்னார்கள். தந்தை பெரியார் அவர்கள் சுய மரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்து என்னைப் போன்றவர்களையும் மாண்புமிகு அறநிலையத் துறை மைச்சர் போன்றவர்களையும் அதிலே ஈடுபடச் செய்திருக்கிறார்கள். ின்னும் பலர் இருக்கிறார்கள். அவையிலே உள்ளவர்களைச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை என்பதால் சொல்கிறேன். சாதிகள் இல்லை டி பாப்பா என்று பாரதியார் பாடியதற்கு ஒப்ப, எங்களை எல்லாம் தந்தை

பெரியார் அவர்கள் உருவாக்கினார்கள். அவர் உருவாக்கியவர்களிலே பிரதமராக விளங்கியவர் பேரறிஞர் அண்ணா அவர்களாவார்கள். அவர் எவ்வளவு இழிவாகக் கருதப்பட்டார், அவரை எந்த அளவுக்குச் சமுதாயம் மதித்தது—அந்தச் சூழ்நிலைகளை எல்லாம் என்னுடைய மனக் கண்ணில் நினைத்துப் பார்க்கிறேன். தந்தை பெரியார் அடிக்கடி சொல்லுவார். சாதி ஆண்களிடத்திலேதான் இருக்கிறது, பெண்கள் இடத்திலே கிடையாது என்று சொல்லுவார். எந்தப் பெண்ணும் 'காமாட்சி செட்டியார்' என்று கூறிக்கொள்வது கிடையாது; எந்தப் பெண்ணும் 'மீனாட்சி ஐயர்' என்று கூறிக்கொள்ள மாட்டார்கள். 'அலமேலு ஐயங்கார்' என்றும் போட்டுக் கொள்ள மாட்டார்கள். பெண்களுக்கு சாதி கிடையாது. ஆண்களுக்குத்தான் சாதி இருக்கிறது என்று பெரியார் அவர்கள் விளக்கியிருக்கிறார்கள். நாம் தான் சாதியை வைத்துக்கொண்டிருக்கிறோம் யாரும் தவறாக நினைக்கக் கூடாது. ஆண்கள் சின்ன வீடு என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சாதியை வைத்தா வைத்துக்கொண்டிருக்கிறார்கள்? . . . .

**திரு. சோ. ஆறுமுகம்:** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆண்கள் எல்லாம் இரண்டாவது வீடு வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார். எல்லோருமா வைத்துக் கொண்டிருக்கிறார்கள்? எல்லோர் மீதும் பழி போடுவது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. சி. இராமலிங்கம்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் போன்ற வசதி, வாய்ப்பு உள்ளவர்கள் உத்தமர்களாக இருக்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** வசதி வாய்ப்பு உள்ளவர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்களா ?

**திரு. சி. இராமலிங்கம்:** சில பேர் உத்தமர்களாக இருக்கலாம் என்று தான் சொன்னேன். சமுதாயத்திலே கீழ் மட்டத்திலே, பிளாட்பாரத்திலே இருக்கிறவர்கள் . . . .

**திரு. செ. முத்துசாமி:** சின்ன வீடு, பெரிய வீடு என்று சொன்னார்கள். சின்ன வீட்டிலே வேறு சாதியைச் சேர்ந்த பெண்ணை வைத்துக்கொண்டிருந்து அவர் மூலமாகக் குழந்தை பிறந்தால், அவர்களுக்கும் சலுகை கொடுக்க வேண்டுமென்பது அவர்கள் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும் என்பதும் இதில் அடங்கியிருக்கிறது.





**திரு. சி. இராமலிங்கம்:** அங்கேதான் வருகிறேன். அந்த இடத்திற்கு வருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** எனக்கு சந்தேகம், சின்ன வீட்டுக்கு வருகிறேன் என்று சொன்ன மாதிரி இருக்கிறது.

**திரு. சி. இராமலிங்கம்:** என்னுடைய 20 ஆம் வயதிலே தந்தை பெரியார் அவர்கள் திராவிட மாணவர் அமைப்பை ஏற்படுத்தினார்கள். அந்த நேரத்தில் தென் ஆற்காடு மாவட்டத்திற்கு என்னை அந்த அமைப்புக்குப் பொறுப்பாளராகப் போட்டார்கள்.

(முற்பகல் 11-10)

நாங்கள் கடலூரில் புதுப்பேட்டையில் ஒரு மாநாடு நடத்தினோம். அதில் பேராசிரியர் அன்பழகன் போன்றவர்கள் எல்லாம் கலந்து கொண்டார்கள். அமரர் திரு. சம்பத் அவர்கள்தான் மாநாட்டிற்குத் தலைமை வகித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் முத்துசாமி, மீனாட்சிசுந்தரம் போன்றவர்கள் எல்லாம் இந்த ஆட்சி குறித்து தவறான கருத்துக்குப் போய் விடக்கூடாது என்பதற்காகத்தான் இதை நான் சொல்கிறேன். அன்றைக்கு அந்த மாநாட்டுக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்த அத்தனை பேரும் வந்திருந்தார்கள். என் அண்ணனாக, தம்பியாக இருந்த அமரர் திரு. மதியழகன் அவர்கள் அன்றைக்கு இதிலே பேரார்வம் காட்டினார்கள். இன்றைக்கு பெரியாருக்கு வாரிசு என்று சொல்கிறார்களே, அந்த திரு. கி. வீரமணி அன்றைக்கு எங்களாலே உற்பத்தி செய்யப்பட்டு, எங்களுக்குப் பின்னால் வரக்கூடிய ஒரு தொண்டர். தயவுசெய்து சாதியைப் பற்றிச் சொல்லும்போது நாங்கள் தான் அதை உற்பத்தி செய்கிறோம். அதை நாங்கள் தான் செய்கிறோம் என்கிற ஒரு கருத்துக்கு யாரும் வந்துவிடக் கூடாது.

குறிஞ்சிப்பாடியில் ஒரு ஆதி திராவிடர் வீட்டுத் திருமணத்திற்கு அன்றைக்கு புலவர் நன்னன், தில்லை வில்லாளன், புலவர் தியாகராஜன், திரு. கே. ஏ. மதியழகன், போன்றவர்கள் எல்லாம் போனோம். அங்கே போனவுடன் சாப்பிடுவதற்கு பால்தான் கொடுத்தார்கள். ஊருக்கு வந்த பிறகு ஏதோ பெரிதாக நடந்துவிட்டதைப்போல என்னை ஜாதிக் கட்டுப்பாடு செய்தார்கள். அன்றைக்கு ஜாதியின் பெயரைச் சொல்லி தூக்கக்கூடிய சூழ்நிலை இருந்தது. இன்றைக்கு அத்தகைய வேறுபாட்டு சூழ்நிலை இல்லை. அதற்குக் காரணம் பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் போன்றவர்களுடைய சுயமரியாதைப் பிரச்சாரம் தான். அன்றைக்கு அவர்களுடைய போன்மைப் பெற்றதற்குப் பிறகு தான் நாங்கள் பிரச்சாரத்திற்கு வந்திருக்

கிறோம். அப்போதிருந்த சூழ்நிலையில் எனக்குத திருமணமாகியிருந்ததால், நான் தப்பித்துக் கொண்டேன். என் சொத்தை இழந்து சென்னைக்கு வந்திருக்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** 'முத்துசாமியும், மீனாட்சிசுந்தரமும் சுயமரியாதை பற்றி தவறாகச் சொல்லி வருகிறார்கள்' என்று நிருபணம் ஆகும் வகையில் என்ன பேசினோம் என்று தெரியவில்லை. அப்படி நாங்கள் ஒன்றும் பேசவில்லை.

**திரு. சி. இராமலிங்கம் :** தந்தை பெரியார் அவர்கள்தான் சுயமரியாதை இயக்கத்தை ஏற்படுத்தியவர்கள். ஆனால் நடைமுறையில் அது இன்றைய தினம் இல்லை என்று திரு. முத்துசாமி அவர்கள் சொன்னார்கள். தற்போது சாதி இல்லையென்ற நிலைமை நடைமுறையில் வரவில்லை என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். தந்தை பெரியார் சுயமரியாதை இயக்கத்தை நடைமுறையில் நடத்திக் காட்டியவர்கள். 'பெண்களுக்கு சாதியில்லை, ஆண்களுக்கு மட்டும்தான் சாதியிருக்கிறது. ஆகவே இதிலே சமுதாயச் சீர்திருத்தம் வந்தாக வேண்டும்' என்று அன்றைக்குப் போராடினார்கள். அதுபோல் இன்றைக்கு நம்மிடையே இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர்கள் திரு. அருணாசலம், திரு விஜயசாரதி போன்றவர்களோடு நாம் தோளோடு தோள் கை போட்டு உலாவுகிறோம் என்றால், அவர்களுடைய வீடுகளுக்குச் சென்று விருந்து சாப்பிடுகிறோம் என்றால், இதற்கெல்லாம் காரணம் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்களுடைய சுயமரியாதை இயக்கம்தான். இன்னும் சொல்லப்போனால், இதற்கெல்லாம் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்களுடைய அன்பு வேண்டுகோள்தான் காரணம் என்பேன்.

இங்கே கலப்புத் திருமணம் பற்றியெல்லாம் பேசினார்கள். நானும் ஏராளமான கலப்புத் திருமணங்களை நடத்தி வைத்திருக்கிறேன். உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். தகப்பன் செட்டியார் சாதி, தாய் வன்னியர் சாதி. இதை நான் குறிப்பிடுவதற்காக தயவுசெய்து மன்னிக்க வேண்டும். இரண்டு பேருக்கும் பிறந்த பெண் குழந்தையை தகப்பன் 'என் சாதியில்தான் திருமணம் செய்து கொடுக்க வேண்டும்' என்று சொல்லுகிறான். ஆனால் அந்தத் தாயோ "என் அண்ணன் மகனுக்குத்தான் மகளைக் கொடுப்பேன்" என்று சொல்கிறாள். இந்தப் பிரச்சினையை எப்படிப் போக்குவது? இன்றைக்கு சமுதாயத்திலே சாதியை உண்டாக்கக்கூடிய சூழ்நிலை சட்டத்தில் இருக்கிறதா, ஆட்சியில் இருக்கிறதா என்றால் இல்லை. இன்றைக்கு நான் பல பேரை உதாரணமாகச் சொல்ல முடியும். மாண்புமிகு உறுப்பினர்



திரு. இராமமூர்த்தி வருத்தப்பட மாட்டார் என்று நினைக்கிறேன். இங்கே தொண்டமண்டல துளுவ வேளாளர்கள் பற்றிப் பேசினார்கள். நான் சொல்கிறேன், 30 ஆண்டுகளுக்கு முன்பே அப்படி கலப்புத் திருமணம் செய்து கொடுத்திருக்கிறார்கள் அவர்களுடைய தங்கையை. அதேபோல் மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு. ஆர்.எம்.வீ. அவர்களுடைய மகளை ஒரு முதலியாருக்குத் திருமணம் செய்து கொடுத்திருக்கிறார்கள். நானும்கூட என்னுடைய தங்கை மகள்கள் இரண்டு பேரை கிறிஸ்துவ மதத்தைச் சார்ந்தவர்களுக்குத் திருமணம் செய்து கொடுத்திருக்கிறேன். இந்த வகையில் ஆங்காங்கே கலப்புத் திருமணங்கள் நடைபெற்றுக்கொண்டு தான் இருக்கின்றன. ஆனால் குழந்தைகளுக்கு யார் வாரிசு என்கின்ற சூழ்நிலை, பிரச்சினை வருகின்றபோது, எந்தச் சாதியில் அந்தக் குழந்தை இருக்க வேண்டுமென்ற கேள்வி வருகிறது. சாதிகளே அடியோடு ஒழிய வேண்டுமென்று நாமெல்லாம் சொல்லுகிறோமே தவிர, தந்தை பெரியார் அவர்கள் சொன்னதுபோல், இன்னும் முழுமையான சீர்திருத்தத்தை நாம் செய்ய முயலவில்லை. தந்தை பெரியார் அவர்கள் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். "இந்து மதம் என்கின்ற மதம் இருக்கிறவரை, மதத்தின் அடிப்படையில் இருக்கிற சனாதன தர்மம் இருக்கிறவரை, பகவத் கீதை இருக்கிறவரை, 4 வேதங்கள் இருக்கிறவரை, சாதி மாறாது" என்று சொன்னார்கள். இது குறித்து ஈரோட்டிலே தந்தை பெரியார் அவர்கள் நடத்திய வகுப்பிலே கேட்டோம். இஸ்லாம் மதத்திலே இம்மாதிரி இருக்கிறதே என்று கேட்டோம். "அந்தக் கருத்தை அந்த மதத்திலே இருப்பவர்கள் சீர்திருத்தம் செய்து கொள்வார்கள்" என்று அப்போது தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள். நான் தந்தை பெரியார் அவர்களிடத்தில் இஸ்லாமிய சுன்னி, சுபி, சூதி என்றும் ஷாம், மொகல், ஷேக், சையத், பட்டாணி, அன்சாரி, லப்பை என்றெல்லாம் பல பிரிவுகள் இருக்கிறதைச் சுட்டிக் காட்டி "அவர்கள் ஒருவருக்கொருவர் கொடுத்து எடுத்துக் கொள்வதில்லையே" என கேட்டேன். அதற்கு அவர்கள் அதையெல்லாம் அவர்கள் பார்த்துக்கொள்வார்கள் என்று சொன்னார்கள். அதுபோல் கிறிஸ்தவ மதத்தில்கூட 18 மிஷன்கள் இருக்கின்றன. அவர்களில்கூட கேத்தலிக், டேனிஷ், பெந்தேகோஸ்த் என்று பல பிரிவுகள் இருக்கின்றன.

**திரு. ஏ. ஜே. தாஸ் :** ஒரே ஒரு மிஷன் பற்றிதான் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். பல மிஷன்கள் இருக்கின்றன.

**திரு. சி. இராமலிங்கம் :** ஏற்கெனவே நான் 18 மிஷன்கள் பற்றி சொல்லியிருக்கிறேன். இவர்களில்கூட ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினருடன் பெண் கொடுத்து எடுப்பதில்லை. இந்து மதத்தில்கூட முதலியார் சாதியில் 18 பிரிவுகள் உண்டு. தொண்டமண்டலம், ஆற்காடு, திண்ணனூர், வானூர்,

[திரு. சி. இராமலிங்கம்] [1983 நவம்பர் 1

மலையமன்னர்கள், அகம்படியர் போன்ற 18 பிரிவுகள் உண்டு. இன்றைக்கு இவர்களுக்குள் பெண் கொடுக்கிறார்களா எடுக்கிறார்களா என்றால், கொடுத்து எடுக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். செங்குந்த முதலியார் வீட்டில் ஒரு பையன் டாக்டர். அவருக்கு தொண்டமண்டல பிரிவிலுள்ள பெண்ணைக் கொடுத்திருக்கிறார்கள். அதுபோல் அவுரப்பார் வன்னியர் ஜாதியில்கூட பல பிரிவுகள் உண்டு. வன்னியரில் பந்தமூட்டு பள்ளி. அரசுப்பள்ளி, மீனம்பள்ளி போன்ற பிரிவுகள் இருக்கின்றன. இவர்களுக்குள் முன்பெல்லாம் பெண் கொடுத்து எடுப்பதில்லை. ஆனால் இப்போதெல்லாம் பந்தமூட்டுபள்ளிக்கு மீனம்பள்ளி பெண்ணைக் கொடுக்கிறார்கள். அதுபோல் 24 மனை செட்டியார் என்று இருக்கிறார்கள். அவர்கள்கூட "8ஆ, 16ஆ" என்று கேட்பார்கள். ஆனால் இன்றைக்கு இந்த 16-க்கும் 8-க்கும் திருமணம் நடக்கிறது.

* **திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு உறுப்பினருக்கு என்னுடைய விளக்கம் துணை புரியும் என்பதற்காகச் சொல்கிறேன். வன்னியர்கள் என்று எடுத்துக்கொண்டால், ஒவ்வொரு பகுதியிலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் வெவ்வேறு பெயர்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு இடத்தில் நாயக்கர் என்று இருக்கும். இன்னொரு இடத்தில் கவுண்டர் என்று இருக்கும். மற்றொரு இடத்தில் படையாச்சி என்று இருக்கும். ஆனால் அவர்களுக்குள் வேறுபாடு ஒன்றுமில்லை. இவர்களுக்கிடையே பெண் கொடுத்து எடுக்கிறார்கள். ஆனால் முதலியார்களை எடுத்துக்கொண்டால், பணக்கார முதலியார்களிடத்தில் தான் ஒன்றுக்கொன்று பெண் கொடுப்பதும் எடுப்பதும் இப்போது ஆரம்பமாகியிருக்கிறதே தவிர, மற்றவர்களிடம் ஆரம்பமாகவில்லை.

**திரு. சி. இராமலிங்கம் :** மாண்புமிகு உறுப்பினர் திண்டிவனம் இராமமூர்த்தி எங்கள் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். அவர் கவுண்டர். எங்களுடைய பண்ருட்டி பகுதியில் இருக்கிற வன்னியர் ஒருவருக்கு இராமசாமி படையாச்சி என்றுதான் இருக்கும். இராமசாமி படையாச்சிகூட ஒரு வன்னியர்தான். இன்றைக்கு அந்த வகையில் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தம் செய்து நாயக்கர் மகளைத் திருமணம் செய்திருக்கிறார்களா இல்லையா ?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** கூடுமானவரை மாண்புமிகு உறுப்பினர் எல்லோரையும் ஒருமைப்படுத்தி விடுவார் போலிருக்கிறது. (சிரிப்பு).



1983 நவம்பர் 1]

**திரு. சி. இராமலிங்கம் :** இதைத்தான் தந்தை பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் சமுதாயச் சீர்திருத்தம், சுயமரியாதை இயக்கம் என்கிற முறையில் நாட்டிலே பரப்பி, இன்றையதினம் ஏற்பட்டுள்ள சமுதாய மாற்றத்திற்குக் காரணமாக இருந்தார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** நிச்சயமாகச் சொல்ல வேண்டுமென்றால், சுற்றி வளைத்துப் பார்த்தால், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் எனக்கு உறவு ஆகிறார்கள். இன்னும் கொஞ்சம் சுற்றி வளைத்துப் பார்த்தால், திரு. சீனிவாச படையாச்சி அவர்களும், இன்னும்கூட கொஞ்சம் சுற்றி வளைத்துப் பார்த்தால், திரு. இராமசாமி படையாச்சி அவர்களும் தூர உறவினர்களாக வருகிறார்கள். இப்படி நாம் பேச ஆரம்பித்த உடனேயே எப்படியோ பலபேர் நமக்குச் சொந்தக்காரர்களாகிற நிலைமையை இன்றைக்குப் பார்க்கிறோம்.

(முற்பகல் 11-20)

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா :** ஏதாவது சம்பந்தம் பேசுகிறார்களா?

**திரு. சி. இராமலிங்கம் :** இந்த மாதிரி கவுண்டர், படையாச்சி, நாயக்கர் என்று அவர்கள் எல்லாம் ஒன்றாக இருக்கிறார்கள் என்பதற்காகச் சொன்னேன். இந்த ஒற்றுமையும் இந்தத் திருமண ஏற்பாடுகளும் தந்தை பெரியார் அவர்கள் கடலூரில் சாதி ஒழிப்பு மாநாடு நடத்திய பிறகுதான், மக்கள் மனதில் இடம் பெற்றது. ஆனால் அப்போது கடலூர் திரு. கோவிந்தசாமி அவர்கள், அண்ணா மந்திரி சபையில் அமைச்சராகப் பொறுப்பேற்றார்களே, அந்த மறைந்த ஏ. கோவிந்தசாமி அவர்கள், ஒரு சாரைப் பாம்பை பொட்டலமாகக் கட்டி தந்தை பெரியாரிடத்திலே கொடுத்து அதற்கு எதிர்ப்புக் காட்டினார்கள். அவர் சென்னை சேத்துப்பட்டைச் சேர்ந்தவர். அதே கோவிந்தசாமி அவர்கள், அதன் பிறகு அண்ணாவால் அழைக்கப்பட்டு, என்னுடைய கட்சிக்கு (அதாவது எங்களது தி.மு.க. என்று சொல்கிறேன்) வந்து அமைச்சர் பதவியே பெற்றார்கள். எப்படி சாதி ஒழிப்பு மாநாட்டுக்கு பொட்டலத்தில் பாம்பைக் கட்டிக் கொடுத்தார்களோ அவரையே மாற்றுகின்ற பெருமை தந்தை பெரியார் அவர்களுக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் இருந்தது என்று சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல ஆறு நாட்டுப் பிள்ளை என்று இருக்கிறார்கள். அவர்கள் ஆறு ஊர்களில் வாழ்கிறவர்கள். அவர்களுக்குள்ளே பெண் கொடுத்து வாங்குகிறவர்கள். அவர்களும் பெரியார் அவர்களின் வேண்டுகோளை ஏற்று

ஒன்றாக இருந்தார்கள். நாயுடுவில் 16 இனம் இருக்கிறது. கம்மா நாயுடு உயர்ந்தவர், பலிஜா நாயுடு தாழ்ந்தவர். ஆகவே அவர்களை இவர்கள் பக்கம் பார்க்க மாட்டார்கள். ஆனால் அவர்கள் எல்லாம் இன்றைக்கு ஒன்றாக ஆகிவிட்டார்கள். அதேபோல் ரெட்டியாரில் 7 இனம் இருக்கிறது. அவர்கள் ஒன்றாக ஆகிவிட்டார்கள். ஆனால் உயர்ந்த சாதிக்குள்வேயே ஒன்றாகி அவர்கள் கொடுத்து வாங்குவதால் ஒன்றாக ஆகிவிட்டது என்று சொல்ல வில்லை. இப்படி சாதிகளை அந்தக் காலத்தில் வைத்துக் கொண்டார்கள்.

நண்பர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசும்போது, "ஆதி திராவிடர் களிலே பள்ளர் என்றும் பறையர் என்றும் அருந்ததியர்கள் என்றும் இருக் கிறார்கள், அவர்களுக்குள்ளே பெண் கொடுத்து வாங்குவதில்லை" என்று சொன்னார்கள். ஏன் அதைச் சொல்கிறேன் என்றால், "ஒன்றாக ஆகி அந்த சாதியற்ற சமுதாயம் வந்தால், அந்தப் பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பு தர வேண்டும்" என்று ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இப்படிப் பிறக்கக்கூடிய பிள்ளைகளுக்குப் பின்னாலே முதலியார் என்றும் செட்டியார் என்றும் போடுவதை நான் ஏற்கெனவே சொன்னேன். ஒரு செட்டியார் ஒரு வன்னியர் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டபோது, தந்தை தன் பிள்ளைகளைத் தனியே கூப்பிட்டு 'செட்டியார்' என்று சொல் என்று கூறு கிறார்கள். தாய் தனியே கூப்பிட்டு 'வன்னியர்' என்று சொல் என்று கூறு கிறாள் இதை சட்டத்தால் மாற்ற முடியுமா? "சர்வாதிகாரியாக இருந்தால், நான் மாற்றுவேன்" என்று நண்பர் திரு. மீனாட்சிசுந்தரம் சொன்னார். சர்வாதிகாரியாக இருந்தால், சாதியையே ஒழிப்பேன் என்று தந்தை பெரியார் அவர்கள் அன்றைக்கே சொன்னார்கள். இன்னும் ஒன்றுகூட ஆதி திராவிட மக்களுக்குச் சொன்னார்கள். "என்னோடு நீங்கள் வந்து சேர்ந்தால், ஒரே ஒரு இழப்புதான்" என்று சொன்னார்கள். ஆச்சரியத்தோடு "என்ன இழப்பு?" என்று கேட்டார்கள். 'ஆ—தி' என்ற இரண்டு எழுத்தை நீக்கி விட்டு 'திராவிடர்' என்று போடுங்கள் என்றார். ஆனால் அதை நம்பி எத்தனை ஆதி திராவிடர்கள் பெரியார் பின்னால் வந்தார்கள்? இன்றைக்கு சலுகைகளுக்கான கையெழுத்து போடக்கூடிய அந்த ஆதி திராவிட மக்கள் தாங்கள் கிருஸ்துவ மதத்திற்கு மாறிய பின்பும், இஸ்லாமிய மதத்திற்கு மாறிய பின்பும், இன்றைக்கு ஆதி திராவிடர் என்றுதான் அந்த ஸ்தானத்தைப் பூர்த்தி செய்து மனு போடுகிறார்கள். நண்பர் திரு. மீனாட்சிசுந்தரமும், நண்பர் திரு. முத்துசாமியும் "இன்றைக்கு ஒரு ஆதி திராவிடர் பெண்ணை மணம் செய்து கொண்டால், சலுகைகள் கொடுக்கப்பட வேண்டும்" என்றார் கள். கொடுக்க சர்க்கார் தயார் தான். நான் விசாரித்த வகையில், இந்தத் தலைமைச் செயலகத்தில், இதுமாதிரி அரசு அலுவலகத்திலே வேலை



பார்ப்பவர்களில் பல பேர் அப்படித் திருமணம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குச் சலுகை கிடைக்காமலா இருக்கிறது? அதைக் காரணமாகக் காட்டி சலுகைகளைப் பெறவில்லையா?

கலப்புத் திருமணம் என்றால், ஆதி திராவிடப் பெண்ணைத் திருமணம் செய்வதுதான் கலப்புத் திருமணம் என்று கருதப்பட வேண்டும் என்று அவர் கள் சொன்னார்கள். ஆனால் அப்படி கருதப்படுகிறதா என்று பார்த்தால் கருதப்படுகிறது. இப்படி வரலாற்றை நாம் நீளமாகச் சொல்லிக்கொண்டே போகலாம்.

இங்கே அமைச்சராக இருந்த திருமதி ஜோதி அம்மாள் அவர்கள் கூட கலப்புத் திருமணம் செய்தவர்தான். அதனாலேயே அந்த சமுதாயத்தில் உள்ள மக்களுக்கு முன்னேற்றம் வந்துவிட்டதா?

**திரு. ஏ. ஜே. தாஸ் :** துணைத் தலைவர் அவர்களே, திருமதி ஜோதி அம்மாள் கலப்புத் திருமணம் செய்து கொள்ளவில்லை. ஒரே ஜாதியைச் சேர்ந்தவரைத்தான் திருமணம் செய்தார்கள். எனக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் கலப்புத் திருமணமே செய்யவில்லை.

**திரு. சி. இராமலிங்கம் :** திருமதி ஜோதி வெங்கடாசலத்தின் தகப்பனார் ஒரு ஐயங்கார். அவர் ரங்கூனில் இருந்தபோது, ஒரு ஆதி திராவிட . . .

**திரு. ஏ. ஜே. தாஸ் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் அவைக்குத் தவறான தகவல்களைத் தருகிறார்கள். அவர்கள் கலப்புத் திருமணம் செய்யவில்லை என்பதுதான் உண்மை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அதுகூட கலப்புத் திருமணம் தான். ஒரு ஆண் சாதி, ஒரு பெண் சாதி என்ற வகையில். (சிரிப்பு).

*** திரு. க. இராமமூர்த்தி :** திருமதி ஜோதி அம்மாளுடைய சொந்த சகோதரர் திரு. புஜங்கராவ் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி. அவர் ஆதி திராவிடர் தான். அம்மையார் பார்ப்பதற்கு ஐயங்கார் மாதிரி இருக்கிறார்கள் என்பதற் காக ஊகத்தின் அடிப்படையில் சொல்கிறார்கள் போல் இருக்கிறது.

**திரு. சி. இராமலிங்கம் :** ராவ் என்று வைத்துக் கொள்வது கர்நாடக மாநிலத்திலே இருக்கும், ஆந்திராவில் இருக்கும். அதை இதோடு விட்டு விடலாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** தவறான கருத்து என்று சொல்லியாகிவிட்டது. அப்படியே இருந்தாலும்கூட, அது பெருமைப்படுகிற காரியம்தான். இந்த மாதிரி சிறுமைப்படுத்த வேண்டாம்.

**திரு. சி. இராமலிங்கம் :** ஆக இப்படி மனு போடுகிறபோது ஆதி திராவிட மாணவர்கள் என்று சொல்லித்தான் சலுகைகளைப் பெறுகிறார்கள் இன்று வரையில். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், தந்தை பெரியார் அவர்கள் எங்களுக்கு ரத்தத்தோடு ரத்தமாக ஊட்டிய கருத்தை வைத்துக் கொண்டுதான் இன்றைக்கு நாம் இருக்கிறோம். கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் கூட, கலப்புத் திருமணம் செய்தவர்தான், தந்தை பெரியார் உபதேசத்தால். இந்த உண்மை நடைமுறையில் மன்ற உறுப்பினர்களுக்கே தெரிந்திருக்க முடியாது. மறைந்த கம்யூனிஸ்ட் தலைவர் ஜீவா அவர்கள் கலப்புத் திருமணம் செய்தவர்தான். கம்யூனிஸ்ட் தலைவர் பி. ராமமூர்த்தி அவர்கள் கலப்புத் திருமணம் செய்தவர் தான்.

1944-ல் தந்தை பெரியார் திராவிடக் கழகத்தைக் கண்டபோது, சுயமரியாதை இயக்கம் இந்தத் தமிழகத்தில் பரவிய காலத்தில் அப்போது இளைஞர்களாக இருந்த நாங்கள் அவருக்குப் பின்னே வருவதற்கு அருகதை உள்ளவர்களாக உருவானோம். அதைத்தான் இன்றைக்கு இந்த அரசு, புரட்சித் தலைவர் அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே கலப்புத் திருமணம் செய்பவர்களுக்கு 5 ஏக்கர் நிலம், 7 ஏக்கர் நிலம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்களுக்கு வீடு கட்ட இடம் தர வேண்டும், தொழிற்சாலை அமைக்க இடம் தர வேண்டும் என்றெல்லாம் கேட்கப்பட்டது.

அதை ஏற்று கலப்புத் திருமணம் செய்து சின்ன வீடு வைத்துக்கொண்டால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு எல்லாம் இதுமாதிரி வீடு, நிலம் கொடுக்க வேண்டும் என்று வந்தால், இந்த நாட்டில் அரசாங்கப் புறம்போக்கு நிலங்களே இருக்காது, இருக்க முடியாது.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்து மதத்தில் முருகக் கடவுள் சின்ன வீடு வைத்திருக்கிறார். ஆக இந்த மாதிரி உள்ள கோயில்களுக்கு அறங்காவலர் குழு போட்டு, அதற்கென்று தனியாக ஒரு இந்து அறநிலைய அமைச்சர் என்றே இருக்கும்போது, இப்படி இரண்டாவது குடும்பத்தை எப்படி அவர் தவறாகக் கருத முடியும்? இந்த [illegible]



அனுமதித்திருக்கக்கூடிய விஷயம் தான் இது. அத்தகைய குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகளுக்குச் சலுகைகள் கொடுப்பதில் என்ன தவறு இருக்க முடியும்? அவர்களும் படிக்கட்டும், உத்தியோகம் வாங்கட்டுமே?

(முற்பகல் 11-30)

**திரு. சி. இராமலிங்கம் :** ஆக, நாம் ஏதோ வழி தவறிப் போனதாக நினைக்க வேண்டாம். இது இன்றைக்கு மட்டும் ஏற்பட்ட சமுதாயச் சீர்திருத்தமல்ல. இந்த நாட்டில் சாரதா சட்டம் ஏன் வந்தது? வள்ளுவன் காலத்தில் சாதி இருந்ததால்தான் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று சொன்னான். இதற்காக சாதி இருந்தது என்பதற்கு நான் ஆதாரம் இருக்கிறது என்று சொல்லவில்லை. "இட்டார் பெரியோர், இடாதார் இழி குலத்தோர் பட்டாங்கில் உள்ளபடி" என்று பெரியவர்கள் பாடி வைத்திருக்கிறார்கள். "சாதிகள் இல்லையடி பாப்பா" என்று பாடிவிட்டாலும், அதைப் பின்பற்றுகிறோமா என்றால், அரசியல் வாதிகளில் சிலர் பின்பற்றலாம். இந்தச் சமுதாயத்தில் உள்ள எல்லோருமே அரசியல்வாதிகள் அல்ல. ஆயிரத்தில், இரண்டாயிரத்தில், பத்தாயிரத்தில் ஒருவர், திரு. மாணிக்கம் போன்றவர்கள், திரு. ஜீவா போன்றவர்கள், என்னைப் போன்றவர்கள் கலப்புத் திருமணம் செய்து கொண்டதாலேயே, இங்கே சமுதாயத் சீர்திருத்தம் மலர்ந்து விட்டதாகச் சொல்லிவிட முடியுமா? (சிரிப்பு).

சாதிகள் ஒழிவதற்கு, சலுகைகள் தரப்பட வேண்டியது நியாயம்தான். ஆனால் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொன்னதைப் போல், எல்லோருக்கும் 5 ஏக்கர் நிலம் கொடு என்றால், அதனால் சாதி ஒழிந்துவிடாது. எனது நண்பர்கள், ஆதி திராவிடர்களைக் கேட்டுக்கொள்வேன், தந்தை பெரியார் அவர்கள் காலத்திலிருந்து இங்கே இருந்து வருகிற நிலைமையை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு முறை, டாக்டர் அம்பேத்கார் அவர்கள் தந்தை பெரியார் அவர்களைப் பார்த்து, ஒரு கருத்தை வெளியிட்டார்கள். இந்த அவையிலே அதற்கான வாய்ப்பு இருக்கும்போது தெரிலிப்பது என்னுடைய கடமை என்றே நான் கருதுகிறேன். டாக்டர் அம்பேத்கார் அவர்கள் தந்தை பெரியார் அவர்களைப் பார்த்து, "நான் மதம் மாறிவிடலாமா என்று பார்க்கிறேன். காரணம் எங்கே போனாலும் என்னைக் கேவலமாகத்தான் நினைக்கிறார்கள். ஆகவே நான் மதம் மாறுவதாக இருக்கிறேன்" என்று சொன்னார்கள். அப்படியானால் நீங்கள் எந்த மதத்திற்கு மாறப் போகிறீர்கள் என்று தந்தை பெரியார் அவர்கள் கேட்டார்கள். நான் இஸ்லாமிய மதத்திற்குப் போக விரும்புகிறேன் என்று அம்பேத்கார் அவர்கள் குறிப்பிட்டார்கள். தந்தை பெரியார் அவர்கள், அவரிடத்தில் "இருக்கிற இடத்தில்

இருந்துகொண்டு தான் சாதிக் கொடுமைகளைப் பற்றிப் பேச முடியும். அப்போதுதான் நமக்கு அதை விமரிசனம் செய்யும் உரிமை உண்டு, வேறு மதத்திற்குப் போய் பேசினால், இதை யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். எனவே மதம் மாற வேண்டியதில்லை" என்று குறிப்பிட்டார்கள். இருந்தாலும் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் "நான் பௌத்த மதத்திற்குப் போகப் போகிறேன்" என்றார்கள். "அது உங்களுடைய இஷ்டம். இதில் எனக்கு இஷ்டம் இல்லை" என்று தந்தை பெரியார் சொன்னார்கள். அதற்கும் பிறகுதான் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் பௌத்த மதத்திற்குப் போனார்கள். அதனாலே அவருடைய பட்டம் போய்விட்டதா? அவருடைய தொல்லைகள் போய்விட்டனவா? நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

என்னுடைய பெரியப்பாவின் பையன்கள், என் அண்ணன் தம்பிகள் கிருத்துவ மதத்திற்குப் போய்விட்டார்கள். என் பெரியப்பா அவர்களுக்கு அரிஜனப் பெண்களைத்தான் கல்யாணம் செய்து கொடுத்தார். அவர்களுக்குப் பிள்ளை பிறந்து இப்போது அவன் டாக்டராக இருக்கிறான். டாக்டரான பிறகு, என்னுடைய தங்கையின் மகளைக் கொடுக்கலாம் என்றால், அவனே இப்போது கட்டிக்கொள்ள மாட்டேன் என்று சொல்லுகிறான். இப்படிச் சில குடும்பங்கள் இருக்கின்றன. என்னுடைய அத்தையோ இஸ்லாமியர் ஒருவரைக் காதலித்து, அவர் அடத்திக் கொண்டு போய், அவரையே திருமணம் செய்து கொண்டுவிட்டார். இஸ்லாமியரும் எங்களுக்கு உறவுதான். நான் உண்மையைச் சொல்லுவதற்கு பயப்படவில்லை. எதையும் மறைக்கத் தயாராக இல்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** காதல் திருமணமும் கலப்புத் திருமணமும் ஒன்று என்று உறுப்பினர் கருதுகின்றனரா?

**திரு. சி. இராமலிங்கம் :** என்னைப் பொறுத்தவரை, ஒன்றுதான். இங்கே இஸ்லாமிய மதத்திற்குப் போகிறார்கள் என்று வருத்தப்பட்டுக் கொண்டார்கள். அவர்கள் அவர்களின் விருப்பப்படி போகிறார்கள். அதனாலே மத மற்ற சமுதாயத்தை அமைத்துவிடுவது சாத்தியமா? எதற்காகச் சொல்கிறேன் என்றால் இப்படிச் சட்டங்களைப் போடுவதாலே அது முடியாது. மனிதனாகப் பார்த்து மாற வேண்டும். நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் கூடப் பாடினார்கள். எத்தனை சட்டங்கள் கொண்டுவந்தாலும், அவனாக மாறுகிறவரை ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். தந்தை பெரியார் அவர்கள் அத்தகைய மனமாற்றத்திற்காகத்தான் பாடுபட்டார்கள். எனவே சட்டம் கொண்டு வந்து, கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்கு அந்தச் சலுகை, இந்தச்





சலுகை என்று சொன்னால் நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல் ஒவ்வொரு வீட்டிலும் 2, 3 குழந்தைகள் இருக்கின்றன. அவர்களுக்கெல்லாம் நிலம் கொடுக்க வேண்டுமென்றால் இந்த நாட்டில் நிலமே இருக்காது. அவர்களுக்கெல்லாம் தொழிற்சாலை அமைக்கச் சலுகை கொடுக்க வேண்டுமென்றால், அதற்கு ஏற்ற பொருளாதார வசதி இந்த நாட்டிலே கிடையாது. எனவே தான் இந்தத் தீர்மானம் என்பது பேசுவதற்கும் எடுத்துச் சொல்வதற்கும், கேட்பதற்கும் சுவையாக இருக்குமே தவிர, வேறு எந்தப் பெரிய பயனையும் அளித்துவிடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும், சாதிகளைப்பற்றிய நம்முடைய உணர்வு ஓரளவுக்கு மாறியாக வேண்டும்.

இங்கே ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். ஐயங்கார் வீட்டுப் பெண்ணை ஐயர் வீட்டில் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது உண்மையிலேயே மாபெரும் புரட்சியாகும். ஐயர் வந்து ஐயங்கார் வீட்டுப் பெண்ணைக் கட்டுவது என்பது சமுதாயத்தில் மிகப் பெரிய புரட்சியாகும். ஒருமுறை மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் குறிப்பிட்டார். வைணவப் பெரியார் இராமானுஜர் தம் காலத்தில் யார் யாரை எல்லாம் வைணவர்களாக ஆக்கினார் என்பதைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அதையே நான் திரும்பத் திரும்பச் சொல்ல விரும்பவில்லை. வைணவர்களைப் பொறுத்தவரையில், "இறங்கு பாதம், ஏறு பாதம்" என்றெல்லாம் இருக்கிறது. 'திருத்துழாய்ப் பிரிவு' என்றும் அதில் தான் ஏற்பட்டது. இப்படிப்பட்ட ஐயங்கார்களை ஐயர்கள் எப்போதும் ஒப்புக் கொள்வதில்லை. அப்படிப்பட்ட நிலையில் ஐயங்கார் வீட்டுப் பெண்ணை ஐயர் வீட்டில் கட்டிக் கொள்கிறார்கள் என்றால், அது மிகப் பெரிய புரட்சிதான் . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இறங்கு பாதம், ஏறு பாதம் என்றால் என்ன என்பதை விளக்கினால் தேவலாம். மற்ற உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும்.

**திரு. சி. இராமலிங்கம் :** அதையெல்லாம் சொல்வதென்றால் இராமானுஜர் காலத்துப் புத்தகம் தேவை. புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் அதையெல்லாம் இங்கே சொல்லிக் கொண்டிருந்தால் நேரம் போய்விடும்.

அடுத்து, இதையொட்டி இன்னொரு விஷயத்தை மட்டும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். முன்பெல்லாம் ஐயங்கார்கள் என்ன செய்வார்கள் தெரியுமா? சிவன் கோயில் சாமி தெருவில் ஊர்வலமாக வந்தால் அந்தக் காலத்தில்—நான் சொல்வது தந்தை பெரியார் அவர்களின் காலத்திற்கு முன்னால் —ஐயங்கார்கள் குடியிருக்கிற தெருவில் உள்ள வீட்டுக் கதவுகள் அனைத்தும்

[திரு. சி. இராமலிங்கம்] [1983 நவம்பர் 1

மூடப்பட்டு விடும். சிவன் கோயில் சாமி அந்தத் தெருவில் வரும்போது, ஒரு ஈ காக்காய் கூட வெளியே வராது. வேண்டுமானால் அந்தச் சிவன் கோயில் சாமி ஊர்வலம் போய் முடிந்த பிறகுதான், கதவைத் திறந்து சாணி தெளிப்பார்கள். இன்றைக்கு அப்படிப்பட்ட நிலைமைகளை நம்மாலே பார்க்க முடிகிறதா? அந்த அளவுக்கு ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அது உங்களுக்கெல்லாம் தெரியாது. நான் பார்த்திருக்கிறேன் . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினருக்கு 80 வயதாகிறது. அதனால் அவருக்குத் தெரிகிறது. இது மற்றவர்களுக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்?

**திரு. சி. இராமலிங்கம் :** நான் எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்றால், இப்படி மாறுபட்ட கருத்தை உடையவர்கள் பிராமணர்கள். அவர்களிலேயே கூட வடமா, பிரஹசரணம், மாங்குடி என்று பல பிரிவுகள் இருக்கின்றன. இப்போது வடமாவைச் சேர்ந்தவர்கள் பிரஹசரணத்தில் பெண் கொடுக்கிறார்கள். ஆனால் மாங்குடிக்கு இன்னும் பெண் கொடுப்பதில்லை. இப்படிப்பட்ட நிலையில் டி.வி.எஸ். ஐயங்கார் வீட்டுப் பெண்ணை ஈஸ்வர ஐயர் வீட்டில் திருமணம் செய்து கொண்டார்கள் என்றால், அது பெரிய புரட்சிதான். ஒரு ஆதி திராவிடப் பெண்ணை ஒரு ஐயர் கட்டுவதைவிட இது பெரிய புரட்சிதான் என்பதை நான் அறிவேன். ஆனால் இதையெல்லாம் வரவேற்று அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதைத்தான் என்னாலே ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவர்களுக்குச் சலுகை கொடுக்க வேண்டும் என்றால், என்னாலே ஏற்றுக்கொள்ள முடியவில்லை. டி.வி.எஸ். குடும்பத்திற்கு என்ன இல்லை? ஈஸ்வர ஐயர் குடும்பத்திற்கு என்ன இல்லை? இப்படி மதத்தை வைத்துப் பார்த்தால் . . .

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே வசதி படைத்தவர்களுக்கும் சலுகை தர வேண்டும் என்று யாரும் பேசவில்லை. வசதி இல்லாதவர்களுக்குத் தருவதன் மூலமாக அதை ஊக்குவிக்கலாம் என்றுதான் சொன்னேன். அந்த நிலையில் வசதி இல்லாதவர்களுக்கும் சலுகை தரக் கூடாது என்று பேசுவது எந்த விதத்தில் சரி என்பதுதான் எனக்குப் புரியவில்லை.

**திரு. சி. இராமலிங்கம் :** கலப்புத் திருமணம் பொதுவாக ஏழைகள் வீட்டில் நடைபெறுவதில்லை. படித்து, பட்டம் பெற்று சிலபல வசதிகளோடு இருக்கிறவனைப் பார்த்து, "பரவாயில்லை இந்தப் பையன் நல்ல வசதி



1983 நவம்பர் 1] [திரு. சி. இராமலிங்கம்]

முழியுமாக இருக்கிறானே, இவனைத் திருமணம் செய்து கொண்டால் என்ன ?" என்று ஒரு பெண் நினைக்கிறார். அதைப்போலவேதான் கொஞ்சம் படித்து, நல்ல வசதியோடு இருக்கிற குடும்பத்தில் இருக்கிற பெண்ணைப் பார்த்து, "பரவாயில்லை, இவள் நன்றாகச் சிவப்பாக இருக்கிறாளே, இவளை ஏன் நாம் * * * " என்று நினைத்து அவள் பின்னாலே போகிறார்கள். எங்கள் ஊரிலிருந்து இப்படி பஸ்ஸில் நிறைய பசங்கள் போகிறார்கள்.

**திரு. செ. முத்துசாமி :** கல்லூரியில் படிக்கிற பையன் மூக்கும் முழியுமாக இருக்கிறான் என்பதற்காக, வயலில் வேலை செய்கிற பெண் அவனைக் காதலிப்பதில்லை. வயலில் பணியாற்றுகிற பெண் அங்கேயே வேலை செய்து கொண்டிருப்பவனைக் காதலிக்கிறாள். எனவே இது ஏழைகள் மட்டத்திலும், அவர்களிடத்திலும் இருக்கிறது. ஏதோ பணக்காரர்கள் வீட்டில் மட்டும் தான் இப்படிப்பட்ட நிலைமை இருப்பதாக எண்ணுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. இராமலிங்கம் :** அழகு என்பது உழைப்பால் உருவாவதில்லை. பொதுவாக வெயிலில் வேலை செய்கிறவர்கள் அழகாக இருக்க முடியாது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** * * * என்கிற சொல் அவைக்குரிய சொல்லா இல்லையா என்பது இங்கே பிரச்சினையாக எழாவிட்டாலுங்கூட, அவையில் அப்படிப்பட்ட சொல் வேண்டாம் என்று கருதி, அந்தச் சொல்லை, குறிப்பேடுகளிலிருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

**திரு. சி. இராமலிங்கம் :** நான் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களின் உத்தரவுக்குக் கட்டுப்படுகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பேசுகிறபோது மாண்புமிகு உறுப்பினர் அந்தச் சொல்லைச் சொன்னார். அந்தச் சொல் தற்போது நீக்கப்பட்டு விட்டால், பின்னாலே அவர் என்ன சொன்னார் என்பதே தெரியாமல் போய்விடும். ஆகவே அதற்குரிய வேறு ஒரு சொல்லை அவர் மாற்றிச் சொல்ல அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. இராமலிங்கம் :** 'பின்தொடருவது' என்று சொல்லிக் கொள்ளலாம். அப்படிப் போய்க் காதலிப்பது. அது ஒருமுனைக் காதல்தான். பட்டணத்தில் எருமைகூட கொஞ்சம் சிவப்பாகத்தான் இருக்கும். காரணம்

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[திரு. சி. இராமலிங்கம்] [1983 நவம்பர் 1

வெயிலே தெரியாமல் நிழலில் இருப்பவை அவை. கிராமத்தில் இருக்கிற எருமைகள் கறுப்பாகத்தான் இருக்கும். இருந்தாலும் அவைகளும் நன்றாகத் தான் பால் கறக்கும். ஏழைகளைப் பொறுத்தவரை, மூக்கு முழியைப் பார்த்து யாரும் காதலிப்பதில்லை. வசதி படைத்தவர்கள், உத்தியோகத்தில் இருப்பவர்கள்தான் அப்படிச் செய்கிறார்கள். ஏழைகளின் தேவை வேறு. பணக்காரர்களின் தேவை வேறு. கலப்புத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்றால் சமுதாயத்தில் ஒருவன் தானே தன் காலால் சொந்தமாக நிற்கக்கூடிய வசதி இருக்க வேண்டும். அப்படி வசதியுள்ளவர்களின் குழந்தை களுக்கு நாம் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. இருந்தாலும் நாமெல்லாம் சாதியற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும். இதைத்தான் இராமானுஜரும் விரும்பினார்.

(முற்பகல் 11-40)

எல்லா மக்களையும் அழைத்து அவர் கோபுரத்திலே நின்று கொண்டு "ஓம் நமோ நாராயணாய நமஹ" என்று சொல்லி பூநூலைப் போடுங்கள் என்று சொன்னார்கள். அப்படிப் பூநூலைப் போட்டவர்கள் எல்லாம் ஐயங்கார்கள் ஆனார்கள். அப்போது மாறிவிட்டதா சாதி? பிறகு சங்கராச் சாரியார் அவர்கள் வந்து "இந்த நாட்டிற்கு சைவத்தை நான் உண்டாக்கு கிறேன்" என்றார். "ஓம் நமோ நமச்சிவாய" என்று சொல்பவர்களை யெல்லாம், விபூதி பூசுகிறவர்களையெல்லாம் சைவர்களாக ஆக்குகிறேன் என்று ஆக்கினார்கள். அப்போது சாதி போய்விட்டதா? சம்பந்தர் என்ன பாடினார்? சுந்தரர் என்ன பாடினார்? அப்பருக்கு சூலை நோய் வந்த தற்கு என்ன காரணம்? அவருக்கு ஏதோ நோய் வந்ததாகவும், விபூதி கொடுத்ததாகவும் பிறகு சூலை நோய் போயிற்று எனவும் கூறி "கூற்றாயினவாறு" என்று பாடி சமண மதத்திலிருந்து சைவத்திற்கு வந்தார். காலத்திலேதான் மகாராஜன் வல்லாளன் காலத்திலேதான் திருவண்ணாமலை காலத்திலேதான் மகாராஜன் வள்ளாளன் காலத்திலேதான் திருவண்ணாமலை ஸ்தலத்தின் வரலாற்றைச் சொல்லுகிறபோது, அன்றைக்கு இருந்த ஆயிரக் கணக்கான சாமியார்களின் தங்குகிற இடம் இருந்தது என்று சொல்லியிருக் கிறார். சலுகைகள் கொடுத்துத்தானா சாதிகள் போக வேண்டும்? மனிதனின் உள்ளம் மாறாத வரையில் இது மாறாது, இது மாறாது என்று கூறி, ஆதி திராவிட அன்பர்களைப் பணிவோடு ஒன்று கேட்டுக்கொள்கிறேன். "நீங்கள் ஆதியை எடுத்துவிடுங்கள், அந்த ஆதியைப் போடாதீர்கள், ஆதியை போடாமல் திராவிடர்களாக, தமிழர்களாக வாருங்கள்" என்று கேட்டுக் கொள்கிறேன். இளைய பருவத்தில் நாங்கள் பட்ட துன்பம் உங்களுக்காக கோடி, கோடி. அது சொல்லி முடியாதது. நான் சொத்தை இழந்தேன்.



1983 நவம்பர் 1] [திரு. சி. இராமலிங்கம்]

மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள்கூட கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்கள்தான். அதனால் சொத்து இழந்தார்கள், எல்லாம் இழந்தார்கள். இப்படி நான் ஒவ்வொருவரையும் சொல்ல முடியும். ஆகவே இந்தச் சமுதாயத்தை உயர்த்துவது . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** என்ன பாக்கியாக இருக் கிறதே என்று பார்த்தேன்.

**திரு. சி. இராமலிங்கம் :** இந்தச் சமுதாயத்தை நாம் சீர்திருத்த வேண்டு மென்றால் நாம்தான் மாற வேண்டும். ஆகவே "வாருங்கள் இங்கே" என்று தோழர்களை அழைக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் திரு. விஜயசாரதி அவர்களுக்குப் பெண் பார்ப்பதாக அவர்கள் சொன்னார்கள். அவர் ஏற்கெனவே பெண்ணைப் பார்த்து திருமணம் செய்ய முடிவு செய்திருக்கிறார் கள். தனக்கு ஏன் தரகர் வேலை என்று அவரே ஒத்துக்கொண்டு போய்விட்டார். திரு. அருணாசலம்கூட திருமணம் செய்யாதவர்தான். அவர் அருந்ததியார் வகுப்பைச் சேர்ந்தவர்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஏன் அதை அவர்கள் சொல்லவில்லை?

**திரு. சி. இராமலிங்கம் :** சாதிகளற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டு மானால், தந்தை பெரியார் அவர்கள் சொன்னதைப் போல மதமற்ற மக்க ளாக, மதத்தைப் பின்பற்றாத மக்களாக ஆக்க வேண்டுமென்றால், இருக் கின்ற கடவுள் பெயரையெல்லாம் போக்கிவிட்டு "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன திருமூல மந்திரத் தைத் தாரக மந்திரமாக எல்லோரும் ஏற்றுக்கொண்டு "இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்" என்ற இரண்டு சாதிகள் ஒழிய வேறு இல்லை என்ற தத்துவத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தந்தை பெரியார் அவர்கள் அண்ணா அவர்களுக்கு ஒரு சிறப்புச் செய்ய வேண்டுமென்று ஈரோட்டிலே தனியாக அவர்கள் ஒரு மாநாட்டை நடத்தி, அதற்கு பேரறிஞர் அண்ணா அவர்களைத் தலைமை ஏற்க வைத்து, அண்ணா அவர்களை ஜோடித்த ஒரு பல்லக்கிலே உட்கார வைத்து, தந்தை பெரியார் அவர்கள் தன்னுடைய தள்ளாத வயதில் ஈரோடு தெருக்களில் நடந்து வந்தார். நாயக்கர் பரம்பரையைச் சேர்ந்த சீர்திருத்தச் செம்மல் என்று எல்லோ ராலும் புகழ்பெற்ற தந்தை பெரியார் அவர்கள் அண்ணாவை அரியணையில் அமர்த்திவிட்டு, தான் வீதிதோறும் நடந்து வந்து ஒன்று சொன்னார்கள். "அண்ணா! என் மகனே இந்தப் பெட்டிச் சாவியை ஏற்றுக்கொள்" என்று

[திரு. சி. இராமலிங்கம்] [1983 நவம்பர் 1

சொல்லி அந்தக் கட்சியை ஒப்படைத்தார். "அதற்குக் கேடயமாக இந்தக் குறளைக் கொடுக்கிறேன்" என்று சொல்லி கொடுத்தார்கள். அதை அண்ணா அவர்கள் பெற்றுக்கொண்டு, அதற்கு அன்பான பதிலாக, அண்ணா அவர்கள், "தந்தையே, சாவி என்னிடம்தான் இருக்கும். பெட்டி உங்களிடத்திலேயே இருக்கும். உங்களைக் கேட்காமல் இந்தப் பெட்டியைத் திறக்கமாட்டேன்" என்று கூறி "குறளைக் கேடயமாக வைத்துக் கொண்டு குறளில் இருப்பதை நான் இந்த நாட்டிலே நடைமுறைப்படுத்த வாய்ப்பு வரும்போது செய்வேன்" என்று அந்த மாநாட்டிலே சூளுரைத்தார்கள். அந்த அடிப்படையிலே ஆட்சிக்கு வந்த பிறகு, தந்தை பெரியார் அவர்களுடைய சுயமரியாதைத் திருமணத்தை செல்லாது என்று காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும், வெள்ளைக் காரன் ஆட்சிக் காலத்திலும் இருந்து வந்ததை மாற்றி, அந்தத் திருமணத் திற்கு, சட்டபூர்வமாக ஒப்புதல் கொடுத்து ஏற்றுக் கொள்ள வைத்தார்கள். அதற்குப் பிறகு அண்ணா அவர்கள் குறளின் அடிப்படையிலே ஆட்சியை அமைத்து, ஆட்சியை நடத்தி இந்த மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' என்று பெயர் வைத்தார்கள். அந்தக் குறளைக் கொடுத்த வள்ளுவனைப் போற்ற வேண்டு மென்பதற்காக தமிழ் கொடுத்த வள்ளுவனுடைய பெயர் இருக்க வேண்டுமென் பதற்காக "குறளகம்" என்றும் "வள்ளுவர் கோட்டம்" என்றும் அமைத்து கலைஞர் அவர்கள் பெருமைப்படுத்தினார்கள். ஆக அண்ணா அவர்கள் எப்படி தந்தை பெரியார் அவர்கள் கொடுத்த குறளைக் கேடயமாக ஏற்றுக் கொண்டாரோ, அதைப் போலவே இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் அண்ணா விட்டுச் சென்ற அந்த இடத்தை ஏற்றுக்கொண்டு, அண்ணா அவர்கள் என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நினைத்தாரோ, அந்தக் காரியங்களையெல்லாம் செய்வதற்காக, "சமுதாயச் சீர்திருத்தம் செய்ய வேண்டும், சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளைப் போக்க வேண்டும். சமுதாயத்தில் உள்ள ஏழையெளிய மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும்" என்ற அடிப்படையிலே இன்றைக்கு ஆட்சியை நடத்தி வருகிறார்கள். அதுதான் சத்துணவுத் திட்டம். மதிய உணவுத் திட்டம் காமராஜ் அவர் களாலே துவங்கப்பட்டது. அது புரட்சித் தலைவர் அவர்களுடைய காலத் திலே நிறைவுபெறுகிறது என்பதை நாம் அறிகிறோம். வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்பது அண்ணாவின் கொள்கை. அதற்காகத்தான் இன்றைக்கு பள்ளியிலிருந்து தொழிற் கல்வி என்ற திட்டத்தை புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே சாதியை ஒழிக்க வேண்டுமானால் கல்வி பெருக வேண்டும். கல்வி கற்றவர்களிடையே கூட சாதி இருக்கிறது. என்னதான் எம். ஏ. படித்தாலும், பார்—அட்—லா—வாக இருந்தாலும் சரி. சாதி வந்துவிடுகிறது. ஆனால் டாக்டர் பட்டத்திற்குப் படித்துவிட்டால் சாதி கிடையாது. டாக்டர் படிப்பு படித்த மாணவன் [illegible]



1983 நவம்பர் 1] [திரு. சி. இராமலிங்கம்]

தான் மனைவியாகத் தேவை என்று சொல்லுகிறான். அந்த மனைவி எந்தச் சாதியாக இருந்தாலும் கட்டிக்கொள்கிறான். சில நேரங்களில் நான் கூட நினைப்பதுண்டு, "எல்லா பிள்ளைகளையும் டாக்டருக்குப் படிக்க வைத்து விட்டால், அதுவே கலப்புத் திருமணமாக ஆகிவிடுமே" என்று. அப்படிப் பார்க்கிறபோது டாக்டருக்கு டாக்டரே என்று சொல்லும்போது, பூர்ஷுவா மனப்பான்மை வந்துவிடுகிறது. தான், தன் குடும்பம் என்று வந்துவிடுகிறது. அதுவும் சரியில்லை. படித்தவர்கள் காமுற்று திருமணம் செய்துகொள்வது சரியில்லை என்று எனக்குத் தோன்றுகிறது.

பெரியார், அண்ணா ஆகியவர்கள் வழியில் வந்த புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு நல்ல நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். 'குலக் கல்வி' என்பதைத் தள்ளிவிட்டு அண்ணா அவர்கள் அன்றைக்கு நடைமுறைப்படுத்தினார்கள். இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்திக்கொண்டிருக்கிறார். பள்ளிக் கூடங்களிலே சென்று பார்த்தால், எல்லாப் பிள்ளைகளும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடுகிறார்கள். நான் அனகாபுத்தூருக்கு மட்டும் போக வில்லை, பல ஊர்களுக்கும் போகிறேன். எனக்குத் தெரிந்தவர்கள் எல்லா வகுப்பிலும் இருக்கிறார்கள். "குப்புசாமி! என்னிடம் வாழைக்காய் இருக் கிறது, அது எனக்குப் பிடிக்காது, நீ எடுத்துக்கொள். உன்னிடம் பூசணிக் காய் துண்டு இருந்தால் கொடு" என்று சொல்லி குப்புசாமியிடமிருந்து கந்தசாமி வாங்குகிறான். அங்கே சாதி போயிற்று. கலைவாணர் அவர்கள் கூட அதை அழகாகப் பாடினார்கள். "இரயிலே இரயிலே" என்று பாடு கிறபோது, "பறவைகள் எல்லாம் உட்கார்ந்து போகும் இரயிலே! இரயிலே!" என்று பாடி சாதியைப் போக்கினார்கள். இப்படி பல பெரியவர்கள் சாதியைப் போக்குவதற்கு முனைந்த அந்தச் செயல், அந்த நடைமுறை ஆகியவற்றால்தான் என்னைப் போன்றவர்கள் சமுதாயத்தில் தைரியமாகத் தொண்டாற்ற முடிகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. எஸ். அவர்கள் முன்னுக்கு வந்து தொண்டாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணமாக இருந்தது தந்தை பெரியார் அவர்களுடைய இடையறாத பிரச்சாரமும், அண்ணா அவர்களுடைய அரவணைப்பும்தான். அதைப் போலவே சமுதாயத்தில் மாற்றம் உண்டாக்க வேண்டுமென்று இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் தன்னுடைய கடமையைச் செய்து கொண்டிருக்கிறது. ஆகவே இது அரசுத் தீர்மானமாகத் தேவையில்லை. சமுதாயம் தானாகவே திருந்தும், தானாகவே முன்னேறும் என்று கூறிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். **வணக்கம்**]

[1983 நவம்பர் 1

**திரு. ஏ. ஜே. தாஸ்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் கொண்டு வந்த, கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுடைய குழந்தைகளுக்குச் சலுகை கொடுக்க வேண்டுமென்ற தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகிறேன். "சாதிகள் இல்லையடி பாப்பா" என்று பாரதியார் சொன்னார். ஆனால் இன்றைக்குச் சமுதாயத்தில் பல சாதிகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் பல சாதிகளைப்பற்றி விரிவாக, விளக்கமாகச் சொன்னார். இத்தகைய சாதிகள் இருக்கக் கூடிய கடுமையான நாட்களில் திராவிடப் பரம்பரையில் வந்தவர்கள், பெரியார் பாசறையில் வளர்ந்ததைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். மிகச் சந்தோஷமாக இருந்தது. ஆனால் இத்தனை சாதிகளுக்கு இந்த அரசு எப்படித் தீர்வு காணப்போகிறது என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்குச் சலுகை கொடுக்க வேண்டும். உண்மையாகவே ஒரு சாதியிலிருந்து இன்னொரு சாதிக்குச் சென்றுவிட்டால், அவர்களைக் குடும்பத்தார் ஒதுக்கிவிடுகிறார்கள். அவர்களுடைய நிலைமை எதிர்காலத்திலே மிகவும் மோசமாக இருக்கிறது. இந்த வீட்டிற்கும் அவர்கள் செல்ல முடியாது, தன் தாய் வீட்டிற்கும் செல்ல முடியாது. ஆகவே அப்படிப்பட்டவர்களுடைய குழந்தைகளுக்குச் சலுகை கொடுப்பது, அரசு உத்தியோகத்தில் முன்னுரிமை கொடுப்பது நியாயம் என்பதை நான் இந்த அவையிலே சொல்ல விரும்புகிறேன். ஆகவே சாதியை ஒழிக்க அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். நாம் தெருக்களுக்கு சாதியின் பெயரை வைத்திருந்தோம். இப்போது சாதிப் பெயர்களை அழித்துவிட்டோம். ஆகவே தெருக்களின் பெயர்களில் சாதியின் பெயர்கள் இல்லை.

(முற்பகல் 11-50)

ஆனால் இன்றைக்கு பதிவுகள் செய்கிறோம். அப்படி நாம் பத்திரங்கள் பதிவு செய்யும்போது, அங்கேயெல்லாம் சாதிப் பெயர்கள் வருகின்ற நிலைமைகளைப் பார்க்கிறோம். இதை இந்த அரசுதான் மாற்றச் செய்ய வேண்டும். பதிவு செய்ய வருகின்ற பத்திரங்களில் வருகின்ற பெயர்களைக் குறிக்கும்போது, சாதிகளை வைத்து, இன்னாருடைய பிள்ளை இன்னாருடைய மகள் என்று போடுகிறார்கள். அவர்கள் சமுதாயத்தைச் சொல்லி, இந்த சமுதாயத்தைச் சேர்ந்த இன்னாருடைய குமாரன் என்று சொல்கின்ற நிலை இருக்கின்றது பத்திரங்களில் வரும்போது. அந்த நிலைமைகள் மாற வேண்டும். இதில் அரசு எடுக்கக்கூடிய நடவடிக்கையின் மூலமாக



1983 நவம்பர் 1] [திரு. ஏ. ஜே. தாஸ்]

சலுகைகளையும் கொடுக்க வேண்டும். ஆண்டாண்டுக்காலமாக அடிமைப் பட்டிருந்த சமுதாயத்தினருக்குச் சலுகைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அந்தச் சலுகைகள் ஆதி திராவிடப் பெண்ணைக் கட்டிக்கொண்டால் இந்தச் சலுகை, ஆதி திராவிடப் பையனை மற்ற இனத்தவர் கட்டிக்கொண்டால் சலுகை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுபோல இதர சமுதாயத்தினரும் மற்ற சமுதாயத்தினரிலே திருமணம் செய்துகொண்டால், அவர்களுக்கும் கொடுக்க வேண்டும். யாராவது ஆதி திராவிடப் பெண்ணை அல்லது ஆதி திராவிடப் பையனைக் கட்டிக்கொண்டால், அவர்களுக்கு முதல் சலுகை என்று இருக்க வேண்டும். அவர்களுக்கு அடையாளக் கார்டுகள் ஐடன்டிடி கார்டுகள் கொடுக்க வேண்டும். அதற்கு 'ஏ' அடையாளக் கார்டுகள் என்று கொடுக்க வேண்டும். இதர சமூகத்தில் கலப்புத் திருமணம் செய்து கொள்கின்றவர்களுக்கு 'பி' என்ற அடையாளக் கார்டுகள் கொடுத்து, அவர்களுக்கும் சலுகைகள் கொடுக்க வேண்டும். பணக்காரர்கள், வசதி படைத்தவர்கள் என்று நான் சொல்லவில்லை. ஏழைகளாக, சாதாரணமானவர்களாக, நடுத்தர மக்களாக இருப்பவர்களுக்கு இது பெரிய காரியமாக, சலுகையாக இருக்கின்றது. ஆகவே இந்தக் காரியங்களிலே அரசே தலையிட்டுச் செய்வதன் காரணமாக அவர்களுக்குப் பல நல்ல நிலைமைகளை ஏற்படுத்த முடியும். முக்கியமாக தலைவர்கள் வழிகாட்ட வேண்டும். தலைவர்களாக இருக்கக்கூடியவர்கள் தங்கள் குடும்பத்திலே கலப்புத் திருமணம் செய்ய வேண்டும். அவர்கள் பிள்ளைகளுக்குக் கலப்புத் திருமணம் செய்ய வேண்டும். மகாத்மா காந்தியடிகள் அவர்கள் குடும்பத்திலே கலப்புத் திருமணம் செய்திருக்கிறார்கள். இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் குடும்பத்திலேகூட கலப்புத் திருமணம் செய்திருக்கிறார்கள். அதுபோலவே இந்தக் கலப்புத் திருமணத்தைத் தமிழகத்திலே இருக்கின்ற தலைவர்களும் செய்து காட்டி, உதாரணமாக இருக்க வேண்டும் என்று சொல்லி, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, அமர்கிறேன்.

**திரு. வலம்புரி ஜான்:** மாண்புமிகு மேல்வைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தில் கருத்துக்கள் சொல்கின்ற ஒரு வாய்ப்பினை உருவாக்கித் தந்ததற்கு அவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாமன்றத்திலே, இந்தத் தனி நபர் தீர்மானத்தின் மீது உரையாற்றி இருக்கின்ற மதிப்பிற்குரிய உறுப்பினர்களை அடுத்தும் தொடுத்தும் சொல்கின்றபோது, சாதி பேதமற்ற சமுதாயம் என்பது எப்படி தந்தை பெரியார்

[திரு. வலம்புரி ஜான்] [1983 நவம்பர் 1

காலத்திலேயிருந்து, அறிஞர் அண்ணா அவர்களின் காலத்திலேயிருந்து,
இன்றைக்கு ஆட்சி நடாத்திக்கொண்டிருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவர்
அவர்கள் காலம் வரைக்கும், இந்த இயக்கத்தின் இலட்சியமாக இருந்திருக்
கிறது, குறிக்கோளாக இருந்திருக்கிறது என்பதை மிகத் தெளிவாகத் தெரி
வித்திருக்கிறார்கள். சாதி பேதம் அற்ற சமுதாயம் இருக்க வேண்டுமா,
இல்லை சாதிகள் அற்ற சமுதாயம் இருக்க வேண்டுமா என்றும்கூட இந்த
மன்றத்திலே கேள்வி எழுப்பப்பட்டதை அனைவரும் கேட்டுக் கொண்டிருந்
தார்கள். சாதி பேதமற்ற சமுதாயம் என்றால், சாதிகள் இருக்கலாம்,
அவைகளுக்கு இடையிலே பேதங்கள் இருக்கக்கூடாது என்று தந்தை பெரி
யாரும், பேரறிஞர் அண்ணாவும் இன்றைக்கு ஆட்சி நடாத்திக் கொண்டிருக்
கின்ற டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும் கருதுவது போலவே, அப்படிச்
சொல்வது போலவும் ஒரு மாயத் தோற்றம்கூட வெளிப்பட்டதாக நான் கருது
கிறேன். சாதி பேதமற்ற சமுதாயம் என்கின்ற சொல்லிலே கூட, அமைப்
பிலேகூட, சாதிகளே கூடாது என்பதுதான் வித்தாக, அடிப்படையாக
இருக்கின்றது. சாதிகள் இருக்கலாம், சாதிகளுக்கு இடையிலே பேதங்கள்
தான் இருக்கக்கூடாது என்று சொல்வது, "கொசுக்கள் எல்லாம் இருக்கலாம்
சாக்கடைகள்தான் இருக்கக்கூடாது" என்று சொல்வது போலத்தான் இருக்
கிறது. சிவப்பு விளக்குப் பகுதிகளே கூடாது என்று சொன்னால், அப்படித்
தொழில் நடத்துகின்ற பெண்களே ஆகாது என்பதுதான் அதற்கு அர்த்தமே
தவிர, அதற்கு வேறு ஒரு பொருள் இருக்க இயலாது. சாதி பேதம் அற்
சமுதாயம் வேண்டும் என்று ஒரு இயக்கம் தன்னை அர்ப்பணித்துக்கொள்
கிறது என்றால், அதற்கு சாதிகளே கூடாது என்றுதான் அர்த்தமே தவிர
சாதிகள் இருக்கலாம், அதற்குள்ளே பேதங்கள் இருக்கக்கூடாது என்ற ஒ
புதிய பொருள் ஏதேனும் கண்டால், அவர்கள் அந்த லட்சியத்திற்கு எதிராக
போகின்றார்கள், அந்த லட்சியத்தை ஒளிக்கிறார்கள், அதற்காக முயல
கிறார்கள் என்றுகூட அர்த்தம். நான் இதைத் தெளிவாகச் சொல்ல வேண்
மென்றால், நான் இந்த மேலவைக்கு வந்துதான், இதுவரைக்கும் கேள்வி
படாத சில சாதிகளின் பெயரைக் கேள்விப்படுகிறேன் என்பதை ஒரு இளைஞ
என்ற விதத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கே பலரும் சொ
கின்றபோது, ஒன்றைத் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். நம்முடை
பெருமதிப்பிற்குரிய பெரியவர் அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்கள் சொ
கின்றபோது, வள்ளுவன் காலத்திலேகூட 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கு
சிறப்பொவ்வா, செய்தொழில் வேற்றுமையான்" என்கின்ற குறளை
சொல்லி அன்றைக்கு இருந்த சமுதாயத்திலே சாதிகள் இருந்தன, ஆகவே



1983 நவம்பர் 1] [திரு. வலம்புரி ஜான்]

சாதிகள் கூடாது என்பதற்கு "பிறப்பொக்கும்" என்று வள்ளுவனே சொல்கின்ற அவசியம் வந்தது என்றெல்லாம் ஒரு விளக்கத்தை எடுத்துச் சொன்னார்கள். ஏறத்தாழ அதே காலத்தைத்தான் குறுந்தொகையிலே பார்க்கிறோம்.

"யாயும் ஞாயும் யாராகியரோ,
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்,
நீயும் நானும் எவ்வழி அறிதும்,
செம்புலப் பெயல் நீர்போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே!"

என்கின்ற மிகப்பெரும் ஒரு ஒளி படைத்த காலத்தை தமிழ் நாட்டிலே நமது இலக்கியம் மாத்திரம் அல்லாமல் வரலாறு குறித்துக்காட்டுகிறது என்பதை உணர்ந்தாக வேண்டும். ஆகவே ஒரு காலத்திலே,

"யாயும் ஞாயும் யாராகியரோ,
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்"

என்கின்ற முறையிலே மாறி, இன்றைக்கு உன்னுடைய அப்பாவும், என்னுடைய அம்மாவும் சொந்தக்காரர்கள். உனக்கும் எனக்கும் திருநெல்வேலி சைவப் பிள்ளை இனம் தான். ஆகவேதான் கலந்து இருக்கிறோம் என்று புதுக் கவிதைகளைச் சொல்கின்ற அளவுக்கு இப்போது காலம் மாறியிருக்கிறது என்பது ஒரு மாபெரும் வீழ்ச்சியைத்தான் குறிக்கிறது. இருந்தாலும் நான் நம்பிக்கையோடு சொல்கிறேன். ஒரு நேர் கோட்டிலே நாம் எங்கேயும் இல்லை. ஒரு வளையத்திலேதான் எங்கோ இருக்கிறோம். ஒரு காலத்திலே சாதிகளே இல்லாது இருந்த ஒரு சமுதாயம். இன்றைக்கு இருண்ட காலத்திலே சாதி முட்கள் எல்லாம் முளைத்திருக்கின்ற ஒரு சூழல். அதற்கு அப்பாலே மீண்டும் சாதி, அதனுடைய அடிப்படையே, அதனுடைய அடித்தளமே தகர்ந்து வருகின்றது.

'பொய்மை சாதி வகுப்பையெல்லாம் தகரென்று
கொட்டு முரசே'

என்றும் சொல்கின்ற ஒரு காலம். இப்படி ஒரு வளையமாக, வட்டமாகத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது என்பதை மாத்திரம் பார்க்கிறோம். மார்டின் லூதர் கிங், 1965 ஆம் ஆண்டு, அமெரிக்க நாட்டிலே கருப்பு மலருக்

[திரு. வலம்புரி ஜான்] [1983 நவம்பர் 1

கெல்லாம் கண்ணீர் துடைக்கப்பட வேண்டும், நீக்ரோக்களுக்கெல்லாம் உரிமை வழங்கப்பட வேண்டும் என்று பேசுகின்ற நேரத்திலே தெரிவிக்கிறான் :

"I have a dream, it may not be today, but it may be tomorrow or some day, this liberation has been assured."

என்று அவன் சொன்னதைப் போல், இன்று இல்லாமல் இருக்கலாம். நாளை, அல்லது நாளை மறுநாள், என்றேனும் ஒரு நாள் சமுதாயத்தில் இன்றைக்கு இருக்கின்ற இந்த சாதிப் பிரைக்குகள் எல்லாம் தீர்ந்து போகும் என்ற நம்பிக்கை மாத்திரம், ஒரு கவியினுடைய கனவு போல, கனன்று எழுகின்ற எல்லா புரட்சி மனங்களிலும் இருக்கிறது. சில பேர், 40 வயது வரைக்கும், 'சாதிகள், இவைகள் எல்லாம் கூடாது' என்று கூறுகிறார்கள். இதற்கு என்ன காரணம்? 40 வயது தாண்டுகின்ற வரை, "எத்தனை சாதிகள் இருக்கின்றன, என்னென்ன சாதிகள் இருக்கின்றன, சாதிகள் எங்கே ஒழியப் போகிறது?" என்பதுபோல, அஸ்தமன காலத்தில் அப்படி ஆயாசப்படுவதைப் போல, பேசிவிடுகின்றார்கள். ஆனால், இளமையாக இருப்பவர்கள் நெஞ்சத்திலே புயலைச் சுமந்துகொண்டிருப்பார்கள். அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இதை மாத்திரம் நான் இந்த மன்றத்திலே எடுத்துத் தெரிவிக்க விரும்புகிறேன். நான் ஒன்றை உறுதியாகச் சொல்ல வேண்டும். உதாரணத்திற்கு 'பஞ்சமர்' என்று சொல்கின்றோம். புராணங்களிலேயிருந்து சாதி வருகிறது, இதிகாசத்தில் இருந்து சாதி வருகிறது, பகவத் கீதையிலேதான் சாதி வருகிறது என்று சொல்கின்றவர்களுக்கெல்லாம் நான் சொல்வேன் : 'நாமே எழுதிப் படித்துக்கொண்டிருக்கக்கூடிய சில ஏடுகளிலேகூட திருப்பிப் பார்த்தால், பஞ்சமன் என்ற சொல் காணப்படுகிறது.' ஆகவே விளக்கம் சொல்கின்றவர்கள் கூட, பஞ்சமன் என்று சொல்வது ஐந்தாவது இருக்கின்ற சாதி என்று சொல்கின்றார்களே தவிர, ஒவ்வொரு சாதியிலேயிருந்தும் அந்த சாதியினுடைய தர்மத்தை விளக்கவும், குலதர்மத்தை விளக்கவும் முடியாதவர்கள் எல்லாம், எல்லோருமே சேர்ந்து ஊருக்கு அப்பாலே தள்ளி வைக்கப்பட்டார்கள். அப்படி எல்லா சாதிகளும் இருக்கின்ற அந்த அமைப்புக்குத்தான் பஞ்சமன் என்ற பெயர் வந்தது. வேண்டுமானால் விளக்கத்தைக்கூட ஏற்றுக்கொள்ளலாம். அந்தச் சூழல் இன்றைக்கும் இருப்பதை நாம் பார்க்கிறோம்.

சாதி ஏன் இருக்கிறது என்று கேட்கிறார்கள். சாதி ஏன் இருக்கிறது என்றால், சாதி என்பதுதான் ஒரு பாதுகாப்பாக இன்றைக்குச் சமுதாயத்திலே இருக்கிறது. நாம் என்றைக்குச் சாதிகளுக்கு எதிராக [illegible]



1983 நவம்பர் 1] [திரு. வலம்புரி ஜான்]

அந்த நேரத்திலே இந்த உண்மைகளை ஏற்றுக்கொண்டுதான் தீர வேண்டும். நான் உண்மைகளை ஒத்துக்கொள்ளவே மாட்டேன். இருக்கும்போதே கண்களை இருட்டுக்குள்ளே மூடிக்கொள்வேன் என்றால், நான் சாதி ஒழிப்பிலே அக்கறை காட்டாதவன் என்றுகூட உலகம் ஒத்துக்கொள்ள வேண்டும். சமுதாயம் அப்படி நினைக்கும். சாதி ஏன் இருக்கிறது என்றால், சாதி என்பது இன்றைக்கு இருக்கின்ற சமுதாயத்திலே ஒரு பாதுகாப்பாக இருக்கிறது. சமுதாயத்திலே இந்த வளைவிற்குள்ளே இருந்தால், நமக்கு ஒரு பாதுகாப்பு இருக்கிறது. இவன் என் அண்ணன், இவன் என் தம்பி, இவன் என் சாதிக்காரன், என் சொந்தக்காரன் என்று சொல்லிக்கொள்கின்ற ஒரு பாதுகாப்பை இந்த சாதி உருவாக்கிவிடுகிறது. இல்லாவிட்டால் சலுகைகள் என்று பாதுகாப்பு வருகிறது. இந்த மாமன்றத்திலே, மாண்புமிகு உறுப்பினர் எடுத்துத் தெரிவித்ததுபோல, கிருத்தவர்களாக மாறிய பிறகும் ஒருவன் தன்னை ஆதி திராவிடன் என்கிறான். பிள்ளை, முதலியார் என்று அழைக்கிறான் என்றால், அதிலே அந்தச் சலுகைகள் வருகின்றன. ஆக சாதி ஒரு பாதுகாப்பாக இருக்கிறது. அந்தப் பாதுகாப்பு இருக்கின்ற காலம் வரைக்கும், சாதிகள் இருந்துகொண்டே இருக்கும். இன்றைக்குப் பாதுகாப்பே கூடாது என்பதல்ல. இந்த ஒட்டுமொத்தமான சமுதாயத்திற்கு, ஒரு அரசாங்கம், ஒரு சமூகப் பாதுகாப்பை, Social Security என்று சொல்கிறோமே அந்த சமூகப் பாதுகாப்பை சாதி காரணமாக அல்ல, பொருளாதார அடிப்படையிலே எல்லோருக்கும் வழங்குகின்ற காலத்திலேதான் சாதியினுடைய அடிப்படைகள் தகருமே தவிர, அந்தக் காலம் வரைக்கும் இவைகள் ஒரு கவியின் கனவாகவே இருக்கும். எவ்வளவு கசந்தாலும் இதுதான் உண்மை. இது ஒன்றுதான் உண்மை.

(நண்பகல் 12-00)

சாதி இருப்பதற்குக் காரணம், சலுகை கொடுப்பதுதான். சலுகை ஒரு பாதுகாப்பாக இருக்கிறது. அந்தப் பாதுகாப்பை எடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. அந்தப் பாதுகாப்பு எல்லா மக்களுக்கும் பொருளாதார அடித்தளத்தில் வழங்கப்பட்டால் ஒழிய, நிச்சயமாக சாதிகள் அழிந்து போகாது. சாதி எங்கேயிருந்து வருகிறது? சமுதாயத்தில் இருக்கும் அறியாமை காரணமாக வருகிறது. பாரதி, "கஞ்சி குடிப்பதற்கிலார் அதன் காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்" என்று சொன்னார். எது அவனுக்கு எதிரியாக்கப்பட்டது? பசி ஒரு எதிரி; அறியாமை ஒரு எதிரி. இரண்டில் எது பெரிய எதிரி என்றால் பசி அல்ல பெரிய எதிரி, அறியாமைதான் பெரிய எதிரி. பசிக்கிறவனுக்கு ஏன் நாம் உண்ணாமல் இருக்கிறோம், அவன் ஏன் உண்ணுகிறான், நாம் ஏன் கஞ்சிக்கு ஆலாய்ப் பறக்கிறோம், அவன்

[திரு. வலம்புரி ஜான்] [1983 நவம்பர் 1

ஏன் பாலும் பழமும் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான் என்பதற்குக் காரணங்கள் தெரிந்தால், இன்று கஞ்சி குடிக்காதவன், நாளைக்குக் குடிக்கலாம். பசி அவனுக்கு எதிரிதான். அறியாமை அதைவிட எதிரிதான். சாதிகள் எப்படி வரும்? உலகத்திலே இன்றைக்கு எண்ணிப் பார்த்தால், ‘ Birth is an accident, life is an incident ’ என்று ஒரு அறிஞன் சொல்கிறான். பிறப்பு என்பது ஒரு விபத்து, வாழ்க்கை என்பது ஒரு நிகழ்ச்சி. நாம் நம்முடைய தாய், தந்தையர்களுக்கு வாக்கு அளிக்கவில்லை. யாரோ ஓட்டு அளித்து, இவர்களுக்குத் தந்தையாக இருக்க வேண்டும், தாயாக அமைந்துவிட வேண்டுமென்று வந்தவர்களல்ல. நம்முடைய பெற்றோர்களை நாம் தேர்ந்தெடுக்கவில்லை. ஆகவே பிறப்பு ஒரு விபத்து என்ற உண்மையைக்கூட ஒரு மனிதன் மறக்கிறான் என்றால், அவன் எவ்வளவு தூரம் அறியாமையின் அநாகரீகச் சின்னமாக இருக்கிறான் என்பதற்கு வேறு எடுத்துக்காட்டு தேவையில்லை. நாம் பெற்றோர்களைத் தேர்ந்தெடுக்கவில்லை. அதை எடுத்துச் சொல்கிறபோது, அழகாகச் சொல்வான் ஜிப்ரான். “பிறப்பு என்பது ஒரு சர்வாதிகாரம்” என்கிறான். நம்மைக் கேட்டுக்கொண்டு நாம் இங்கே வரவில்லை; நம்மைக் கேட்டுக்கொண்டு நம்முடைய தாய் தந்தையர்கள் அமையவில்லை. ஆகவே பிறப்பு என்பது சர்வாதிகாரம்; வாழ்க்கையாவது மக்கள் ஆட்சியாக இருக்க வேண்டுமென்று சொல்கிறான். ஆகவே அறியாமை காரணமாக நாம் வந்திருக்கிறோம். நாம் எங்கே பிறந்தோம், எப்படிப் பிறக்கிறோம், எவருக்குப் பிறந்தோம் என்பது நம் கரத்திலே இல்லை. அப்படிப் பிறந்ததை வைத்துக்கொண்டு, இவன் எங்கோ பிறந்தான், ஆகவே இந்த சாதியிலே இருக்கிறவன் என்றெல்லாம் நாம் கருதத் தலைப்படுகிறோம். அப்படித்தான் சில பேர் இன்னமும்கூட ஆரியம், திராவிடம் பற்றி எல்லாம் பேசுகிறார்கள். ‘ஆரியம்’—இன்றைக்குக்கூட ஒரு இனம் என்று கருது கிறார்கள், ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கு முன்னால் தன்னுடைய படிப்பை நிறுத்திக்கொண்டவன், என்றுகூடச் சொல்ல வேண்டும். ஆரியம் ஒரு இனமல்ல. ஆரியம் என்பது ஒரு குணம். தந்தை பெரியார் அவர்களை ஒரு சமுதாய விஞ்ஞானி என்று உலகம் பாராட்டக் காரணம், அவருடைய எதிர்ப்பு உணர்ச்சியும், எதிர்ப்புத் தாக்குதலும் ஒரு குறிப்பிட்ட இனத்திற்கு எதிராக இருந்தது இல்லை என்பதுதான். அவர் மறைந்து போவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாகப் பார்க்கிறேன். அந்த எண்ணம் அவருக்கு வருகிறது. ஆகவேதான் அவர், ‘சமுதாய விஞ்ஞானி’, ஒரு குறிப்பிட்ட இனத்திற்கு எதிராக அல்ல, எந்தெந்த இனத்தில் இந்த ஆரிய குணம் இருக்கிறதோ, அதற்கு எதிராக இருந்தார்கள். அதனால்தான் தஞ்சை மருத்துவக் கல்லூரியிலே அவர்கள்



1983 நவம்பர் 1] [திரு. வலம்புரி ஜான்]

இவர்கள் மற்றவர்களைக் கொடுமைப்படுத்துகிறார்கள் என்று கண்டிக்க ஆரம்பித்தார்கள். ஆகவே அவர்கள் வளர்ச்சி பெற்றுக்கொண்டே இருந்தார்கள். அடிவானத்தைப் போல தொட இயலாமல் அவருடைய சிந்தனை சென்று கொண்டே இருந்தது. ஆரியம் என்பது ஒரு இனமே அல்ல. ஆரியம் என்பது இன்றைக்குள்ள குணம். அந்த ஆரியம் என்ற குணம்—தன்னை மேம்பட்டவன், மற்றவர்களிலிருந்து தான் மேம்பட்டவன் என்று கருதுகிறவர்கள் எந்த சாதியில் இருந்தாலும், அவனை ஆரியன் என்றே அழைக்கலாம். திருமூலருடைய காலத்திலிருந்து அண்ணா அவர்கள் காலம் வரையில் ஆரியன் என்ற சொல்லுக்கு எத்தனையோ அர்த்தங்கள் இருந்திருக்கின்றன. திருமூலரின் திருமந்திரத்தில் ஆரியன் என்ற சொல் வருகிறது. ஆரியன் என்றால் இறைவன் என்று அர்த்தம். தேம்பாவணியில் வீரமாமுனிவர் சொல்கிறார், ஆரியன் என்றால். ‘ஆறிய வளம்தன் காதை அறம் முதல் விளங்கச் சொல்வான்’ என்கிறார். ஆரியன் என்றால் வீரன் என்று அர்த்தம். பாரதியார் காலத்தில் பார்க்கிறேன். “ஆரிய பூமியில் நாரியரும் நர சூரியரும் சொலும் வீரிய வாசகம் நொந்தே போயினும் வெந்தே மாயினும் நந்தே சத்தர் உவந்தே சொல்வது” என்கின்றார். ஆரியன் என்றால் அவன் காலத்திலே ‘காப்பியத் தலைவன்’ என்று பொருள். சுந்தரம் பிள்ளை காலத்திலே ‘ஆரியம் போல உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையாதா’ என்கிறார். இங்கே மொழி என்று அர்த்தம். அறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலே ஆரியன் என்றால் ஒரு இனம், ஆரிய மாயை என்று ஆயிற்று. காலத்திற்கு காலம் ஒரு சொல்லுக்கு மாறுதலான பொருள் வரக் காரணம் சிந்தையிலே ஏற்பட்ட மாற்றம்தான். ஆக இந்தப் பத்தாண்டுகளிலே ஏற்படுகிற மாற்றம் எது என்று கேட்டால், ஆரியன் என்று ஒரு குறிப்பிட்ட சாதியாரைச் சொல்வதில்லை. நான் மேம்பட்டவன், உயர்ந்தவன் என்ற எண்ணம் எந்த சாதியாரிடத்தில் இருந்தாலும், அவனை ஆரியன் என்றே கொள்ளலாம்.

(மாற்றுத் தலைவர் திரு. எ. ஜே. தாஸ் தலைமை)

ஆரியம் என்பது ஒரு இனமல்ல. அது ஒரு குணம். அப்படி எண்ணிப் பார்க்கும்போதுதான், அது அவருக்கே கூடப் பொருந்தும். சேரியிலே ஒருவன் தப்பித் தவறி பிறந்து விடுகிறான். அப்படி பிறக்கின்ற அல்லது பிறப்பிக்கின்ற அந்த அடிப்படை உரிமை அவன் கையில் இல்லை என்னும்போது எப்படி அவனைக் குறைக்கக்கூடாதோ, அதைப்போலத்தான் ஒருவன் அக்கிரஹாரத்தில் பிறக்கிறான் என்றால், அவன் மாத்திரம் தன்னுடைய பெற்றோர்களுக்கு வாக்களித்தவன் அல்ல. அவன் தேர்ந்தெடுக்கவில்லை. பிறந்த பிறகு நான் மேம்பட்டவன், உயர்ந்தவன் என்று கருதுவது தவறு. அப்படிக் கருதுவது

[திரு. வலம்புரி ஜான்] [1983 நவம்பர் 1

கண்டிக்கத் தக்கது, குடும்பக்கட்டுப் பிறப்பு காரணமாக அவனை இழிவுபடுத்துவது எப்படி ஏற்புடையதாகாதோ அதைப் போல இவனையும் இழிவுபடுத்துவது ஏற்புடையதாகாது என்பதை இன்றைக்கு எண்ணிப் பார்க்க வேண்டும். சாதி ஏன் இருக்கிறது என்று கேட்கிறார்கள். அது ஒரு பாதுகாப்பு என்று சொன்னேன். அதைப் போலத்தான் இதை நியாயப்படுத்தும் குணமும் இருக்கிறது. எல்லாவற்றையும் நியாயப்படுத்தும் சூழ்நிலை இருக்கிறது.

சாதி ஏன் இருக்கிறது என்றால், அதற்கு ஒரு குறிப்பிட்ட சமூகம் அல்ல காரணம். அவர்கள் முதுகிலே ஏறிக்கொண்டு சுமையாக இருக்கிறார்கள் என்பதல்ல காரணம். நமக்கெல்லாம் இருக்கிற சிந்தனை, என்னுடைய தோளுக்கு மேலே எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பதுபற்றி என்னுடைய கவலையோ இல்லை, என்னுடைய கால் எத்தனை பேர்களுடைய தோள்களுக்கு மேலே இருக்கிறது—இதுதான் என்னுடைய கவலை. என்னுடைய காலுக்கு மேலே எத்தனை சாதிகள் வளமாக இருக்கிறார்கள், வலுவாக இருக்கிறார்கள் என்பதல்ல. எனக்குக் கீழே எத்தனை சாதிகள் இருக்கின்றன? இருபது சாதிகள் இருக்கிறதா, அதற்குமேலே நான் இருக்கிறேனா; சாதியை ஒழிக்கும் கவலை எனக்கில்லை. காரணம் எனக்குக் கீழேதான் 25 சாதிகள் இருக்கின்றனவே, ஏன் எனக்கு அந்த அக்கறை? எனக்கு ஏன் அந்தக் கவலை என்று நினைக்கிறோம். என்னுடைய தோளுக்கு மேலே எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்ற கவலை எனக்கு இல்லை. என்னுடைய காலைச் சுமப்பதற்கு எத்தனை தோள்கள் இருக்கின்றன—அந்த நியாயப்படுத்தும் குணம் இருக்கிற காலம்வரை சாதிகள் போகுமா என்றால் போகாது. ஜஸ்டிபிகேஷன், நியாயப்படுத்துதல் இந்த நாட்டிலே வந்து கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம்.

இன்றைக்கு உலகத்திலே எந்தச் சமுதாயத்தை எடுத்துக் கொண்டாலும், மற்ற நாடுகளிலும் சாதிகள் இருக்கிற சமுதாயம் இருக்கிறது. அதற்கு அடித்தளம் உண்டு. என்ன அடித்தளம் என்றால், எந்த ஒரு நாட்டில் உடல் உழைப்பை ஒரு சமுதாயம் கொச்சைப்படுத்துகிறதோ, எந்தச் சமுதாயத்தில் உடல் உழைப்பு கேவலப்படுத்தப்படுகிறதோ, அந்தச் சமுதாயத்தில் சாதிகள் இருக்கும். வீட்டிலே இருக்கும் தலைவி துணிகளைத் துவைக்கிறாள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அழுக்கு போக துணிகளை அலசும் அந்த வீட்டு அம்மாளை அழைக்கிறபோது 'சலவையாளர்' என்று அழைப்பதில்லை. இது ஏன் என்று சிந்திக்க வேண்டும். நாம் ஒவ்வொரு நாளும் முகச் சவரம் செய்து கொள்கிறோம். நம்மை நாம் நாவிதன் என்று அழைத்துக் கொள்ளவில்லை



1983 நவம்பர் 1] [திரு. வலம்புரி ஜான்]

பொழுதுபோக்கிற்காக கொள்ளேகால் பரிக்குச் சென்று ஒருவன் மீன் பிடிக்கிறான். மாலை மயக்கம், பொழுதுபோக்கிற்காக மீன் பிடிக்கிறேன் என்கிறான். அவனை மீனவன் என்று அழைக்கவில்லை. அப்படி அழைக்க அவன் சம்மதிக்கவில்லை. கிராமங்களில் யார் பணியாற்றுகிறார்களோ, உடல் உழைப்பால் யார் ஊதியம் தேடுகிறார்களோ அவர்களைக் கொச்சைப்படுத்தும் பழக்கம் இந்த நாட்டின் அறியாமையின் வித்தாக இருக்கிறது. புள்ளிவிவரம் சேர்ப்பவன் சிறந்த அறிவாளியா, பூமியை உழுகிறவன் சிறந்த அறிவாளியா என்றால் புள்ளிவிவரம் சேர்ப்பவன் அறிவாளியே அல்ல; பூமியை உழுகிறவன் தான் சிறந்த புத்திமான். ஒரு பல்கலைக் கழகப் பேராசிரியருக்கும், விறகு வெட்டுகிறவனுக்கும் என்ன வேறுபாடு இருக்க முடியும்? அதனாலேதான் சமதர்மம் மலர்ந்திருக்கிற நாடுகளில் எல்லாம் உயர்ந்தபட்ச சம்பளத்திற்கும், குறைந்தபட்ச சம்பளத்திற்கும் 18 விழுக்காடு அளவுக்குத்தான் வேறுபாடு இருக்கிறது. சீன நாட்டிலே 8 விழுக்காடுதான் வேறுபாடு இருக்கிறது. ஆனால் இந்தியாவில் உடல் உழைப்பை எவ்வளவு உதாசீனப்படுத்துகிறோம், எவ்வளவு கேவலப்படுத்துகிறோம், எவ்வளவு கொச்சைப்படுத்துகிறோம் என்பதற்கு ஒன்று சொல்கிறேன். நம்முடைய குடியரசுத் தலைவருக்கும் மரம் வெட்டும் சாதாரண மனிதனுக்கும் சம்பளத்திலே உள்ள வேறுபாடு 240 விழுக்காடு என்று சொல்லுகிறார்கள். 240 விழுக்காடு சம்பளத்திலே வித்தியாசம் இருக்கும் சமுதாயத்திலே மனித உழைப்பு மதிக்கப்படவில்லை என்றால், மனித உழைப்பு வணங்கப்படவில்லை என்றால், சாதிகள்தான் இருக்கும். காரணம் சாதியாலே இவர்கள் இழிந்தவர்கள். போசமானவர்கள், கீழ் கட்டு மனிதர்கள் என்று கணிக்கப்படுகிறவர்கள் பெரும்பாலோர் உடலால் உழைக்கிறார்கள். உள்ளத்தால், மனதால் உழைக்கிறவர்கள் மேம்பட்டவர்கள் என்றும், உடலால் உழைக்கிறவர்கள் கீழ்மைப்படுத்தப்பட்டவர்கள் என்றும் கருதுகிற எல்லா சமுதாயத்திலும் சாதி இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். உடலால் உழைக்கும் ஒரு கல்லூரிப் பேராசிரியர், பல்கலைக் கழகத்திலே இருக்கும் ஆராய்ச்சி விஞ்ஞானி இவர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் எந்தக் காலத்திலே மரம் வெட்டுகிறவனுக்குக் கிடைக்கிறதோ அதுதான் சாதிகள் ஒழிகிற காலம். அப்படி வந்த நாடுகள் உண்டு. உலகத்திலே அந்த நடைமுறைப் படுத்திய நாடுகள் இருக்கின்றன என்று சொல்ல விரும்புகிறேன்.

இங்கே பேசும்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். கிறித்தவ சமுதாயத்திற்கு மாறிவிட்டாலும் சாதி தொடர்கிறது என்று சொன்னார்கள். கிறித்தவ சமுதாயத்திற்கு ஒருவன் மாறிவிட்ட பிறகும், அவனோடு சாதி தொத்திக் கொண்டு வருகிறது. காரணம், சலுகை கிடைக்கிறது அது ஒரு பாதுகாப்பாக இருக்கிறது. நியாயப்படுத்தி

விடுகிறான். வருத்தத்தோடு சொல்கிறேன், மற்ற இடங்களிலே சாதி, தீண்டாமை என்று பார்த்தாலும், இந்து சமுதாயத்திலே தீண்டாமை இருக்கலாம்; ஆனால் நேற்று மாதிரி இன்று இல்லை, இன்றுமாதிரி நாளை இராது என்ற நம்பிக்கை நமக்கு இருக்க வேண்டும். இந்து சமுதாயத்திலே தீண்டாமை எங்கோ ஒரு இடத்திலே தப்பித் தவறி இருக்கலாம். உயிரோடுள்ள மனிதனைத் தொடக் கூடாது என்ற காட்டுமிராண்டித்தனமான நம்பிக்கை, எண்ணம் இருக்கலாம். ஆனால் கிறுத்துவ ஆலயங்களிலே பார்க்கிறேன். திருச்சியிலே ஒரு குறிப்பிட்ட ஆலயத்தின் கல்லறை தோட்டத்திலே சுவர்

(பிற்பகல் 12-10)

எழுப்பியிருக்கிறார்கள். ஒரு கிறிஸ்தவ ஆலயம். ஏசுநாதர் சொல்கிறபோது சொல்கிறார். அவருடைய வாழ்க்கையிலே சொல்கிறபோது சொல்கிறார். "கோதுமை மணி நிலத்தில் விழுந்து மாளாவிட்டால் அதிலே பலன் வராது. உங்களுக்காக மட்டுமல்ல, உலகில் இருக்கிற எல்லா புற சாதிகளுக்காகவும் நான் வந்தவன்" என்று விவிலியம் சொல்கிறது, பைபிள் பேசுகிறது. அவைகளை எடுத்துப் பேசுகிற அவருக்குப் பிறகு வந்த ஞானிகள் சொல்கிறார்கள். ' In christ there is no sex. என்று எழுதுகிறார். கிறிஸ்துவுக்குள் ஆணும் இல்லை, பெண்ணும் இல்லை என்கிறார். அதை எடுத்துச்சொல்கிற ஒரு சமூகம், அதை எடுத்துச் சொல்கிற இந்த நாட்டினுடைய மடாதிபதிகள் என்ன சொல்கிறார்கள்? திருச்சியிலே ஒரு கல்லறைக்குள் சென்று பார்த்தால், கல்லறைக்குள் ஒரு சுவர் இருக்கிறது. சுவர் எதற்காக என்றால் மேல் சாதி பிணங்களுக்காக அங்கே, கீழ் சாதி பிணங்களுக்காக இங்கே. உயிரோடிருக்கிற மனிதர்களிடத்தில் அல்ல. செத்துப்போன அந்த பிணங்களிடத்திலேகூட சாதி பார்க்கிற மனப்பான்மை இருக்கிறது என்றால், வெட்கத்தோடு ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இதற்கெல்லாம் இருக்கிற அடிப்படை என்ன என்று கேட்டால், என்றைக்கு இந்த சாதி இருக்கலாம், அது நியாயம்தான் என்ற உணர்வு சமூகத்திலிருந்து மாறுகிறதோ அன்றைக்குத் தான் இவைகள் யாவும் மறையும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் உரையாற்றும்போது, பாரதியாரும் 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று பாடிவிட்டுப் போய்விட்டார் என்றெல்லாம் சொன்னார்கள். அவருடைய காலத்திலே வெறுமனே பாடுவது என்பதல்ல. ஒரு காலத்தில் பாடுவது என்பது கற்பனையாக இருந்தது. இன்றைக்கு கற்பனை செய்பவனை கவிஞன் என்று உலகம் ஒப்புக்கொள்ளவில்லை. மாசேதுங் என்று ஒரு கவிஞன். அவன் கற்பனை செய்தவன் அல்ல. கோசிமின் என்ற ஒரு கவிஞன். அவன் கற்பனை செய்தவன் அல்ல. 'Let hundred flowers bloom, let hundred thoughts thrive' என்று பாடிய மாசேதுங் கற்பனைக்காரன் அல்ல.





பாரதியார் பாடியிருக்கிறார் என்றால், கற்பனையாக அவர் பாடியதில்லை. அவருடைய வாழ்க்கையில் சாதியை ஒழிப்பதற்காக, தானே முன் வந்திருக்கிறார். கனகலிங்கம் என்பவரை அதற்காகத்தானே பாரதியார் கொண்டு வந்து சேர்த்திருக்கிறார் என்பதை எல்லாம் நாம் பார்க்கிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் மிக அழகாகச் சொல்கிறபோது "சாதிகள் இல்லையடி பாப்பா" என்றால், அப்படிச் சொல்கிற போது, "பெண்கள் எல்லாம் சாதிப் பெயர்களைப் போட மாட்டார்கள், அவர்கள் எவ்வளவோ நல்லவர்கள்" என்றெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். அந்தக் காரணத்தாலேதான் ஒரு கவிஞன் கணக்குப் போடுகிறான், கவனத்தோடு கவிதை பண்ணுகிறான், பாப்பா என்றால் நாம் ஆணுக்கும் சொல்கிறோம், பெண்ணுக்கும் சொல்கிறோம், அதுதான் வழக்கம். ஆனால் 'ஓடி விளையாடு பாப்பா' என்று ஆண் பிள்ளைக்குச் சொல்கிறதுபோல் ஆரம்பித்து. சாதி என்று சொல்கிற நேரத்தில்தான் முதலில் ஆண் குழந்தைக்குச் சொல்லியது மாதிரி பின்னால் பெண் குழந்தைக்கு என்று இன்னொன்றைச் சொல்வதுபோல் "சாதிகள் இல்லையடி பாப்பா" என்று சொல்கிறார். ஆகவே எண்ணமும், வேகமும் வளர்ந்துகொண்டிருக்கிற நிலையைப் பார்த்தால், இந்த சாதி இளைஞர்களிடையே எவ்வளவோ நம்பிக்கையின்மையைத் தோற்றுவித்திருக்கிறது என்பதை அறிந்து ரொம்பக் கவனமாக இருக்க வேண்டும். இன்றைக்கு இதுகுறித்து நாம் எண்ணிப் பார்த்தால், ஒரு சாதி பேதமற்ற சமுதாயம் என்றைக்காவது வருகின்ற நாள் வரும். அப்படிச் சொல்லும்போது அதற்காக நாம் என்ன முயற்சி செய்கிறோம், என்ன அடிப்படையில் முயற்சி செய்கிறோம் என்பதைப் பார்க்கும்போது, இன்றையதினம் சாதிச் சான்றிதழ் என்பது நடைமுறையில் இருக்கிறது. ஆனால் இதெல்லாம் ஒரு காலத்தில் படிப்புக்காகச் செய்த செயல்கள். நாம் வாழ்க்கைக்காக மட்டும் வாழவில்லை. நாம் வரலாற்றுக்காகவும் வாழ்கிறோம். முன்பு இருந்த உலகத்தைவிட இன்றைக்கு நாம் மாறியிருக்கிறோம். நாளைக்கு வருகிற உலகம் இதைவிட மாறியிருக்கும் என்பதற்கு இது ஆதாரம், அடிப்படை. உலக நாடுகளிலும் இந்த மாற்றம் இருக்கிறது. இன்றைக்கும் பார்க்கிறோம். ஒரு காலத்தில் "நீ என்ன சாதி?" என்று நேரடியாகக் கேட்டார்கள். இன்றைக்கு "20, 30 ஆண்டுகளுக்கு முன்பு நீ என்ன ஜாதி?" என்று கேட்டு விடுவார்கள். ஆனால் இன்றைக்கு "நீ என்ன ஜாதி?" என்று கேட்பவனை ஒரு அநாகரிகமான மனிதனைப் பார்ப்பதைப்போல, ஒரு மத்திய தரைக் கடல் நாட்டிலிருந்து, குகையிலிருந்து வந்திருக்கிற ஒரு மனிதனைப் பார்ப்பது போல் பார்க்கிறான். ஆகவேதான் இந்த 30 ஆண்டுகளில் சாதியைத் தெரிந்துகொள்ள ஒருவன் என்ன சாதி என்று கேளாமல், "உன்னுடைய பெயர் என்ன, உனக்கு எந்த ஊர்?" என்று கேட்டு சாதியின் பெயரை அறிய

[திரு. வலம்புரி ஜான்] [1983 நவம்பர் 1

விடுகிறான். வருத்தத்தோடு சொல்கிறேன், மற்ற இடங்களிலே சாதி, தீண்டாமை என்று பார்த்தாலும், இந்து சமுதாயத்திலே தீண்டாமை இருக்கலாம்; ஆனால் நேற்று மாதிரி இன்று இல்லை, இன்றுமாதிரி நாளை இராது என்ற நம்பிக்கை நமக்கு இருக்க வேண்டும். இந்து சமுதாயத்திலே தீண்டாமை எங்கோ ஒரு இடத்திலே தப்பித் தவறி இருக்கலாம். உயிரோடுள்ள மனிதரைத் தொடக் கூடாது என்ற காட்டுமிராண்டித்தனமான நம்பிக்கை, எண்ணம் இருக்கலாம். ஆனால் கிறுத்துவ ஆலயங்களிலே பார்க்கிறேன். திருச்சியிலே ஒரு குறிப்பிட்ட ஆலயத்தின் கல்லறை தோட்டத்திலே சுவர்

(பிற்பகல் 12-10)

எழுப்பியிருக்கிறார்கள். ஒரு கிறிஸ்தவ ஆலயம். ஏசுநாதர் சொல்கிறபோது சொல்கிறார். அவருடைய வாழ்க்கையிலே சொல்கிறபோது சொல்கிறார். "கோதுமை மணி நிலத்தில் விழுந்து மாளாவிட்டால் அதிலே பலன் வராது. உங்களுக்காக மட்டுமல்ல, உலகில் இருக்கிற எல்லா புற சாதிகளுக்காகவும் நான் வந்தவன்" என்று விவிலியம் சொல்கிறது, பைபிள் பேசுகிறது. அவைகளை எடுத்துப் பேசுகிற அவருக்குப் பிறகு வந்த ஞானிகள் சொல்கிறார்கள். ,' In christ there is no sex. என்று எழுதுகிறார். கிறிஸ்துவுக்குள் ஆணும் இல்லை, பெண்ணும் இல்லை என்கிறார். எடுத்துச்சொல்கிற ஒரு சமூகம், அதை எடுத்துச் சொல்கிற இந்த நாட்டினுடைய மடாதிபதிகள் என்ன சொல்கிறார்கள்? திருச்சியிலே ஒரு கல்லறைக்குள் சென்று பார்த்தால், கல்லறைக்குள் ஒரு சுவர் இருக்கிறது. எதற்காக என்றால் மேல் சாதி பிணங்களுக்காக அங்கே, கீழ் சாதி பிணங் களுக்காக இங்கே. உயிரோடிருக்கிற மனிதர்களிடத்தில் அல்ல. செத்துப்போன அந்த பிணங்களிடத்திலேகூட சாதி பார்க்கிற மனப்பான்மை இருக்கிறது என்றால், வெட்கத்தோடு ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இதற்கெல்லாம் இருக்கிற அடிப்படை என்ன என்று கேட்டால், என்றைக்கு இந்த சாதி இருக்கலாம், அது நியாயம்தான் என்ற உணர்வு சமூகத்திலிருந்து மாறுகிறதோ அன்றைக்குத் தான் இவைகள் யாவும் மறையும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் உரையாற்றும்போது, பாரதியாரும் 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று பாடிவிட்டுப் போய்விட்டார் என்றெல்லாம் சொன்னார்கள். அவருடைய காலத்திலே வெறுமனே பாடுவது என்பதல்ல. ஒரு காலத்தில் பாடுவது என்பது கற்பனையாக இருந்தது. இன்றைக்கு கற்பனை செய்பவனை கவிஞன் என்று உலகம் ஒப்புக்கொள்ளவில்லை. மாசேதுங் என்று ஒரு கவிஞன். அவன் கற்பனை செய்தவன் அல்ல. கோசிமின் என்ற ஒரு கவிஞன். அவன் கற்பனை செய்தவன் 'let hundred flowers bloom, let hundred thoughts thrive' என்று பாடிய மாசேதுங் கற்பனைக்காரன் அல்ல.



1983 நவம்பர் 1] [திரு. வலம்புரி ஜான்]

பாரதியார் பாடியிருக்கிறார் என்றால், கற்பனையாக அவர் பாடியதில்லை. அவருடைய வாழ்க்கையில் சாதியை ஒழிப்பதற்காக, தானே முன் வந்திருக்கிறார். கனகலிங்கம் என்பவரை அதற்காகத்தானே பாரதியார் கொண்டு வந்து சேர்த்திருக்கிறார் என்பதை எல்லாம் நாம் பார்க்கிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் மிக அழகாகச் சொல்கிறபோது "சாதிகள் இல்லையடி பாப்பா" என்றால், அப்படிச் சொல்கிற போது, "பெண்கள் எல்லாம் சாதிப் பெயர்களைப் போட மாட்டார்கள், அவர்கள் எவ்வளவோ நல்லவர்கள்" என்றெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். அந்தக் காரணத்தாலேதான் ஒரு கவிஞன் கணக்குப் போடுகிறான், கவனத்தோடு கவிதை பண்ணுகிறான், பாப்பா என்றால் நாம் ஆணுக்கும் சொல்கிறோம், பெண்ணுக்கும் சொல்கிறோம், அதுதான் வழக்கம். ஆனால் 'ஓடி விளையாடு பாப்பா' என்று ஆண் பிள்ளைக்குச் சொல்கிறதுபோல் ஆரம்பித்து. சாதி என்று சொல்கிற நேரத்தில்தான் முதலில் ஆண் குழந்தைக்குச் சொல்லியது மாதிரி பின்னால் பெண் குழந்தைக்கு என்று இன்னொன்றைச் சொல்வதுபோல் "சாதிகள் இல்லையடி பாப்பா" என்று சொல்கிறார். ஆகவே எண்ணமும், வேகமும் வளர்ந்துகொண்டிருக்கிற நிலையைப் பார்த்தால், இந்த சாதி இளைஞர்களிடையே எவ்வளவோ நம்பிக்கையின்மையைத் தோற்றுவித்திருக்கிறது என்பதை அறிந்து ரொம்பக் கவனமாக இருக்க வேண்டும். இன்றைக்கு இதுகுறித்து நாம் எண்ணிப் பார்த்தால், ஒரு சாதி பேதமற்ற சமுதாயம் என்றைக்காவது வருகின்ற நாள் வரும். அப்படிச் சொல்லும்போது அதற்காக நாம் என்ன முயற்சி செய்கிறோம், என்ன அடிப்படையில் முயற்சி செய்கிறோம் என்பதைப் பார்க்கும்போது, இன்றையதினம் சாதிச் சான்றிதழ் என்பது நடைமுறையில் இருக்கிறது. ஆனால் இதெல்லாம் ஒரு காலத்தில் படிப்புக்காகச் செய்த செயல்கள். நாம் வாழ்க்கைக்காக மட்டும் வாழவில்லை. நாம் வரலாற்றுக்காகவும் வாழ்கிறோம். முன்பு இருந்த உலகத்தைவிட இன்றைக்கு நாம் மாறியிருக்கிறோம். நாளைக்கு வருகிற உலகம் இதைவிட மாறியிருக்கும் என்பதற்கு இது ஆதாரம், அடிப்படை. உலக நாடுகளிலும் இந்த மாற்றம் இருக்கிறது. இன்றைக்கும் பார்க்கிறோம். ஒரு காலத்தில் "நீ என்ன சாதி?" என்று நேரடியாகக் கேட்டார்கள். இன்றைக்கு "20, 30 ஆண்டுகளுக்கு முன்பு நீ என்ன ஜாதி?" என்று கேட்டு விடுவார்கள். ஆனால் இன்றைக்கு "நீ என்ன ஜாதி?" என்று கேட்பவனை ஒரு அநாகரிகமான மனிதனைப் பார்ப்பதைப்போல, ஒரு மத்திய தரைக் கடல் நாட்டிலிருந்து, குகையிலிருந்து வந்திருக்கிற ஒரு மனிதனைப் பார்ப்பது போல் பார்க்கிறான். ஆகவேதான் இந்த 30 ஆண்டுகளில் சாதியைத் தெரிந்துகொள்ள ஒருவன் என்ன சாதி என்று கேளாமல், "உன்னுடைய பெயர் என்ன, உனக்கு எந்த ஊர்?" என்று கேட்டு சாதியின் பெயரை அறிய

[திரு. வலம்புரி ஜான்] [1983 நவம்பர் 1

முற்படுகிறான். இரண்டிலும் தெரியாவிட்டால், "தந்தையின் பெயர் என்ன?" என்று கேட்கிறார். ஒருவேளை தந்தையின் பெயரோடு சாதியின் பெயரைச் சேர்த்திருப்பார் அல்லவா. அதற்காக. அதிலேயிருந்து கண்டுபிடிக்க முயற்சியிலே ஈடுபடுகிறான் என்பதுகூட என்ன அடிப்படை? நேற்றையிலிருந்து இன்றைக்கு இது மாறியிருக்கிறது. தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கை வெற்றி பெற்றிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்களுடைய இயக்கம் வெற்றி கண்டிருக்கிறது. புரட்சித் தலைவர் அவர்களும், அவர்களுடைய அரசும் இந்தக் காரியங்களை செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இது அடிப்படை. ஒருவருடைய சாதியைக்கூட நேரடியாகத் தெரிந்துகொள்ள இயலவில்லை. இத்தனையும் சுற்றி வளைத்துக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாமா என்று இன்றைக்குப் பார்க்கிறான். ஆனால் இன்னும் 30 ஆண்டுகள் கழித்துப் பார்த்தால், நிச்சயமாக சுற்றி வளைத்து அல்ல, அப்படிக் கேட்கிறவர்கள் அவ்வளவு கீழானவர்கள் என்று இந்த சமுதாயம் நினைக்கும். இப்பொழுது சாதிச் சான்றிதழ்கள் பெறுகிறோம். இப்படி சாதிச் சான்றிதழ்கள் தரக்கூடிய சூழ்நிலை வர வேண்டுமானால், சமூகத்திலே சிறுமைப்படுத்தப்பட்டிருக்கிற எல்லா மக்களுக்கும் ஒரு காலத்திலே விடிவு வருமா என்றால், அது கவிதையான கற்பனையல்ல. அது நடக்கும். காரணம் நேற்றைக்கு மாதிரி இன்றைக்கு இல்லை. ஆகவே இன்றைக்கு மாதிரி நாளைக்கு நிச்சயமாக இருக்காது என்று எதிர்பார்க்கிறோம். உதாரணத்திற்கு இன்றைக்கு நடத்தைச் சான்றிதழ் என்று கொடுக்கிறார்கள். இந்த நடத்தைச் சான்றிதழ் எப்போது முதல் இந்த நாட்டிலே இருக்கிறது என்பதையும் நாம் பார்த்து, அதை இந்த நாட்டிலே புகுத்தியவனுடைய நாட்டிலே இன்றைக்கு இருக்கிறதா என்று கேட்டால், அவன் நாட்டிலே அது இல்லை. ஆங்கிலேயர்கள் இந்த நாட்டிற்கு வருகிறார்கள். இங்கே இருக்கிற மக்களைப் பார்த்து, இவ்வளவு பாழானவர்கள். இருட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், இவர்களை நம்ப மறுக்கிறார்கள். ஒருவன் ஒருவனுக்குச் சான்றிதழ் தருகிறான். இந்த நடத்தைச் சான்றிதழைத் தருவதுகூட ஒரு மனிதனை அவமானப்படுத்துவது, கொச்சைப்படுத்துவது. ஒரு மனிதனுடைய நடத்தைக்கு நாம் என்ன சான்றிதழ் தருவது? ஆகவேதான் நான் இன்றைய பெருமைக்காக அல்ல, உண்மையாகவே சொல்கிறேன். ஒரு இளைஞனுடைய வேகத்திற்குரிய காரியம் இது. ஆகவே நான் இதை வெளிப்படுத்துகிறேன். நான் எறத்தாழ எண்பது காலமாக சான்றிதழ் தருகிறபொழுது எல்லாம், "இவர் எனக்குத் தெரிந்தவர். இன்னாருடைய மகன். இங்கே இருக்கிறார், இவர் என்னைவிட சிறந்த நடத்தையுள்ளவர்" என்று கொடுத்துக்கொண்டிருக்கிறேன். ஒருவனுடைய நடத்தைக்குச் சான்றிதழ் தருவதுகூட மனிதனை அவமானப்படுத்துகிற ஒரு காரியம், மனிதனைக் கொச்சைப்படுத்துகிற செயல் ...



1983 நவம்பர் 1] [திரு. வலம்புரி ஜான்]

தான் நான் அவ்வாறு நடத்தைச் சான்றிதழ் வழங்குகிறேன். அந்த வழக்கத்தை ஏற்படுத்தியவன் அதை தன்னுடைய நாட்டிலே வைக்கவில்லை. நாம் இன்னும் அந்தக் காலத்திலேயே வாழ்கிறோம். அப்படிக் கேட்பது தவறு என்று எல்லா இளைஞர்களும் இன்றைக்கு நம்புகிறார்கள். நாம் ஒரு வாழ்க்கைக்காக வாழவில்லை. ஒரு வரலாற்றுக்காக வாழ்கிறோம். மனிதனுக்கு மரணம் என்பது ஒரு இடைவெளி. அது எங்கோ போகிற ஒரு சூழ்நிலைக்கு இடையிலே வருகிற ஒரு இடைவேளை. இங்கேயே எல்லாம் முடிந்து விடுவதில்லை. ஆகவேதான் இன்றைக்கு நடத்தைச் சான்றிதழைக் கேட்பதைக் கூட கொச்சையான, மனிதனை அவமானப்படுத்துகிற ஒன்றாகக் கருதுகிறோம். ஒரு மனிதனை நல்லவர், சிறந்தவர் என்று சொல்வதைக்கூட, என்னைப் பொறுத்தவரையில், மனிதனை அவமானப்படுத்துகிற ஒரு செயலாகக் கருதுகிறேன். அப்படிப்பட்ட ஒரு முற்போக்கான ஒரு உலகை நோக்கி நாம் நிச்சயம் சென்றுகொண்டிருக்கிறோம். சாதிச் சான்றிதழ் என்பதும், உன் சாதி என்ன என்று கேட்பதுமான தவறான காரியங்கள் மோசமான செயல்கள் என்று நினைக்கின்ற காலம் விரைவில் வரும். "அது இங்கே வரப்போகிறதா, எத்தனை நாள் இதற்கு ஆகும்?" என்று கேட்டால், அது நிறைவேறும் காலமாகிய மிகப் பெரிய புரட்சியை நாம் ஊதி அணைக்கிறோம் என்று அர்த்தம். உயர்ந்துகொண்டிருக்கிற அந்த மாபெரும் கொடியை நாம் கரத்தை எட்டி இழுக்கிறோம் என்று அர்த்தம். நேற்று மாதிரி இன்றைக்கு இல்லை. ஆகவே இன்றைக்கு மாதிரி நாளைக்கு இராது. அன்றைக்கு தெருக்களிலேயே நடக்க முடியவில்லை. ஏன் கேரளாவில் இல்லையா? ஒரு அடியவன் வருகிறான் என்றால், தாழ்த்தப்பட்ட மகன் ஒருவன் தெருவிலே எதிரிலே வருகிறான் என்றால், நம்பூத்ரி பிராமணன் முகத்தை மூடிக்கொள்வான். சண்டாள பிட்சு குமரன் ஆசான் எழுதிய காவியத்திலே மிகத் தெளிவாகச் சொல்கிறார். வருகிற காலத்திலே 'அடியேன் வருன்னு, அடியேன் வருன்னு' என்று சொல்லிக்கொண்டே வர வேண்டும். பார்த்தால் தீட்டு என்று இருந்தது, அது ஒரு காலம். ஏன், ராஜஸ்தானில் 50 ஆண்டுகளுக்கு முன்புகூட அத்தகைய வழக்கம் இருந்தது. கடையிலே சென்று பொருள் வாங்க வேண்டுமென்றால்கூட, இடையிலே இடைத்தரகர் மூலம்தான் கேட்டு வாங்க வேண்டும். இவர் அவருக்குச் சொல்வார் இடைத்தரகர் மூலமாக. அவர் இவருக்குச் சொல்வார் இடைத்தரகர் மூலமாக. காரணம் அவர் உயர்ந்த சாதிக்காரர். இவனோ தாழ்த்தப்பட்டவன், அவனிடமே நேரிலே கேட்க இயலாது. அவர் இவருக்கு இடைத்தரகர் மூலமாக உருளைக் கிழங்கு என்ன விலை என்று கேட்டால், அதற்கு பதில் சொல்வார். விலை கேட்பதும் சொல்வதும், பொருள் வாங்குவதும் எல்லாம் இடைத்தரகர் மூலம்தான். பணமும் அப்படித்தான். இவரிடமிருந்து

அவருக்குச் செல்லும். பணம் மாத்திரம் அவரைப் பழுதுபடுத்தாது. கேட்டால் திட்டு, பார்த்தால் திட்டு. அப்படி எல்லாம் இருந்த உலகம் இன்றைக்கு அப்படி இருக்கிறதா என்றால், இல்லை. சட்டத்திலே மாத்திரமல்லாமல், சலுகைகளிலே மாத்திரமல்லாமல் சாதியைக் கேட்கிறவன் ஒரு அநாகரிக வாதி, சாதியைக் கேட்கிறவன் ஒரு இழிந்தவன் என்று இன்றைக்கு உலகம் கருதத் தலைப்பட்டுக் கொண்டிருக்கிறது. நேற்றிலிருந்து இன்றைக்கு உலகம் மாறிக்கொண்டு வந்திருக்கிறதென்றால், இன்றிலிருந்து நாளைக்கு உலகம் மாறுவதற்கு அதிக நாள் ஆகாது. அப்படிப்பட்ட ஒரு சமுதாயம் நாளைக்கு வருமென்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இது ஏதோ ஒரு சலுகை காரணமாக அல்ல, ஏதோ சகாயம் பண்ணுகிறோம் என்பதால் அல்ல. இதனை மிக உறுதியாக, திட்டமாக ஒவ்வொரு இளைஞனும் நம்புகிறான். சாதியினைக் கேட்பதுகூட எப்படி அநாகரிகமாகக் கருதப்படுகிற நிலை வந்து, மறைமுகமாகக் கேட்டறிகிற நிலை வந்திருக்கிறதோ, அதுபோல் நேரடியாகவே இவைகள் எல்லாம் மறையும் சூழ்நிலை நாளை இந்த சமுதாயத்திலே உருவாகும் என்பதைச் சொல்லி, ஒரு தனி நபர் தீர்மானத்தை திரு. முத்துசாமி அவர்கள் கொண்டு வந்து அதன் மூலம் எனக்குப் பேசுவதற்கான வாய்ப்பினை அளித்த தலைவருக்கு நன்றி தெரிவிக்கிறேன். இருந்தாலும் சலுகைகளாலும், சகாயங்களாலும் இது நடைபெறுவதல்ல என்று சொல்லி, இந்த உலகம் மாறிக்கொண்டு வருகிறது என்பதை அவர்கள் மனதிலே கொள்ள வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய தனி நபர் தீர்மானத்தின் சாராம்சத்தை நான் பெரிதும் வரவேற்கிறேன், ஆதரிக்கிறேன், கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுக்கு, அவர்களுடைய வாரிசுகளுக்கு இரண்டு வகையிலே சலுகைகள் அளிக்கப்பட வேண்டியது அவசியம் என்பதை நான் உணர்கிறேன். ஒன்று என்னவென்று சொன்னால், இந்தச் சமுதாயத்தில் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களும் சரி, அவர்களுடைய சந்ததியாரும் சரி, பல்வேறு துன்பங்களையும், தொல்லைகளையும் அனுபவிக்கிறார்கள். ஆகவே அவர்களைப் பாதுகாக்க வேண்டியது இந்த அரசாங்கத்தினுடைய கடமை, சமுதாயத்தினுடைய கடமை. அந்த வகையில் பல்வேறு துன்பங்களுக்கும், தொல்லைகளுக்கும் ஆளாக்கப்பட்டிருக்கும் அவர்களுக்குச் சலுகைகள் தர வேண்டியது அவசியம். அதிலே மிகவும் முக்கியமானது கலப்புத் திருமணம் என்பதை ஒத்துக்கொண்டு, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பேசினார்கள். அதை ஆதரிக்கின்ற வகையில், அப்படிப்பட்டவர்களுக்கு உற்சாகம் அளிக்கின்ற வகையில்





சலுகைகள் அளிப்பது நியாயமானது, அவசியமானது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். கலப்புத் திருமணம் என்பது புரட்சிகரமான ஒன்று. கொள்கை அடிப்படையிலே, இது தமிழகத்திலே மட்டும்தான் நடைபெறுகிறது என்று நாம் சொல்லுவதற்கில்லை. பல கால கட்டங்களில், இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் இது நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். எனக்கு முன்னாலே பேசிய மதிப்புக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். மகாத்மா காந்தி அவர்களுடைய குடும்பத்திலே, இராஜாஜி அவர்களுடைய குடும்பத்திலே கலப்புத் திருமணம் நடைபெற்றிருக்கிறது. இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்கள் தான். அவர்களுடைய இரண்டு மகன்களும்கூட வெவ்வேறு சாதி, வெவ்வேறு மதத்தைச் சார்ந்தவர்களைத்தான் திருமணம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 12-20)

ஆனால் இவைகளால் சாதி போய்விடவில்லை என்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். இந்த நேரத்தில் சாதி போக வேண்டுமென்று மிகத் தத்துவார்த்த அடிப்படையில் குறிப்புகளைச் சொன்னார்கள். ஆனால் இவைகளைப்பற்றிக் கருத்து என்னவென்றால், சாதி என்பதும், வர்க்கம் என்பதும், நமது நாட்டைப் பொறுத்தவரையில், இரண்டும் ஒன்றாக இருக்கிறதென்பதை வலியுறுத்திக் குறிப்பிட விரும்புகிறேன். "Caste and Class" -ம் ஒரு சார்பாகவே இருக்கிறது. இது வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால் தெரியும்.

மிகத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப் படுகிறவர்கள் பொருளாதார ரீதியிலும் கூட, உழைக்கக்கூடிய மக்களாக, சொத்தற்ற மக்களாக இருப்பதை ஆராய்ந்து பார்த்தால், தெரியும். யார் யார் கீழ் சாதி என்று கருதுகிறோமோ அவர்கள் எல்லாம் பொருளாதார ரீதியில் கீழ்த்தட்டில் இருப்பவர்கள்தான். இதை நான் மட்டும் சொல்லவில்லை. இது தந்தை பெரியார் அவர்கள் ஒத்துக்கொண்ட கருத்து. இதை எப்படிச் சொல்ல முடியும் என்றால், தந்தை பெரியார் அவர்கள் சுய மரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்த நேரத்தில் சாதி கூடாது என்று நாடு முழுவதும் ஒரு பிரச்சாரத்தை செய்து வந்தபோதே, கம்யூனல் ஜி.ஓ. கொண்டு வந்ததை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அந்த வகுப்பு வாரி பிரதிநிதித்துவம், இந்த

சொல்லப்பட்ட பிறகும், மீண்டும் அந்த வகுப்பு வாரி பிரதிநிதித்துவ வாதம் வரவேண்டுமென்று முதல் குரல் கொடுத்து அதற்காகப் பாடுபட்டவரும் பெரியார்தான் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்று சொன்னால், சாதி அடிப்படையில் நியமனம் வழங்க வேண்டும் என்பதுதான். ஒரு பக்கம் சாதியே கூடாது என்ற வாதம்; இன்னொரு பக்கம் சாதி அடிப்படையில் சலுகை அளிக்க வேண்டுமென்று சொல்வது. இரண்டும் முரண்பாடு உடையது போல் தோன்றினாலும், அதிலே முரண்பாடு கிடையாது என்றுதான் நான் சொல்வேன். ஏனென்று கேட்டால், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வேறு பல மதங்களிலே இல்லாத வகையில் இந்தியாவில் மட்டும்தான் சாதி இருந்து வந்திருக்கிறது. சாதியின் காரணமாக பொருளாதாரத்தில் கீழே தள்ளப்பட்டிருந்தாலும் சரி, அல்லது பொருளாதாரத்தில் கீழே தள்ளப்பட்டவனுக்கு சாதியின் பெயரை வைத்தாலும் சரி, ஆனால் வர்க்க பேதம் இந்தியாவிலே இந்துக்கள் மத்தியில் இருந்திருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த வர்க்க பேதம் நீங்காத வரையில், இந்த ஏற்றத்தாழ்வு நீங்காத வரையில், சாதி கூடாது என்று சொன்னால், அதை வரவேற்கக் கூடியவர்கள் பலர் இருப்பார்கள். இன்றையதினம் சாதி கூடாது என்று அருள்மிகு சங்கராச்சாரியாரிலிருந்து திராவிடக் கழகப் பொதுச் செயலாளர் திரு. வீரமணி அவர்கள் வரை சொல்கிறார்கள். ஆனால் இந்த இரண்டு பேருக்கும் வித்தியாசம் இருக்கிறது. சாதியால் புறக்கணிக்கப்படுகிறார்கள், சாதியால் அநீதி இழைக்கப்படுகிறது, நியாயம் கிடைக்கவில்லை என்று அவதிப் படுகிறவர்கள்கூட சாதியைத்தான் போட்டுக் கொள்கிறார்கள். சாதியே கூடாது என்று அடியோடு சொல்லிவிட்டு, புத்தகங்களிலும் பள்ளிகளிலும் கல்லூரி களிலும் சாதி இல்லாமல் எடுத்துவிட்டால், அதனால் பாதிக்கப்படக் கூடியவர்கள் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டவர்களும் கீழ்த்தட்டில் இருப்பவர் களும்தான் இருப்பார்கள். என்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களும் பிற்படுத்தப் பட்ட மக்களும் பொருளாதார ரீதியில் தன்னிறைவு பெறுகிறார்களோ, அதுவரையில் சாதி இருந்தே தீரும், இருந்தேயாக வேண்டும். அப்படி இல்லை யென்று சொன்னால், இன்றையதினம் சாதியே கூடாது என்று சொல்கிற இயக்கமாக இருந்தாலும் சரி, கட்சியாக இருந்தாலும் சரி, சாதியின் பெயரால் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பது, சாதியின் பெயரால் அமைச்சர்களைப் போடுவது, சாதி மாநாடுகளில் கலந்து கொள்வது என்பதற்கு என்ன பொருள் என்று கேட்க விரும்புகிறேன். மக்களிடையே ...





பெரிதுபடுத்துவதுதானே என்பதைத் தவிர வேறல்ல. இந்தியா முழுவதும் விவாதத்திற்கும் சர்ச்சைக்கும் காரணமாக இருக்கிற மண்டல் கமிஷன் ரிப்போர்ட்பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அந்த ரிப்போர்ட்டில் சமுதாயத்தில் உள்ள பின்தங்கியவர்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு இன்னும் நீண்ட காலம் சாதி அடிப்படையில் சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்று சொல்கிற அளவுக்கு, 1,000 ஆதாரங்களைக் காட்டியிருக்கிறார்கள். புராணத்திலிருந்தும் இதிகாசத் திலிருந்தும் வேதங்களிலிருந்தும் இதற்கு ஆதாரங்களையும் மேற்கோள் களையும் காட்டியிருக்கிறார்கள். அவற்றை விரிவாக இங்கே சொல்ல விரும்ப வில்லை. ஆனால் அதற்கு நேர்மாறாக கருத்துக்கள் தமிழ்நாட்டிலும் சரி, இந்தியாவிலும் சரி, “திறமையின் அடிப்படையிலும், பொருளாதார அடிப்படையிலும்தான் இருக்க வேண்டும்” என்ற கருத்துக்கள், கட்சிகளுக்கு அப்பாலும், கட்சிகளுக்குள்ளேயும் இருந்து வருகின்றன. ஆனால் பல்லாண்டு காலமாக இருந்த பொருளாதார ஏற்றத்தாழ்வு வந்த பிறகு, பல விஷயங்களில் நீதி கிடைக்காது என்று நான் சொன்னால், மற்றவர்கள் பொறுமை இழக்கக் கூடாது.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்தவர்களுக்கு, இந்த நாடு சுதந்திரம் அடைந்து 35 வருட காலமாக சலுகை அளிக்கப்பட்டும், இன்னும் அவர்கள் முன்னேறவில்லையே என்ற கருத்தைச் சொல்லி, இன்னும் எத்தனை காலத்திற்குச் சலுகைகளை அளிக்க முடியும் என்று அங்கலாய்ப்பவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், எத்தனை நூறாண்டுக் காலம், ஆயிரம் ஆண்டுக் காலமாக அவர்களைத் தீண்டத்தகாதவர்களாக, ஒதுக்கப் பட்டவர்களாக, நசுக்கப்பட்டவர்களாக வைத்திருந்ததற்கு, இன்னும் எத்தனை சலுகைகள் அளித்தாலும் நியாயம் இருக்கிறது, தர்மம் இருக்கிறது என்றுதான் சொல்வேன். இதே நீதியைத்தான் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் தரவேண்டும் என்றும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே சாதி ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் இரண்டு வித கருத்துக்கள் அரசியல்வாதிகளுக்கு, பகுத்தறிவுவாதிகளுக்கு இருக்க முடியாது என்பதில் சந்தேகமும் இல்லை.

முதலாளியும் தொழிலாளியும் இருக்கும் சமுதாயம் வேண்டும் என்று சொன்னால், இதுவும் வேண்டும் என்று சொல்வேன். சுரண்டப் படுபவர்களும் சுரண்டுபவர்களும் இருக்க வேண்டும் என்றும், இரண்டு பேரும் ஒன்றாக இருப்போம் என்று சொல்வது சுரண்டப்படுபவனுக்கு எதிர்ப்பான,

தெரிவித்துவிட்டு, பள்ளிகளிலும், புத்தகங்களிலும் சொல்லிவிட்டு, அதனால் பலன் பெறக் கூடியவர்கள் யார் என்றால், ஏற்கெனவே வசதி படைத்தவர்கள் தான். ஆனால் இதனால் அதிகம் பாதிக்கப்படுகிறவர்கள் சமுதாயத்தின் கீழ்த்தட்டில் இருப்பவர்களும் பின்தங்கியவர்களும்தான். இந்தக் காரணத்தாலேயே சாதியற்ற ஒரு சமுதாயத்திற்கு நாங்கள் தயாராக இல்லை என்று சொன்னால், அது தவறு என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆனாலும்கூட இந்த நீதி கிடைக்கிற வரையில், சமுதாய அநீதி வழங்குகிற வகையில் சாதி அடிப்படையில் சலுகைகள் இருந்துதான் தீரவேண்டும் என்பதையும் நான் சுட்டிக்காட்டுகிறேன். திரு. வலம்புரி ஜான் அவர்கள் பேசும்போது, ஒரு கருத்தைச் சொன்னார். கிருஸ்தவனாக மதம் மாறிவிட்ட பிறகும்கூட, சில சமூகத்தினர் சலுகைகள் இருக்கின்ற காரணத்தால்தான் தொடர்ந்து பயன்படுத்த வேண்டிய சங்கடம் இருப்பதாகச் சொன்னார். அதைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அந்தச் சமுதாயத்திற்கு மாறியவர்கள் வற்புறுத்தி, வாதாடிப் பெற்றுக்கொண்டு வருகிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் கிருஸ்தவ மதத்திற்கு மாறினாலும்கூட, அவர்கள் ஒதுக்கப்பட்டவர்களாக, தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப் படுவார்களே தவிர, அங்கும் மாறுபாடு வந்து விடுகிறது. அவன் கிறிஸ்தவ மதத்திற்கு மாறிவிட்டதாலேயே, அவன் அந்தஸ்து உயர்ந்து விட்டதாக நினைத்தால், அது தவறு. "ஏதோ சலுகை வந்து விட்டது, அதைச் சங்கடத்துடன் ஏற்றுக்கொள்கிறோம்" என்று சொல்வது தவறு. நீண்ட நெடுங்காலத்திற்குச் சலுகைகள் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதில் நியாயம் இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் இரண்டு பணிகளையும் சேர்ந்து செய்ய வேண்டும். சாதி ஒழிய வேண்டும், அதற்கு இந்தத் தீர்மானம் வழி வகுக்கும். அதை நான் ஆதரிக்கிறேன். ஆனால் நீண்ட காலத்திற்கு இந்தச் சலுகைகளை அளித்து, கீழே இருப்பவர்களை மேலே இருப்பவர்கள் சமமாக ஆக்கிவிட்ட பிறகு, சாதி காணாமல் போய்விடும் என்பதிலும் சந்தேகம் இல்லை. காரணம் இன்று சாதி, வர்க்க அடிப்படையில் இருக்கிறது. அதுவரையில் "cast a d class" இந்தியாவில் இருந்தே தீரும் என்று கூறி இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இந்தத் தீர்மானத்தின் மீதான விவாதம் அடுத்த தனி உறுப்பினர் நாளன்று தொடர்ந்து நடக்கும். மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று மீண்டும் 12—11—1983, சனிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.



## 6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

202. Sixth Annual Report of the Tamil Nadu Sugar Corporation Limited for the year 1980 and Fourth Annual Report of the Perambalur Sugar Mills Limited for the year 1980 [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

### B. Reports, Notifications and other Papers.

Nil.

## இணைப்பு I

(9 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 13-க்கான விடையைக் காண்க.)

தேசிய முதியோர் கல்வித்திட்டத்தின்கீழ் 1979-80 மற்றும் 1980-81 ஆம் ஆண்டுகளில் மாவட்ட வாரியாகப் பயன் பெற்றோர் எண்ணிக்கை வருமாறு :—

| மாவட்டம். | பயன்பெற்றோர் எண்ணிக்கை. 1979-80. | 1980-81. |
|---|---|---|
| செங்கல்பட்டு | 35,835 | 29,194 |
| கோயம்புத்தூர் | 25,918 | 22,865 |
| தர்மபுரி | 23,269 | 27,612 |
| கன்னியாகுமரி | 18,990 | 18,350 |
| சென்னை | 8,204 | 5,393 |
| மதுரை | 51,807 | 36,745 |
| நீலகிரி | 10,545 | 11,535 |
| வடாற்காடு | 28,169 | 31,876 |
| பெரியார் | 8,004 | 6,545 |
| புதுக்கோட்டை | 20,772 | 22,605 |
| இராமநாதபுரம் | 23,099 | 23,014 |
| சேலம் | 28,751 | 28,154 |
| தென்னாற்காடு | 28,123 | 28,572 |
| தஞ்சாவூர் | 26,675 | 26,272 |
| திருநெல்வேலி | 28,134 | 27,331 |
| திருச்சிராப்பள்ளி | 24,923 | 23,338 |
| | 391,218 | 369,301 |

(1979-80-ஐவிட 1980-81-ல் பயன்பெற்றோர் எண்ணிக்கைக் குறைவுக்கு காரணம் மைய அரசு உதவி நிறுத்தப்பட்ட காரணத்தால் தொண்டு நிறுவனங்கள் மையங்களைத் தொடர்ந்து நடத்த இயலாததே.)

2. தேசிய முதியோர் கல்வித் திட்டத்தின்கீழ் பயனடைந்தவர்களுக்கு தொடர்கல்வி அளிப்பதற்கு அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. மாநில அரசின் நிதியைக் கொண்டு நடத்தி முடிக்கப்பெற்றுள்ள 6,100 முதியோர் கல்வி மையங்களில், 100 மையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தொடர்கல்வித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்தொடர் கல்வி மையங்கள் ஒரு ஆண்டில்





10 மாதங்கள் வீதம் இரண்டு ஆண்டுகள் நடத்தப்படும். குறிப்பிட்ட 100 முதியோர் கல்வி மையங்களில் முதல் தொகுப்பில் (first batch) கல்வி அறிவு பெற்றவர்களுக்கு முதல் ஆண்டிலும், இரண்டாம் தொகுப்பில் கல்வி அறிவு பெற்றவர்களுக்கு இரண்டாம் ஆண்டிலும் தொடர் கல்வி அளிக்கப்படும். முதியோர் கல்வி மையத்தை நடத்தும் பயிற்றுவிப்பாளரே தொடர் கல்வி மையத்தையும் நடத்துவார். இதற்காக பயிற்றுவிப்பாளருக்கு மாதம் ரூ. 20 மதிப்பூதியம் வழங்கப்படும். புதிதாக கல்வி அறிவு பெற்றோர் பயன்பெறும் வண்ணம் ஒவ்வொரு தொடர்கல்வி மையத்திலும், ரூ. 400-க்கு புத்தகங்கள் வாங்கி வைக்கப்படும். தமிழ் நாளிதழ் ஒன்றும் வழங்கப்படும். ஒரு தொடர் கல்வி மையத்துக்கு முதல் ஆண்டில் ரூ. 900 செலவு பிடிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## இணைப்பு II

( 18 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 17-க்கான விடையைக் காண்க)

அ. சென்னை பெருநகரில் தற்போது 24 வழித்தடங்களில் 37 மினி பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அவற்றின் விபரம் பின் வருமாறு :

| வ. எண். | தடம் எண். | தடத்தின் விபரம். | இயக்கப்படும் பேருந்துகள். |
|---|---|---|---|
| 1 | 1 | அய். சி. எப்.—பூம்புகார் / பெரம்பூர் (வழி) வில்லிவாக்கம், சீனிவாசபுரம் | 2 |
| 2 | 2 | வடபழனி—அரும்பாக்கம் (வழி) விருகம்பாக்கம் சின்மயாநகர் | 2 |
| 3 | 3 | சைதாப்பேட்டை—திருவேற்காடு அம்பத்தூர் தொழிற்பேட்டை (வழி) போரூர்—வானகரம் | 1 |
| 4 | 4 | சென்ட்ரல் ரயில் நிலையம்—எழும்பூர் ரயில் நிலையம் (வழி) ஈ. வெ. ரா. பெரியார் நெடுஞ்சாலை | 1 |
| 5 | 5 | வடபழனி—நுங்கம்பாக்கம் (வழி) சூளைமேடு நெடுஞ்சாலை டிரஸ்ட்புரம் | 1 |
| 6 | 6 | வடபழனி—நுங்கம்பாக்கம் (வழி) சிவன்கோயில் [illegible] | 1 |

| வ. எண். | தடம் எண். | தடத்தின் விபரம். | இயக்கப்படும் பேருந்துகள். |
|---|---|---|---|
| 7 | 7 | மாங்காடு—திருவேற்காடு (வழி) பூந்தமல்லி வேலப்பன்சாவடி | 1 |
| 8 | 8 | வடபழனி—முகலிவாக்கம் (வழி) ஆழ்வார்திரு நகர், இராமபுரம் | 2 |
| 9 | 9 | சைதாப்பேட்டை — செய்ன்ட்தாமஸ் மவுன்ட் (வழி) மடுவாங்கரை ஆபீஸர்ஸ் காலனி பிருந்தாவன் நகர், சாந்திநகர் | 2 |
| 10 | 11 | சைதாபேட்டை — பொன்னியம்மன் கோயில் (வழி) மடுவாங்கரை, பிருந்தாவன் நகர் | 1 |
| 11 | 12 | அம்பத்தூர்—அமைந்தகரை (வழி) பாடி புது நகர், 120 சாலை திருமங்கலம் | 2 |
| 12 | 13 | பூந்தமல்லி—ஆவடி சரகம் (வழி) மேல்பாக்கம், கோவர்தனகிரி | 1 |
| 13 | 14 | பாக்கம்—அம்பத்தூர் தொழிற்பேட்டை (வழி) ஆவடி, கோயில் பதாகை வெள்ளானூர் | 1 |
| 14 | 15 | சைதாப்பேட்டை—மீனம்பாக்கம் (பக்தவச்சலம் நகர்) (வழி) எஸ். பி. காலனி, மூவசரம் பேட்டை | 2 |
| 15 | 18 | பல்லாவரம்—குரோம்பேட்டை காவல்நிலையம் (வழி) பம்மல், நாகல்கேணி | 2 |
| 16 | 19 | அமைந்தகரை—கருக்கு (வழி) அம்பத்தூர் தொழிற்பேட்டை, அம்பத்தூர், மேனம்பேடு | 1 |
| 17 | 20 | வடபழனி — அமைந்தகரை (வழி) கில்நகர், மேத்தாநகர் | 1 |
| 18 | 21 | திருவேற்காடு / பூந்தமல்லி — அம்பத்தூர் தொழிற் பேட்டை (வழி) கோலடி அயப்பாக்கம், டன்லப் | 1 |
| 19 | 26 | பல்லாவரம் உயர்நிலைப்பள்ளி—சிட்லப்பாக்கம் (வழி) குரோம்பேட்டை புருசோத்தமன் நகர், அஸ்தினாபுரம் | 1 |
| 20 | சொகுசு | | |
| | | பேருந்து மீனம்பாக்கம் விமான நிலையம்—எழும்பூர் ரயிலடி (வழி) சித்லபாக்கம் பஸ் நிலையம் | 7 |



| வ. எண். | தடம் எண். | தடத்தின் பெயர் விபரம். | இயக்கப்படும் பேருந்துகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 21 | 27 | பல்லாவரம்—வீட்டு-வசதிவாரியம் (வழி) கவுல் பஜார், பம்மல் | 1 |
| 22 | 17 | அம்பத்தூர் தொழிற்பேட்டை — காமராஜ் நகர் (வழி) ஆவடி | 1 |
| 23 | 22 | செங்குன்றம் — பெரியமுல்லை வாயல் (வழி) புதூர், அருமந்தை கூட்டுச்சாலை | 1 |
| 24 | 28 | சைதாப்பேட்டை—போரூர் (வழி) சின்ன போரூர், பூந்தமேடு | 1 |

(இ) ஆம்.

(உ) அதன் விபரம் பின்வருமாறு:

| வ. எண். | தடம் எண். | தடத்தின் பெயர் விபரம். | இயக்கப்போகும் பேருந்துகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 16 | பெரம்பூர்—மணலி சேக்காடு (வழி) மூலக்கடை, எம். எம். சி. | 1 |
| 2 | 23 | மேத்தாநகர்—சின்மயா நகர் (வழி)சாலிகிராமம் | 1 |
| 3 | 23 | தண்டரை—பூந்தமல்லி (வழி) கோராஞ்சேரி | 1 |
| 4 | 23 | பூந்தமல்லி—குத்தம்பாக்கம் (வழி) திருமழிசை, வெள்ளவேடு | 1 |
| 5 | 23 | சைதை—திருவள்ளுவபுரம் (வழி) செயின்ட் தாமஸ் ரயில் நிலையம் | 1 |
| 6 | 23 | குரோம்பேட்டை ரயில் நிலையம் தாம்பரம் கிழக்கு, (வழி) மகாலட்சுமி நகர் | 1 |
| 7 | 23 | செங்குன்றம்—விச்சூர் (வழி) அருமந்தை | 1 |

## இணைப்பு III

(28 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

முதல் போக சாகுபடியில் கன்னியாகுமரி மாவட்டத்தில் வழக்கமாக நெல் 24,000 எக்டேரில் சாகுபடியாவது உண்டு. ஆனால் 1983-ம் ஆண்டில் கடும் வறட்சி நிலவியதாலும், பருவ மழை பொய்த்ததாலும் 17,500 எக்டேரில் மட்டுமே நெல் சாகுபடி செய்யப்பட்டது. 6,500 எக்டேர் தரிசாக விடப்பட்டது. பயிரிடப்பட்ட 17,500 எக்டேரில் சுமார் 12,600 எக்டேர் நெல் விளைந்து அறுவடைக்கு வந்துள்ளது. மீதமுள்ள 4,900 எக்டேரில் நெற்பயிர் வறட்சியால் பாதிக்கப்பட்டு மகசூல் குறைந்து காணப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தின் சராசரி நெல் மகசூல் ஒரு எக்டேருக்கு 3.500 கிலோ. இந்த ஆண்டில் நன்றாக விளைந்த இடங்களில் எக்டேருக்கு சராசரி 3,000 முதல் 3,200 கிலோவும் பாதிக்கப்பட்ட பரப்பான 4,900 எக்டேரில் சில இடங்களில் ஒன்றுமில்லாமலும் சில இடங்களில் எக்டேருக்கு 500 கிலோவும் மகசூல் கண்டுள்ளது.

மேலும் இம்மாவட்டத்தில் சுமார் 675 எக்டேர் பரப்பில் மாவுப்பச்சி (Mealy buss) தாக்குதலாலும் சுமார் 500 எக்டேர் பரப்பில் சூலை நோய் மற்றும் இலை உறை கருகல் நோயிலும் (Sheet blight) பாதிக்கப்பட்டது. இதனை வேளாண்மைத் துறையினர் கண்டறிந்து உடனடியாக தக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்து மேலும் பரவாமல் தடுக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணத்தின்கீழ் பயிர் பாதுகாப்பு மருந்துகள் மான்ய விலையில் வழங்கப் பட்டன.

வழக்கமாக ஜனவரி முதல் செப்டம்பர் மாதம் முடிய 916 மி.மீ மழை இம்மாவட்டத்தில் பெய்வதுண்டு. ஆனால் நடப்பு ஆண்டில் செப்டம்பர் மாதம் முடிய 520 மி.மீ. மழைதான் பெய்தது. இதிலிருந்து இம்மாவட்டத்தின் வறட்சி நிலைமை நன்கு தெளிவாகும். இம்மாவட்டத்தின் முக்கிய நீர்த்தேக்கங்களான பேச்சிபாறை, பெருஞ்சாணி தேக்கங்களில் கடந்த ஆண்டைவிட மிகவும் குறைவாகவே தண்ணீர் உள்ளது. எனவேதான் நெற்பயிர் மட்டுமல்லாது மற்ற





பயிர்களின் சாகுபடி பரப்பும் பொதுவாக குறைந்துள்ளது. இம்மாவட்டத்தில் வழக்கமாக பயிரிடப்படும் பரப்பளவும் இவ்வாண்டு செப்டம்பர் முடிய பயிரிடப்பட்ட பரப்பளவும் கீழே தரப்பட்டுள்ளது.

| | வழக்கமான பரப்பு. | நடப்பு ஆண்டு பரப்பு. |
|---|---|---|
| நெல் | 24,000 எக்டேர் | 17,500 எக்டேர் |
| பயறுவகைகள் | 3,000 எக்டேர் | 2,240 எக்டேர் |
| மரவள்ளி | 12,000 எக்டேர் | 11,000 எக்டேர் |

வறட்சி நிலைமை தொடர்ந்ததால் நெல் சாகுபடி செய்ய தண்ணீர் இல்லாத இடங்களில் மாற்றுப்பயிராக சுமார் 1,000 எக்டேர் பரப்பில் எள், சோளம், இதர சிறு தானிய வகைகள் மற்றும் பயறு வகைகள் வேளாண்மைத் துறையினரின் பரிந்துரையின்பேரில் பயிரிடப்பட்டது.

வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் நெல் விதைக்கு ரூபாய் 34,560 மான்யமாகவும், பயறு வகை விதைக்கு ரூபாய் 4,566 மான்ய மாகவும், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளுக்கு ரூபாய் 10,321 மான்யமாகவும் சிறிய மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. வறட்சி நிவாரணப் பணிகள் 31—12—1983 வரை நீட்டிக்கப்பட்டு மானிய விலையில் தொடர்ந்து இடுபொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

[ISSUED 2—3—1984

தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

SATURDAY 12th NOVEMBER 1983

Volume 202 (No. 2)

GOVERNMENT OF TAMIL NADU
1984

*Legislative Council Department*
*Fort St. George, Madras-600 009*

Price: *Rs.* 2.75 *Paise*]

389

## பொருளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| இரங்கல் தீர்மானம்— | |
| சட்ட மன்றப் பேரவை உறுப்பினர் திரு. என். கிட்டப்பா அவர்கள் இயற்கை எய்தியது குறித்து. | 93 |
| அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் | 94—97 |


D 2 C 65—1

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

சனிக்கிழமை, 1983 நவம்பர் 12.

ஐப்பசி 26, ருத்ரோத்காரி, திருவள்ளுவராண்டு—2014.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. இரங்கல் தீர்மானம்.

சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. என். கிட்டப்பா அவர்கள் இயற்கை எய்தியது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களே,

1967 முதல் 1971 வரையிலும், 1971 முதல் 1976 வரையிலும், 1977 முதல் 1980 வரையிலும், மீண்டும் 1980 முதல் தொடர்ந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராக உள்ள திரு. என். கிட்டப்பா அவர்கள் 11—11—1983 அன்று சென்னையில் இயற்கை எய்தியதைக் குறித்து இந்த அவை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

அன்னாரது மறைவால் துயருற்றிருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கு இம்மேலவை தனது ஆழ்ந்த இரங்கலையும் பரிவுணர்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறது.

அவர், மாயூரம் நகராட்சியின் உறுப்பினராக 1962 முதல் 1976 வரை நற்பணியாற்றினார். அவர் இனிய பண்பும் அடக்க சுபாவமும் உடையவர். அவருடைய மறைவால் சட்டமன்றப் பேரவை அரிய நண்பர் ஒருவரை இழந்துவிட்டது. அன்னாரது மறைவிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவை உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் மௌனமாக இரண்டு நிமிடங்கள் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மறைந்த பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில், மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒத்தி வைக்கப்பட்டு, அவை மீண்டும் 21—11—1983 திங்கட்கிழமை அன்று காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(முற்பகல் 9-33)

2. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

)3. Notification issued with G.O. Ps. No. 798, Commercial and Religious Endowments, dated the 20th July 1983 ling the amendment to the Commercial Taxes and Religious wments Notification No. II (1)|CTRE|56(g)|78, dated 1st April [Laid on the table of the House under section 53 (5) of the Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of )].

)4. Notification issued with G.O. Ps. No. 512, Commercial and Religious Endowments, dated the 7th May 1983 regarding ption from payment of tax by any dealer on the sale rdamom. [Laid on the table of the House under section 53 (5) Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I 59)].

05. Notification issued with G.O. Ps. No. 291, Commercial s and Religious Endowments, dated the 11th March 1983 regar- exemption from sales tax on sales of Sago and Tapioca Starch ased from the Salem District Starch and Sago Manufacturers ce Industrial Co-operative Society. [Laid on the table of the e under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, (Tamil Nadu Act I of 1959)].

06. Notification issued with G.O. Ps. No. 373, Commercial s and Religious Endowments, dated the 1st April 1983 regarding of taxes in respect of intervenue bettings inside the Madras Race se at Guindy on the races to be held at other Centres. [Laid on able of the House under section 53 (5) of the Tamil Nadu ral Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

07. Notification issued with G.O. Ps. No. 504, Commercial s and Religious Endowments, dated the 6th May 1983 regarding amendment to the Tamil Nadu General Sales Tax Rules, . [Laid on the table of the House under section 10 (4) of the l Nadu Betting Tax Act, 1935 (Tamil Nadu Act XX of 1959)].



208. Notification issued with G.O. Ps. No. 1406, Commercial Taxes and Religious Endowments, dated the 21st December 1982 regarding the date from which the Tamil Nadu Entertainment Tax (Amendment) Act, 1982 come into force and also certain amendments to the Tamil Nadu Entertainments Tax Rules, 1939. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertain-ments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939)].

209. Notification issued with G.O. Ps. No. 377, Commercial Taxes and Religious Endowments, dated the 5th April 1983 regarding levy of taxes to every race meeting held at Uthagamandalam Taluk in Nilgiris District. [Laid on the table of the House under section 10 (4) of the Tamil Nadu Betting Tax Act, 1935 (Tamil Nadu Act XX of 1935)].

210. Eighth Annual Report of the Kattabomman Transport Cor-poration Limited for the year 1982. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

211. Second Annual Report of the Tamil Nadu Magnesite Limited for the year 1980-81. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

212. Third Annual Report of the Tamil Nadu Magnesite Limited for the year 1981-82. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

213. Annual Report on the working of the Tamil Nadu Labour Welfare Board for the year 1976-77. [Laid on the table of the House under section 35 of the Tamil Nadu Labour Welfare Fund Act, 1972 (Tamil Nadu Act 36 of 1972)].

214. Fourth Annual Report of the Tamil Nadu Minerals Limited for the year 1981-82. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

[1983 நவம்பர் 12

215. Notification issued with G.O. Ps. No. 761, Commercial Taxes and Religious Endowments, dated the 31st July 1983 regarding the amendments made to the notification of Commercial Taxes and Religious Endowments Department Notification issued in No. II (1)|CTRE|574a|81, dated 18th December 1981. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

216. Notification issued with G.O. Ps. No. 278, Commercial Taxes and Religious Endowments, dated the 10th March 1983 regarding certain amendments to the Tamil Nadu Betting Tax Rules, 1935 [Laid on the table of the House under section 10 (4) of the Tamil Nadu Betting Tax Act, 1935 (Tamil Nadu Act XX of 1935)].

217. Notification issued with G.O. Ps. No. 713, Commercial Taxes and Religious Endowments, dated the 1st July 1983 regarding reduction in rate of sales tax from 10 per cent to 4 per cent in respect of Chipboards manufactured by the Madras Chipboards Limited, Rajapalayam for a further period of two years with effect from 13th March 1983. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

218. Notification issued with G.O. Ps. No. 821, Commercial Taxes and Religious Endowments, dated the 25th July 1983 regarding exemption from payment of tax by any dealer on the sale of Agricultural spare parts. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

219. Notification issued with G.O. Ps. No. 1143, Commercial Taxes and Religious Endowments, dated the 12th October 1982 regarding an amendment to the First Schedule of the Tamil Nadu General Tax Act, 1959. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].



நவம்பர் 12]

*B. Reports, Notifications and other papers.*

*23. The Bharathiar University (Amendment) Bill, 1983 (L.A. No. 17 of 1983), as passed by the Assembly.

*24. The Madras University and Madurai-Kamaraj University (Amendment) Bill, 1983 (L.A. Bill No. 39 of 1983), as passed by the Assembly.

25. Twenty-third Report of the Committee on Public Accounts pertaining to certain Departments for the year 1977-78 and 1978-79.

* Sent by post to all M.L.Cs. on 7th November 1983.

1969 நவம்பர் 21]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, எட்டாம் வகுப்புகளுக்கு பி.டி. ஆசிரியர்கள் போடுவது என்பது வேறு. எட்டாம் வகுப்புகளை உயர்நிலைப் பள்ளிகளிலே சேர்ப்பது என்பது வேறு. எட்டாவது வகுப்புக்கு பி.டி. ஆசிரியர்களைப் போடுவது என்றால், ஒரு சப்ஜெக்டிலே ஒருவர் பி.டி. ஆக இருக்கலாம், அவரைப் போடுவது என்பது வேறு. ஆனால் உயர்நிலைப் பள்ளியிலே சேர்க்கின்றபோது, சையன்சுக்கு ஒரு பி.டி. வருவார் அல்லது கணக்குக்கு ஒரு பி.டி. வருவார். இப்படி ஒவ்வொரு சப்ஜெக்ட்டுக்கும் ஒரு பி.டி. ஆசிரியர் வருவதன் மூலமாக அந்த மாணவர்களுக்கு நல்ல கல்வி கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே பி.டி. ஆசிரியரைப் போடுவது என்பதைவிட, உயர்நிலைப் பள்ளியோடு அதைச் சேர்ப்பது என்பதுதான் சரியான யோசனையாகும். அதற்குத்தான் கூடுதல் செலவாகும் என்ற காரணத்தினால், இப்போது நடைமுறைப்படுத்த முடியாமல் இருக்கிறது.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, பொதுவாக பி.டி. பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு வாய்ப்புக்கள் குறைவாக இருக்கின்றன. ஹையர் கிரேட் டிரெயினிங் என்பதை நாம் எடுத்துவிட்டோம். செகண்டரி கிரேட் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைப் பணியில் அமர்த்துவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு ஏராளமாக இல்லை. இந்த நிலையிலே எங்கெங்கு வாய்ப்பு இருக்கிறதோ, அங்கங்கே பி.டி. ஆசிரியர்களை நியமிப்பதற்கான வாய்ப்பை அமைச்சர் அவர்கள் உருவாக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, நாம் பள்ளியினுடைய கல்வி நிலையை உயர்த்துவதற்காக நடவடிக்கை எடுக்கும்போது, பயிற்சி பெற்ற பி.டி. ஆசிரியர்களுக்கு வாய்ப்பு கிடைக்குமானால், நாம் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வோம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, எட்டாம் வகுப்பினை உயர்நிலைப் பள்ளியிலே சேர்க்கின்றபோது, இதுவரை கிராமங்களிலே எட்டாம் வகுப்பிலேயே படிப்பை நிறுத்துகின்ற நிலையிலே உள்ள ஏழை மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிக்குச் செல்வதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தினால், ஏழாம் வகுப்போடு அவர்களுடைய கல்வியை முடித்துக் கொள்ளக் கூடிய சூழ்நிலை ஏற்படுமே. அப்படியானால் அப்படிப்பட்ட குழந்தைகளுடைய கல்வித்தரம் ஒரு ஆண்டு குறைவாகப் போகக்கூடிய சூழ்நிலை ஏற்படுமே, இதையும் அரசு பரிசீலிக்கிறதா? அதற்கு

அடுத்து, பட்டதாரி ஆசிரியர்களைப் போட்டால், கல்வித் தரம் உயரும் என்ற கருத்திலே அதைச் சொன்னாலும் இப்போது இருக்கும் இடைநிலை ஆசிரியர்களுக்குப் பதவி இழப்பு ஏற்படும். அப்படி பதவி இழப்புக்கு ஆளாகின்ற நிலைமைகளைத் தவிர்ப்பதற்குரிய நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இது வெல்லாம் நாம் எட்டாம் வகுப்பை உயர்நிலைப் பள்ளியோடு சேர்க்கின்ற போது யோசித்துச் செய்யவேண்டிய சூழ்நிலைகள். ஆகவே அதைப்பற்றி அப்போது யோசித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும். எட்டாம் வகுப்பை உயர்நிலைப் பள்ளியிலே சேர்க்கும்போது, ஒரு வகுப்பு குறையும், அதனால், கிராமத்து மாணவர்கள் கஷ்டப்படுவார்கள் என்றால், நாம் இப்போது ஆரம்பித்திருக்கின்ற உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கையை வைத்துப் பார்க்கின்றபோது, அவர்கள் கஷ்டப்படாத அளவில் படிப்பதற்கு ஏராளமான வழிவகைகள் இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், உயர்நிலைப் பள்ளியில் போதுமான அளவுக்கு மாணவர்கள் இல்லை என்பதுதான் நமக்குக் கிடைத்துவருகின்ற செய்தியாகும். தேவைக்கு அதிகமான உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதைத் தான் இன்றைய நிலைமைகள் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றன.

## தமிழ்நாடு தமிழாசிரியர் கழகத்தினரின் போராட்டம்.

* 54. வினா—திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1981 ஆம் ஆண்டு, சனவரி மாதம் தமிழ்நாடு தமிழாசிரியர் கழகத்தினர், தங்கள் கோரிக்கைக்குத் தடையாக உள்ள அரசு ஆணைகளின் நகல்களை எரித்து போராட்டம் நடத்தினர் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்பது உண்மையா ?

(உ) தமிழாசிரியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ), (இ) மற்றும் (உ) 2—1—1981 அன்று தமிழாசிரியர்கள் அரசாணை எண்கள் சில அடங்கிய பட்டியலை எரித்தனர் என காவல் துறையினர் அரசிற்கு அறிவித்தனர். இதன் காரணமாக இத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட ஏழு பேர் மீது காவல்



துறையினர் குற்ற வழக்கு ஒன்றினைப் பதிவு செய்தனர். தமிழாசிரியர்களின் நியாயமான முக்கிய கோரிக்கைகள் மீது அரசு ஏற்கெனவே ஆணை பிறப்பித்து விட்டது. உதாரணமாக 1—1—1981 முதல் முழுத் தகுதி பெறாத இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் அனைவரும் முதல்நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளனர். மேலும் புலவர் பட்டம் பெற்று பி.டி. பயிற்சிப் பட்டமும் பெற்ற தமிழாசிரியர்களை தலைமையாசிரியர்களாக நியமிக்கலாம் என ஆணையிடப்பட்டுள்ளது.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, தமிழ் ஆசிரியர்கள் கோரிக்கை, அரசு ஆணை வெளியிடப்பட்ட நிலைமையில் மட்டும் அல்ல. அவர்கள் புலவர் தகுதியையே பட்டதாரி தகுதிக்குச் சமமாக ஏற்றுக்கொண்டு அவர்களுக்குத் தலைமை ஆசிரியர் பதவி தரவேண்டுமென்ற உத்தரவுக்குப் பின்னரும், நீதிமன்றத்திற்குச் சென்று நீதி மன்றத்திலே நான்கு தீர்ப்புக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. தமிழ் ஆசிரியர்களுடைய பயிற்சிக் காலத்தை பட்டப்படிப்புக்குச் சமமாக ஏற்றுக் கொள்ளலாம் என்று ஒரு தீர்ப்பு வந்ததாக நான் அறிகிறேன். அது குறித்து அரசாங்கம் என்ன மேல் நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையிலே குழப்பம் அடையக்கூடாது. புலவர் பட்டத்தை பட்டப் படிப்பிற்குச் சமமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று யாரும் சொன்ன தில்லை. அப்படி ஒரு தீர்ப்பும் வரவில்லை. முது நிலை தமிழ் ஆசிரியாக இருப்பார்களானால் அவாகள் பெற்றிருக்கின்ற ஆசிரியர் பயிற்சியை, அந்த ஆசிரியர் அனுபவத்தை பி.டி. ஆசிரியர்கள் அனுபவத் திற்குச் சமமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றுதான் தீர்ப்பு வந்திருப் பதாக நான் அறிகிறேன். அதைப்பற்றி அரசு பரிசீலித்துக்கொண்டிருக் கிறது.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மிகச் தெளிவாகக் கூறினார்கள். பி.டி. பட்டத்திற்குச் சமமாக, ஏற்கெனவே அவர்கள் பெற்றிருக்கக்கூடிய பயிற்சியைக் கருத வேண்டும் என்று தீர்ப்பு வந்திருக்கிறது. அப்படியானால், தலைமை ஆசிரியர் பயிற்சிக்கு, ஏற்கெனவே பி.டி. பட்டம் பெற்ற பிறகு, 10 ஆண்டுகள் பணியாற்றி இருக்கக் கூடியவர்கள், 5 ஆண்டுகள் பணியாற்றியிருக்கக்கூடியவர்கள்தான் இப்போது வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். அப்படியானால் அது எவ்வளவு காலத்திற்குள் நடைபெறும் ? அவர்கள் தலைமையாசிரியராக வருவதற்கு வழியில்லாமல் இருக்கிறது. எவ்வளவு காலத்தில் முடிவு எடுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

[1983 நவம்பர் 21

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, அது குறித்து பரிசீலனை நடந்து கொண்டிருக்கிறது. அது என்னுடைய கைக்கு வந்தால், அந்த நிமிடமே கையெழுத்தாகிவிடும்.

**திரு. ஒ. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, தமிழ் ஆசிரியர்கள் தங்களுடைய உணர்வுகளை அரசுக்குத் தெரிவிக்கத்தான் நேரடி நடவடிக்கையில் இறங்கினார்களே தவிர. அரசுக்கு எதிரான நடவடிக்கையிலே இறங்க வேண்டுமென்பது அவர்கள் நோக்கமல்ல. ஆகவே தங்களுடைய உணர்வுகளை அவர்கள் அரசுக்குத் தெரிவிப்பதற்காக அவர்கள் அதில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த நடவடிக்கையின் மீது அரசு தொடுத்த வழக்குகள் இப்போது என்ன ஆயிற்று? கருணை உள்ளத்துடன் இப்போது அந்த வழக்குகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டும். தமிழ் ஆசிரியர்களுடைய கோரிக்கைகளில் ஒரு சிலவற்றை அரசு ஏற்றுக்கொண்டிருப்பதாலும், வேறு முக்கிய கோரிக்கைகள் அரசினுடைய பரிசீலனையில் இருப்பதாலும் அந்த வழக்குகளைத் திரும்பப்பெறுவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, யார் வேண்டுமானாலும் அவர்களுடைய உரிமைகளைக் கேட்பதற்காக போராட்டம் நடத்தலாம். அதை நாம் தவறு என்று சொல்ல முடியாது. ஆனால் அந்தப் போராட்டம் நடக்கின்றபோது, சில நடைமுறைகளையும் பின்பற்றி ஆக வேண்டும். அரசாங்க ஆணைகளை எரிப்பது என்பது சட்டத்திற்கு விரோதமான ஒரு காரியமாகும். சட்டத்திற்கு விரோதமான காரியங்களில ஈடுபடுகின்ற நேரத்தில், எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளை தைரியத்தோடு ஏற்றுக்கொள்வது தான் போராட்டத்தில் ஈடுபடுகின்றவர்களுக்குரிய ஒரு நல்ல பண்பாகும்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, 4 தீர்ப்புகளும் தெளிவாக விளக்கி அளிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி தீர்ப்புகள் அளிக்கப்பட்ட பிறகும், "இன்னும் பரிசீலனையில் இருக்கிறது, என்னிடத்தில் வந்தால் நான் கையெழுத்துப் போடுவேன்" என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மகிழ்ச்சியுடன் சொல்லியிருக்கின்றார்கள். அந்தப் பிரச்சினையை ஒரு உயர்நீதிமன்றம் பரிசீலித்து இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் தீர்ப்பளித்திருக்கிறது. அப்படி மிகத் தெளிவாக அளிக்கப்பட்ட தீர்ப்பைப் பரிசீலித்து, எவ்வளவு காலத்திலே அது ஒரு உத்தரவாக வரும்? அந்தத் தெளிவான தீர்ப்பை அமுல் நடத்த உடனடியாக முயற்சி எடுத்து உத்தரவிட அமைச்சரவர்கள் முன்வருவார்களா?



1983 நவம்பர் 21]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படுகிறது என்றுதான் இந்த நேரத்திலே என்னாலே சொல்ல முடியுமே தவிர, அதற்கு மேலே என்னாலே சொல்வதற்கில்லை.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவரவர்களே, தமிழாசிரியப் பெருமக்கள் தலைமையாசிரியர் ஆகக்கூடிய வாய்ப்பைக் கொடுத்த அரசுக்கு நான் பாராட்டு தெரிவிக்கிறேன். ஆனால் அதே நேரத்திலே நடுநிலைப்பள்ளியிலே தலைமை ஆசிரியர் பொறுப்பினை வழங்கும்போது, யார் மூதியவர்கள் இடைநிலை ஆசிரியர்கள் பயிற்சி பெற்று பட்டம் பெற்றவர்களா அல்லது இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களா? அவர்களுக்கு வழங்கவேண்டுமென்று சொல்லி விட்டு, அப்படி இரு சாராரும் பள்ளியிலே இல்லாவிட்டால், வேலை வாய்ப்பு நிறுவனங்களிலே பதிவுசெய்துள்ள தமிழ் ஆசிரியப் பெருமக்களில் யார் தேங்கியிருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டும் என்பதுதான் முறையா? யார் பணி மூப்பிலே இருக்கிறார்களோ அவர்களுக்கா, அல்லது, பட்டதாரி ஆசிரியர்கள், புலவர் பட்டம் பெற்றவர்கள் என்ற முறைகளிலே யாருக்கு, எந்த முறையில் வழங்குவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, தமிழாசிரியர்களாக வருவதற்கான இந்தப் பரிசீலனை செய்யப்பட்டு, முடிவு எடுக்கப்பட்ட பின்னர், நாம் அதைப் பரிசீலனை செய்யலாம்.

Thiru G. SWAMINATHAN : Sir, the High Court of Madras has given a clear indication that Pandits' Training should be equated to B.T. training. They have given a decision and only implementation by the Government is necessary. I want to know the reason why the Government are delaying the matter.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, ஹைக்கோர்ட்டிலே தீர்ப்பு அளித்திருக்கலாம். அது டிபார்ட்மெண்ட் அதிகாரிகளுக்கு வந்து, பார்க்க வேண்டியவர்கள் ஒவ்வொருவராகப் பார்த்த பிறகுதான் என்னிடம் வரவேண்டுமே தவிர, நேரடியாக அங்கேயிருந்து வந்தவுடனே நான் கையெழுத்துப் போட முடியாது. ஹைக்கோர்ட்டு தீர்ப்பே உடனடியாக அமுலாக்கக்கூடிய கவர்ன்மெண்ட் உத்தரவாக மாறிவிட முடியாது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழாசிரியர்கள் தலைமை [1983 நவம்பர் 21
யாசிரியராக ஆவதற்குரிய நீதி மன்றத் தீர்ப்பை எதிர்த்து அரசாங்கமே மேல்
முறையீடு செய்ய இருப்பதாக ஒரு செய்தி வெளியில் உலவுகிறதே?
ஒருவேளை அரசு மேலும் பரிசீலனை செய்வதாக இருக்கிறதா? அப்படி
இல்லை என்றால், டிப்பார்ட்மெண்டில் அது பரிசீலனை செய்து வந்த பிறகு
உத்தரவு பிறப்பிக்க இருக்கின்றார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.50)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்பீல் பண்ணுவது என்பது
நடைமுறையிலே செய்ய வேண்டியது. சட்டத்திற்கு உட்பட்டு செய்ய
வேண்டியது. அவர்களுடைய கடமையை அவர்கள் செய்து கொண்டிருக்க
லாம். இப்போது நான் சொன்ன பதிலிலிருந்து மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் என்ன பொருளை எடுத்துக் கொள்கிறாரோ அப்படி அரசு முயற்சி
களை எடுத்துக்கொள்ளும். நடக்கக்கூடாது, தடுத்து நிறுத்த வேண்டு
மென்பதில் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்றால், அதையுங்கூடச் செய்ய
லாம். (சிரிப்பு)

*High/Higher Secondary Schools without Junior Assistant.*

* 55 Q.—Thiru F. R THOMAS and Thiru S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that many High and Higher Secondary Schools, both Government and Aided, are functioning without even one Junior Assistant; and

(b) if so, the number of such schools and their strength?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) இளநிலை உதவியாளர் பணியிடம் இல்லாத உயர்நிலை/மேல்நிலைப்
பள்ளிகள் பற்றிய விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவரவர்களே, பொதுவாக தமிழகத்தில் உள்ள
உயர்நிலைப் பள்ளிகளிலே உதவியாளர்கள் குறைவாகத்தான் இருக்கிறார்கள்.
ஆனால் 1951-ல் வெளியிடப்பட்ட அரசாணை 183-ன் படியும், 23—4—1964-ல்
வெளியிடப்பட்ட அரசாணை 583-ன் படியும் மாணவர்கள் எண்ணிக்கையின்
படி கூடுதல் பணியாளர்களை நியமிக்கலாம் என்ற நிலை இருக்கிறது. ஆனால்
அதற்கு இப்போது தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தடையை நீக்கி
விட்டால், இத்தகைய பள்ளிகளில் சிறப்பாகப் பணிகள் நடக்கும். அந்த
முறையில் அந்தத் தடையை நீக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா?

@ 220–251 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது



1983 நவம்பர் 21]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, உதவியாளர்
கள் போடுவதைத் தடை செய்திருப்பதாகச் சொன்னார்கள். நிதிநிலை
அடிப்படையிலேதான் இந்தப் பிரச்சினைகள் வருகின்றன. நிதிநிலை இடம்
தருகின்றபோது இதுகுறித்துத் தீவிரமாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க
லாம்.

திரு. செ. முத்துசாமி : கல்லூரிக் கல்வியை 1978 ஆம் ஆண்டு மேல்
நிலைக் கல்வியாக, பிளஸ் 1, பிளஸ் 2 வகுப்புகளாக, மாற்றி, அந்த வகுப்புகள்
வந்த நேரத்தில் ஒரு அறிவிப்பை அரசு தெளிவாக அறிவித்தது.
அந்த வகுப்புகளைக் கொண்டுவரும்போது, ஒவ்வொரு மேல்
நிலைப் பள்ளிக்கும் குறைந்தது ஒரு எழுத்தரை நியமிப்போம் என்று
அறிவிக்கப்பட்டது. ஆனால் இன்றையவரையில் ஒருவர்கூட நியமிக்கப்பட
வில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மேல்நிலைப்
பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள், சூப்பர் கிளார்க்காக அலுவலகத்தில்
உட்கார்ந்துகொண்டு பணியாற்றுகிறார்களே தவிர, கல்விப் பணிகளைக்
கவனிக்க முடியாமல் இருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.
இதனால் அகடமிக் சைட் இம்ப்ரூவ்மென்ட் கெடுகிறது என்பதை அமைச்சரவர்
களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, உடனடியாக இந்த நியமனத்தைச்
செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மேல்நிலைக் கல்வி கொண்டுவரப்
பட்டபோது, அதற்கான தேவைகளைப் பூர்த்தி செய்து, நல்ல முறையிலே
அவை நடக்க வேண்டுமென்று விரும்பியது உண்மைதான். அதுமட்டுமல்ல,
பள்ளிக்கூடங்களுக்குத் தேவையானதைச் செய்ய வேண்டுமென்பதை யாரும்
மறுக்க முடியாது. நமக்கு இருக்கும் பண வசதிக்கேற்ப சில கஷ்ட நஷ்டங்
களை ஏற்றுக்கொண்டுதான், இந்தச் சமுதாயப் பிரச்சினையைத் தீர்க்க
வேண்டியவர்களாக இருக்கிறோம். எல்லா வசதிகளும் இருந்தால்தான்
பள்ளிக்கூடங்களை ஆரம்பிக்க வேண்டுமென்ற கருத்தை ஏற்றுக்கொண்டால்,
கிராமங்களில் உள்ள பல பள்ளிகளை மூட வேண்டியிருக்கும். அதையெல்லாம்
பார்க்காது, தொலை தூரத்தில் இருக்கும் கிராமக் குழந்தைகளுக்கும் கல்வி
கிடைக்க வேண்டுமென்ற சமுதாய நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமென்று
பள்ளிகளை கடந்த 36 ஆண்டுகளாகத் திறந்தோமே தவிர, தேவையான
கட்டிடங்கள், தேவையான வசதிகள் செய்வதிலே அதற்கு ஈடு இணையான
முயற்சிகள் மேற்கொள்ளாததால்தான், தொடர்ந்து இருக்கும் பிரச்சினையாக
இது இருக்கிறது. குறிப்பாக தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரையில்,
கடந்த மூன்று ஆண்டுகளாக நிறைவேற்றப்படும் தன்னிறைவுத் திட்டத்தின்

[1983 நவம்பர் 21

கீழ் நல்ல கட்டிடங்கள் இருக்கும் அளவுக்கு எல்லாப் பள்ளிகளுக்கும் கட்டிடங்
கள் இருக்கும் அளவுக்கு எல்லாப் பள்ளிகளுக்கும் கட்டிடங்கள் கட்டித்
தந்திருக்கிறோம். அதைப்போல உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளி
களுக்குப் பல்வேறு வசதிக் குறைவுகள் இருக்கின்றன. அவற்றைப் பார்த்து,
வசதிக்கேற்ப கல்வி தரும் ஏற்பாட்டைச் செய்தால், வசதியானவர்களுக்கு
கிடைக்கும் கல்வியாகத்தான் இருக்கும். வசதியற்றவர்களுக்குக் கல்வி தர
முயற்சி எடுக்கும்போது, இப்படிப்பட்ட பிரச்சினைகள் வருவது இயற்கை.
இதைச் சமாளிக்கும் முறையில் கொஞ்சம் காலதாமதம் ஆனாலும், இந்தப்
பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்று
தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு அமைச்சரவர்கள் தந்துள்ள விவர
அறிக்கையிலேயிருந்து சுமார் 400-க்கும் மேற்பட்ட மேல்நிலை, உயர்நிலைப்
பள்ளிகளிலே ஒரு எழுத்தர்கூட இல்லை என்பது தெரிய வருகிறது. அரசு
சார்பிலே இருந்து கொடுக்கப்படுகிற புள்ளி விவரங்களைப் பார்த்தால்,
10 ஆண்டுகளுக்கு முன்னால் எவ்வளவு கொடுக்கப்பட்டதோ அதைவிட 15
மடங்கு கூடியிருக்கிறது என்பது தெரிகிறது. அதற்கான விவரங்களைச்
சொல்ல வேண்டியிருக்கிறது. பள்ளிகளில் எழுத்தர்கள் இல்லாத நிலையில்,
தலைமை ஆசிரியர்கள் இத்தகைய பணிகளை ஏற்றுக் கொள்வதன் மூலம்
கல்வியின் தரம் குறைகிறது. எனவே பள்ளிகளிலிருந்து புள்ளிவிவரங்களைச்
சேகரிக்க, ஒவ்வொரு மாவட்டக் கல்வி அலுவலகத்திலிருந்தும் ஒரு எழுத்தரை
டர்ன் சிஸ்டத்தில் அனுப்பி, 2 நாட்கள் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு
'அசிஸ்ட்' செய்யும் ஒரு ஏற்பாட்டை, பண வசதி அரசுக்கு வரும்வரை செய்ய
அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்போது ஏ.டி.ஈ.ஓ., டி.ஐ.
டி.ஈ.ஓ. கூட, தங்களுக்குப் போதுமான கிளார்க்குகள் இல்லை என்று
சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. செ. முத்துசாமி :** 1978-ல் மேல்நிலைக் கல்வியைக் கொண்டுவர
வேண்டுமென்று அறிவித்தபோது திட்டவட்டமாக, குறைந்தபட்சத் தேவை
யாக, இது இருந்தால்தான் இந்தப் பள்ளிகளில் கல்வித் தரம் உயரும் என்று
அரசாங்கம் முடிவெடுத்து, அறிவித்திருக்கிறது. அதற்குப் பின்னால் பொரு
ளாதாரத்தைப் பற்றிச் சொல்வது எனக்குப் புரியவில்லை. அதை அமைச்ச
ரவர்கள் விளக்க வேண்டும். குறைந்தபட்சத் தேவை என்று சொல்லி,
கட்டிடங்கள், மற்றைய வசதிகள் பற்றிச் சொன்னார்கள். அவற்றுக்குப் பல
கோடி ரூபாயாகும். அது வேறு. அந்தப் பள்ளிகளிலே ஒரு எழுத்தரை



1983 நவம்பர் 21]

நியமித்து, தலைமை ஆசிரியர்களை அந்தப் பணியிலிருந்து ரிலீவ் செய்யாமல் இருக்கிறார்கள். எனவே உடனடியாக அந்தப் பள்ளிகளுக்கு ஒரு பணியிடத்தை ஒதுக்க ஆவன செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இன்றைக்குக் கேள்வி கேட்கிற நேரத்தில் உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்கும்போது, உடனடியாகச் செய்வேன் என்று சொல்லும் அளவுக்கு ஒரு அமைச்சர் இருக்க முடியாது. அப்படிச் சொல்லவும் முடியாது. பிரச்சினைகளை உணர்கிறோம். அவற்றைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறோம். அதற்கான நம்பிக்கையை நாங்கள் தருகிறோம். நான் ஆரம்பத்திலேயே சொன்னதுபோல, மக்களுக்காக நாம் காரியங்களைச் செய்யும்போது, அப்படிப்பட்ட கஷ்டங்கள் இருக்கத்தான் செய்யும். புதிய பள்ளிகளில் இப்படிப்பட்ட பிரச்சினைகள் இல்லாமல், எழுத்தர்களை நியமித்திருக்கிறோம். தொடர்ந்து இந்தப் பிரச்சினை வராமல் இருக்க, புதிய பள்ளிகளுக்கு இந்த வசதியைத் தந்திருக்கிறோம். எனவே பிரச்சினையை அரசு உணர்ந்திருக்கிறது. அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறோம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** புதிதாகத் தொடங்கப்பட்ட மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளிலே இளநிலை உதவியாளர்கள் இல்லாமல் இருப்பது என்பது ஒன்று. அந்தப் பள்ளிகளிலே காவலர், ஏவலர் நியமிக்காமல் இருப்பது என்பது மற்றொன்று. இந்த அடிப்படைத் தேவைகளைப் புதிதாகத் தொடங்கப்படும் பள்ளிகளுக்கு இப்போதே வழங்குவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே இல்லாத பள்ளிகளிலே நியமித்த பிறகு, புதிதாகத் தொடங்கும் பள்ளிகளுக்குக் கொடுத்தால் நல்லது. இந்த நிலையில் இப்போது அந்த இளநிலை உதவியாளர் பணியைச் செய்யும் ஆசிரியருக்கு அல்லது மேல்நிலைப் பள்ளிகளில் ஏற்கெனவே பணியாற்றிக்கொண்டிருக்கும் உதவியாளருக்குக் கூடுதல் ஊதியம் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அப்படிப்பட்ட யோசனை அரசுக்கு இல்லை.

**திரு. கி. ரா. லெட்சுமிகாந்தன் :** கல்வி அமைச்சரவர்கள் எடுத்துக்கூறிய அரசுக்குள்ள சங்கடங்களை உணர்கிறோம். அண்மையில் மத்திய உணவுக் கூடங்கள் மூடப்பட்டதால், அங்கு பணியாற்றிய 100 கண்காணிப்பாளர்கள் பதவிகளை மாவட்டக் கல்வி அலுவலகங்களுக்கும், மகளிர் பள்ளி ஆய்வாளர் அலுவலகங்களுக்கும் மாற்றி, அந்தப் பதவிகளில் இருந்தவர்களை அந்த அலுவலகங்களிலே நியமித்திருக்கிறார்கள். இப்போது 'டெலிகேஷன் ஆஃப்

[1983 நவம்பர் 21

பவர்ஸ்' என்ற அடிப்படையில் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு நிர்வாக அதிகாரங்கள், எஸ்டாபிளிஷ்மெண்ட் அதிகாரங்கள் அதிகமாக இருப்பதால், கண்காணிப்பாளர்களாக இருந்தவர்கள் மாற்றப்பட்டு, மாவட்டக் கல்வி அலுவலகத்திற்குக் கூடுதலாகச் சென்றிருக்கிறார்கள். எனவே அங்கேயிருந்து 100 இளநிலை எழுத்தர் பதவிகளை எடுத்து, பள்ளிகளுக்குக் கொடுக்க முடியும். அது குறித்து அமைச்சரவர்கள் யோசனை செய்வார்களா ?

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அப்படிப்பட்ட யோசனை இல்லை.

## அங்காடிகளுடன் கூடிய திரையரங்குகள்.

* 56. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) நகராட்சிகளின் வருமானம் பெருக, அங்காடிகளுடன் கூடிய திரை யரங்குகளை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) மற்றும் (இ) நகராட்சிகளின் வருமானம் பெருக திரையரங்குகள் கட்டுவதற்கு நிதியுதவி அளிக்கும் கருத்துருவை அரசு பரிசீலித்தது. அரசு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் திரையரங்குகள் கட்டுவதற்கு நகராட்சிகளுக்கு நிதி உதவி அளிப்பதற்கு தமிழ்நாடு ஒருங்கிணைந்த நகர் மற்றும் ஊர் அபிவிருத்திக் குழுவின் ஆலோசனையைப் பெறும்படி நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநர் பணிக்கப்பட்டுள்ளார்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** பெரும்பாலான நகராட்சிகள் வருமானம் இல்லாமல் உண்மையான சுயாட்சியை அனுபவிக்க முடியாத நிலையில் திண்டாடுகின்றன. வருமானத்தைப் பெருக்குவதற்காக திரையரங்குகள் அமைத்தல், அங்காடி அமைத்தல், திருமண மண்டபம் அமைத்தல் போன்ற வற்றின் மூலமாக அரசிடமிருந்து அவர்கள் நேரடி உதவி பெற விரும்பு கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சம்பந்தப்பட்ட அமைப்பை உதவி வேண்டி நாடச் சொல்லியிருக்கிறார்கள். இது நடை முறையில் நகராட்சிகளுக்கு எந்த வகையில் உதவும்? நலிந்த நகராட்சிகளுக்கு நேரடியாக அரசே உதவிட நடவடிக்கை எடுக்குமா ?



1983 நவம்பர் 21]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தமிழகத்தில் 106 நகராட்சிகள் இருக் கின்றன. அவற்றிலே 60-க்கு மேற்பட்ட நகராட்சிகள் போதுமான நிதி வசதி யில்லாமல் இருந்தன. அவைகளால் மக்களுக்கு வேண்டிய பல்வேறு அடிப்படை வசதிகளைக் கூட செய்ய முடியவில்லை. அதற்காகத்தான் கடந்த ஆண்டிலும், இந்த ஆண்டிலும் பலவீனமான நகராட்சிகளுக்கு உதவி செய்து வருகிறோம். கடந்த ஆண்டு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக 20 நகராட்சி களும், இந்த ஆண்டு 31 நகராட்சிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. கடந்த ஆண்டு 5 கோடி ரூபாயும், இந்த ஆண்டு 31 நகராட்சிகளுக்கும் ஒவ்வொரு நகராட்சிக்கும் 17 இலட்சம் ரூபாய் என்கிற அடிப்படையில் 5 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறோம். குறிப்பாக வருமானத்தைப் பெருக்க வேண்டு மென்று சொன்னால், மத்திய மாநில ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் என்கிற அடிப்படையில் செய்திருக்கிறோம். இந்த வகையில் பல் வேறு பணிகள் கடந்த ஆண்டு நடைபெற்றிருக்கின்றன. இந்த ஆண்டும் 26 கோடி ரூபாய் செலவில் பல்வேறு பணிகளைச் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் துறையில் பொறுப்பேற்ற உடனே 100 திரை யரங்குகள் கட்ட வேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டுவந்து, அதனை மத்திய மாநில ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சிக் குழுவின் அனுமதிக்காக அனுப்பிய நேரத்தில், அவர்கள் இதற்கு மறுப்பு தெரிவித்துச் சொல்லும்போது, இதன் மூலம் வருமானம் அதிகமாக வராது என்று சொல்லி, இதனை நீக்கி விட்டார்கள். மத்திய மாநில ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில், சென்னை மாநகராட்சிக்குக்கூட 2 தியேட்டர்கள் கட்ட 1 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நகராட்சிகளுடைய வருமானத்தைப் பெருக்க திரையரங்குகள் அமைப்பதுபற்றி இங்கே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் விரிவாக விடையளித்தார்கள். சென்னை மாநகராட்சியில் கூட 2 திரையரங்குகள் கட்ட இருப்பதாகச் சொன்னார்கள். இப்போதுகூட சில நகராட்சிகளால் திரையரங்குகள் நடத்தப்படுகின்றன. குறிப்பாக தஞ்சையிலுள்ள திருவள்ளுவர் திரையரங்கை அங்குள்ள நகராட்சி நடத்து கிறது. அந்தத் திரையரங்கு போதுமான அடிப்படை வசதிகள் இன்றி, நாற் காலிகள் நல்ல முறையில் இல்லாமல் இருக்கிறது. அதேபோல திருச்சியிலுள்ள கலையரங்கில் ஏ.சி. போடாமல் பொதுமக்களுக்குத் தொல்லை தருகிறார்கள் நகராட்சிகளால் நடத்தப்படும் திரையரங்குகள் கவர்ச்சிகரமாகவும், அழகாக வும் நடத்தப்படவில்லை. இதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உணர்வார்களா? இப்படி நகராட்சிகளால் நடத்தப்படும் திரை யரங்குகள் இருந்தால், நிச்சயமாக மத்திய மாநில ஒருங்கிணைந்த வளர்ச்சிக்

குழு சொன்னதைப்போல, லாபம் தராமல் நஷ்டம்தான் வரும். இனிமேலாவது நகராட்சிகளால் நடத்தப்படும் திரையரங்குகள் நல்ல முறையில் பராமரிக்கப் பட வேண்டும் என்கிற ஆலோசனையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்குவார்களா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தஞ்சையில் ஒன்றும், கோடைக்கானலில் ஒன்றும், மேட்டூரில் ஒன்றும திரையரங்குகள் நகராட்சிகளால் நடத்தப்படுகின்றன. அவைகள் சரியான அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் இருக்க வேண்டிய அவசியத்தில் இருக்கின்றன. ஆகவே இவைகளை எல்லாம் 'பப்ளிக் ஆக்ஷன்' என்கிற முறையில் லீசுக்குக் கொடுக்க முடியுமா என்று கூட இன்றைக்குக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அந்த வகையில் இவைகளைத் தனியாரிடம் நடத்துவதற்காகக் கொடுத்து, அவர்கள் மூலம் நல்ல வசதிகளைச் செய்து கொடுப்பது என்கிற அடிப்படையில் அனைத்து நகராட்சிகளிலும் நடத்தப்படும் திரையரங்குகளையும் வசதியுடைய திரையரங்குகளாகச் செய்ய முடியுமா என்பது குறித்துப் பரிசீலிக்க அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

**திரு. சி. இராமலிங்கம்:** நகரங்களில் சில இடங்களில் வீடுகளில் திரையரங்குகளைப்போல வீடியோ மூலம் காட்சிகள் நடத்தப்பட்டு வசூல் செய்யப்படுகிறது. நகரங்களில் உள்ள பங்களாக்களில் சினிமா படம் வேறு எடுக்கப்படுகிறது. இவைகளுக்கெல்லாம் அனுமதி ஏதேனும் தரப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** பிரிவியூ தியேட்டர்ஸ் என்கிற அடிப்படையில் யார் யார் படம் எடுக்கிறார்களோ அவர்கள் எல்லாம் படம் போட்டுப் பார்க்கிறார்கள். ஆனால் தனிப்பட்ட வீடுகளில் எல்லாம் கூட வசூல் செய்து அப்படி நடைபெறுகிறதா என்கிற தகவல் அரசின் கவனத்திற்கு வரவில்லை. அப்படிப்பட்ட தகவல் உறுப்பினரிடம் இருந்தால், அரசின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் அதை அரசுக்குக் கொடுக்க வேண்டும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** திரையரங்குகள் மூலமாக மட்டுமின்றி வேறு வகையிலும் வருமானத்தைப் பெருக்க ஏதேனும் கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** திரையரங்கைப்பற்றி ஆசிரியர்கள் ரொம்பவும் அக்கறை காட்டுகிறார்களா?



**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** வருமானத்தை, குறிப்பாக என்ட்ரி டாக்ஸ் என்கிற ஆக்ட்ராய் வரி மூலம், அதிகரிக்க முடியும். நகருக்குள் நுழைகின்ற வாகனங்களுக்கு இவ்வாறு வரி போட்டு பல்வேறு மாநிலங்களில் வருமானத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தமிழ் நாட்டிலே மட்டும் அரசு அதனை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று சொன்னவுடனேயே எதிர்க் கட்சிகள் எல்லாம் சேர்ந்து அதனை எதிர்த்து பிரச்சாரம் செய்து விடுகிறார்கள். பெங்களூர் நகரில்கூட ஆக்ட்ராய் வரி வசூலிக்கப்படுகிறது. இப்படி அங்கெல்லாம் வசூலிக்கப்படுகிறது, ஆகவே நாமும் அம்மாதிரி செய்யலாம் என்று சொன்னவுடனேயே, சுட்டிக்காட்டிய உடனேயே அவ்வாறு வரி வசூலிக்கக் கூடாது, ஆனால் வசதிகளை மட்டும் பெருக்க வேண்டும் என்று சொல்லுகின்ற மனநிலையை நாம் பார்க்கிறோம். அதுபோல் அங்காடிகள் கூட கட்டப்பட்டிருக்கின்றன. ஒருசில இடங்களில் மட்டும் அங்காடிகள் மூலம் நல்ல வருமானம் வருகிறது. ஆனால் சில இடங்களில் அங்காடிகள் கட்டினாலும், வியாபாரிகள் அங்கு போக மாட்டோம் என்று சொல்லி அடம் பிடிக்கிறார்கள். இன்றைக்கு எப்படியாவது வருமானத்தைப் பெருக்கி, அடிப்படை வசதிகளையெல்லாம் செய்து கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போன்றவர்கள் எல்லாம் சொல்கின்ற நல்ல யோசனைகளை அரசு ஏற்று பரிசீலிக்கும் அதே நேரத்தில், என்ட்ரி டாக்ஸ் அமுலுக்கு வருவதன் மூலம் மக்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க முடியும் என்பதைத்தான் என்னுடைய யோசனையாகச் சொல்ல முடியும்.

**திரு. ஜே. எம். மியாகான்:** உறுப்பினர் அவர்கள் வீடுகளில் சினிமா காண்பிப்பதாகச் சொல்கிறார்கள். பணம் வசூல் செய்து வீடியோ மூலம் சினிமா காண்பிக்கிறார்கள். அதற்கு ஏதாவது லைசென்ஸ் உண்டா? அப்படிச் செய்வது சரிதானா? அதில் ஏதாவது தவறு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** அப்படி எல்லாம் அரசின் மூலமாக எந்தவிதமான உரிமையும் வழங்கப்படுவதில்லை.

[1983 நவம்பர் 21

### Refund of "ADADA" to Teachers.

* 57. *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that ADADA due to some retired and serving teachers has not been refunded by the Dindigul Municipal authorities;

(*b*) if so, the number of persons to whom the amount has not been refunded as on 1st February 1983; and

(*c*) the action taken by the Government to refund the amount, without further delay?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) ஆம்.

(இ) 12.

(உ) இந்தத் தொகையை உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்யும்படி திண்டுக்கல் நகராட்சி ஆணையருக்கும், நகராட்சி நிர்வாக இயக்குநருக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

**திரு. பா. ரா. தாமஸ்:** இந்த ஆசிரியர்களில் இரண்டு பேர் ஏற்கெனவே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆசிரியர்களும், ஆசிரியர்கள் அல்லாதவர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நகராட்சி அதிகாரிகளைக் கேட்டால், டிரசரீஸ் அண்ட் அக்கவுண்ட்ஸ் ஆபீசுக்கு அனுப்பியிருப்பதாகச் சொல்கிறார்கள். இவர்களைக் கேட்டால், நகராட்சிக்கு அனுப்பியிருப்பதாகச் சொல்கிறார்கள். இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுப்பதன் மூலம் ஆணை பிறப்பிக்க முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** ஆசிரியர்கள் 7 பேர்களுக்கும் ஆசிரியர்கள் அல்லாதவர்கள் 12 பேர்களுக்கும் இந்த அடாடா கொடுக்கப்படவில்லை. அந்த வகையில் மொத்தம் ரூபாய் 3,014.15 தான் கொடுக்கப்பட வேண்டும். அதுகூட உடனடியாகக் கொடுக்கப்பட வேண்டும் என்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. செ. முத்துசாமி:** இப்படி அடாடா கணக்குகளை நகராட்சிகள் வைத்துக்கொண்டிருப்பதால், பல நேரங்களில் தவறு செய்து விடுகிறார்கள். அதுபற்றிக் கேட்டால், தனக்கு சம்பந்தமே இல்லை என்று சொல்லி அதிகாரிகள் தப்பித்துக்கொள்கிறார்கள். ஆசிரியர்களிடத்திலிருந்து வசூலிக்கப்படும் தொகைக்குச் சரியான முறையில் கணக்கு வைக்க வேண்டுமென்றும்,



1983 நவம்பர் 21]

ஏதாவது தவறு நடந்தால், இன்னார்தான் அதற்குப் பொறுப்பு என்கிற வகையிலும் உறுதியான ஆணையினைப் பிறப்பிக்க, இதில் கவனத்தைச் செலுத்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** கவனிக்கப்படும்.

### Urban Wakf Properties Development Scheme.

* 58. *Q.*—THIRU J. M. MIAKHAN: Will the Hon the Minister for irrigation be pleased to state—

(*a*) whether the interest accrued in the Urban Wakf Properties Development Scheme is being given as loan to individuals; and

(*b*) if so, the person who is empowered to grant such loans?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 10-10)

**திரு. ஜே. எம். மியாகான்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு வக்ப் வாரியத்தில் சிப்பந்திகளுக்குக் கடன் கொடுக்கப்படுகிறது. வாரிய அலுவலகம் இருக்கிற அந்த இடத்திலேயே ஒரு பள்ளிவாசல் கட்ட நிதி வசூலித்தார்கள். அந்தப் பணத்திலிருந்து இப்போது அங்குள்ள சிப்பந்திகளுக்குக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிக் கொடுக்கலாமா? அப்படிக் கொடுக்க அந்த ஆபீசருக்கு அதிகாரம் உள்ளதா? இதுமாதிரி பொதுப் பணத்தைக் கையாடல் செய்கிற நிலைமை இருக்கலாமா என்பதுதான் என் கேள்வி.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** தலைவர் அவர்களே, இப்போது நகர்ப்புற வக்ப் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அரசு கடன் தொகையை வழங்க வேண்டும். அப்படி நடவடிக்கையை மேற்கொள்வதில் இருக்கிற இடையூறுகள் காரணமாக, கால தாமதம் காரணமாக பணம் நீண்ட காலமாக வங்கியிலேயே இருந்ததால், வட்டியும் அதிகமாகக் கிடைத்தது. அப்படி வாரியத்தின் பணம் பாங்கியில் டெபாசிட் செய்த தொகை ரூ. 15,94,000

ஆகும். அதற்கு வட்டியாக மட்டும் ரூ. 2,19,423.86 காசுகள் வந்திருக்கிறது. இந்த வட்டியை தனியார் யாருக்கும் கொடுத்துவிடவில்லை, அல்லது வேறு எந்த விதத்திலும் பயன்படுத்தவில்லை. அதே நேரத்தில் அரசுக்கும் இந்த வட்டிப் பணத்தைக் கொடுக்கவில்லை. அரசின் அனுமதி பெறாமலேயே அந்த வட்டி தொகைக் கணக்குகளை 'சாரிட்டபிள் அக்கவுண்ட்ஸ்' என்ற தலைப்பில் வாரியம் மாற்றி உள்ளது.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, இந்த 15 லட்சம் ரூபாயை வக்ப் போர்டு சார்பில் வங்கியில் டெபாசிட் செய்திருப்பதாகவும், அதில் வட்டி வந்ததாகவும் சொன்னார்கள். இஸ்லாமிய மார்க்கத்தில் வட்டி வாங்குவதே தவறு என்று கூறப்பட்டிருக்கிறது. இதுமாதிரி வட்டி வாங்குவதை இனிமேலாவது தவறு என்ற அடிப்படையில் நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவர் அவர்களே, கேள்விக்கு பதில் அளிக்கிற நேரத்தில், இந்த வட்டிப்பணத்தை வக்ப் போர்டு துறைக் முறையாக அரசுக்குச் செலுத்தியிருக்கவேண்டும் என்று சொன்னேன். அப்படிச் செலுத்தவில்லை. கணக்குத் தலைப்புகளை மாற்றியிருக்கிறார்கள், மாற்றி கடன் கொடுத்திருக்கிறார்கள். அப்படி இருக்கிற குறைபாடுகளைக் களைந்து, மறுபடியும் இந்த வட்டித் தொகையை அரசுக் கணக்கில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. எம். மியாகான் :** எவ்வளவு வட்டி வந்தது? எவ்வளவு தொகை கடன் கொடுத்தார்கள்? இப்படி பொதுப் பணத்தை அதிகாரம் இல்லாத ஒரு உத்தியோகஸ்தர் சிப்பந்திகளுக்கு எப்படிக் கொடுத்தார்? ஒரு ஹெட் ஆப் அக்கவுண்டிலிருந்து இன்னொரு ஹெட் ஆப் அக்கவுண்டுக்கு பணம் மாற்றப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது, எப்படி கொடுத்திருக்கிறார்கள்? உதாரணமாக, வக்ப் வாரியத்தில் உள்ள சிப்பந்திகள் எல்லாம் சேர்ந்து அந்தக் கட்டிட எல்லைக்குள்ளேயே ஒரு பள்ளிவாசல் கட்டி நிதிவசூல் செய்து நடத்தி வருகிறார்கள். அந்த வசூல் பணத்தை வாரியத்தின் தலைவர் மற்றும் செயலாளர் அடங்கிய கமிட்டிதான் நிர்வகிக்க முடியும். ஆனால் அந்த செக்ரட்டரி அந்தப் பணத்தை ஒரு பெண்ணுக்குக் கடனாகக் கொடுத்திருக்கிறார்.



அது சரியா? இப்படி முறைகேடு நடந்தால், அது சரியென்று யாரும் சொல்ல மாட்டார்கள். ஆனால் எனக்குத் தரப்பட்ட விபரத்தின் அடிப்படையில், நகர்ப்புற வக்ப் போர்டு நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொடுக்கப் பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. கடனாகத் தரவில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். இது சரியா?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** கடனாகத் தரப்படவில்லை என்று எனக்குத் தரப்பட்டுள்ள குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தகவல்கள் விசாரிக்கப்பட்டு, அதில் உண்மை இருந்தால், அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். வழக்கமாக உறுப்பினர்கள் கேள்வி கேட்டு, அமைச்சர்கள் பதில் அளிக்க வேண்டும். இங்கே மாண்புமிகு உறுப்பினர் விளக்கம் அளிக்கலாமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் விளக்கமாகச் சொன்னது அமைச்சருடைய பதிலை எதிர்பார்த்து அல்ல. அவருக்குக் கிடைத்த விபரத்தைச் சொல்லியிருக்கிறார்.

## *Tamil Nadu Wakf Board.*

* 59. *Q.*—THIRU J. M. MIAKHAN : Will the Hon. the Minister for Irrigation be pleased to state—

(*a*) whether any Officer of the Tamil Nadu Wakf Board attended the Central Wakf Council Meeting at New Delhi ;

(*b*) if so, whether the Officer has been authorised to attend such meeting by the Government of Tamil Nadu; and

(*c*) whether the Officer is empowered to take part in the proceedings of the Tamil Nadu Wakf Board meetings?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** (அ) இல்லை. மத்திய வக்ப் குழுவின் கூட்டங்களில் கலந்துகொள்ளும் வக்ப் வாரிய தலைவர் மற்றும் அங்கத்தினருக்கு உதவி புரியவேதான் தமிழ்நாடு வக்ப்பு வாரிய அதிகாரிகள் உடன் செல்கின்றனர்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) இல்லை.

## தமிழ்நாடு வக்ஃபு வாரியம்

***60. வினா**—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு நிர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தலைவர், அப்பதவியை ராஜினாமா செய்திருக்கிறார் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்** : (அ) ஆம்.

(இ) அன்னாரின் சொந்த காரணங்களுக்காக ராஜினாமா செய்தார்.

**திரு. ஜே. எம். மியாகான்** : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டுக் வக்ப் வாரியம் இருப்பது போலவே சென்ட்ரல் வக்ப் போர்டும் இருக்கிறது. அவர்கள் நடத்தும் கூட்டங்களுக்கு இங்கிருந்து சேர்மன் அல்லது செக்ரட்டரி தான் போக வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் அசிஸ்டன்ட் செக்ரட்டரி அல்லது டெபுடி செகரட்டரி அந்தக் கூட்டத்திற்குப் போயிருக்கிறார். அபபடி அவர் போவதற்கு உரிமை உண்டா ? அப்படி சேர்மன் 'ஆதரைஸ்' பண்ணியிருந்தால் Is it in order ? அந்தமாதிரி இங்குள்ள வக்ப் போர்டு கூட்டங்களிலும் அவர்கள் போகலாம். செகரட்டரி வந்து உட்கார்ந்து கொள்கிறார். இதே அசிஸ்டன்ட் இந்தக் கூட்டத்தையே நடத்துகிற மாதிரி இருக்கும். பார்ப்பதற்கு இவர்தான் வருடத்திற்கு முன்பு உள்ள கதை. இந்த மாதிரி முறைகேடுகள் நடந்து கொண்டிருந்தன. இதெல்லாம் ஒரு இப்போது அதுமாதிரி இல்லையென்று நினைக்கிறேன். இந்தக் கேள்வி ஒரு வருடத்திற்கு முன்பு போட்டது.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்** : மூலக் கேள்வி மத்திய வக்ப் வாரியத்தைப் பற்றியது. அவ்வாறு யாரும் அந்தக் கூட்டத்திற்கு அனுப் பப்படவில்லை.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : தலைவர் அவர்களே, கேள்வி 59-க்கு ஒரு சப்ளிமெண்ட்டரி. மத்திய வக்ப் போர்டுக்கு இங்கிருந்து உறுப்பினர் நியமிக்கப்படுகிறாரா ? இப்போது தமிழ் நாடு வக்ப் வாரியத் செல்ல அக்கு புது உறுப்பினர்கள் போட்டிருப்பதாக பத்திரிகையில் செய்தி பார்க் கிறோம். மத்திய வக்ப் போர்டுக்கு உறுப்பினர்கள் நியமனம் ஆகிற





போது, மாநில சர்க்காரைக் கலந்து கொள்கிறார்களா ? அப்படி கலந்து கொள்ளாமல் இருந்தால், நமது அரசு மத்திய அரசை இதற்காக வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்** : தலைவர் அவர்களே, இதுவரை மத்திய வக்ப் வாரியத்திற்கு மத்திய அரசு நியமனம் செய்கிற நேரத்தில் தமிழக அரசையோ, வேறு எந்த நிறுவனத்தையோ கலந்து ஆலோசித்தது கிடையாது. இனி இத்தகைய சந்தர்ப்ப சூழ்நிலையில், மத்திய வக்ப் போர்டுக்கு உறுப்பினர்கள் நியமிக்கிற நேரத்தில், தமிழக அரசையும் கலந்து ஆலோசிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை தமிழக அரசு மத்திய அரசுக்கு நிச்சயமாக வைக்கும்.

**திரு. ஜே. எம். மியாகான்** : இதுமாதிரி கூட்டங்கள் நடக்கும்போது இது சம்பந்தமான . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அமைச்சர் அவர்கள் உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் கேட்ட கேள்விக்குத்தான் பதில் அளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : தலைவர் அவர்களே, 60-வது கேள்விக் கான துணைக் கேள்வி. வக்ப் போர்டு பிரசிடெண்ட் ராஜிநாமா செய்தார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எந்தத் தேதியில் ராஜிநாமா செய்தார், அதை எந்தத் தேதியிலிருந்து அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது ? இப்போது புதிதாகப் போடப்பட்டிருக்கிற உறுப்பினர்கள், பழைய உறுப் பினர்கள் ரிடையர்மென்ட் தேதி எக்ஸ்பயரி ஆனபிறகு நியமிக்கப்பட்டிருக் கிறார்களா ?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்** : தலைவர் அவர்களே, திரு. சையத் யூசுப் அவர்கள் எந்தத் தேதியிலிருந்து ராஜிநாமா செய்தார்கள் என்ற விபரம் இப்போது என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*), அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

(முற்பகல் 10-20)

2. அறிவிப்புகள்.

(1) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி விபரம் முடிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| 22—11—1983 மற்றும் 23—11—1983 | அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல். |

மேலவை வழக்கம் போல் காலை 9-30 மணிக்குக் கூடும்.

(2) பேரவையிலிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

1. 1983 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1983).

2. 1983 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1983).

3. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1983).

4. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1983).

5. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1983).



6. 1983 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/1983).

7. தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1983).

8. தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்தம்-செல்திறன்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1983).

9. 1983 ஆம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 56/1983).

10. தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 58/1983).

3. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை.

உடுக்குறியிட்ட வினா 45-ன் துணை வினாவுக்கு அளித்த பதிலுக்குத் திருத்தம் குறித்து.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, சட்டமன்ற மேலவையில் திரு. பா. ரா. காமன் அவர்கள் எழுப்பிய உடுக்குறியிட்ட வினா எண் 45-க்கு 7—2—1983 அன்று

“அரசு ஆணைப்படி நியமனம் செய்ததால் இக்கேள்விக்கு இடமில்லை” என்றும் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் எழுப்பிய துணை வினாவிற்கு,

“இவ்வினா எழுப்பியதன் மூலம்தான் எனக்கே இத்தகைய தகவல்கள் எல்லாம் கிடைத்தன. ஆகவே இனிமேல் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று பதிலளித்தேன்.

மேலே குறிப்பிட்ட துணை வினாவிற்கு கீழ்க்கண்ட திருத்தப்பட்ட விடையை மேற்கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன் :—

“அரசாணைப்படிதான் திண்டுக்கல் நகராட்சியில் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்று மூலக் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே தெரிவித்துள்ளேன்.”

## 4. கவன ஈர்ப்பு.

### (1) மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பட்டமேற்படிப்புப் பட்டதாரி ஆசிரியர்களுக்குத் தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்படாமையால் ஊதிய உயர்வுகள் அளிக்கப்படாதது குறித்து.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பட்ட மேற்படிப்புப் பட்டதாரி ஆசிரியர்களுக்குத் தகுதிச் சான்றிதழ்கள் வழங்காமையால், அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய ஊதிய உயர்வுகள் பல ஆண்டுகளாக அளிக்கப்படாததால், அவ்வாசிரியர்களுக்கு நேர்ந்துள்ள இன்னல்கள் குறித்து."

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மூன்று நிலைகளில் அருகதைச் சான்றிதழ்கள் பரிசீலிக்கப்பட்டு, பிறகு ஊதிய உயர்வு வழங்கப்படுகிறது. மேல்நிலைப் பள்ளி அலுவலகம் முதலாவது பரிசீலனை செய்த பிறகு, முதன்மைக் கல்வி அலுவலர் இதைப் பரிசீலனை செய்த பிறகு சென்னையிலுள்ள இணை இயக்குநர் அலுவலகத்திற்கு வர வேண்டும். இதனால் பெருத்த காலதாமதம் ஏற்படுகிறது. ஆசிரியர்கள் நன்மை பெறுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே இதை விரைவு படுத்த ஆணையிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இதுபற்றி தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும்.

---

@ 252 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.





**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே .11—1981 அன்று அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். மீண்டும் —9—1982 அன்று பணிப்பதிவேட்டை வழங்கியிருக்கிறார்கள். இது ரடுத்திருந்தும் கூட, அரசின் நல்லெண்ணத்தை உணராமல், ஆசிரியர்கள் லல்படாமல் ஊதிய உயர்வைப் பெற வேண்டும் என்ற மாண்புமிகு கல்வி மைச்சர் அவர்களின் கருத்தை உணராமல், அலுவலகங்களில் உள்ளவர்கள் பல்படுகிறார்கள். ஆகவே ஒரு தேதியைக் குறிப்பிட்டு இந்தத் திக்குள் சலுகையைத் தர வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் ணையை வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இது விரைவாக நடத்தப்பட ண்டும் என்ற அளவிற்கு அந்த அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள். று மாநிலங்களிலே படித்துப் பட்டம் பெற்றவர்களுடைய பட்டம் ன்னைப் பல்கலைக் கழகத்தின் பட்டத்திற்குச் சமமானதுதானா பதைத் தெரிந்து மதிப்புச் செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. அதை ன்னைப் பல்கலைக் கழகத்திடம் விட்டிருக்கிறோம். அவர்களுடைய ந்து கிடைக்க வேண்டியிருக்கிறது. அதுவும் தாமதத்திற்கு ஒரு ணமாக இருக்கிறது.

### (2) ஓரத்தநாடு அரசு கல்வியியல் கல்லூரி மூடப்பட்டுள்ளது குறித்து.

**Thiru G. SWAMINATHAN:** Sir, I beg to call the attention the Hon. the Minister for Education to a matter of urgent lic importance, namely,

"the closure of the Government College of Education, athanad and the consequent hardship caused to the student mmunity."

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

THIRU G. SWAMINATHAN : Sir, is the Hon. Minister aware that this is the first strike in the College after 27 years, that the Principal of the College insisted on production of Provisional Certificate and refused to accept the University Mark List, that at the time of admission, the students were instructed to purchase uniforms for Rs. 1,000, that the Principal insisted on the Student Leaders to resign their posts and apologise, that he organised groups among the students, that he refused to give the original Transfer Certificate to students and that there were so many other things of mal-administration? Is the Hon. Minister aware of the fact that this particular Principal was previously the Principal of the Government College at Katpadi and that there also there was an indefinite strike due to the maladministration of the Principal? If so, I want to know the action proposed to be taken by the Government regarding this Principal, whether he is going to continue in the College or whether he is going to be transferred.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கல்லூரித் தலைவர் அவர்கள் மீது ஏதேனும் தவறு இருக்கிறதா என்று பார்க்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்வதைப் போல ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். கல்லூரித் தலைவர் மீது தவறு இருக்குமானால், அரசு அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கும். அது குறித்து விசாரிக்கச் சொல்லி அதிகாரிகளை நான் கேட்டுக்கொள்கிறேன்.

@ 253–254 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.





### 5. அரசின் சட்ட முன்வடிவுகள்.

**(1) 1983 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1983).**

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1983 ஆம் ஆண்டு, பாரதியார் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1983) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

நீலகிரி மாவட்டத்தில், வெலிங்டனில் உள்ள இராணுவ அலுவலர் கல்லூரி இப்போது பாரதியார் பல்கலைக் கழகத்துடன் 1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகச் சட்டப்படி இணைந்துள்ளது. பாரதியார் பல்கலைக் கழகச் சட்டம் 7—1—1982-லிருந்து அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் வருவதற்கு முன்னால் ராணுவ அலுவலர் கல்லூரி சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்திருந்தது. இந்தக் கல்லூரியில் பாதுகாப்பு ஆய்வுத் துறை குறித்து அறிவியல் பட்ட மேற்படிப்புக்கான வசதிகள் M.Sc., (Defence Studies) உள்ளன. இக்கல்லூரி தொடர்ந்து சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்திருக்கச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை ராணுவ அதிகாரிகள் மாநில அரசின் முன் வைத்தனர். பாரதியார் பல்கலைக் கழகம் புதிதாக நிறுவப்பட்டிருப்பதால், மேலே சொல்லப்பட்ட தனித் துறையை அங்கே ஏற்படுத்த மேலும் சில காலம் ஆகும் என்பதை ராணுவ அதிகாரிகள் எடுத்துக் காட்டினர். இந்தக் கல்லூரி காமன்வெல்த் நாடுகளுக்கும் மற்ற அனைத்து நாடுகளுக்கும் ஏற்கெனவே அறிமுகமாகியுள்ளது என்றும், இந்நிலையில் மாற்றம் செய்வது கல்லூரியின் நலனுக்கு உகந்தது அல்ல என்றும், அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் மட்டுமே பாதுகாப்பு ஆய்வு இயல் தனியாக இருக்கிறது என்ற காரணத்தாலும், அப்பயிற்சியின் தரத்தைக் கருத்தில் கொண்டும் சென்னைப் பல்கலைக் கழகமே தற்போது அறிவியல் (பாதுகாப்பு) பட்ட மேற்படிப்பு மாணவர்களின் தேர்வுத்தாளை வெளிப் பல்கலைக் கழக ஆசிரியர்களைக் கொண்டு திருத்துவதற்காக வசதி

@ 255–256 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1983 நவம்பர் 21

களைச் செய்து கொடுப்பதாலும், இக்கல்லூரி தொடர்ந்து சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்திருக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

இச்செயல் நோக்கத்திற்காக, 1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 1/1982), பொருத்தமான விதித் துறைகளைத் திருத்தியமைக்கக் கருதப்பட்டுள்ளது. மேற்கூறிய சட்டத்தின் பொருத்தமான விதித் துறைகளில் செய்யக் கருதப்பட்ட திருத்தங்களுக்கு முன்னர் ஒரு நாளிலிருந்து, அதாவது அவ்விதித் துறைகள் செயலுக்கு வரத் தொடங்கிய நாளிலிருந்து செயல் திறன் அளிக்கவும் கருதப்பட்டுள்ளது.

இச்சட்ட முன்வடிவு, மேற்கூறிய முடிவுகளுக்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

சட்டப் பேரவைக்குப் போதிய அவகாசமில்லாததாலும், அதனால் சட்டமுன்வடிவு பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படாததாலும், சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடர் ஒத்தி வைக்கப்பட்டதாலும், அவசர முக்கியத்துவத்தைக் கருதி, உத்தேச சட்டத்தை அவசரச் சட்டமாகக் கொண்டு வர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதன்படி அவசரச் சட்டம் 19—8—1983 அன்று வெளியிடப்பட்டது. இதனைச் சட்டமுன்வடிவாக மாற்றி அதற்கு ஒரு திருத்தத்தையும் கொண்டு வந்து அவை முன் வைத்துள்ளேன்.

திருத்தத்தை உள்ளடக்கிய இந்தச் சட்ட முன்வடிவை பேரவையில் நிறைவேற்றிய வண்ணம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளுமாறும் பின்பு நிறைவேற்றித் தருமாறும் அவைக்குப் பரிந்துரைக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1983 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1983) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."



1983 நவம்பர் 21] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

(முற்பகல் 10-30)

அடுத்து சட்ட முன்வடிவு பல்கலைக் கழகங்கள் பற்றியது. இரண்டையும் பற்றி இந்த முதல் சட்ட முன்வடிவில் பேசும்போது சேர்த்துப் பேசி விடலாம். அடுத்து வரும் சட்ட முன்வடிவை முன்மொழிந்துவிட்டு, விவாதம் இல்லாமல் நிறைவேற்றிவிடலாம்.

மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். இந்த இரண்டு சட்ட முன்வடிவுகளும் குறிப்பிட்ட ஒரு விஷயத்தைப் பற்றியது மட்டும்தான். பாரதியார் பல்கலைக் கழகத்தில் இராணுவப் பயிற்சிக் கல்லூரியை இணைப்பது ஒன்றுதான் இதில் இருக்கின்ற பிரச்சினை. இரண்டாவதாக பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் இந்தப் பல்கலைக் கழகத்திற்குட்பட்ட வட்டாரத்திற்குட்பட்ட கல்லூரிகளையெல்லாம் அதிலேயே இணைந்தது என்று சொல்வதுதான் இரண்டாவது சட்ட முன்வடிவு. இந்தக் குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றி மட்டும்தான் பேச்சு பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் நிறைய சட்ட முன்வடிவுகள் இருக்கின்றன. இதிலே நான் உறுதியாக இருக்க அனுமதிக்குமாறு வேண்டுகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகம் தொடர்பான சட்ட முன்வடிவின்மீது நடைபெறுகின்ற இந்த விவாதத்தில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இப்படிப்பட்ட சட்டத் திருத்தங்கள் முன்பு விடப்பட்டிருந்தாலுங்கூட, காலத்திற்கு ஏற்ப இது தேவையானது என்று கருதி, இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவருவதை நான் வரவேற்கிறேன். தமிழ்நாடு அரசின் சார்பில் பல்கலைக் கழக நிர்வாகங்களைச் செம்மைப்படுத்துவதற்காக, சீரமைப்பதற்காக, நிர்வாகங்களைச் சீர்திருத்துவதற்காக ஒரு விரிவான சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருவது என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேயே, 198●-லேயே தமிழக ஆளுநர் அவர்கள் உரையில் ஒரு உறுதி மொழியை இங்கே நமக்குத் தந்தார்கள். அந்த உறுதி மொழியின் மீது இன்னும் நடவடிக்கை எடுக்கப்பட்டு விரிவான சட்டத் திருத்தங்கள் எல்லாம் கொண்டுவரவில்லையே என்பதுதான் என்னுடைய வருத்தமாக இருந்தது. இன்று பல்கலைக் கழக நிர்வாகங்களை ஜனநாயகப்படுத்த வேண்டிய அவசியமும் அவசரமும் ஏற்பட்டிருக்கிறது. இதை ஒருபுறம் ஆசிரியர்களாகிய நாம் எந்த அளவிற்கு உணர்ந்திருக்கிறோம் என்பதை

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1983 நவம்பர் 21

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும், தமிழக அரசும் உணர்ந்திருக்கிறது என்பதை நான் அரசின் பல நடவடிக்கைகள் மூலம் தெளிவாக அறிந்திருக்கிறேன். காரணம் இந்தப் பல்கலைக் கழக நிர்வாகங்கள் எப்படிச் செயல்படுகின்றன. . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏற்கெனவே சொன்னேன். உவமைகள் எடுத்துச் சொல்வதிலே தப்பில்லை. இந்தச் சட்ட முன்வடிவில் உள்ள பிரச்சினையைப்பற்றி உறுப்பினர் கருத்தை முதலில் எடுத்துச் சொல்லலாம். அதே நேரத்தில் இதையும் நினைவு படுத்துகிறேன். அந்தத் திருத்தங்கள் இன்னும் வரவில்லையே என்று சொன்னால், அதுதான் நல்ல முறை. எடுத்த உடனேயே உறுப்பினர் அவர்கள் சொல்வது உவமானம் உவமேயம் ஆகிறது, உவமேயம் உவமானம் ஆகிறது என்று இருக்கிறது. சட்ட முன்வடிவு சேர்ந்த விஷயத்தை யொட்டிப் பேசுமாறு வேண்டுகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவின் அடிப்படையிலேயே பேசுகிறேன். இந்தச் சட்ட முன்வடிவு வருகின்ற அதே நேரத்தில் இதுபோன்று இன்னும் விரிவான சட்ட முன்வடிவு வரவில்லையே என்ற என்னுடைய ஆதங்கத்தைத்தான் நான் வெளிப்படுத்துகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் அதை வெளிப்படுத்துவதில் தப்பில்லை. அப்படி நான் சொல்லவில்லை. அரம்பமே ஆதங்கமாக ஆகிவிட்டதே என்றுதான் சொல்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : அது இன்று தமிழகத்திலே இருக்கின்ற மதுரை காமராசர் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இந்த மூன்றுக்கும் மட்டுமே இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டிய அவசியத்தை அரசு உணர்ந்திருக்கிறது என்பது எனக்குத் தெரியும். அது எந்தப் பல்கலைக்கழகமாக இருந்தாலும், அரசிடமிருந்து பல்கலைக்கழக நிர்வாகங்கள் நிதி உதவியைப் பெறும்போது மட்டும் அரசிடம் வாதாடுகின்றன, உரிமைப்போராடுகின்றன. அதிலே உள்ள நியாயங்களை அரசுக்காக எடுத்துச் சொல்கின்றன. ஆனால் அரசு சில சீர்திருத்தங்களை அங்கே மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்று சொல்லும்போது கல்வி சுயாட்சி வளர்ச்சிக்காக, கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக



1983 நவம்பர் 21] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

பல்கலைக் கழகம் சுயேச்சைத் தன்மையை நிலை நிறுத்துவதற்காக சில நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லும்போது மட்டும், பல்கலைக்கழக நிர்வாகங்கள் உடனே பல்கலைக்கழகத்தினுடைய சுயேச்சையில் அரசு தலையிடுகின்றன என்று கூக்குரலிடுகின்ற நிலைமையை நாம் இன்று பார்க்கிறோம். இந்த முரண்பாட்டை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த முரண்பாட்டைப் போக்க வேண்டியது அவசியம் என்றால் இப்படி விரிவான சட்டத்திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும் என்று சொல்கின்றேன். அரசும் ஏற்கெனவே கொடுத்திருக்கின்ற உறுதிமொழியை இப்போது செயல்படுத்த வேண்டிய அவசியம், அவசரம் வந்துவிட்டது என்பதை எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன்.

பல்வேறு பல்கலைக் கழகங்களில் இருக்கின்ற, பணியாற்றுகின்ற, ஆசிரியர்களுடைய பணி நிலைமைகளில் பல ஏற்றத் தாழ்வுகள், வேறுபாடுகள் இருக்கின்றன. ஊதிய நிர்ணயத்தில்கூட பல்வேறு ஏற்றத் தாழ்வுகள், வேறுபாடுகள் இருக்கின்றன. ஒருநாள் சட்டத் திருத்தமும் வராத காரணத்தினாலேயேகூட இந்த ஏற்றத் தாழ்வுகள், வேறுபாடுகள் நீடிக்கின்றன என்று கூடச் சொல்லலாம். அங்கே இப்படி ஏற்றத்தாழ்வுகள் அந்த நிர்வாகத்திலே இருக்கின்றன. ஊதியம் நிர்ணயிப்பதிலே வேறுபாடுகள் இருக்கின்றன. இந்த நிலைமையைப் போக்க வேண்டும். பல்கலைக் கழக நிர்வாகத்திலே இருக்கக்கூடிய குறைகளை, கோளாறுகளை நீக்க இந்த மாதிரி விரிவான சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும் என்று இந்த சமயத்திலே வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். அண்மையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேலவையில் சொன்னதுபோல, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திலும் சென்னைப் பல்கலைக் கழகத்திலும் பணியாற்றுகின்ற துணைப் பேராசிரியர்களுக்கு, விரிவுரையாளர்களுக்கு அடிப்படை ஊதியம் ரூ.1,100 என்று அந்தப் பல்கலைக்கழகங்கள் நிர்ணயித்தபோது, அது அங்கீகரிக்கப்பட்ட நிலையில், எங்களுடைய பகுதியிலே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு இந்தச் சலுகை இன்னும் கிடைக்கப்படவில்லை. இதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். அந்த இரண்டு பல்கலைக் கழகங்களிலே கொண்டு வரப்படுகின்ற அந்தச் சலுகைகளை இந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும் விரிவாக்க வேண்டும் என்று இந்த சமயத்திலே நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

பல்கலைக் கழகங்கள் சமுதாய உணர்வை வளர்க்க வேண்டும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்லி வருகின்றார்கள். பல்வேறு கல்வி நிபுணர்களும் கூறி வருகிறார்கள். சமுதாய உணர்வை வளர்க்க வேண்டும், உருவாக்க வேண்டும், சிறந்த ஆராய்ச்சி மையங்களாக பல்கலைக் கழகங்கள் விளங்க வேண்டும் என்பது நம் எல்லோருடைய ஆசை. மேலவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற பல்கலைக் கழகங்கள் ஆராய்ச்சி மேம்பாட்டை, அந்த ஆசையுடைய உணர்வை, நிலையை எய்தியிருக்கின்றனவா என்ற கேள்வியை எழுப்பினால், வேதனை தரக்கூடிய ஒரு பதில் தான் கிடைக்குமே தவிர, நாம் மனம் மகிழ்ச்சி அடையக்கூடிய பதில் நமக்குக் கிடைக்காது என்பதை நான் வேதனையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, தமிழகத்திலே பல்கலைக் கழகங்கள் சுயேச்சையாக, இன்னும் சுதந்திரமாகச் செயல்பட வேண்டுமென்று நாம் ஆசைப்படுகின்ற அதே நேரத்திலே சிறந்த ஆராய்ச்சி மையங்களை, சமுதாயப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய ஆராய்ச்சி மையங்களை, சமுதாயப் பிரச்சினைகளில் தீர்வு காண வழிவகைகளைக் கண்டறியக்கூடிய விஞ்ஞான மையங்களை உருவாக்க வேண்டும். அப்படிப்பட்ட மையங்களாக அவைகள் இருக்க வேண்டும் என்று ஆசிரிய சமுதாயத்தைச் சேர்ந்த நான் ஆசைப்படுகிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலையை உருவாக்க அரசு எடுக்கின்ற எந்த நடவடிக்கையாக இருந்தாலும், நான் அதைப் பரிபூரணமாக ஆதரிக்கிறேன். இன்றையதினம் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் எங்களிடம் சொல்லி வருத்தப்பட்டார்கள். கல்லூரி அட்டானமி வேண்டும், கல்லூரி எல்லாம் சுயேச்சைப்படுத்தப்பட வேண்டும், பல்கலைக்கழகங்கள் ஜனநாயகப்படுத்தப்பட வேண்டும் என்றும் ஒரு புறம் ஆசிரியர்கள் சங்கம் கோரி வருகின்ற அதே நேரத்திலே, கல்லூரி சுயேச்சை, அதாவது அட்டானமி என்று நாம் வழங்கியிருக்கின்ற நிலையில், கல்லூரி ஆசிரியர்கள் சங்கம் அதைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் எதிர்க்கின்றார்களே என்று கூட அமைச்சர் அவர்கள் வருத்தப்பட்டார்கள். ஆனால் நான் உள்ளபடியே சொல்வேன். கல்லூரி ஆசிரியர்கள் சங்கத்தினுடைய உண்மையான கருத்து கல்லூரி சுயேச்சைத் தன்மையை, காலேஜ் அட்டானமியை எதிர்க்க வேண்டுமென்பதல்ல. மாண்புமிகு அமைச்சர் அவர்களே கல்வி ஆலோசனைக் குழுவில் சுட்டிக்காட்டியதுபோல, இந்தக் கல்வி சுயேச்சைத் தன்மையை, நாம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற அந்த உரிமையை, அட்டானமியைத் தவறாகப் புரிந்துகொண்டு சில பல்கலைக் கழகங்களின் நிர்வாகத்தினர், சில கல்லூரிகளின் நிர்வாகத்தினர் பல தவறுகளைச் செய்கின்



றார்கள். அந்தக் காரணத்தினாலேயே பல கோளாறுகள் அங்கே ஏற்படுகின்றன. அதைச் சுட்டிக்காட்ட வேண்டும் என்ற அளவில் வலிமையாக வலியுறுத்த வேண்டும் என்ற காரணத்தினாலேயே இன்று கல்லூரி ஆசிரியர்கள் சங்கங்கள் ஒட்டுமொத்தமாக அதை எதிர்க்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனவே தவிர, உண்மையாக கல்லூரி சுயேச்சைத் தத்துவத்தை, அந்தக் கொள்கையை அவர்கள் எதிர்ப்பது என்பது அவர்களுடைய நோக்கமல்ல என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு ஆசிரியர்கள் சார்பில் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆக. பல்கலைக் கழகங்களுடன் இணைந்திருக்கின்ற பல்வேறு கல்லூரிகளில் இன்று ஆசிரியர்கள் படக்கூடிய அவதியை நாங்கள் விரிவாக எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். இன்று பல்கலைக்கழகங்களில் சமுதாய உணர்வை வளர்க்க வேண்டுமென்றால், ஆராய்ச்சி மேம்பாட்டை வளர்க்க வேண்டும் என்றால், அங்கே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து செயல்பட்டு ஒரு சுமுகமான, அமைதியான, ஆக்கபூர்வமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்றால், நாம் எதிர்பார்க்கக்கூடிய பலன்கள், கல்விப் பயன்கள் கிடைக்கும். அந்தச் சூழ்நிலையைப் பாதிக்கக் கூடிய சில பிரச்சினைகள் இன்றும் தோன்றியிருக்கின்றன. பல்வேறு கல்லூரிகளில் பல்வேறு பேராசிரியர்களுக்கு, துணைப் பேராசிரியர்களுக்கு பல பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை விரிவாக ஏற்கெனவே அமைச்சர் அவர்களிடம் சொல்லியிருப்பதால், நான் இந்தச் சமயத்திலே விரிவாகச் சொல்லாமல் விடுகிறேன். அந்தப் பேராசிரியர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக கல்லூரி ஆசிரியர்கள் சங்கத்தினுடைய தலைவர் பேராசிரியர் நரசிங்கம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற பாதிப்புபற்றி ஏற்கெனவே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இதை ஒரு சான்றாக எடுத்துச் சொன்னேன். இது போன்ற பிரச்சினைகள் இங்கொன்றும் அங்கொன்றுமாக நடைபெற்றிருக்கின்றன. அவைகளைத் தீர்க்க மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1983 நவம்பர் 21

(முற்பகல் 10-40)

இறுதியாக அண்மையில் அரசு வெளியிட்ட ஆணையிலுள்ள குறைபாட்டைச் சொல்லி, விடைபெற விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதற்கும், இந்தச் சட்ட முன்வடிவிற்கும் என்ன சம்பந்தம்? மாண்புமிகு உறுப்பினரவர்கள் சட்ட முன்வடிவின்மீது பேசவில்லை. ஒவ்வொருவரும் இப்படித்தான் பேசுவார்கள் என்றால் எப்படி? இன்றையதினம் சட்ட முன்வடிவுகளை நிறைவேற்ற வேண்டும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, பல்கலைக் கழகங்களுடன் இணைந்துள்ள கல்லூரிகளில் உள்ள பிரச்சினையைத் தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒரு வார்த்தையைப் பிடித்துக் கொண்டு விட்டீர்கள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** 7—10—1983 அன்று கல்வித் துறை 1952 எண்ணுள்ள அரசாணையை வெளியிட்டிருக்கிறது. அதில் கல்லூரித் துணைப் பேராசிரியர்களுக்கான ஒரு கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலுள்ள ஒரு குறைபாட்டைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கல்வித் தகுதியைப் பொறுத்த வரையில்

In other words, the crucial date from which revised qualifications become applicable is the date of issue of orders by the Government prescribing the revised qualifications, viz., 21st September 1977.

என்று சொல்லி "Persons who are appointed after 21st September 1977 in relaxation of the improved qualifications prescribed by the University Grants Commission will have to acquire the improved qualifications within a period of eight years." என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் 21—9—1977-க்குப் பிறகு நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள். இன்று 1983 நவம்பர் மாதம். 6 ஆண்டுகள் முடிவிட்டன. இதற்குள் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களின் கல்வித் தகுதியிலே சில திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறது. சி-பிளஸ்-க்குப் பதிலாக பி-பிளஸ் பெற வேண்டுமென்றால் அவர்கள் மறுபடியும் முதுகலைப் பட்டத் தேர்வு எழுத வேண்டியிருக்கும். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை இதை எழுதியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர்



1983 நவம்பர் 21] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

வர்கள் ஒரு சலுகையைக் கொடுக்க தமிழக அரசின் சார்பில் நடவடிக்கை எடுக்கும்போது, அதிலுள்ள இந்தக் குறையைச் சுட்டிக்காட்டி, இதை நீக்கும் வகையில் தக்க ஆணைகளை வெளியிட்டு, இந்தப் பலன் முழுமையாகக் கல்லூரி ஆசிரியர்களுக்குக் கிட்டச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்கலைக் கழக நிர்வாகத்தைச் சீர்திருத்த சட்டத்திலே உள்ள குறைபாடுகளைத் திருத்துவதற்கு அரசு எடுக்கும் எந்த நடவடிக்கையானாலும் நாங்கள் ஆதரிக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. அருணாசலம் அவர்கள்கூட ஒரு முறை ஒரு கருத்தைக் குறிப்பிட்டார். அவர் சிறந்த கல்வியாளர். கல்வித் துறையில் நீண்ட அனுபவம் பெற்றவர்கள். பல்கலைக் கழகச் சட்டங்கள் சமுதாய வளர்ச்சிக்கேற்ப, சமுதாயத் தேவைக்கேற்ப, சமுதாய மாற்றத்திற்கேற்ப அவ்வப்போது திருத்தப்பட வேண்டும், அதிலே பல திருத்தங்கள் வர வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். சமுதாய மாற்றத்திற்கேற்ப திருத்தங்களைத் தயங்காமல் கொண்டு வர வேண்டுமென்று அவர்கள் அழுத்தம் திருத்தமாகச் சுட்டிக் காட்டினார்கள். அந்தக் கருத்தை அரசு பரிசீலனை செய்து, அரசு கொடுத்த வாக்குறுதியை மிக விரைவாக மதுரை காமராஜ் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஆகிய மூன்று பல்கலைக் கழகங்களின் நிர்வாகங்களைச் செம்மைப்படுத்த மிக விரைவாக சட்டத் திருத்தங்களைக் கொண்டுவந்து, அரசு விரும்பும் சமுதாய மாற்றத்தை அடைய வேண்டுமென்று சொல்லி, திருத்தத்தை ஆதரித்து, அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மீண்டும் நினைவூட்டுகிறேன். பாரதியார் பல்கலைக் கழகத்தில் உள்ள இராணுவப் பயிற்சிக் கல்லூரியைப் பற்றியதுதான் முதல் சட்ட முன்வடிவு. அடுத்து வருவது, பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் அதன் வட்டாரத்திற்குட்பட்ட கல்லூரிகள் இணைப்பது குறித்ததாகும். இடையிலே ஆசிரியப் பிரதிநிதிகள் சொல்ல வேண்டிய பல பிரச்சினைகளை எழுப்புவதற்கு நான் உதவியாகக்கூட இருக்கிறேன் என்ற நல்லெண்ணத்தோடு சொல்கிறேன். சட்ட முன்வடிவுகள் நிறைய இருப்பதால், இன்றைக்கு நேரத்தை அதிகமாக எடுக்காமல், விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லுமாறு வேண்டுகிறேன்.

[1983 நவம்பர் 21

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவரவர்களே, கல்வி அமைச்சர் அவர்களாலே கொண்டு வரப்பட்டிருக்கிற பாரதியார் பல்கலைக் கழகம் குறித்த சட்ட முன்வடிவு; சென்னை மற்றும் மதுரை காமராஜ் பல்கலைக் கழகங்கள் குறித்த சட்ட முன்வடிவுகள் மற்றும், இராணுவப் பயிற்சிக் கல்லூரியைச் சேர்ப்பது சம்பந்தமாகக் கொண்டு வந்துள்ள திருத்தம் ஆகியவற்றை நான் வழிமொழிகிறேன். நான் அவற்றை ஆதரிக்கிறேன். ஆதரித்து நான் பேசுகிறேன் என்று சொல்லிவிட்ட காரணத்தாலே அவர்கள் கொண்டு வந்துள்ள அத்தனையையும் ஆதரிக்கிறேன் என்று பொருள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒன்றைத்தானே கொண்டு வந்திருக் கிறார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஒன்றின் மீதுதான் இப்போது விவாதம் நடைபெறுகிறது என்றாலும் கூட, இது போன்ற சட்ட முன்வடிவுகள் மூலமாகத்தான் எங்களுடைய பிரச்சினைகளைச் சொல்ல வாய்ப்பு ஏற்படுத் திக்கொள்வது வழிமுறை, மரபு என்பதால், சில பிரச்சினைகளைச் சொல்ல வேண்டிய அவசியத்திற்கு நாங்கள் ஆளாகிறோம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் முன்கூட்டியே சொன்னேன். அது இப்போது ரொம்பவும் அவசியமானது. அதில் தலைவர் ஒத்துழைக்கவும் செய்வார். ஆனால் சட்ட முன்வடிவுகள் நிறைய இருப்பதால், சுருக்கமாகச் சொல்லி முடித்தால் போதும்.

*** திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, எங்களுக்கெல்லாம் நேரத்தைக் கருதி ஒத்துழைப்பு தருவதாகச் சொல்லுவதை நான் மனப்பூர்வ மாக ஏற்று, அவர்களுக்கு நன்றி செலுத்தி, சில பிரச்சினைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

பல்கலைக் கழகங்கள், அதிலே இணைக்கப்பட்டுள்ள கல்லூரிகள், அதுவும் தன்னாட்சி பெற்ற கல்லூரிகள்—இப்படி பல கல்லூரிகள் இயங்கி வருகின்றன வென்றாலும், அவர்கள் அவர்களுக்குத் தரப்பட்டுள்ள அந்த அதிகாரத்தை மட்டும் பயன்படுத்துகிறார்களா என்றால், இல்லை என்பதை பல்வேறு சந்தர்ப்பங்களிலே ஆசிரியப் பிரதிநிதிகளாகிய நாங்கள் எடுத்துச் சொல்லி யிருக்கிறோம். கல்வி அமைச்சரவர்களேகூட பல நியாயமான பிரச்சினைகளை ஏற்று, அவைகளுக்கு முடிவு காண வேண்டும், முடிவு காண வேண்டுமென்று இதே சட்ட மேலவையிலே பல உறுதிப்பாடுகளைக்கூடச் சொல்லியிருக்கிறார்கள்.



1983 நவம்பர் 21] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

என்றாலும்கூட அந்த நிறுவனங்கள் அவற்றைப் பின்பற்றுகின்றனவா என்றால். பின்பற்றவில்லை என்பதையும் கல்வி அமைச்சரவர்கள் நன்றாக உணருவார்கள். எல்லா நிறுவனங்களையும் நான் சொல்லவில்லை என்றாலும், குறிப்பாக நான் ஏற்கெனவே கோடிட்டுக் காட்டியுள்ள சில பிரச்சினைகளை அமைச்சரவர் களுடைய கவனத்திற்கு மீண்டும் கொண்டுவர ஆசைப்படுகிறேன். இப்படி சட்ட முன்வடிவுகளை நாம் செய்யும்போது. அரசு தரும் உத்தரவையோ, பல்கலைக் கழகங்கள் தரும் ஆணையையோ மீறுகின்ற கல்லூரிகளினுடைய அங்கீகாரத்தை ரத்து செய்யவும், கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதற்கும் சட்ட வகைகளைக் கொண்டு வர வேண்டுமென்ற எண்ணத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். சாதாரணமாக தன்னாட்சிக் கல்லூரிகள் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆசிரியர் தரப்பில் அதனுடைய நோக்கங்களை மறுக்க வில்லை. எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல நோக்கத்தை மறுக்கவில்லை. ஆனால் அதைப் பயன்படுத்திக்கொண்டு. தன்னாட்சியை 'தனி ஆட்சி'-யாக அவர்கள் எடுத்துக்கொண்டு, ஆசிரியர் களுக்கும் மற்றவர்களுக்கும் பாதகம் விளைவிக்கும் நடவடிக்கையைத் தடுக்க வழி [illegible] இல்லையே. அதைச் செய்ய வேண்டுமென்பதுதான் ஆசிரியப் பிரதிநிதிகளின் [illegible] என்பதை அரசும், அமைச்சர் அவர் களும் உணர்ந்து [illegible] என்று கருதுகிறேன். இந்தத் தன்னாட்சி முறையிலே எப்படி [illegible] காரணமாக கோவையிலே உள்ள பி.எஸ்.ஜி. கலைக் கல்லூரியில் ஏற்கெனவே போராட்டம் செய்த ஆசிரியர்கள் மீது அரசே ஒரு உத்தரவு போட்டிருக்கிறது. ஆசிரியர்கள் ஏற்கெனவே 25 நாட்கள் ஊதியம் இழந்திருப்பதால், கல்லூரி நிர்வாகம் அவர்கள்மீது வேறு எந்த ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்ளப் படுகிறது என்று அரசு உத்தரவு போட்டிருக்கிறது. அப்படி அரசு உத்தரவு

(பேரவைத் தலைவர் திரு. எஸ். ஜெ. சாதிக் பாட்சா தலைமை)

போட்டபிறகும்கூட அந்தக் கல்லூரி நிர்வாகம் அந்த ஆசிரியர்களிலே ஒருவருக்கு இரண்டு ஊதிய உயர்வுகளை உடன் வெட்டி, ஒருவருக்கும் 30,000 ரூபாய்க்கு மேலே நஷ்டத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அதுமட்டு மல்லாமல் 1980-லே [illegible] வேலை செய்யவில்லை என்று சொல்லி, இப்போது உத்தரவு போட்டு, மூன்று ஊதிய உயர்வுகளை [illegible] எடுக்கப்பட்டு 'கட்' செய்து, 40,000 ரூபாய் அளவுக்கு ஆசிரியப் பெருமக்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இப்படிப்பட்ட தண்டனைகளை அது தரும்போது, அரசும் ஆசிரியர்கள் சார்பிலே சொல்லு

இறோம். உங்களுடைய உத்தரவுக்கு முரணாக நடக்கிறார்களே என்று சொல்லும்போது, அரசு என்ன சொல்கிறதென்றால், இத்தகைய தண்டனைகளை எதிர்த்து அரசுக்கு மேல் முறையீடு செய்ய தனியார் கல்லூரி ஒழுங்காற்றுச் சட்டத்திலே ஆசிரியர்களுக்கு இடமில்லை என்று சொல்லி, மறுக்கிறது. அரசு ஒரு உத்தரவு போடுகிறது. அதை நிர்வாகம் நிறைவேற்ற வில்லை. நிர்வாகம் நிறைவேற்றவில்லை என்று அரசுக்குப் புகார் செய்யும் போது. விதிகளிலே இடமில்லை என்றால், அரசு ஏன் அப்படிப்பட்ட விதி முறைகளை உருவாக்கவில்லை? அதற்கு முன்னாலே ஏன் உத்தரவு போட வேண்டும்? தன்னுடைய கையிலே அதிகாரம் இல்லை என்றால், ஏன் உத்தரவு போட வேண்டும்? உத்தரவு போட்ட பின்னாலே, அவ்வுத்தரவுக்கு நிர்வாகத்தை பணியவைக்க முடியாது என்று சொல்லும் நிலை, அரசினுடைய கையாலாகாத் தன்மையைக் காட்டக்கூடியது என்று எண்ணக்கூடிய சூழ்நிலைகளைக் காட்டுகிறதே; இது தேவைதானா, நியாயம்தானா என்று கேட்க விரும்புகிறேன்.

மற்றொன்று, ஊதிய வெட்டு குறித்துகூட அரசுக்கு மேல்முறையீடு செய்ய எந்தவிதமான வாய்ப்பும் இல்லை என்று தெரிவித்திருக்கிறது. இந்த வேலை நீக்கம் செய்யும் முயற்சியில் வேண்டாதவர்களை, இந்த பணியாற்றுபவர்களை, உரிமைக்காகப் போராடுபவர்களை, சங்கத்திலே வெளியேற்றுவதற்குப் பல்வேறு பகுதிகளிலே நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், டாக்டர் ஜாகிர் உசேன் கல்லூரியில் பேராசிரியர் தம்சுதீன் அவர்கள் வேலை நீக்கம்

(முற்பகல் 10-50)

செய்யப்பட்டிருக்கிறார்கள். அதுபோல் சிவகாசி அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரியில் பேராசிரியர் ஜெகதீசன் அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக் கிறார்கள். இன்றைக்கு அங்கே போராட்டமே நடைபெற்றிருக்கிறது. மதுரைப் பல்கலைக் கழக சிண்டிகேட் அப்பேராசிரியரைச் சேர்க்க வேண்டுமென்று சொல்லியது. அப்போதும் அவர்கள் திருப்பி எடுத்துக்கொள்ளவில்லை. அவர் உயர்நீதிமன்றத்திற்குப் போகிறார். நீதிமன்றம் அவருக்கு ஆதரவாக தீர்ப்பு அளித்த பின் கூட, செலவு செய்த பணத்தையும் நிர்வாகம் திருப்பித் தர வேண்டுமென்று சொல்கிறது. அப்போதும் அவரை எடுத்துக்கொள்ளவில்லை. கடைசியாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலேயே அந்த நிர்வாகத்திற்கு எச்சரிக்கை விடுத்தார்கள். அப்போதும் அவர்கள்



அதைக் கேட்கவில்லை. பேராசிரியர் ஜெகதீசன் பிரச்சினையில் நியாய மில்லையா என்று கல்வி அமைச்சர் கேட்டார். அவர் திருச்செந்தூரில் மாநாட்டில் பேசிய பேச்சு இது. அந்த நிர்வாகத்தின் மீது இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று நான் அறிய விரும்புகிறேன். இப்படிப் பட்ட நிர்வாகங்களை ஒழுங்குபடுத்துவதற்கு ஏன் இதுவரை அரசு சட்டத் திருத்தங்களைக் கொண்டு வரவில்லை? மேலும் அதே கல்லூரியிலே ஸ்பெஷல் பீஸ் வசூலிக்கப்படுவது சம்பந்தமான கணக்கை நிர்வாகம் தன் கணக்கில் வைத்துக்கொண்டிருக்கிறது. பட்டப்படிப்புக்கு வருகின்ற உதவித்தொகையை அவர்கள் கூட கணக்கில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுபோல் பட்ட மேற்படிப்புக்கான நிதி உதவித்தொகையையும் அவர்கள் தன் கணக்கில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் இதுபோல் எவ்வளவோ தவறு செய்துகொண்டிருக்கிறார்கள். இப்படி பல தவறுகளை, ஊழல்களைச் செய்கின்ற நிர்வாகத்தின் மீது அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க முடிய வில்லையென்று சொன்னால், நாம் இப்படிப்பட்ட எத்தனை சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்தாலும், பிரயோஜனமில்லை. நல்லதற்காகக் கொண்டு வருகிற எந்தச் சட்ட முன்வடிவாக இருந்தாலும், நாங்கள் ஆதரிக்கிறோம். ஒரு ஆசிரியர் நல்ல முறையில் நிம்மதியாக இருந்தால்தான், நல்லமுறையில் பணியாற்ற முடியும். கல்வியின் தரமும் உயரும். அதே நேரத்தில் சில நிர்வாகங்கள் அரசு கொண்டு வருகின்ற சட்டத்தை அறுத்து உடைக்கக் கூடிய செயலைச் செய்துகொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட நிர்வாகங்களைத் தண்டிக்க உடனடியாக அரசு சட்டம் கொண்டுவர வேண்டும். அவைகளுக்கான அனுமதியை ரத்து செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். நீண்ட நேரம் பேசக் கூடாது என்று தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டிருப்பதால், சுருக்கமாக இன்னும் ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும் சொல்லி உரையை முடிக்கிறேன். தஞ்சையில் என்னுடைய தொகுதியில் பொறையாரில் டி.பி.எம்.எல். கல்லூரி இருக்கிறது. அந்தக் கல்லூரியிலிருந்து பேராசிரியர் சேகரன் பணிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். சட்டத்திற்குப் புறம்பாக அவர் அவ்வாறு செய்யப்பட்டிருக்கிறார். இப்போது அக்கல்லூரி முதல்வரை நிர்வாகம் பணிநீக்கம் செய்துள்ளது. அவர் வழக்குமன்றத்திற்குப் போன பிறகு, அங்குள்ள முதல்வருக்கும் நிர்வாகத்திற்கும் போராட்டம் வந்திருக்கிறது. இதனால் இப்படிப்பட்ட நிர்வாகங்களில் கல்வி வளர்ச்சி நடைபெறவில்லை. கல்வி வளர்ச்சி நடைபெறுவதற்கு பதிலாக நிர்வாகத்திற்கும் முதல்வருக்கும் "நான் பெரியவனா, நீ பெரியவனா?" என்ற மோதல் தான் நடைபெறுகிறது. வேறொன்றுகூட அந்த ஜாதி குரூப், இந்த ஜாதி குரூப் என்கிற அடிப்படையில்

பிரிவுகள் வேறு. இப்படி தவறுகள், ஒழுங்கீனங்கள் நடைபெறுகிற கல்லூரிகளில் எல்லாம் அரசு தலையிட்டு நியாயம் கிடைக்க ஏற்பாடு செய்ய இதுவரை அரசால் என்ன சட்ட முன்வடிவு இயற்றப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். நிர்வாகங்கள் சட்டத்திற்குப் புறம்பாக எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்கிற நிலை இருக்கிறது. சட்ட திட்டங்களை அனுசரிக்காமல், எதை வேண்டுமானாலும் செய்யலாம், ஒழுங்கீனங்களைச் செய்யலாம் என்கிற முறையில் செயல்படுகின்ற கல்லூரிகளுக்கான அனுமதியை அரசு ரத்து செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டும். அதற்குரிய சட்டங்களைக் கொண்டுவர வேண்டும். சென்னைப் பல்கலைக் கழகத்திலே தேர்வு முடிவுகள் சரியான நேரத்தில் வெளியிடப்படுவதில்லை. மேலும் காலா காலத்திலே சான்றிதழ்கள் அனுப்பி வைக்கப்படுவதில்லை. சான்றிதழ் சரியான நேரத்தில் கிடைக்காத காரணத்தால், அடுத்த ஆண்டுக்கான படிப்பைப் படிக்க முடியாத சூழ்நிலை மாணவர்களுக்கு ஏற்பட்டு, அவர்களுடைய படிப்பு வீணாகிறது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் இருக்கின்ற இப்படிப்பட்ட கோளாறுகளை எதிர்காலத்தில் களைய வேண்டும்.

மதுரை-காமராசர் பல்கலைக் கழகத்தில் சில கோரிக்கைகளை வைத்துக் கொண்டு ஆசிரியர்கள் போராடினார்கள். அதே கோரிக்கைகளை வைத்து பாரதிதாசன் பல்கலைக் கழக ஆசிரியர்களுடைய கோரிக்கைகளை அப்பல்கலைக் கழகம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் ஆசிரியர்களை பேச்சுவார்த்தைக்குக் கூட அழைக்கவில்லை என்றால் எப்படி போராட்டங்களைத் தவிர்க்க முடியும்? இப்படிப்பட்ட குறைகளை இந்த நேரத்தில் தான் நாங்கள் சுட்டிக்காட்ட முடியும். இத்தகைய குறைகளைக் களைய அரசு இதுவரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று நான் அறிய விரும்புகிறேன்.

கடைசியாக, ஒரே ஒரு வேண்டுகோள். பல்கலைக் கழகங்களுக்கு 'செனட்' உறுப்பினர்கள் நியமன முறையிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அந்தந்தப் பல்கலைக் கழக எல்லைக்குள் இருக்கிற பிரதிநிதிகளை செனட் உறுப்பினர்களாகத் தேர்வு செய்வதில்லை. கட்சியில் இருக்கின்றவர்களை எங்கேயோ இருந்து [illegible] செய்யலாம் என்கிற முறையில் சட்டத்தில் வழிவகை செய்ய [illegible] செய்துகொண்டு வருகிறார்கள். அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பாக இதிலே [illegible] உள்ளவர்கள் செனட்டில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதற்கான வழிவகை இப்போது இல்லையென்றாலும் கூட, வருங்காலத்திலேயாவது இதைக் கருத்தில்



ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கட்சி சார்பிலே யாரையோ அனுப்புவதை விட்டு விட்டு, கல்வியிலே உண்மையான அக்கறையுள்ள பிரதிநிதிகளை, அந்தந்தப் பகுதியிலே இருப்பவர்களை, தொடர்புள்ளவர்களை செனட்டில் உறுப்பினர்களாக நியமிப்பதற்குரிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். கல்வியின் முன்னேற்றம் கருதி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதனைச் செய்ய வேண்டும் என்று சொல்லி, அமைகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : யாரையோ எங்கிருந்தோ அனுப்புகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். மேலவை உறுப்பினர்களிலிருந்துதான் அனுப்பப்படுகிறார்கள். விவரம் தெரிந்தவர்களைத்தான் அனுப்புகிறார்கள். யாரையோ எங்கோ அனுப்புகிறார்கள் என்று சொல்வது அவ்வளவு சரியான வாதமாகாது.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா) : வாதத்திற்கான நேரமல்ல இது. அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் அளிப்பார்கள்.

திரு. செ. முத்துசாமி : மாற்றுத் தலைவர் அவர்களே, பாரதியார் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் மதுரை-காமராசர் பல்கலைக் கழகச் சட்டங்களுக்குக் கொண்டுவந்திருக்கக்கூடிய திருத்தங்களை நான் ஆதரிக்கின்றேன். வரவேற்கிறேன். இந்தத் திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கக் கூடிய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடத்தில் ஒன்றைக் கேட்கிறேன். சென்னைப் பல்கலைக் கழகத்தினுடைய எல்லை என்ன? பாரதியார் பல்கலைக் கழகத்துடன் சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களிலுள்ள கல்லூரிகளை இணைக்காமல் விடுபட்டுப் போனதற்குக் காரணம் என்ன? சேலத்தில் இருப்பவர்கள் சென்னைக்கு வந்து சேர எவ்வளவு ஏற்படுகிறது என்று தெரியாதா? ஏன் இதை இன்னும் செய்யாமல் தவிர்த்துக் கொண்டிருக்கிறார்கள்? சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஏற்கெனவே ஏராளமான கல்லூரிகள் இருக்கின்றனவே. இந்த இரண்டு மாவட்டங்களிலும் உள்ள கல்லூரிகளை பாரதியார் பல்கலைக் கழகத்துடன் இணைத்தால் நான் மகிழ்ச்சியடைவேன். இது என்னுடைய ஆலோசனை.

அதற்கு அடுத்து, பாரதியார் பல்கலைக் கழகம் என்பது நாட்டுக்கு, நாட்டு மக்களுக்குத் தத்துவங்களை எடுத்துச் சொன்ன பாரதி பெயரைத் தாங்கி வந்துள்ள பல்கலைக் கழகம். "தேம்பி யழுங்குழந்தை நொண்டி திடங்கொண்டு போராடு பாப்பா" என்று பாரதி பாடியதுபோல், தேம்பி அழும் நிலையிலுள்ள ஆசிரியர்கள் முடியாத கட்டத்தில் தங்கள் உரிமைகளுக்காகப் போராடும்

நிலையும் அவர்களுடைய உடைமைகளில் நிர்வாகங்கள் கை வைக்கக் கூடிய நிலையும் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை இன்னமும் நீடித்துக்கொண்டே போனால், பேராசிரியர்களுக்கு என்றைக்குத்தான் பாதுகாப்பு கிடைக்கும்? பி.எஸ்.ஜி. கல்லூரியைப் பொறுத்தவரையில், 34 நாட்கள் பாதுகாக்கப்பட்டது போதும், தண்டனை வழங்கப்பட்டது போதும் என்று தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஆட்சி உத்தரவு போட்டதற்குப் பிறகும் கூட, தனிப்பட்டவர்கள் உச்சகட்டத்தில் அமர்ந்துகொண்டு, மீண்டும் ஆசிரியர்களுடைய சம்பளத்தில் கை வைத்து, அதை இன்னமும் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்றால், இந்த நாட்டில் 'நேச்சுரல் ஜஸ்டிஸ்' என்பது போய்விட்டதா என்று நான் கேட்கிறேன். ஒரு மனிதனுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டியது கிடைக்க வேண்டாமா? இது ஒரு ஜனநாயக நாடு தானே? ஜனநாயக ரீதியாக, சட்ட ரீதியாகக் கிடைக்க வேண்டிய நியாயம் கிடைக்கவேண்டாமா? அவர்களுக்கு உரிமையுள்ள நீதி அவர்களுக்குக் கிடைக்க வேண்டாமா? யார் தடுத்தாலும், அதை உடைத்தெறிந்து தமிழக அரசு அப்படிப்பட்டவர்களை அரசின் கட்டுப்பாட்டுக்குள் உட்படுத்த வேண்டாமா? அதுவும் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட, நாட்டு மக்களிடையே விடுதலை எழுச்சியை உண்டு பண்ணிய தேசிய கவி பாரதியின் பெயரால் இருக்கின்ற ஒரு பல்கலைக் கழகத்தில் இப்படிப்பட்ட அநியாயம், அக்கிரமம் நடக்கலாமா? பி.எஸ்.ஜி. கல்லூரியில் பணியாற்றுகின்ற பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுடைய குறைகளைக் களைவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தன்னாட்சிக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. தன்னாட்சி என்பது தனியார் கல்லூரிகளுக்கு மட்டும்தானா? அது அரசாங்கக் கல்லூரிகளுக்கு இருக்கக் கூடாதா? அரசுக் கல்லூரிகள் எல்லாம் தன்னாட்சியுடன் இருந்து செயல்பட தகுதியுடையவைகள் இல்லையா? அரசுக் கல்லூரிகளுக்கும் தன்னாட்சி கொடுக்க வேண்டுமென்கிற கோரிக்கையை அரசு ஏன் பரிசீலிக்கவில்லை? தனியார் கல்லூரிகள் தங்களுடைய அதிகாரங்கள் அத்தனையையும் ஆசிரியர்கள் மீது திணிக்க பயன்படுத்துவதற்காக இந்த அதிகாரத்தைத் தந்திருக்கிறார்கள். தனியார் கல்லூரிகளில் படிக்கிறவர்கள் யார்? அரசுக் கல்லூரிகளில் ஏழையெளிய மக்கள் படிக்கிறார்கள். ஆனால் தனியார் கல்லூரிகளில் அப்படி அல்ல. ஏன் மத்திய அரசு முன்வந்து இந்தத் திட்டத்தை அரசுக் கல்லூரிகளுக்கும் அமுல்



படுத்தவில்லை என்று அறிய விரும்புகிறேன். தனியார் கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிற தன்னாட்சி அரசுக் கல்லூரிகளுக்கும் வழங்கப்பட வேண்டும். அரசுக் கல்லூரிகள் மீது மட்டும் என்ன கோபம்?

அடுத்து, ரெசர்ச் செய்து டாக்டரேட் பெறுகிறார்கள். சமுதாயத்தில் இருக்கக் கூடிய ஒழுக்கக் கேடுகளுக்கு என்ன காரணம்? தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தவறுகள் செய்வதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்பது போன்றவற்றை எல்லாம் ஆராயக் கூடிய வகையில் ஆசிரியர் பணி நல்ல முறையில் இருக்க வேண்டும். இந்த சமுதாயத்தை நிர்வகிப்பது என்பது

(முற்பகல் 11-00)

மக்களுடைய சுபிட்சத்திற்காக. இந்த நல்ல வாழ்விற்கு எதிராக எந்தெந்த இயந்திரங்கள் கெட்டுப் போயிருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். நோய்நாடி நோய் முதல்நாடி என்று சொல்வார்கள். அதற்கு என்ன காரணம் என்பதைப் பார்க்க வேண்டும். இன்றைக்கு பல்வேறு துறைகளில் ஆராய்ச்சிப் பட்டங்கள் பெற முடிகிறது. அதனுடைய பயன்கள் பற்றி சிந்திக்க வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன. இப்போது உள்ள பொருளாதாரக் கொள்கைகளில் ஏற்பட்டுள்ள சிக்கலை நீக்க என்ன வழி—இதுபோன்ற வாழ்க்கைக்குத் தேவையான முறையில் ஆராய்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றனவா, அப்படி ஏற்பட்டு அது வெற்றி பெற்றிருக்கிறதா என்று பார்த்து, எப்படி இவைகளைப் போக்க முடியும் என்று ஆராய்ச்சி இருக்க வேண்டும் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

மனிதனைப்பற்றி, இந்தத் தேவைகளைப்பற்றிச் சிந்திக்க வேண்டாமா? இந்த அரசாங்கம் இருக்கிற காலத்தில் முற்போக்காகச் சிந்திக்க வேண்டும். இதை என்னுடைய சிபாரிசாக வைத்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்ததாக, மதுரைப் பல்கலைக் கழகத்தில் செந்தமிழ்ப் புலவராக எம்.ஏ. பட்டத்தில் அங்கீகரித்திருக்கிறார்கள். ஆனால் சென்னைப் பல்கலைக் கழகத்தில் அந்தச் சலுகையைக் கொடுக்கவில்லை. என்ன நியாயம்? வட மாநிலங்களின் பல்கலைக் கழகங்களைவிட சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'ஸ்டாண்டர்டு' அதிகமாக இருந்த நிலை ஒரு காலத்தில் இருந்தது. அதுபோக இப்போது சென்னைப் பல்கலைக் கழகத்திலிருந்து செல்கிற யாரையும் வேறு பல்கலைக் கழகங்களில் தேர்வு இல்லாமல் ஏற்றுக்கொள்வதில்லை என்ற நிலைமை இருக்கிறது. அதையும் நாம் சிந்திக்க வேண்டும். ஆகவே இந்தப்

[திரு. செ. முத்துசாமி] [1983 நவம்பர் 21

பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில், இந்தக் காரியத்தைச் சிந்தித்துச்
செய்ய வேண்டும். சென்னைப் பல்கலைக் கழகத்தில் உள்ளவர்கள் அங்கே
சென்று எம்.ஏ. தேர்வு எழுத ஏற்பாடு செய்ய வேண்டும்.

பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் கம்ப்யூட்டர் விஞ்ஞானத்தை
வைத்திருக்கிறார்கள். அதற்காக அந்தத் துணைவேந்தரை நான் பாராட்டு
கிறேன். இதைப் பின்பற்றி, எல்லாத் துணைவேந்தர்களும் நவீன உலகத்தில்
பல்வேறு படிப்புகளை கம்ப்யூட்டர் மூலம் உருவாக்க வேண்டுமென்று இந்த
நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, கராத்தே என்ற பயிற்சி, உடல் வலிவுக்கும் மன வலிவுக்கும்,
தற்காப்புக்கும் ஏற்ற ஒரு பயிற்சியாக இருக்கிறது. இதை கல்லூரிகளிலும்
உயர்நிலைப் பள்ளிகளிலும் கட்டாயப் பாடமாக ஆக்க வேண்டும். அண்மையில்
ஜப்பானிலிருந்து வந்த இந்தக் கலையின் வீரர் திரு. யாமகுச்சி என்பவர்
நடத்திய விளையாட்டுக்களை நமது முதலமைச்சர் அவர்கள் இரண்டு மணி
நேரம் பார்த்தார்கள். தன்னுடைய முக்கியமான பணிகளையெல்லாம் ஒதுக்கி
விட்டு, இந்த நிகழ்ச்சியை அவர்கள் கண்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டைப்
பொறுத்தவரையில், திரு. ஆர். வி. டி. மணி அவர்கள் கராத்தே நிபுணராக
இருக்கிறார். அவரை வைத்து அரசாங்கம் இந்த கராத்தே விளையாட்டை
பள்ளிகளிலும் கட்டாயப் பாடமாக நடத்த வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா): உறுப்பினர்
அவர்களே கராத்தே பயிற்சி பெற்றால் நலமாக இருக்கும்.

திரு. செ. முத்துசாமி: மேலவை மாற்றுத் தலைவருக்கு நன்றி. இப்
போது மேலவைத் தேர்தல்கள் நேரம். இதை முடித்துக்கொண்டு, நிச்சய
மாக இது குறித்து ஆலோசனையில் ஈடுபடுவேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாற்றுத் தலைவர் அவர்களே, கராத்தே பயிற்சி
தேர்தல் சமயத்திலே மிகவும் முக்கியமாகத் தேவைப்படுகிறது என்பதை உறுப்
பினர் உணர்வாரா?

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன்
அவர்கள் என்னுடைய நலனில் அக்கறை உடையவர். இப்போது கராத்தே
கற்றுக்கொண்டால், தேர்தல் வேலை நின்றுவிடும். அவருடைய யோசனையை
மறுக்கவில்லை. சற்று காலம் தள்ளி ஏற்பேன்.



1983 நவம்பர் 21]

திரு. ம. சங்கரலிங்கம்: ஆசிரியர் தேர்தல் சமயத்தில் போட்டியிடுகிறவர்களுக்கு கராத்தே தேவையில்லை. ஆனால் பொதுத் தேர்வில் போட்டியிடுகிறவர்களுக்கு இது தேவையாயிருக்கும் என்பது என் கருத்து.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாற்றுத் தலைவர் அவர்களே, அரசியலில் இருந்துகொண்டு, பொதுமக்களுடைய ஓட்டுகளை வாங்குபவர் கராத்தே தேவையென்று சொல்லி, அவமானப்படுத்த வேண்டாம். அவர்களுக்கு நிச்சயமாகப் பாதுகாப்பு இருக்கிறது. ஆனால் ஆசிரியர்கள் தேர்தல் தேர்தல்களின் போதுதான் அவர்களுக்குள் மோதல் ஏற்பட்டு, சண்டை, அடிதடி என்று பேப்பரில் செய்திகள் வருவதைப் பார்த்திருக்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: சண்டை என்பது மனிதனிடம் இருக்கக்கூடிய இயற்கையான குணம். எல்லா இடத்திலும் இருக்கிறது. ஆகவே ஆசிரியர்கள் என்று சொல்லி இனப் பாகுபாடு செய்ய வேண்டாம். ஆசிரியர்கள் சமுதாயத்தில் படித்தவர்கள். படிப்பாளிகளாக இருக்கிறார்கள். சண்டை என்பது மனித பலகீனம். ஏன் அமைச்சரவையில் கூட சில சமயங்களில் சண்டை இருக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: அமைச்சரவையில் சண்டை இருக்கிறது என்று சொல்லக்கூடாது. காரணம் அமைச்சரவையில் சண்டை இருந்தால், அமைச்சரவை இருக்காது. ஆசிரியர்களிடத்தில் இருக்கிறது என்பதை ஒத்துக்கொண்டால் ஒத்துக் கொள்ளலாம், இல்லாவிட்டால் மறுத்துவிடலாம். சண்டை என்பது மனித பலகீனம் என்பதை ஆட்சேபிக்கவில்லை. அமைச்சரவையில் சண்டை இல்லை.

திரு. செ. முத்துசாமி: நான் இந்த அமைச்சரவைப்பற்றிச் சொல்லவில்லை. நாட்டில் உள்ள நிலைமையைச் சொன்னேன். மனித குணங்களில் எங்கும் போட்டி. சண்டை, சங்கடங்கள் இருக்கின்றன. அது சகஜம். மந்திரிகள் அதற்கு விதிவிலக்கு இல்லை.

திரு. சி. இராமலிங்கம்: மாற்றுத் தலைவர் அவர்களே, சண்டை என்று இருக்கிற பகுதியையும், மந்திரி சபை என்ற பகுதியையும் நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 'எந்த மந்திரிசபையாக இருந்தாலும்' என்ற சொற்றொடரைக் கூட நீக்கிவிடலாம்.

[1983 நவம்பர் 21

திரு. செ. முத்துசாமி : மாற்றுத் தலைவர் அவர்களே, வாதத்திற்கு வாத
மாகச் சொன்னேன். அதற்காக யாரையும் குறைத்து மதிப்பிடவில்லை.
மனிதர்கள் எந்தப் பொறுப்பை வகித்தாலும் பலகீனம் உண்டு என்று சொல்
கிறேன். காரணம் நானும் ஒரு ஆசிரியர்.

அடுத்ததாக, அரசு ஊழியர்களுக்கு எல்.டி.சி. கொடுக்கிறோம். அரசாங்கப்
பள்ளிகளின் ஆசிரியர்களுக்கும் அரசுக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் நாம் இதை
அளிக்கிறோம். ஆனால் இந்த எல்.டி.சி.யை தனியார் பள்ளி, தனியார்
கல்லூரி ஆசிரியர்களுக்கு அளிப்பதில்லை. அவர்களுக்கும் அளித்து சமநீதி
வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குமேல் அதைக் கேட்க
விரும்பவில்லை. திரு. நரசிங்கம் அவர்கள் கல்லூரி சங்கத்தின் தலைவராக
இருக்கிறார். அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை என்ற பெயரால், அவர் சங்கம்
நடத்துவதையே மிரட்டுவது போல் நமது நடவடிக்கை அமைந்திருக்கிறது
என்று சென்ற முறை சொன்னேன். அவர் ரிடையர் ஆகக்கூடிய நேரம்.
இப்படி யார் ரிடையராக இருந்தாலும், அவர்களது கேசைப் பரிவோடு கவ
னிக்க வேண்டும். அப்படி இவர் விவகாரத்தையும் பரிவோடு பரிசீலனை
செய்யக்கூடாதா? இவ்வளவு காலம் சர்வீஸ் செய்தவரை, பனிஷ்மெண்ட் என்று
கேவலப்படுத்த வேண்டுமா? அதை வாபஸ் செய்யக்கூடாதா? தமிழாசிரியர்
களைப்பற்றிப் பேசும்போது, கல்வியமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.
நாங்கள் நினைத்தால் உதவவும் செய்யலாம், அல்லது கோர்ட்டில் அவை வரா
மல் இருக்கவும் செய்யலாம் என்று இரண்டையும் கல்வியமைச்சர் அவர்கள்
சொன்னார்கள். அரசாங்கத்திற்கு அத்தகைய அதிகாரம் இருக்கிறது
என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அரசாங்கம் நல்லதை நினைக்கட்டும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாற்றுத் தலைவர் அவர்களே,
தமிழாசிரியர்களுக்கு நாங்கள் உதவி செய்ய வேண்டுமென்று சொல்லிக்
கொண்டிருக்கிறோம். அதேநேரத்தில் திரு. மீனாட்சிசுந்தரம் போன்றவர்கள்
அப்பீல் செய்யலாமா என்று கேட்டார்கள். அதற்கு என் எதிர்ப்பு சொல்ல
வேண்டுமென்று கேட்டார்கள். அரசாங்க நடைமுறைப்படி, இலாக்காவினர்
செய்துகொண்டிருக்கிறபோது, அவர்கள் நலனில் அக்கறை கொண்டு அரசு
தமிழாசிரியர்களுக்கு உதவுவது என்ற நிலைமை இருக்கிறது என்ற செய்தியை
அப்போது தெளிவாகச் சொன்னேன். அப்படிச் சொல்லிவிட்டு, அரசு
எதிர்க்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் விரும்பினால், அதைக்கூட
செய்யலாம் என்றுதான் சொன்னேன்.



1983 நவம்பர் 21]

திரு. செ. முத்துசாமி : மாற்றுத் தலைவர் அவர்களே, சில விஷயங்களைப் புரிந்து கொள்ளும்படி அமைச்சர் பொறுப்பில் உள்ளவர்கள் சொன்னால், இந்த சமுதாயம் துடிக்கும். திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களுக்குக் கொடுத்த பதில் அது அல்ல.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறபோது, ஆசிரியர்களுக்கு நன்மை தரக்கூடிய பதிலை எதிர்பார்த்து அதற்கேற்ப கேள்வியைக் கேட்பது நல்லது. அதற்கு மாறாக நாங்கள் கோர்ட்டுக்குப் போகிறோம் என்று கேட்காமல் இருந்தால், அதுவும் நல்லது.

திரு. செ. முத்துசாமி : மாற்றுத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் கோர்ட்டுக்குச் சென்று நீதி பெறுகிற நிலையை நாம் கொண்டுவராமல் இருந்தால், இந்தப் பிரச்சினையே வந்திருக்காது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழாசிரியர்கள் பிரச்சினையில் கோர்ட்டுக்குச் செல்வதாக ஒரு செய்தி வந்ததே, அது என்ன ஆனது என்று கேட்பதே ஆசிரியர் நலனுக்கு முரணானது என்று பொருள்பட, அமைச்சர் அவர்கள், "மாண்புமிகு உறுப்பினர் விரும்பினால், நாங்கள் கோர்ட்டுக்குப் போகிறோம்" என்று சொல்லவே இல்லை. "உறுப்பினர் விரும்பினால்" என்று சொல்லவில்லை. "நாங்கள் விரும்பினால் நாங்கள் கூட அப்படிப் போவோம்" என்றுதான் சொன்னார்கள். அப்படி ஒரு காரணத்தைக் கற்பிப்பதன் மூலமாக, தமிழாசிரியர்கள் மத்தியில் என்னைப் போல் உள்ளவர்களுக்கு அவப்பெயர் உருவாவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சிக்க வேண்டாம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட எண்ணம் எனக்கு இல்லை. ஆனால் உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கு வேடிக்கையாக இதைச் சொல்லியிருக்கக்கூடும். அப்படித்தான் அதை எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, அதை இந்த முறையில் எடுத்துக் கொண்டால், நான் சொன்னதே சரியென்று நிற்க வேண்டிய நிலை வந்துவிடும்.

திரு. செ. முத்துசாமி : மாற்றுத் தலைவர் அவர்களே, ஆக, ஒரு உறுப்பினர் விரும்பினால், கல்வியமைச்சரிடம் ஒரு சமுதாயத்திற்கு எதிராகக் கேள்வி கேட்டு அதைத் திசை திருப்பிவிட முடியும் என்பதைப் போல் இருப்பது பல கீனமானது. அப்படி . . .

[1983 நவம்பர் 21

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அப்படி அல்ல. நாங்கள் முதலி
லேயே என்ன செய்யப்போகிறோம் என்பதைச் சொல்லிவிட்டோம். நான்
அரசுக்கு இருக்கிற அதிகாரத்தை, உரிமையைச் சொல்கிறேன். மறுபடியும்
தமிழாசிரியர்கள் இந்த அரசுக்கு விரோதமாகச் செல்வதற்கான முறையில்
தாண்டிவிடுகிற நிலையில் இருக்கிறதே தவிர, நாங்கள் அப்படிச் சொல்ல
மாட்டோம்.

(முற்பகல் 11-10)

**திரு. செ. முத்துசாமி:** மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழாசிரியர்களுக்கு
எதிராக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று தாண்டி
விடக் கூடிய எண்ணம் எங்களுக்குக் கிடையாது.

**மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா):** மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் மசோதா மீது பேசி சீக்கிரம் முடித்துக் கொள்ள வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** விரைவில் முடித்துக்கொள்கிறேன். இடையிலே
குறுக்கீடுகளால் கொஞ்ச நேரமாகிவிட்டது. நம்முடைய சங்கத்தினுடைய
தலைவர், கல்வியமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, இரண்டாண்டுகளில்
ஓய்வு பெறப் போகிறார். கல்வித் துறையைப் பொறுத்த வரையில், அவரை
மன்னித்து விட்டுவிடலாம். பெருந்தன்மையோடு அவரை அனுப்பிவிடலாம்.
அரசுக் கல்லூரி ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. நரசிங்கம் மேல் இருக்கக்
கூடிய நடவடிக்கைகளை தயவுசெய்து பெருந்தன்மையோடு வாபஸ் பெற்று,
அவருக்கு உதவி செய்ய வேண்டும் என்று கல்வியமைச்சர் அவர்களைக் கேட்டுக்
கொள்கிறேன். அவர் நல்ல முறையில் ஓய்வு பெறுவதற்கு அனுமதிக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகத்திலே ஆண்டுக் கணக்கில் புரவிஷனல் சான்றி
தழ்களையும், டிகிரி சான்றிதழ்களையும் வழங்காமல் இருக்கிறார்கள் என்பதை
தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சான்றிதழ்கள் கிடைக்
காததால், சில ஆசிரியர்களுக்குப் புரமோஷன் கொடுக்கமாட்டேன் என்கிறார்
கள். புரமோஷன் கூட சில ஆசிரியர்களுக்குக் கிடைக்காத பரிதாபகரமான
நிலைமை இந்தத் துறையில் இருக்கலாமா? ரிஜிஸ்ட்ராரைப் பார்த்துக்
கேட்க அவர் அனுமதி கொடுப்பதில்லை. ஏனென்றால், அவர் இந்தக் காரியங்
களில் ஈடுபடாமல் பல்வேறு காரியங்களில் ஈடுபடுகிறார். அவரைப் பார்க்க



முடியவில்லையென்றால், நிர்வாகத்தில் என்ன பொருள்? தேர்வு முடிவுகள் வெளி வந்த பிறகும் புரவிஷனல் சான்றிதழ்கள், டிகிரி சான்றிதழ்கள் கொடுக்காவிட்டால், அந்த போஸ்ட் எதற்காக? இந்தச் சூழ்நிலையில் அவருக்கு எக்ஸ்டென்ஷன் வேறு கொடுத்திருக்கிறார்கள். வயதாகிவிட்டால் போக வேண்டியதுதானே! எக்ஸ்டென்ஷன் கொடுத்ததால், அவர் யாரையும் பார்ப்பதில்லை. ரொம்ப மேலே போய்விட்டார். அவருக்கு ஒரு பி.ஏ. இருக்கிறார். அதைவிட பெரிய அதிகாரி அவர். அவரைப் பார்க்க முடியாது. ஓர் ஆசிரியர், கன்னியாகுமரியிலிருந்து, சேலத்திலிருந்து, கோயம்புத்தூரிலிருந்து வந்து தன்னுடைய சான்றிதழுக்காகப் பேட்டி கேட்கிறார் என்றால், அவருக்குப் பேட்டி கிடைப்பதில்லை. They are not beggars in India. அவர்கள் எல்லாம் பிச்சை எடுப்பவர்கள் அல்ல; தங்களுடைய உரிமைகளை பல்கலைக் கழகத்திடம் கேட்கிறார்கள். அந்தப் பல்கலைக் கழகத்தின் நிர்வாகப் பொறுப்பில் இருக்கிறவர்கள் 'பார்க்க முடியாது' என்றால், இது என்ன ஜனநாயக நாடா அல்லது அடிமை நாடா? சான்றிதழ்கள் கிடைக்காமல் ஆசிரியர்கள் அழிகிறார்கள் என்றால், இந்த நிலை தேவைதானா? பல்கலைக் கழக நடைமுறையில் இப்படி வரலாமா? ஆகவே உடனடியாக நடவடிக்கை எடுங்கள், சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள். எத்தனை ஆண்டுகளாக புரவிஷனல் சான்றிதழ்கள், டிகிரி சான்றிதழ்கள் கொடுக்கப்படாமல் இருக்கின்றன என்பதை விசாரியுங்கள். அப்படி ஆயிரக்கணக்கானவைகள் இருக்கும் என்பதைத் தெரிவித்து, உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் இந்த நாட்டிலே பிறந்தவர்கள். உரிமையைப் பெற்றவர்கள். அவர்களுக்கு நன்மை செய்வோம் என்று அந்தப் பகுதியிலே சத்தியம் செய்து இங்கே வந்திருக்கிறோம். நிர்வாகத்தில் தவறு செய்கிறார்கள். தவறு செய்கிறவர்களைத் தட்டிக்கேளுங்கள். "ஒரு தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால், தேவனே என்றாலும் விடமாட்டேன்" என்ற தத்துவத்தைச் சொன்னவர் முதலமைச்சராக இருந்து ஆட்சி செய்து கொண்டிருக்கிறார். ஆகவே விசாரித்து நடவடிக்கை எடுங்கள் என்று கேட்டுக்கொண்டு, இந்த சந்தர்ப்பத்தை அளித்த மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

**திரு. அ. நல்லசிவன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு மசோதாக்களையும் நான் ஆதரிக்கிறேன். ஒன்று, மதுரை-காமராசர் பல்கலைக் கழகத்தினுடைய வரம்பு பற்றிக் குறிப்பிடுவது. மற்றொன்று, டிஃபன்ஸ்

ர்ளியை பாரதியார் பல்கலைக் கழகத்திலிருந்து சென்னை பல்கலைக் கழகத்
ற்கு மாற்றுவது பற்றியது. இந்த சந்தர்ப்பத்தில் சில கருத்துக்களை
மைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

குறிப்பாக நானும் தன்னாட்சிக் கல்லூரியைப்பற்றிச் சொல்ல வேண்டியிருக்
றது. அமைச்சர் அவர்கள், தன்னாட்சிக் கல்லூரிக் கொள்கைக்கு ஆதரவு
ரிவிக்காமல் இருக்கிறார்களே என்று வருத்தப்படுகிறார்கள். ஆசிரியர்கள்
ர்பில், மாணவர்கள் சார்பில், தன்னாட்சி அதிகாரிகள் எப்படி
ன்னாட்சியைப் பயன்படுத்துகிறார்கள் என்பதை அறிந்து நான் வருத்தப்பட
ண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடகாந்தன் அவர்கள்
ான்னதைப் போல, அகடமிக் அட்டானமியா அல்லது அட்மினிஸ்ட்ரேடிவ்
ட்டானமியா என்ற கேள்வி முன் வருகிறது. அட்டானமியை விஸ்தரித்த
ாது. சில நிபந்தனைகளைப் போட்டார்கள். பல்கலைக் கழகத்தில் இருக்
கூடிய அக்கடமிக் கவுன்சிலுக்கு சேர்மெனாக காரஸ்பான்டென்ட் இருக்கக்
டாது என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். இந்த நிபந்தனையை
ண்டும் மீறியிருக்கிறார்கள். பி.எஸ்.ஜி. கல்லூரியில் காரஸ்பான்டென்ட்—
ர் அ.தி.மு.க—அக்கடாமிக் கவுன்சில் சேர்மனாக இருக்கிறார்.
சிரியர் இருப்பதற்குப் பதிலாக அவரே சேர்மெனாக இருக்கிறார்.
ன்றால் அட்மினிஸ்ட்ரேடிவ் அட்டானமியா அல்லது அக்கடமிக் அட்டான
ா? நோக்கம் என்ன? ஆகவே கல்வித் துறையிலே உள்ளவர்களுக்கு
ட்டானமி அல்ல. நிர்வாகத் துறையில் தலையீடு இல்லாமல் இருக்க கல்விக்
ாள்கையில் அட்டானமி என்று திசை திருப்பிவிடுகிறார்கள். ஆகவே
லூரியின் நிர்வாக உரிமையை அவர்களுக்குக் கொடுக்கக் கூடாது. அகவே
கவுன்சிலின் சேர்மெனாக அவரே ஏன் இருக்க வேண்டும்? அப்படி இருக்கக்
ாது என்று அரசுதானே நிபந்தனை போட்டிருக்கிறது. அப்படி
க்கக் கூடாது என்று நிபந்தனை போட்ட பிறகும்கூட, ஆளும் கட்சியைச்
ர்ந்தவர்களே அதை மீறினால் அது எப்படி? தொழிலதிபர்கள் நடத்தக்
ய, முதலாளிகள் நடத்தக்கூடிய, மதச் சார்பு நிறுவனங்கள் நடத்தக் கூடிய
லூரிகளுக்கு அட்டானமி கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். அவர்
க்கு அட்டானமி கொடுப்பதால் பிரயோஜனம் இருக்கிறதென்றால், அரசுக்
லூரிகளுக்கு அட்டானமி கொடுத்தால் என்ன? தனியாருக்கு மட்டும்
கொடுக்கிறார்கள்? அட்டானமஸ் கல்லூரிகளுக்கு யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ்
ஷன் கூடுதலாக 2 இலட்சம் ரூபாயை மானியமாகக் கொடுக்கிறது. அரசுக்
லூரிகளுக்கும் அதைப் போலவே அட்டானமி கொடுத்தால், அந்தத்



தொகை அரசுக் கல்லூரிகளுக்கும் வராதா? ஆசிரியர்கள் இருந்து, மாணவர்கள் இருந்து அதை அரசுக் கல்லூரிகளில் அமுல் நடத்த மாட்டார்களா? இந்த அட்டானமஸ் கல்லூரிகள் எப்படி நடைபெறுகின்றன என்பதைப் பற்றி பாரதியார் பல்கலைக் கழகத்தினர் ஒரு கமிட்டியைப் போட்டு விசாரித்திருக்கிறார்கள். அந்தக் குழு ஒரு ரிப்போர்ட்டை சமர்ப்பித்திருக்கிறது. அதிலே அவினாசிலிங்கம் ஹோம் சையன்ஸ் கல்லூரியில் குறைபாடு இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். அந்த ரிப்போர்ட்டை வெளிப்படுத்தாமல் இருப்பதால், அதைப்பற்றி வதந்திகள் ஊரிலே இருக்கின்றன. இப்படி வதந்திக்கு இடம் கொடுக்கிறார்களே. அந்த அறிக்கையை வெளியிட்டிருந்தால், அந்தக் குறைபாடு எல்லோருக்கும் தெரியும்.

அட்டானமியைப் பொறுத்த வரையில், ஒரு பெனிஃபிஷல் பாயிண்டைக் குறிப்பிடுகிறார்கள். அவர்கள் பல்வேறு புதிய கோர்சுகளைக் கொண்டு வருகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. யதார்த்தத்தில் பல கல்லூரிகள் ஆசிரியர்களைப் பழி வாங்குவதற்காக பி.காம். கோர்சைக்கூட நிறுத்தியிருக்கின்றன. பி.காம். கோர்சுக்கு எவ்வளவு கிராக்கி இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். இதற்காக அப்படி சண்டை போடுகிறார்கள். அட்டானமஸ் கல்லூரிகளில் ஆசிரியர்களைப் பழி வாங்க பி.காம். வகுப்புகளை 'குளோஸ்' பண்ணியிருக்கிறார்கள். ஆகவே அட்டானமி கொடுக்க என்ன நியாயம் இருக்கிறது? புதிய புதிய கோர்சுகளைக் கொண்டு வருகிறார்கள் என்று சொல்லுவதில் நியாயம் இல்லை. அட்டானமஸ் கல்லூரி நிர்வாகங்கள் கல்லூரி நலனுக்காக, மாணவர்கள் நலனுக்காக அதைப் பயன்படுத்தவில்லை என்று தகவல்கள் இருக்கின்றன. இவைகளைப் பரிசீலனை செய்யும்போது, இவைகள் எல்லாம் சரிதானா என்பதைச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணாமலை யூனிவர்சிட்டியில் என்ன வாக்குறுதியைக் கொடுத்தார்கள்? 1,100 ரூபாய் ஊதிய விகிதத்தை எல்லா யூனிவர்சிட்டிகளிலும் அமுல் நடத்தியாகிவிட்டது. ஆனால் இங்கே அமுல்படுத்தமாட்டேன் என்கிறார்கள். பல ரிசர்ச் ஸ்டுடெண்டுகள் அங்கே போகிறார்கள். அங்கேயுள்ள ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள், "நாங்கள் சொல்லிக் கொடுக்கக்கூடிய மாணவர்கள் அதிகச் சம்பளம் வாங்குகிறார்கள். ஆனால் யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன் கூறிய 1,100 ரூபாய் சம்பள விகிதத்தைத் தர நிர்வாகம் தயாராக இல்லை". ஆகவே ரிசர்ச் ஸ்டுடெண்ட்களுக்குப் போதிக்கிற ஆசிரியர்கள் டிசம்பர் 15 ஆம்

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 நவம்பர் 21

பள்ளியை பாரதியார் பல்கலைக் கழகத்திலிருந்து சென்னை பல்கலைக் கழகத்
திற்கு மாற்றுவது பற்றியது. இந்த சந்தர்ப்பத்தில் சில கருத்துக்களை
அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

குறிப்பாக நானும் தன்னாட்சிக் கல்லூரியைப்பற்றிச் சொல்ல வேண்டியிருக்
கிறது. அமைச்சர் அவர்கள், தன்னாட்சிக் கல்லூரிக் கொள்கைக்கு ஆதரவு
தெரிவிக்காமல் இருக்கிறார்களே என்று வருத்தப்படுகிறார்கள். ஆசிரியர்கள்
சார்பில், மாணவர்கள் சார்பில், தன்னாட்சி அதிகாரிகள் எப்படி
தன்னாட்சியைப் பயன்படுத்துகிறார்கள் என்பதை அறிய நான் வருத்தப்பட
வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடகிருஷ்ணன் அவர்கள்
சொன்னதைப் போல, அகடமிக் அட்டானமியா அல்லது அட்மினிஸ்ட்ரேடிவ்
அட்டானமியா என்ற கேள்வி முன் வருகிறது. அட்டானமியை விஸ்தரித்த
போது. சில நிபந்தனைகளைப் போட்டார்கள். பல்கலைக் கழகத்தில் இருக்
கக் கூடிய அக்கடமிக் கவுன்சிலுக்கு சேர்மெனாக கரஸ்பாண்டெண்ட் இருக்கக்
கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். இந்த நிபந்தனையை
மீண்டும் மீறியிருக்கிறார்கள். பி.எஸ்.ஜி. கல்லூரியில் கரஸ்பாண்டென்ட்—
அவர் அ.தி.மு.க—அக்கடாமிக் கவுன்சில் சேர்மனாக இருக்கிறார்.
ஆசிரியர் இருப்பதற்குப் பதிலாக அவரே சேர்மெனாக இருக்கிறார். அப்படி
யென்றால் அட்மினிஸ்ட்ரேடிவ் அட்டானமியா அல்லது அக்கடமிக் அட்டான
மியா? நோக்கம் என்ன? ஆகவே கல்வித் துறையிலே உள்ளவர்களுக்கு
அட்டானமி அல்ல. நிர்வாகத் துறையில் தலையீடு இல்லாமல் இருக்க கல்விக்
கொள்கையில் அட்டானமி என்று திசை திருப்பிவிடுகிறார்கள். ஆகவே
கல்லூரியின் நிர்வாக உரிமையை அவர்களுக்குக் கொடுக்கக் கூடாது. அக்கட
மிக் கவுன்சிலின் சேர்மெனாக அவரே என் இருக்க வேண்டும்? அப்படி இருக்கக்
கூடாது என்று அரசுதானே நிபந்தனை போட்டிருக்கிறது. அப்படி
இருக்கக் கூடாது என்று நிபந்தனை போட்ட பிறகும்கூட, அதைக் கட்சியைச்
சேர்ந்தவர்களே அதை மீறினால் அது எப்படி? தொழிலதிபர்கள் நடத்தக்
கூடிய, முதலாளிகள் நடத்தக்கூடிய, மதச் சார்பு நிறுவனங்கள் நடத்தக் கூடிய
கல்லூரிகளுக்கு அட்டானமி கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். அவர்
களுக்கு அட்டானமி கொடுப்பதால் பிரயோஜனம் இருக்கிறதென்றால், அரசுக்
கல்லூரிகளுக்கு அட்டானமி கொடுத்தால் என்ன? தனியாருக்கு மட்டும்
என் கொடுக்கிறார்கள்? அட்டானமஸ் கல்லூரிகளுக்கு யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ்
கமிஷன் கூடுதலாக 2 இலட்சம் ரூபாயை மானியமாகக் கொடுக்கிறது. அரசுக்
கல்லூரிகளுக்கும் அதைப் போலவே அட்டானமி கொடுத்தால், அந்தத்



1983 நவம்பர் 21] [திரு. ஆ. நல்லசிவன்]

தொகை அரசுக் கல்லூரிகளுக்கும் வாராதா? ஆசிரியர்கள் இருந்து, மாணவர்கள் இருந்து அதை அரசுக் கல்லூரிகளில் அமுல் நடத்த மாட்டார்களா? இந்த அட்டானமஸ் கல்லூரிகள் எப்படி நடைபெறுகின்றன என்பதைப் பற்றி பாரதியார் பல்கலைக் கழகத்தினர் ஒரு கமிட்டியைப் போட்டு விசாரித்திருக்கிறார்கள். அந்தக் குழு ஒரு ரிப்போர்ட்டை சமர்ப்பித்திருக்கிறது. அதிலே அவினாசிலிங்கம் ஹோம் சையன்ஸ் கல்லூரியில் குறைபாடு இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். அந்த ரிப்போர்ட்டை வெளிப்படுத்தாமல் இருப்பதால், அதைப்பற்றி வதந்திகள் ஊரிலே இருக்கின்றன. இப்படி வதந்திக்கு இடம் கொடுக்கிறார்களே. அந்த அறிக்கையை வெளியிட்டிருந்தால், அந்தக் குறைபாடு எல்லோருக்கும் தெரியும்.

அட்டானமியைப் பொறுத்த வரையில், ஒரு பெனிஃபிஷல் பாயிண்டைக் குறிப்பிடுகிறார்கள். அவர்கள் பல்வேறு புதிய கோர்சுகளைக் கொண்டு வருகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. யதார்த்தத்தில் பல கல்லூரிகள் ஆசிரியர்களைப் பழி வாங்குவதற்காக பி.காம். கோர்சைக்கூட நிறுத்தியிருக்கின்றன. பி.காம். கோர்சுக்கு எவ்வளவு கிராக்கி இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். இதற்காக அப்படி சண்டை போடுகிறார்கள். அட்டானமஸ் கல்லூரிகளில் ஆசிரியர்களைப் பழி வாங்க பி.காம். வகுப்புகளை 'குளோஸ்' பண்ணியிருக்கிறார்கள். ஆகவே அட்டானமி கொடுக்க என்ன நியாயம் இருக்கிறது? புதிய புதிய கோர்சுகளைக் கொண்டு வருகிறார்கள் என்று சொல்லுவதில் நியாயம் இல்லை. அட்டானமஸ் கல்லூரி நிர்வாகங்கள் கல்லூரி நலனுக்காக, மாணவர்கள் நலனுக்காக அதைப் பயன்படுத்தவில்லை என்று தகவல்கள் இருக்கின்றன. இவைகளைப் பரிசீலனை செய்யும்போது, இவைகள் எல்லாம் சரிதானா என்பதைச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணாமலை யூனிவர்சிட்டியில் என்ன வாக்குறுதியைக் கொடுத்தார்கள்? 1,100 ரூபாய் ஊதிய விகிதத்தை எல்லா யூனிவர்சிட்டிகளிலும் அமுல் நடத்தியாகிவிட்டது. ஆனால் இங்கே அமுல்படுத்தமாட்டேன் என்கிறார்கள். பல ரிசர்ச் ஸ்டுடெண்டுகள் அங்கே போகிறார்கள். அங்கேயுள்ள ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள், "நாங்கள் சொல்லிக் கொடுக்கக்கூடிய மாணவர்கள் அதிகச் சம்பளம் வாங்குகிறார்கள். ஆனால் யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன் கூறிய 1,100 ரூபாய் சம்பள விகிதத்தைத் தர நிர்வாகம் தயாராக இல்லை". ஆகவே ரிசர்ச் ஸ்டுடெண்ட்களுக்குப் போதிக்கிற ஆசிரியர்கள் டிசம்பர் 15 ஆம்

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 நவம்பர் 21

தேதி நேரடி நடவடிக்கையில் ஈடுபடப் போகிறோம் என்று சொல்லி நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அப்படி நிர்வாகம் நடக்கிறது. அண்ணாமலை யூனிவர்சிட்டியில் இருக்கக் கூடிய புரோ-சான்சலருக்கு இருக்கக் கூடிய அதி காரத்தை வைஸ்-சான்சலருக்கு மாற்றுவோம், அதற்கு வேண்டிய திருத்தங் களைக் கொண்டுவருவோம் என்று சொன்னார்கள். அது என்னவாயிற்று? புரோ-சான்சலருக்கு அதிக அதிகாரம் இருக்கிறது. கல்வி போதிக்க திறமை வேண்டும். சொத்துக்கு வாரிசு இருக்கலாம், நிலப்பிரபுக்களின் சொத்துக்கு வாரிசு இருக்கலாம். ஆனால் கல்விக்கு என் வாரிசு? புரோ-சான்சலருக்கு

(முற்பகல் 11-20)

இருக்கின்ற அதிகாரத்தைப் பூராவாக அந்த வைஸ் சான்சலருக்குக் கொடுக்கி றோம் என்று சொன்னார்கள். இன்றுவரைக்கும் அப்படிக் கொடுக்கவில்லை. அது திருத்தப்படவில்லை. அங்கே என்ன நடக்கிறது என்று சொன்னால், நிர்வாகம் 'செனட்டுக்கு எலெக்ஷன்' என்று அறிவிக்கிறது. திடீரென்று மூன்று பேர்கள் பேர் சொல்கின்றார்கள். விருத்தாசலத்திலே ஒருவர், சிதம்பரத்திலே ஒருவர், கடலூரிலே ஒருவர் என்று வருகிறார்கள். ஒருவர் ஹைக்கோர்ட்டிலே பெடிஷன் ஒன்று பைல் பண்ணுகின்றார். அப்படி பைல் பண்ணியது 'அட்மிட்' ஆகவில்லை. 'அட்மிட்' பண்ணிய பிறகுதான் 'ஸ்டே' வாங்க வேண்டும். அட்மிட் ஆகவில்லை. உடனே வைஸ் சான்சலர் எலெக்ஷனை 'போஸ்ட்போன்' பண்ணுகின்றார்கள். எலெக்ஷன் நடத்தி னால், அவர்களுக்குப் பயம். பைல் பண்ணிய கேஸ் அட்மிட்டே ஆகவில்லை. எனக்கு என்ன தோன்றுகிறது? அதிலே நிர்வாகமே தன்னுடைய ஆளைப் பயன்படுத்தியிருக்கிறது என்று சொல்வேன். எலெக்ஷன் நடத்தினால், அவர் களுக்குப் பயம். பைல் பண்ணிய கேஸ் அட்மிட்டே ஆகவில்லை, ஸ்டே கொடுக்கவில்லை, பைல் பண்ணுவது என்று தந்தி கொடுத்திருக்கின்றார்கள். எலெக்ஷன் நோட்டிபிகேஷன் போட்டாகிவிட்டது. ஆனால் அவர்கள் எப்படி எலெக்ஷன் நடத்துகின்றார்கள்? ஒரு ஆளைப் பிடித்துவிட்டு, நீ 'பைல்' பண் ணியதாகத் தந்தி கொடு, நான் உடனே எலெக்ஷனை நிறுத்திவிடுகிறேன் என்று. அப்படி நிர்வாகம் பண்ணியிருக்கிறது. அரசு வேண்டுமானாலும் வெரிபை பண்ணிப் பார்க்கட்டும்.

மாண்புமிகு தலைவர் அவர்கள் நேரமாகிறது என்று என்னைப் பார்க்கின் றார்கள். இந்த நேரத்திலேதான் நான் பேசவேண்டும். வருடத்திற்கு ஒரு தடவைதான் நேரம் கிடைக்கிறது. ஏப்ரல் மாதம் முடிந்து திரும்பவும்



1983 நவம்பர் 21] [திரு. ஆ. நல்லசிவன்]

ஜனவரி மாதம் தான் வருகிறது. இப்படித் தடுத்துவிட்டால், அந்தப் பல்கலைக் கழகம் எப்படியெல்லாம் செயல்படுகிறது என்று எப்படிச் சொல்ல முடியும்? தேர்தல் ஒன்றுமே இல்லை. ஏன் நிர்வாகமே அப்படிப் பண்ணி யது தெரியுமா? நாங்கள் அட்டானமி வேண்டாம் என்று சொல்லவில்லை. அந்த அட்டானமி மக்களுக்குப் பயன்படுமா? அந்த அட்டானமி மாணவர் களுக்குப் பயன்படுமா? அந்த அட்டானமியை அவர்கள் எப்படிப் பயன்படுத்து கின்றார்கள் என்றுதான் கேட்கிறேன். அந்த அட்டானமி கல்வி அபிவிருத்திக்குப் பயன்படுமா? அந்த அட்டானமி கல்வி வளர்ச்சிக்குப் பயன்படுமா அல்லது தனிப்பட்டவர்களுடைய செல்வாக்கை அதிகரிக்கப் பயன்படுமா என்று பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட ஆபத்துக்கள் இருக்கின்றன என்று சொல்கிறேன். அந்த நிர்வாகத்தில் இப்படிப்பட்ட சம்பவம் நடந்திருக்கிறது. அதைத்தான் நான் இங்கே விளக்கமாகச் சொல்கிறேன்.

அப்புறம் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். 'இன்க்ரிமெண்ட் கட்' என்பது ஒரு 'மைனர் பனிஷ்மெண்ட்' அல்ல என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. ஆர். தாமஸ் அவர்கள் ஒரு 'பில்' கொண்டு வந்திருக்கிறார்கள். பர்ஸ்ட் அப்பீலிலே போயிற்று. செகண்ட் அப்பீலுக்கு எங்கே போகிறது? ஒரு வாத்தியாருக்கு ரூ. 40 ஆயிரம், ரூ. 27 ஆயிரம் என்று இழப்பு ஏற்படுகிறது அவர் வேலைசெய்யும் காலத்திற்குள். இப்படி ஒரு பனிஷ்மெண்ட் கொடுக்கின்றார்கள். அது மேஜர் பனிஷ்மெண்ட்டுதான். அது 'மைனர் பனிஷ்மெண்ட்' அல்ல. ஆகவே இந்த 'டீச்சர்ஸ் கான்டக்ட் ரூல்ஸ்' கீழே இந்த அப்பீலை அட்மிட் பண்ண முடியாது என்று சர்க்காரும் ஒரு ஜி. ஓ. போட்டிருக்கிறது. ரூ. 27 ஆயிரம், ரூ. 40 ஆயிரம் நஷ்டம் ஏற்படு வது ஒரு 'மைனர் பனிஷ்மெண்ட்' என்கிறார்கள். இது ஒரு 'மைனர் பனிஷ் மெண்ட்' அல்ல, 'மேஜர் பனிஷ்மெண்ட்'தான் என்று பார்க்கிறோம். 'பர்ஸ்ட் அப்பீல்' உண்டு என்று ஆக்ட்-ஐத் திருத்துங்கள். அப்படியில்லை என்றால், தனியார் பள்ளியிலுள்ள ஆசிரியர்களுக்கு எல்லாம் இந்த விதியைப் பயன் படுத்தி இந்த பனிஷ்மெண்ட்டைக் கொடுத்துக்கொண்டிருப்பார்கள். அரசு கொடுத்திருக்கின்ற பலன்களை, உரிமைகளை அவர்கள் அனுபவிக்காமல் இருக்கச் செய்வார்கள். ஆசிரியர்கள் சங்கம் வைத்துகொண்டிருப்பவர்களைப் பழிவாங்குகின்ற அளவுக்கு இந்த 'இன்கிரிமெண்ட் கட் பனிஷ்மெண்ட்டைப் பயன்படுத்துவார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். நானும் அதைப்பற்றிப் பல தடவைகள் எடுத்துச் சொல்லி யிருக்கிறேன். திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள்கூட சொன்னார்கள். பல

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 நவம்பர் 21

பள்ளிகளில் இப்படி நடக்கிறது. இரு 'இன்கிரிமெண்ட்
டால் ஒரு வாத்தியாருக்கு ரூ. 40 ஆயிரம் நஷ்டமாகிறது. கட் என்று போட்
மெண்ட் கட்' என்று ஏழு வாத்தியார்களுக்குச் செய்திருக்கிறார்கள். மூன்று இன்கிரி
கொடுக்கும் உதவியை கிடைக்காமல் செய்திருக்கிறார்கள். சர்க்கார்
டென்ட், ஏ.டி.எம்.ஏ. கட்சிக்காரர், ஒரு ஆசிரியருக்கு ஒரு காஸ்பாண்
ஆயிரம் வரை நஷ்டம் ஏற்படக்கூடிய அளவுக்குச் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு ரூ. 40
மீண்டும் சொல்கிறேன். தயவுசெய்து இது 'மைனர் பனிஷ்மெண்ட்' என்பதை நான்
மாற்றி அது 'மேஜர் பனிஷ்மெண்ட்' என்று ஜீ.ஓ.வைத் திருத்த
வேண்டும். அவர்கள் 'பர்ஸ்ட் அப்பீல்' செய்ய வழிவகை செய்ய வேண்டும்.
அதுகுறித்து, திரு. பி. ஆர். தாமஸ் அவர்கள் ஒரு 'பில்' கொண்டு வந்திருக்
கின்றார்கள். அது சிக்கிரம் வரவேண்டுமென்று நினைக்கிறேன். ஒருவேளை
அது வர இன்னும் ஒரு வருடம்கூட ஆகலாம். ஆகவே ஆளுங்கட்சித் தாப்
பிலேயேகூட திரு. பி. ஆர். தாமஸ் அவர்கள் சொல்வதை சிக்கிரம் சட்டத்திருத்
தமாகக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்ய
வேண்டும். அந்த பெனிபிட்டுக்கள் ஆசிரியர்களுக்குக் கிடைக்க ஏற்பாடு
செய்யவேண்டும்.

அடுத்து, 'டெர்மினேஷன் ஆஃப் சர்விஸ்' Resignation is involuntary
அது என்னவென்றால். ரெசிக்னேஷன் என்பதை பல
பேர்கள் நிர்பந்தப்படுத்தி வாங்கிவிடுகின்றார்கள். இது ஒரு பெரிய விஷயம்
அல்ல. எம்.எல்.ஏ.-க்களிடம்கூட வாங்கிவிடுகின்றார்கள். ஆசிரியர்களிடம்
அவ்வாறு வாங்குவது என்ன பெரிய கஷ்டமான காரியமா?
Voluntary. என்று இருந்தால் பனிஷ்மெண்ட் Resignation
வேண்டும் என்று திரு. பி. ஆர். தாமஸ் அவர்கள் எடுத்துச் என்று இருக்க
றார்கள். அதை உள்ளடக்கிய திருத்தத்தை அரசு சொல்லியிருக்கின்
அந்தப் பலன்கள் ஆசிரியர்களுக்குக் கிடைக்கும். கொண்டு வருவதன் மூலம்
மென்று கேட்டுக்கொள்கிறேன். அதைச் செய்ய வேண்டு

தமிழ் நாடு அரசுக் கல்லூரியில் சரஸ்வதி அம்மாள் என்று ஓர் ஆசிரியப்
பெண்மணி இருக்கிறார்கள். பெண்களை ஆபாசப்படுத்தும் வகையில் ஆபாசப்
படங்களை ஒட்டக்கூடாது என்று ஒரு பெண்கள் இயக்கத்தில் பங்கெடுத்த
தற்காக அவர்களுக்குப் 'பனிஷ்மெண்ட்' கொடுத்திருக்கின்றார்கள். வாத்தியா
ராக இருக்கின்ற ஒருவர், ஆபாச போஸ்டர்கள் ஒட்டக்கூடாது என்று சொல்
கின்ற ஒரு இயக்கத்திலே கலந்துக்கொண்டு பங்கெடுத்துக்கொள்வது என்பது



1983 நவம்பர் 21] [திரு. ஆ. நல்லசிவன்]

ஒரு மிகப் பெரிய பாவமா? அந்தக் கல்லூரி நிர்வாகிகள் அவர்களுக்கு 'பனிஷ் மெண்ட்' கொடுத்திருப்பது நியாயமா? அவர்கள் அரசியலிலே பங்கெடுக்க வில்லை. பெண்கள் பற்றிய ஆபாச போஸ்டர்கள் வரக்கூடாது என்ற இயக்கத் தில் அவர்கள் ஈடுபட்டதற்காக வேலையிலிருந்து நீக்கம் செய்வதா என்று தான் கேட்டுக்கொள்கிறேன். அதுபற்றி கவர்ண்மெண்டுக்குப் பிரச்சினை வந்திருக் கிறது. அதைத் திரும்பவும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

காரைக்குடி அழகப்பா கல்லூரி என்று இருக்கிறது. அதிலே ஒரு பிரின்சிபால் திரு. செல்வகணபதி என்று இருக்கிறார். ஒரு மாணவரை ஒரே நேரத்தில் இரண்டு பரீட்சைகள் எழுதச் சொன்னார் என்ற குற்றச்சாட்டு வந்து அதை ஒரு புரோபசர் அம்பலப்படுத்திவிட்டார் என்று சொல்லி புரோபசரை கல்லூரிக் காம்பசுக்குள்ளேயே அடித்திருக்கின்றார்கள். அவர் ஒரு பிரின்சிபால். புரோபசர்களையே அவர்கள் அடிக்கிறார்கள். ஒரு புரோபசர் சைக்கிளிலே போகிறார். பிரின்சிபால் அவருடைய மகளை சைக்கிளில் அந்தப் பேராசிரியர் பின்னாலே அனுப்பிவிட்டு, பின்னாலேயே அவரும் சேர்ந்து இருவருமாகப் போனார்கள். அவரை அடித்தார்கள். பிறகு இரவு ஏழு மணிக்கு காலனிக் குள்ளேயே, அவர்கள் குடியிருப்பிலே போய், அவர் பையன் உட்பட, அடித்திருக் கின்றார்கள். நான்கு எப்.ஐ.ஆர். ரெக்கார்ட் ஆகியிருக்கிறது. பிரின்சிபாலுடைய பையன் ஆண்டிசிபேட்டரி பெயிலிலே வந்திருக்கிறார். கல்லூரிக்குள்ளே பாதுகாப்பு இல்லை என்று கல்லூரி ஆசிரியர்கள் பயப்படுகின்றார்கள். "எங்களுக்குப் பாதுகாப்பு தருவதாக இருந்தால் தான், நாங்கள் கல்லூரிக் குள்ளே வர முடியும்" என்று தெரிவித்திருக்கிறார்கள். "பாதுகாப்பு இல்லாததால், நாங்கள் கல்லூரிக்குள்ளே வர முடியவில்லை என்று எழுதிக் கொடுங்கள்" என்று சொல்லியிருக்கின்றார்கள். ஏனென்றால் மெடிகல் லீவ் போட முடியாது. அது தப்பு பண்ணியதாக ஆகிவிடும். கல்லூரியிலே பாதுகாப்பு இல்லை. "எங்களுக்குப் பாதுகாப்பு கொடுங்கள்" என்று சொல்லியிருக் கிறார்கள். லீவ் போட்டிருக்கிறார்கள். லீவ் அங்கீகரிக்கப்படுமா என்று தெரிய வில்லை. அவர்கள் வெளியிலே உட்கார்ந்திருக்கின்றார்கள். ஒரு கல்லூரிக்குள்ளே புரொபசர்களுக்கே பாதுகாப்பு இல்லாத நிலையை ஒரு பிரின்சிபாலே உண்டாக்குகின்றார். அவர் மீது ஒரு குற்றச்சாட்டு உள்ளது. ஒரு பையனை இரண்டு பரிட்சைகளை எழுதச் சொன்னதாக இருக்கிறது. அதைப்பற்றிச் சொல்லியிருக்கின்றார்கள். இப்படி ஒரு பிரின்சிபால் இருந்தால், அந்தக் கல்லூரியை யார் மதிப்பார்கள்? அது கேவலம் இல்லையா? இப்படி-

நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே இப்படிப்பட்ட விஷயங்களை அரசு கவனிக்க வேண்டும் என்று ஆசிரியர்கள் சார்பில் நானும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஏகபோகத்திற்கு எதிர்ப்பு என்று நான் சொல்கிறேன். நான் இந்தத் திருத்தத்தை வரவேற்கிறேன். அதன் சாராம்சம் என்ன? ஏகபோகத்திற்கு எதிர்ப்பு என்றால், சமுதாயத்திலே வலிவு படைத்தவர்கள் சமுதாயத்தைப் பாடுபடுத்துவது என்று அர்த்தமா? செல்வாக்கு படைத்தவர்கள் சர்க்காருக் குள்ளேயே இருந்து செயல்படவிடாமல் உலவிக்கொண்டிருக்கின்றார்களோ என்ற சந்தேகம்தான் ஏற்படுகிறது. எனக்கு மட்டுமல்ல, அங்கேயுள்ள புரொபசர்களுக்கே ஏற்படுகிறது. நேரடியாகவே கல்லூரி புரொபசர்கள், இந்தக் கல்வித் திட்டத்தை நடத்தக்கூடிய ஆசிரியர்கள் இப்படிப்பட்ட கஷ்டங்களுக்கு உள்ளாகின்றார்கள். அரசு செய்வதை நான் குறை சொல்லவில்லை. இப்படி யெல்லாம் இருக்கின்றதா, நடக்கின்றதா என்பதை அரசு பார்த்து பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி நடந்தால், அவைகளைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு அமைகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு மசோதாக்களும் விவாதத்திற்குரியவை அல்ல. பல்கலைக் கழக ஆட்சி அமைப்பிலே இருக்கக்கூடிய சில நிர்வாகச் சிக்கல்களின் காரணமாக சென்னைப் பல்கலைக் கழகத்திலே பாதுகாப்புத் துறை ஃபேகல்ட்டி இருக்கிறது. கல்லூரி பாரதியார் பல்கலைக் கழக எல்லைக்குள்ளே அமைந் திருக்கிறது. எனவே அந்தக் கல்லூரியை சென்னைப் பல்கலைக் கழகத்தோடு இணைக்கின்ற விதத்தில் திருத்தி கொண்டு வரப்பட்ட சட்டம். எனக்குத் தோன்றுவதெல்லாம் இந்தப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவுகளை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி, விரிவாக விவாதித்து, அதன் பிறகு சட்டம் நிறைவேறு மானால், இந்தத் திருத்த முன்வடிவுக்குத் தேவையே ஏற்பட்டிருக்காது. பாரதியார் பல்கலைக் கழகச் சட்டங்கள் வரும்போது, நாம் அதை மிக வேகமாக விரைவாக நிறைவேற்றி விடுகிறோம். அதனுடைய விளைவுகளைப் பற்றி நாம் சிந்திக்காமல் ஏற்படுகின்ற சிக்கல்களைப் புரிந்து கொள்ளாமலேயே நிறைவேற்றி விடுகிறோம். பிறகுதான் அதில் சிக்கல்கள் வருகின்றன என்பதைப் பார்க்கிறோம். நடைமுறைப்படுத்துகின்றபோது அது தெரிகிறது. நாம் எப் போதுமே சட்டங்களை நிறைவேற்றுகின்றபோது ஜனநாயக முறையிலே சட்ட



முன்வடிவுகளை அறிமுகம் செய்து, ஒரு முறை விவாதித்து, கருத்துக்களைச் சொல்லி, செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி, சம்பந்தப்பட்ட பல்கலைக் கழக நிர்வாகத்தினர், ஆசிரியர்கள் இவர்களையெல்லாம் செலக்ட் கமிட்டியைச் சந்திக்கச் செய்து, பேசி, ஒரு சட்டம் உருவாகுமானால், அப்படிப்பட்ட ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு இரண்டு ஆண்டு மூன்று ஆண்டுகளுக்குள் அடிக்கடி திருத்தங்கள் செய்யும் சூழ்நிலை ஏற்பட்டிருக்காது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இனிமேலாவது சட்ட முன்வடிவு வருகின்றபோது, அரசு ஒரு வலிவான நிலையில் இருந்து ஒரு வழிகாட்டி நெறிமுறையைக் கைக்கொள்ள வேண்டும். இது தேவை. வேறு வழியில்லாததால் அதைச் செய்ய வேண்டியதுதான். எனக்கும் அதில் ஒரு ஐயப்பாடு. பாதுகாப்பு இயல்—

(முற்பகல் 11-30)

ஃபெகல்ட்டி-சென்னைப் பல்கலைக் கழகத்திலே இருக்கிறது. ஆனால் அந்தக் கல்லூரி நீலகிரியில் இருக்கிறது. இந்தத் துறையை ஏன் அங்கு மாற்றக்கூடாது? அதில் என்ன பெரிய சிக்கல் இருக்கிறது? இது ஒரு ப்ரெஸ்டிஜ் இஷ்யூவே தவிர வேறு ஒன்றுமில்லை. சென்னைப் பல்கலைக் கழகம் உலகம் எங்கும் தெரிந்த பல்கலைக் கழகம். எனவே அதோடு இந்தத் துறை இருக்க வேண்டுமென்று காரணம் சொல்லியிருக்கிறார்கள். பாதுகாப்பு இயல் என்று சொல்லும்போது அது உலகம் பூராவும் தெரிய வேண்டியதில்லை. அந்தத் துறையை அங்கேயே வைத்துக் கொள்ள முடியும். சில முறைகளை மாற்ற நிர்வாகங்கள் தயங்குவதன் விளைவே தவிர வேறு ஒன்றுமில்லை. இந்த ஃபெகல்டியில் பணியாற்றும் பிரபொசர்கள், மற்றவர்களை பாரதியார் பல்கலைக் கழகத்திற்கு மாற்றி, அங்கே இந்தத் துறையை உருவாக்குவதிலே சிக்கல் ஒன்றும் ஏற்படாது. சுதந்திரக் கனலைப் பரப்பி, போர் முரசு கொட்டிய பாரதியாரின் பெயரிலே உள்ள பல்கலைக் கழகத்திலே அந்தத் துறையை இணைப்பதிலே தவறு ஒன்றுமில்லை, சிக்கலும் இல்லை. அதேபோன்று அந்தத் துறை இங்கே இருப்பதிலும் தவறு ஒன்றுமில்லை. இதை ஏன் அவர்கள் முன்பே சிந்திக்க வில்லை என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்தக் கல்லூரியை இங்கு மாற்ற முடியாது. எந்தத் தட்பவெப்ப நிலையிலும் பயிற்சி பெறும் அளவுக்கு, அந்தக் கல்லூரியில் கோடைக் காலங் களிலும் பயிற்சி பெறும் முறையிலே, வெலிங்டன் கல்லூரி அமைந்திருக்கிறது. எனவே கல்லூரி அங்குதான் இருக்க வேண்டும். அந்தக் கல்லூரியை பாரதியார் பல்கலைக் கழகத்திற்கு மாற்ற வேண்டுமென்றால், அதிலுள்ள சிக்கல்களை நிவர்த்தி செய்ய வேண்டும். தற்போது அது சென்னைப் பல்கலைக் கழகத்தில் இருந்தாலும், நிரந்தரமாக அங்குதான் இருக்க வேண்டும்.

இதுபோன்ற துறையை எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் உருவாக்கி, இந்த நாட்டில் பிறந்து, வளர்ந்து, கல்லூரியில் படிக்கும் அத்தனை பேர்களும் குறைந்த அளவுக்கு ஆறு மாதம் பாதுகாப்புப் பயிற்சி பெற வேண்டும். இதை உடனடியாகச் செய்யக்கூடியதில்லை. மத்திய பாதுகாப்புத் துறை இதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும். அவர்களும் இந்தக் கருத்தை வலியுறுத்துகிறார்கள் என்று தெரிகிறது. அப்படி இருந்தால், மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் டெல்லி செல்லும்போது, அவர்களோடு இதுபற்றிச் சிந்தித்து, நிரந்தரமாக இந்தத் துறையை பாரதியார் பல்கலைக் கழகத்தோடு இணைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய வேண்டுமென்று மாத்திரம் இந்த மசோதாவைப் பொறுத்து என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசியவர்கள், இந்தப் பிரச்சினைக்கு வெளியே போய் . . .

**மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா):** நீங்கள் வெளியே போய்விடாதீர்கள், உள்ளேயே இருங்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாற்றுத் தலைவரவர்களே, இந்த மசோதாவிற்குள்ளேயே இருப்பதாகச் சொல்லிக்கொண்டு, வெளியே போன ஒரு சில கருத்துக்களில் என்னுடைய கருத்துக்களையும் பதிய வைப்பது என் கடமை. அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்திற்கு ஒரு திருத்த மசோதா கொண்டு வர வேண்டுமென்று சொன்னார்கள். நான் உண்மையிலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பழைய காலத்தில் கொண்டு வந்த மசோதாவை இன்றைய சூழ்நிலைக்கு ஏற்ப, சமுதாயமும் என்ன கருதுகிறதோ அதற்கேற்ப திருத்தி, ஒரு சட்ட முன்வடிவு அரசும் கொண்டு வந்து, அதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி, அதற்குப் பிறகு அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தன்னாட்சிக் கல்லூரிகள்பற்றி இங்கே ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். உண்மையிலேயே இந்தக் கருத்தைச் சொன்னவர்கள் எல்லாம் தன்னாட்சிக் கல்லூரிகளுக்கு எதிரான கருத்தைச் சொன்னவர்களல்ல என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அனைவரும் தன்னாட்சிக் கல்லூரிகளை எந்த நோக்கத்திற்காக நிறுவுகிறோமோ அந்த நோக்கம் நிறைவேற வேண்டுமென்பார்—அந்த நோக்கம் நிறைவேறவில்லையோ என்று ஒரு சில கல்லூரிகளைச் சுட்டிக் காட்டியதால், அதை விட்டுவிட வேண்டுமென்று அவர்கள் சொன்னதாகக் கருதவில்லை—அதை நல்ல முறையில் நிறைவேற்ற



வேண்டுமென்றும் சொன்னதாகக் கருதுகிறேன். நமது நாட்டில்தான் மெக்காலே கொண்டு வந்த கல்வித் திட்டத்தின் காரணமாக, ஒரு பல்கலைக் கழகத்தில் ஒரு பாடத் திட்டத்தைப் போட்டு ஒரு மாநிலம் முழுவதும் அல்லது மாநிலத்தில் மூன்றில் ஒரு பகுதியில் ஒரு பாடத் திட்டத்தைக் கற்பித்துக் கொண்டிருக்கிறோம். மேலை நாடுகளில் எல்லாம் ஒவ்வொரு கல்லூரியும் அந்தந்தக் கால கட்டத்திற்கேற்ப பாடத் திட்டங்களை வகுத்து அமுல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. எல்லாப் பாடத் திட்டங்களும் எல்லாக் காலங்களுக்கும் தேவையானதல்ல. ஒரு ரீஜனில் பேக்டரிகள் இருந்தால், அதற்கேற்ப ஓரியன்டேஷன் கோர்ஸ் கொடுத்து, அந்தத் தொழிற்சாலைகள் திறம்பட நடக்கவும், அதையொட்டி இளைஞர்கள் வாழவும் தேவையான கல்வித் திட்டத்தை மேற்கொள்ளத்தான் தன்னாட்சிக் கல்லூரிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மத்திய அரசு அதற்காக நிதி ஒதுக்கியிருக்கிறது. முதலிலே மத்திய தன்னாட்சிக் கல்லூரிகளுக்கு நிதி கொடுத்து, ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு மாநில அரசு நிதிப் பொறுப்பிலே பெரும் பகுதியை ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலையிலே, அவற்றை அமைத்திருக்கிறோம். பல்கலைக் கழக மானியக் குழுவிற்கு, உயர் கல்வியை வளர்க்க மக்களின் வரிப் பணத்திலிருந்து பெரும் தொகை பாராளுமன்றத்தின் ஒதுக்கிட்டினால் கிடைக்கும்போது, அதில் தென்கோடியில் உள்ள தமிழ் நாடு மிகக் குறைவாகப் பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மத்தியப் பிரதேசமானாலும், உத்திரப் பிரதேசமானாலும், இமாசலப் பிரதேசம் போன்ற சிறு மாநிலங்களானாலும், பல்கலைக் கழக மானியக் குழுவிற்கு ஒதுக்கியுள்ள பணத்திலிருந்து எத்தனை சதவிகிதம் பெறுகிறது என்று கணக்குப் பார்த்தால், தமிழ் நாடு மிகக் குறைவாகத்தான் பெற்றுக் கொண்டிருக்கிறது என்பது தெரியும். காரணம், பல்கலைக் கழக மானியக் குழு அறிவிக்கிற சில திட்டங்களை நாம் ஏற்றுக்கொள்ளாமல், பழைய திட்டங்களையே வைத்துக்கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் தன்னாட்சிக் கல்லூரிகளை அதிகமாக இங்கே பெற முயற்சி எடுத்து, நிறைய கல்லூரிகள் தன்னாட்சிக் கல்லூரிகளாக்கப்பட்டன. ஒரு சில கல்லூரிகளில் குறை இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்தக் குறை என்ன என்பதைத் தெரிந்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு கல்வி ஆலோசனைக் குழுவில் விவாதிக்க வேண்டும். போன முறை அந்தக் குழுவின் கூட்டத்திற்கு நான் வரவில்லை. தன்னாட்சிக் கல்லூரிகள் பற்றிப் பேசினார்கள் என்று நினைக்கிறேன். அந்தப் பிரச்சினையை சம்பந்தப்பட்ட தன்னாட்சிக் கல்லூரி முதல்வர்கள், அந்தப் பகுதியில் இருக்கும் பல்கலைக் கழகத் துணைவேந்தர்,

[திரு. ம. சங்கரலிங்கம்] . [1983 நவம்பர் 21

கல்லூரிக் கல்வி இயக்குநர் இவர்களை வரவழைத்து, இரண்டு அல்லது மூன்று நாட்கள் ஆலோசனைக் குழுவில் விவாதித்து, தவறு எந்தப் பக்கம் இருந்தாலும், தயவுதாட்சண்ணியமின்றி நடவடிக்கை எடுத்து, பிரச்சினையைத் தீர்க்க மாண்புமிகு அமைச்சரவர்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்கக் கல்லூரிகளை தன்னாட்சிக் கல்லூரிகளாக என் மாற்றக் கூடாது என்று சொன்னார்கள். பார்க்கலாம். அதிலே எந்தவிதத் தயக்கமுமில்லை. அரசு முயல வேண்டும். ஆனால் அரசுக் கல்லூரிகளிலே விடுப்பிலே செல்லாமல் எத்தனை முதல்வர்கள் இருக்கிறார்கள்? தனியார் கல்லூரிகளிலே ஆசிரியர் முதல்வரை அடித்தாலும், முதல்வர் ஆசிரியரை அடித்தாலும். மாறி மாறி அடித்துக்கொண்டாலும் அவர்கள் அங்கேயே இருக்கிறார்கள். அரசுக் கல்லூரிகளிலே 180 நாட்கள்தான் வேலை நாட்கள். ஒரு செமஸ்டர் 90 நாட்கள்; இன்னொரு செமஸ்டர் 90 நாட்கள். இந்த 180 நாட்களும் ஒரே பிரின்சிபால் இருந்த ஒரு கல்லூரியைச் சுட்டிக் காட்ட முடியுமா? ஒரு பிரின்சிபாலைப் போடுவார்கள். அவர் போய் பார்ப்பார். அங்கே குழப்பம் இருக்கும். உடனே லீவ் போட்டுவிட்டுப் போய்விடுவார். வைஸ்-பிரின்சிபால் சார்ஜ் எடுத்துகொள்வார். அவரும் போய்விடுவார். அதற்குப் பிறகு பிரபுசர் சார்ஜ் எடுத்துக்கொள்வார். அவரும் போய்விடுவார். இப்படி மாறி மாறி, ஐந்து அல்லது 6-வது ராங்க் இருப்பவர்தான்—அந்த ஊர்க்காரர் அவர்—வேறு வழியில்லாமல் கல்லூரியை நடத்திக் கொண்டிருப்பார். இந்த நிலையில் அங்கே தன்னாட்சி அமைப்பு முறையைக் கொடுத்தால் நடக்காது.

அக்கடமிக் கவுன்சிலில் கரெஸ்பான்டன்ட் போய் உட்கார்ந்தால் அதில் தப்பு ஒன்றுமில்லை. ஒரு இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் குறித்த கோர்ஸ் பற்றி டிராப்ட் பண்ணுவதாக இருந்து, கல்வித் துறையில் நிபுணத்துவம் பெற்ற ஒருவர், தொழிற்சாலை அதிபராகவும், அதே நேரத்தில் கல்லூரி நிர்வாகியாகவும் இருந்தால், அவரை அக்கடமிக் கவுன்சிலுக்கு எலெக்ட் பண்ணலாம். அதில் தவறு ஒன்றுமில்லை. ஆகவே தன்னாட்சிக் கல்லூரிகளை வளர்ப்பதன் மூலமாகத்தான் இந்த நாட்டிலே தொழிற் கல்வியை வளர்க்க முடியும். அதன் மூலம் மாணவர்கள் உயர் கல்வி பெற முடியும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

உயர் கல்வி பயின்றவர்கள் பல பல புதிய தொழிற்சாலைகளை உருவாக்க முடியும் என்பதை ஏற்றுக்கொண்டு, இப்போது எட்டு கல்லூரிகளை தன்னாட்சிக் கல்லூரிகளாக மாற்றியிருக்கிறோம். கல்வி ஆலோசனைக் குழுவில்



1983 நவம்பர் 21] [திரு. ம. சங்கரலிங்கம்]

அவைபற்றி மூன்று நாட்கள் விவாதித்து, ஒரு சப்-கமிட்டி அமைத்து ஸ்பாட் ஸ்டடி செய்து, ரிப்போர்ட் கொடுத்து, அந்த நிறுவனங்களைப் பாதுகாக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு கூட

(முற்பகல் 11-40)

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தன்னாட்சிக் கல்லூரிகளின் எண்ணிக்கையைப் பெருக்க வேண்டும். அதன்மூலம் மத்திய அரசிடத்திலிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய நிதி வசதியை அதிக அளவில் பெற முயற்சி செய்ய வேண்டும்.

கல்வி பற்றி எல்லோரும் பேசிக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொருவரும் இன்றையதினம் உயர் கல்வியின் தரம் எவ்வளவு தாழ்ந்து போய்க் கொண்டிருக்கிறது என்பதை மிக எச்சரிக்கையோடு சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இப்படியே போய்க்கொண்டிருந்தால், எதிர்கால இளைஞர்களை இது எத்தகைய சூழ்நிலையில் கொண்டுபோய் விடும் என்பதையும் நாம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இதனால் அகில இந்திய ரீதியில் முதலாவதாக நாம் பெற வேண்டிய பல வாய்ப்புகளைப் பெறாமல் பின்தங்கிக் கொண்டிருக்கிறோம். 90 நாள் ஒரு செமஸ்டர் என்பது. 90 நாட்கள் படிப்பிக்க வேண்டிய பாடங்கள் இல்லை. அக்காடமிக் கவுன்சிலில் இருந்துதான் மூன்று பல்கலைக் கழகங்களுக்குமான பாடத் திட்டங்களை வகுத்துக் கொடுக்க வேண்டும். சயன்ஸ் தவிர, கணிதம் தவிர வரலாறு, பொருளாதாரம் போன்ற மற்றைய பாடங்கள் எல்லாம் 40 நாட்களுக்குக்கூட போதாது. ஆகவே சரியான முறையில் பாடத் திட்டங்களை வகுத்துக் கொடுக்கவில்லை என்பதை நான் சுட்டிக்காட்டுகிறேன். பல்கலைக் கழகத்தில் இருப்பவர்கள் ஒருவேளை இதிலே அக்கறையில்லாமல் இருக்கலாம். அவர்களுக்கு ஒருவேளை இதிலே பொறுப்பு இல்லாமல் இருக்கலாம். ஆனால் இதற்குக் காரணமானவர்கள் யார் யார் என்று நான் சொல்ல விரும்பவில்லை. இந்த மன்றமும், இந்த மன்றத்திலுள்ள உறுப்பினர்களும் தான் இதுகுறித்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். எல்லாம் சரியான முறையில் நடைபெறுகின்றனவா என்று பார்க்க வேண்டும். தமிழ்நாட்டிலே கல்வியின் தரத்தை உயர்த்த, அதன் நிலையை உயர்த்த சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் முயற்சி எடுக்க வேண்டும். எதாவது நிர்வாகம் தவறு

செய்தால், நிர்வாகத்தின்மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்க வேண்டும். ஆசிரியர்கள தவறு செய்தால் அவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். அதுபோல் அரசு ஏதாவது தவறு செய்தால். கடுமையான விமர்சனத்திற்கு ஆளாக வேண்டியிருக்கும் என்று சொல்லி, தவறு செய்பவர்கள் ஒவ்வொருவரையும் கண்டிக்க ஒவ்வொருவரும் முன்வர வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

*** திரு. க. இராமமூர்த்தி:** மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற 1983 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகத் திருத்தச் சட்டமுன்வடிவிலே சில கருத்துக்களை இந்த அவைமுன் எடுத்து வைக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் மிகத் தெளிவாக ஒன்றைச் சொன்னார்கள். பாரதியார் பல்கலைக் கழகத்திற்கான சட்டமுன்வடிவு சட்டமாக வந்ததற்குப் பின்னாலே, இராணுவ தொடர்பான (Defence) கல்லூரியை அந்தப் பல்கலைக் கழகத்தினுடைய எல்லைக்குள்ளாக வைத்து நடத்த முடியாத நிலையிருப்பதன் காரணமாக, தொடர்ந்து அது சென்னைப் பல்கலைக் கழகத்திலேயே இருக்க வேண்டுமென்பதற்காக ஒரு திருத்தம் என்கிற முறையில் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. மேலெழுந்தவாரியாக ஒருவரும் இதனைக் கூற முடியாது என்றாலும் கூட, ஒன்றை நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஏறத்தாழ ஓர் ஆண்டுக்கு முன்பு நாம் பாரதியார் பல்கலைக் கழகம் அமைக்கப்பட வேண்டுமென்று சிந்தித்துக் கொண்டிருந்தோம். அதற்குப் பிறகு தான் அது அமைக்கப்பட்டது. அமைக்கப்பட்ட பிறகு, பாரதியார் பல்கலைக் கழக எல்லைக்குள் மிகுந்த பெருமைக்குரிய கல்லூரிகளிலே ஒரு கல்லூரியாக பெருமைக்குரிய கல்வியைத் தருகின்ற கல்லூரிகளிலே ஒரு யாக (Defence Staff College) விளங்கி வந்தது என்பதையும் நாம் மனதிலே கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட ஒரு இராணுவக் கல்லூரி புதிதாக அமைக்கப்பட்ட பாரதியார் பல்கலைக் கழக அமைப்புக்குள்ளே, எல்லைக் குள்ளே, வரம்புக்குள்ளே வருவதற்கான நடவடிக்கையை அரசு எடுத்திருக்க வேண்டும். எப்படி இது விடுபட்டுப் போய்விட்டது? சென்னை பல்கலைக் கழகத்திலே தான் அதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன என்று சொல்வது அவ்வளவு சரியான வாதம் அல்ல. எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. அண்ணா பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் அது துவங்கியபோது



அந்தப் பெயர் கூடாது என்றும், "காலம் காலமாக, 100 ஆண்டுக் காலமாக, சென்னைப் பல்கலைக் கழகத்திலே இருந்து வருகிறது. கிண்டி என்ஜினியரிங் கல்லூரி என்று தான் உலகம் முழுக்க தெரியும், பெயர் மாற்றம் செய்யக் கூடாது" என்கிற வாதம் எல்லாம் எடுத்து வைக்கப்பட்டது. ஆனால் அன்றைக்கு அதிலே எவ்வளவு தெளிவாக அழுத்தமாக நாம் இருந்தோம் என்பதையும் நான் எல்லோருடைய ஞாபகத்திற்கும் கொண்டு வருகிறேன். அப்போது கூட ஒரே கல்லூரி எல்லைக்குள் படிக்கின்றவர்கள் கூட ஒரு ஆண்டில் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்திலும், மறு ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்திலும் படிக்கின்ற நிலை இருந்தது. அதே போல இன்றைக்கும் டிபென்ஸ் கல்லூரியைப் பொறுத்தவரையில் கூட, அது சென்னைப் பல்கலைக் கழகத்திலே இருக்க வேண்டுமென்று சொல்லும்போது ஏதாவது உணர்வின் அடிப்படையில் யாராவது சம்பந்தப்பட்டவர்கள் அதிலே பிடிவாதமாக இருக்கிறார்களா என்கிற சந்தேகம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய துரதிருஷ்டம் என்னவென்றால் சில நடவடிக்கைகளை நாம் எடுக்க விரும்புகின்றபோது, நடவடிக்கையை அறிவிப்பதில் இருக்கின்ற வேகம் அழுத்தம் நடைமுறையிலே செயல்படுவதில் வருவதில்லை. தமிழ் பயிற்று மொழி குறித்து நாம் நடவடிக்கை எடுத்தோம். ஆனால் என்ன ஆயிற்று? பஞ்சாயத்து அல்லது நகராட்சிப் பள்ளிகளிலே வசதியில்லாத பிள்ளைகள் மட்டும் தான் தமிழிலே படித்தாக வேண்டுமென்கின்ற நிலை. ஆனால் வசதி படைத்தவர்களோ தங்கள் பிள்ளைகளை விரும்புகின்ற பள்ளிக் கூடங்களுக்கு அனுப்பி ஆங்கிலத்தில் படிக்க வைக்கலாம் என்கின்ற நிலை. அதற்குரிய வழிவகை எல்லாம் அவர்களுக்காகக் காத்திருக்கிறது. அதுபோல் இன்றைக்கு நாம் பாரதியார் பல்கலைக் கழகம் அமைக்க வேண்டுமென்று விரும்பி அதனை அமைத்தாலும் கூட, என்னுடைய கல்லூரி தொடர்ந்து சென்னைப் பல்கலைக் கழகத்திலே தான் இருக்க வேண்டுமென்று சொல்கின்ற ஒரு உணர்வு, மனப்பான்மை இன்னும் போகவில்லை. அத்தகைய உணர்வு வளர்வது நல்லதல்ல. வெள்ளைக்காரன் காலத்திலிருந்து நாம் வேறு காலத்திற்கு வந்து விட்டோம். இந்தக் காலத்திற்கேற்ற நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்திருக்கும் நிலைமையில் இந்தக் கல்லூரியையும் ஒரு குறிப்பிட்ட கால வரம்புக்குள், கல்லூரியின் எல்லைக்குள் இருக்கிற பல்கலைக் கழகத்தில் இணைக்க வேண்டாமா? என்ன காரணத்தினாலோ அந்தக் கல்லூரி தொடர்ந்து சென்னைப் பல்கலைக் கழகத்தில் இருப்பதுபற்றி ஒருவரும் பேசவில்லை. அதற்குரிய வசதிகளும் வாய்ப்புகளும் பாரதியார் பல்கலைக் கழகத்திற்கு இல்லை என்று காரணம் சொல்லப்

[திரு. க. இராமமூர்த்தி] [1983 நவம்பர் 21

படுமேயானால், நான் சொல்கிறேன், அதற்குரிய வசதிகளையும், வாய்ப்புகளையும் பாரதியார் பல்கலைக் கழகத்திற்கும் ஏற்படுத்தித் தருவது அரசின் கடமையாகும். அதற்கு ஒரு கால வரம்பை நிர்ணயித்து உடனடியாக ஏற்பாடு செய்வது அரசுக்கு மதிப்பைத் தரும்.

இன்றைக்கு பாரதியார் பல்கலைக் கழகத் திருத்தச் சட்ட முன்வடிவு, சென்னைப் பல்கலைக் கழகத் திருத்தச் சட்ட முன்வடிவு மற்றும் மதுரை-காமராசர் பல்கலைக் கழகத் திருத்தச் சட்ட முன்வடிவு வந்திருக்கும் நேரத்தில் ஒன்றை மட்டும் அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எவ்வளவு தான் நாம் கோடிக்கணக்கிலே கல்விக்காகச் செலவிட்டாலும் கூட, எவ்வளவு தான் சுயாட்சி மற்றும் தன்னாட்சி பெற்ற கல்லூரிகளை அதிகமாக்கிக் கொண்டு போனாலும் சரி அல்லது அதிகமான பல்கலைக் கழகங்களை உருவாக்கிக் கொண்டிருந்தாலும் கூட, அடிப்படையான கல்வியிலே ஒரு தரத்தை, ஒழுக்கத்தை, நம்பிக்கையை ஏற்படுத்தவில்லையென்றால், இவ்வளவும் வீணாகிப் போகிறது. நம்முடைய தமிழகத்திலே தான் (Academic year) 'கல்வி ஆண்டு' என்பது கிடையாது. கல்வி ஆண்டு என்று ஒரு ஆண்டு தமிழகத்திலே இல்லை. நம் கல்லூரிகள் எப்போது நடைபெறுகின்றன என்பது தெரியாது. எப்போது கல்லூரிகள் திறக்கப்படுகின்றன, எப்போது கல்லூரிகள் மூடப்படுகின்றன என்பதும் தெரியாது. இதற்குக் காரணம் 'கல்வி ஆண்டு' இல்லாதது தான். இப்போது நாம் பார்க்கிறோம். லா காலேஜில் இன்னும் அட்மிஷன் லிஸ்ட் போடவில்லை. மெடிகல் காலேஜுக்கு இப்போது தான் போட்டார்கள். என்ஜினியரிங் கல்லூரிக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு லிஸ்ட் போட்டார்கள். இப்படி வருஷம் பூராவும் போட்டுக்கொண்டே இருக்கிறார்கள். அத்தனை நாட்களும் இப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வெளி நாடுகளில் மல்லாந்து இதுகுறித்து நம்மை வேடிக்கையோடு நோக்குகிறார்கள். இப்படி நம்முடைய கல்லூரிகளிலே நடக்கின்ற நிலைபற்றி மற்றவர்கள் கேலியாக, கிண்டலாகப் பார்க்கின்ற அவல நிலை தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அதுபோல் இன்றைக்கு கல்லூரியில் தேர்வு எழுதுகிறார்கள் என்றால், எல்லோருக்கும் தேர்வு (Result) முடிவுகள் ஒழுங்காக வருவதில்லை. நூறு பேர்கள் எழுதுகிறார்கள் என்றால், ஐம்பது பேர்களுக்கு நம்பர் வருவதே இல்லை. ஐம்பது பேர்களுக்கும் ரிசல்ட் ஒழுங்காக வராத நிலையில், தொடர்ந்து படித்துக்கொண்டிருக்கிறார்கள் சிலர், அல்லது சிலர் அலைந்துகொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலை வசதிபடைத்தவர்களுக்கு ஒருவேளை சங்கடத்தை ஏற்படுத்தாமல் இருக்கலாம். இன்னொரு



1983 நவம்பர் 21] [திரு. க. இராமமூர்த்தி]

பல்கலைக் கழக எல்லைக்குள் இருக்கிற இடத்திலிருந்து அல்லது இன்னொரு மாநிலத்திற்கு ஒரு மாணவனுடைய தந்தை மாற்றப்பட்டுப் போய்விடுகிற நிலையில், சாதாரண மக்களுக்கு இப்படிச் செய்வதன் மூலம் என்ன பாதுகாப்பு இருக்க முடியும்? பல்கலைக் கழகங்களுக்காக, கல்விக்காக நாம் அதிகமாக நிதி ஒதுக்கி கல்வியை வளர்த்துக்கொண்டிருக்கிறோம் என்று பெருமையாக நிமிர்ந்து நின்று, எல்லோருக்கும் கல்வியைக் கொடுக்கிறோம் என்று சொல்லும் நிலையில், இப்படிப்பட்ட நிலைகளை மாற்றவில்லை யென்றால், இதனுடன் கூட இன்னும் ஆயிரம் கோடி ரூபாய் செலவிட்டாலும் கூட, அதனால் இந்த நாட்டிற்கும், மக்களுக்கும் உள்ளபடியே பயன் ஏற்பட முடியாது. இவற்றையெல்லாம் வன்மையாக, மனத் திண்மையோடு உறுதியான நடவடிக்கை எடுப்பதன் மூலம் அரசு சமாளிக்க வேண்டும். இந்த

(மணி 11-50)

நடவடிக்கைகளை எடுக்கும்போது சில சங்கடங்கள் வரும். அரசியல் ரீதியாக, கட்சி ரீதியாக, துறை ரீதியாக சங்கடங்கள் வரலாம். கல்வியமைச்சர் அவர்கள் இதிலே திண்மையாக நின்று தெளிவு காணவேண்டும் என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவில் எனது இந்தக் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அவை முன்னாலே கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டத் திருத்த முன்வடிவுகளின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

பொதுவாக, இந்தச் சட்டத் திருத்தங்களை நிறைவேற்றிப் பேசியதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக வெல்லிங்டன் பாதுகாப்பு பயிற்சிக் கல்லூரி பாரதியார் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டிருப்பதை மாற்றி சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்க வேண்டுமென்ற திருத்தத்தை முன்வைத்து இன்றைக்கு நாம் திருத்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். அந்தப் பயிற்சிக் கல்லூரி பாரதியார் பல்கலைக்கழகத்திலேயே இருக்கலாம், அங்கேயே அதற்கு என்று தனியாகத் துறையை நாம் தோற்றுவித்து அதை வளர்த்து நல்லபடியாக வைக்கலாம். நாம் ஆரம்பத்தில் இதுபோன்று செயல்படுத்த முடியும் என்ற நம்பிக்கையில் தான் இதுபோன்ற ஒரு முடிவை எடுக்காமல் இருந்தோம்.

ஆனால் பாதுகாப்புப் பயிற்சித் துறையை பகுதியில் வைத்திருப்பது மத்திய இராணுவத் துறையாகும். அவர்களே நமது அரசுக்கு ஒரு கடிதத்தை எழுதி இந்தப் பயிற்சிக் கல்லூரியை சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். நாம் அதை ஏற்றுக்கொள்ள வில்லையென்று சொன்னோம். அதற்குப் பிறகு இந்தப் பயிற்சிக் கல்லூரியை பூனாவில் உள்ள பல்கலைக் கழகத்துடன் இணைக்க இருந்த காரணத்தால் தான், நாம் அவர்கள் சொன்னதை ஏற்றுக்கொண்டு இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னதைப்போல, இது பாரதியார் பல்கலைக் கழகத்துடன் இருக்க வேண்டும், இதை அங்கேயே தொடர்ந்து நடத்த வேண்டுமென்று சொல்வதும் சரியான கருத்துத்தான். ஆனால் இந்தக் கருத்தை நாம் செயல் படுத்த முடியாத அளவுக்கு வேறு ஒரு கடிதம் வந்ததால், இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்தக் கல்லூரி தமிழ் நாட்டு எல்லையிலிருந்து, தமிழ் நாட்டு பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுச் செயல்படுகிற வாய்ப்புதான் இப்போதும் இருக்கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரிக்கு வரக்கூடிய மத்திய இராணுவ அதிகாரிகள். நேரடியாக விமானத்தில் கோவைக்கே வந்து விடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. சென்னைக்கு வந்துதான் கோவைக்குப் போகவேண்டும் என்ற நிலை இல்லை. டில்லியிலிருந்து நேராகவே கோவைக்குப் போகலாம். இப்போது இல்லாவிட்டாலும், கல்வியமைச்சர் அவர்கள் இனியாவது மத்திய இராணுவ அதிகாரிகளைச் சந்திக்கும்போது, இந்தக் கருத்தைச் சொல்லி, அந்தக் கருத்துக்கள் பயன்பெறும் வகையில் இத்தகைய நடைபெறுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, அதுபற்றி முயற்சிக்கப்படும்.

**திரு. ப. மாணிக்கம் :** தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரிக்கு சென்னைப் பல்கலைக் கழக சிலபஸ் இருக்கிறதா, டிஃபென்ஸ் மினிஸ்ட்ரி சிலபஸ் இருக்கிறதா? அது ஆபிசர்ஸ் ட்ரெயினிங் ஸ்கூல்தானே ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, அதுபற்றிய விபரம் என்னிடம் இல்லையென்றாலும், அது டிஃபென்ஸ் ஸ்டடி என்ற வகையில் அதுபற்றிய எக்ஸ்பர்ட்ஸ் போர்டு ஆப் ஸ்டடீஸ் அங்கே இருக்கிறார்கள்.



இந்தச் சட்ட திருத்த முன்வடிவின் மீது பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர்கள், குறிப்பாக தன்னாட்சி உரிமை பெற்ற கல்லூரிகளைப்பற்றி தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக் கிறார்கள். பொதுவாக தன்னாட்சி உரிமை பெற்ற கல்லூரிகளை ஏற்றுக் கொண்டதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் தன்னாட்சி உரிமை பெற்ற கல்லூரிகள் என்பது கல்வித் துறையில் வந்திருக்கிற முற்போக்கான மாறுதலாகும். இதுவரையில் ஒரு பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டிருக்கிற பல்வேறு கல்லூரிகளிலும் தொடர்ந்து ஒரே மாதிரி கல்விக்கூடங்கள் இருப்பது, தேவைக்கேற்பவும், முன்னேற்றத்திற்கேற்பவும் மாறுதல்களை உருவாக்குவது என்ற நிலைமை இருந்தது. மிகவும் கடினமானதாக இருக்கிற இப்படிப்பட்ட சூழ்நிலையில் தன்னாட்சி பெற்ற கல்லூரிகள் அந்தந்த வட்டாரத் தேவைகளுக்கும், அல்லது அந்தந்த மாணவர் களுடைய தேவைகளுக்கும் ஏற்ப பாடத் திட்டத்தை மாற்றிக் கொள்ளவும் அந்தப் பாடத் திட்டங்களைத் திருத்திக் கொள்வதற்குமான நிலைமை இருக்கிறது. அந்த அளவில் தன்னாட்சி உரிமை பெற்ற கல்லூரிகள் என்பவை மற்ற கல்லூரிகளைவிட சிறப்பாக இருக்கின்றன என்று சொல்ல முடியும். படிப்பைப் பொறுத்தவரையில், மற்ற கல்லூரிகளைவிட இந்தக் கல்லூரிகளின் தரம் மிக உயர்ந்த அளவில் இருக்கின்றது.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள், என் அரசுத் தரப்பில் தன்னாட்சி பெற்ற கல்லூரிகளை ஆரம்பிக்கக்கூடாது என்று கேட்டார்கள். அதற்கு நல்லதொரு பதிலை திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கஷ்டங்களின் அடிப்படையில்தான் கொண்டுவராமல் இருக்கிறோம். அடிக்கடி மாற்றல்கள், அவர்களால் முழுமையான அளவுக்கு ஒத்துழைப்பைக் கொடுக்க முடியாமல் இருப்பது போன்ற காரணங்களால் முடியவில்லை. நாமே நமது பிள்ளைகளைக் கல்லூரியில் சேர்க்கும்போது. முதலில் தனியார் கல்லூரிகளுக்குத்தான் விண்ணப்பம் செய்யச் சொல்கிறோம். முதலில் லயோலா கல்லூரி, இல்லாவிட்டால் கிறிஸ்டியன் கல்லூரி என்று

போய்விட்டு, அங்கே கிடைக்காவிட்டால் அரசுக் கல்லூரிகளுக்கு வருகிறோம். முதலிலேயே அரசாங்கக் கல்லூரிக்கு வருவதில்லை. இதற்கு என்ன காரணம்? ஏன் அப்படி ஒரு கருத்து மக்கள் மத்தியில் இருக்கிறது? அதற்கு யார் பொறுப்பு? அப்படி ஒரு நிலைமை இருப்பதை யார் கருத்தில் எடுத்துக் கொள்கிறார்கள்? இதைத் தவிர்க்க நாம் என்ன முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று பார்க்க வேண்டும். எப்படியோ அரசுக் கல்லூரிகளுக்கும் தனியார் கல்லூரிகளுக்கும் வித்தியாசம் இருக்கிறது என்பதை உணர வேண்டும். இந்த வித்தியாசம் பொதுமக்கள் உணருகிற அளவுக்கு இருக்கிறது என்பதை உணர வேண்டும். அந்த அடிப்படையில், புதிய மாறுதல்களைக் கொண்டு வருகிறபோது, அது தோல்வி அடையக் கூடாது என்று யோசித்து நன்றாக நடக்கக்கூடிய சில கல்லூரிகளைத் தேர்ந்தெடுத்து, அதை நடத்தச் சொல்கிறோம். நாங்கள் செய்கிறோம் என்பதைவிட அந்தக் கல்லூரிகள் "நாங்கள் தயாராக இருக்கிறோம்" என்று கேட்டவுடனே பல்கலைக் கழகம் அதற்கு அனுமதி தரக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்படிக் கேட்ட கல்லூரிகளுக்குத்தான் நாம் அனுமதி தந்திருக்கிறோம். சில கல்லூரிகளில் சில துறைகளுக்கு மட்டும் தந்திருக்கிறோம். தன்னாட்சி உரிமை என்பது இந்த கல்லூரிகளுக்கு வந்தபிறகுதான் நம் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதே தவிர, வருவதற்கு முன் சில பாலிடெக்னிக்குகள் இதில் வெற்றிகரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. பாராட்டத் தக்க அளவுக்கு இருக்கின்றன. இப்போது தன்னாட்சி பெற்ற கல்லூரிகள் 16 இருக்கின்றன. இப்போது கூட அதுபற்றிப் பேசப்பட்டது. கோவையில் இருப்பது இரண்டு தான். மீதி 14 கல்லூரிகள் இந்தவிதமான புகார்கள் இல்லாமல், கல்வித் தரத்தை உயர்த்துவதில் வெற்றி பெற்றிருக்கின்றன. நல்ல முறையில் அவைகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதைத்தான் நாம் பார்க்கிறோம். இரண்டு கல்லூரிகளில் நடக்கும் தவறுக்காக நாம் 14 கல்லூரிகளின் தன்னாட்சி உரிமையை ரத்து செய்வதா, அல்லது 14 கல்லூரிகளில் நல்ல முறையில் நடைபெறுகிறது என்பதற்காக இந்த இரண்டு கல்லூரிகளில் நடவடிக்கை எடுத்து அதைத் திருத்த முயற்சிப்பதா என்பதுதான் நம் முன்புள்ள பிரச்சினையாகும்.



ஆகவே அரசைப் பொறுத்தவரையில், 14 கல்லூரிகள் சிறந்த முறையில் நடைபெறுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெரும்பான்மையான கல்லூரிகள் நன்றாக நடக்கின்றன. ஒருசில கல்லூரிகளில் தவறுகள் இருக்கின்றனவென்றால், அதைத் திருத்த முயற்சி எடுத்துக் கொள்வதுதான் வழியாகும். அதுதான் புத்திசாலித்தனமான நடவடிக்கையாகும். இது பல்கலைக்கழகத்திற்குட்பட்ட விஷயம். அவர்கள் கமிட்டி போட்டு அவைகளைவிசாரித்து அவர்கள் தந்த சில அறிக்கையின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, இந்த ஆண்டுக்கு மட்டும் தன்னாட்சி உரிமை நீட்டிப்பு சில நிபந்தனைகளுக்குட்பட்டு கொடுத்திருக்கிறோம். அந்த நிபந்தனைகளை ஏற்காவிட்டால், அப்படி ஏற்று தன்னாட்சி உரிமையைப் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால், அடுத்த ஆண்டு கிடையாது என்ற நிபந்தனையைச் சேர்த்திருக்கிறோம். அதையும் மீறி அவர்கள் செயல்பட்டால், அவர்களுக்கு இந்தத் தன்னாட்சி உரிமையைத் தரக்கூடாது என்பதில் அரசு எந்தவிதமான கருத்து மாறுபாட்டுக்கும் இடம் வைக்காது. நாங்கள் அதை விரும்பவும் இல்லை. ஆகவே தன்னாட்சி உரிமை, பல்கலைக்கழகம் விதிக்கின்ற சட்ட திட்டங்களுக்கு, விதிகளுக்கு உட்பட்டு அவர்கள் தன்னாட்சி உரிமையைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரசுக் கல்லூரி என்பது மட்டுமல்ல. கோவையில் அரசு பொறியியல் கல்லூரி தன்னாட்சிக் கல்லூரியாகத்தான் நடந்துகொண்டிருக்கிறது. மேலும் சென்னையில் ராணி மேரிக் கல்லூரியினர் கேட்டிருக்கிறார்கள். அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். ஆசிரியர்கள் அடிக்கடி மாற்றப்படக்கூடிய நிலைமை இருப்பதால்தான், நாம் இதிலே நிதானம் காட்டுகிறோமே தவிர, வேறு எந்தவிதமான வித்தியாசமான நோக்கமும் அல்ல. நல்ல முறையிலே நடைபெறக்கூடிய அரசுக் கல்லூரிகளை நிச்சயமாக தன்னாட்சி பெற்ற கல்லூரிகளாக ஆக்குவதன் மூலம் இன்னும் பல பயன்களை மாணவர்களுக்குத் தர முடியும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(நண்பகல் 12-00)

இன்னும் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். ராணி மேரிக் கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியை திருமதி சரஸ்வதி அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையைப்பற்றிச் சொன்னார்கள். அந்த நடவடிக்கையை ரத்து செய்யும்படி, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்காமல் இருக்கும்படி கல்லூரிக் கல்வித் துறையை இந்த அரசு கேட்டுக்கொள்ளும்.

[திரு. செ. அரங்கநாயகம்]. [1983 நவம்பர் 21

போய்விட்டு, அங்கே கிடைக்காவிட்டால் அரசுக் கல்லூரிகளுக்கு வருகிறோம். முதலிலேயே அரசாங்கக் கல்லூரிக்கு வருவதில்லை. இதற்கு என்ன காரணம்? ஏன் அப்படி ஒரு கருத்து மக்கள் மத்தியில் இருக்கிறது? அதற்கு யார் பொறுப்பு? அப்படி ஒரு நிலைமை இருப்பதை யார் கருத்தில் எடுத்துக் கொள்கிறார்கள்? இதைத் தவிர்க்க நாம் என்ன முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று பார்க்க வேண்டும். எப்படியோ அரசுக் கல்லூரிகளுக்கும் தனியார் கல்லூரிகளுக்கும் வித்தியாசம் இருக்கிறது என்பதை உணர வேண்டும். இந்த வித்தியாசம் பொதுமக்கள் உணருகிற அளவுக்கு இருக்கிறது என்பதை உணர வேண்டும். அந்த அடிப்படையில், புதிய மாறுதல்களைக் கொண்டு வருகிறபோது, அது தோல்வி அடையக் கூடாது என்று யோசித்து நன்றாக நடக்கக்கூடிய சில கல்லூரிகளைத் தேர்ந்தெடுத்து, அதை நடத்தச் சொல்கிறோம். நாங்கள் செய்கிறோம் என்பதைவிட அந்தக் கல்லூரிகள் "நாங்கள் தயாராக இருக்கிறோம்" என்று கேட்டவுடனே பல்கலைக் கழகம் அதற்கு அனுமதி தரக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்படிக் கேட்ட கல்லூரிகளுக்குத்தான் நாம் அனுமதி தந்திருக்கிறோம். சில கல்லூரிகளில் சில துறைகளுக்கு மட்டும் தந்திருக்கிறோம். தன்னாட்சி உரிமை என்பது இந்த கல்லூரிகளுக்கு வந்தபிறகுதான் நம் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதே தவிர, வருவதற்கு முன் சில பாலிடெக்னிக்குகள் இதில் வெற்றிகரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. பாராட்டத் தக்க அளவுக்கு இருக்கின்றன. இப்போது தன்னாட்சி பெற்ற கல்லூரிகள் 16 இருக்கின்றன. இப்போது கூட அதுபற்றிப் பேசப்பட்டது. கோவையில் இருப்பது இரண்டு தான். மீதி 14 கல்லூரிகள் எந்தவிதமான புகார்கள் இல்லாமல், கல்வித் தரத்தை உயர்த்துவதில் வெற்றி பெற்றிருக்கின்றன. நல்ல முறையில் அவைகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதைத்தான் நாம் பார்க்கிறோம். இரண்டு கல்லூரிகளில் நடக்கும் தவறுக்காக நாம் 14 கல்லூரிகளின் தன்னாட்சி உரிமையை ரத்து செய்வதா, அல்லது 14 கல்லூரிகளில் நல்ல முறையில் நடைபெறுகிறது என்பதற்காக இந்த இரண்டு கல்லூரிகளில் நடவடிக்கை எடுத்து அதைத் திருத்த முயற்சிப்பதா என்பதுதான் நம் முன்புள்ள பிரச்சினையாகும்.



1983 நவம்பர் 21] [திரு. செ. அரங்கநாயகம்]

ஆகவே அரசைப் பொறுத்தவரையில், 14 கல்லூரிகள் சிறந்த முறையில் நடைபெறுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெரும்பான்மையான கல்லூரிகள் நன்றாக நடக்கின்றன. ஒருசில கல்லூரிகளில் தவறுகள் இருக்கின்றனவென்றால், அதைத் திருத்த முயற்சி எடுத்துக் கொள்வதுதான் வழியாகும். அதுதான் புத்திசாலித்தனமான நடவடிக்கையாகும். இது பல்கலைக்கழகத்திற்குட்பட்ட விஷயம். அவர்கள் கமிட்டி போட்டு அவைகளைவிசாரித்து அவர்கள் தந்த சில அறிக்கையின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, இந்த ஆண்டுக்கு மட்டும் தன்னாட்சி உரிமை நீட்டிப்பு சில நிபந்தனைகளுக்குட்பட்டு கொடுத்திருக்கிறோம். அந்த நிபந்தனைகளை ஏற்காவிட்டால், அப்படி ஏற்று தன்னாட்சி உரிமையைப் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால், அடுத்த ஆண்டு கிடையாது என்ற நிபந்தனையைச் சேர்த்திருக்கிறோம். அதையும் மீறி அவர்கள் செயல்பட்டால், அவர்களுக்கு இந்தத் தன்னாட்சி உரிமையைத் தரக்கூடாது என்பதில் அரசு எந்தவிதமான கருத்து மாறுபாட்டுக்கும் இடம் வைக்காது. நாங்கள் அதை விரும்பவும் இல்லை. ஆகவே தன்னாட்சி உரிமை, பல்கலைக்கழகம் விதிக்கின்ற சட்ட திட்டங்களுக்கு, விதிகளுக்கு உட்பட்டு அவர்கள் தன்னாட்சி உரிமையைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரசுக் கல்லூரி என்பது மட்டுமல்ல. கோவையில் அரசு பொறியியல் கல்லூரி தன்னாட்சிக் கல்லூரியாகத்தான் நடந்துகொண்டிருக்கிறது. மேலும் சென்னையில் ராணி மேரிக் கல்லூரியினர் கேட்டிருக்கிறார்கள். அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். ஆசிரியர்கள் அடிக்கடி மாற்றப்படக்கூடிய நிலைமை இருப்பதால்தான், நாம் இதிலே நிதானம் காட்டுகிறோமே தவிர, வேறு எந்தவிதமான வித்தியாசமான நோக்கமும் அல்ல. நல்ல முறையிலே நடைபெறக்கூடிய அரசுக் கல்லூரிகளை நிச்சயமாக தன்னாட்சி பெற்ற கல்லூரிகளாக ஆக்குவதன் மூலம் இன்னும் பல பயன்களை மாணவர்களுக்குத் தர முடியும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(நண்பகல் 12-00)

இன்னும் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். ராணி மேரிக் கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியை திருமதி சரஸ்வதி அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையைப்பற்றிச் சொன்னார்கள். அந்த நடவடிக்கையை ரத்து செய்யும்படி, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்காமல் இருக்கும்படி கல்லூரிக் கல்வித் துறையை இந்த அரசு கேட்டுக்கொள்ளும்.

[திரு. செ. அரங்கநாயகம்] [1983 நவம்பர் 21

அதைப்போலவே திரு. நாசிங்கத்தின் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கையை நிறுத்தி வைக்கும்படி கல்வித் துறையை அரசு கேட்டுக் கொள்ளும் என்பதை இந்த நேரத்தில் சொல்லி இந்தச் சட்ட முன்வடிவுகளுக்கு ஆதரவு தந்த அத்தனை உறுப்பினர்களுக்கும் நன்றி கூறி இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1983 ஆம் ஆண்டு, பாரதியார் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1983) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1983 ஆம் ஆண்டு, பாரதியார் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1983) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1983 ஆம் ஆண்டு, பாரதியார் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1983) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



**(2) 1983 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1983).**

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1983 ஆம் ஆண்டு, சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1983) @ ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகச் சட்டத்தின் ஐந்தாம் பிரிவிலும், 1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழகச் சட்டத்தின் ஐந்தாம் பிரிவிலும் குறிப்பிடப்பட்டுள்ள பல்கலைக் கழகம் தவிர, பல்கலைக் கழகப் பகுதிக்குள் உள்ள கல்லூரிகள் எதுவும், வேறு யாதொரு பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்படக்கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் உள்ள வேறு எந்தப் பல்கலைக் கழகத்துடனும் இணைந்த அல்லது தொடர்புடைய, எந்த ஒரு கல்வி நிறுவனமும், அரசு மற்றும் சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகம் ஆகியவற்றின் முன் அனுமதி இன்றி, மற்றபடி பாரதியார் அல்லது பாரதிதாசன் பல்கலைக் கழகத்தினால் அங்கீகரிக்கப்படக்கூடாது என்றும், மேற்குறிப்பிட்ட பிரிவில் இரு சட்டங்களிலும் கூறப்பட்டுள்ளன. சென்னை பல்கலைக் கழகச் சட்டத்திலும் மற்றும் மதுரை-காமராசர் பல்கலைக் கழகச் சட்டத்திலும் இவை போன்ற விதித் துறைகள் எவையும் இல்லை. எனவே, சென்னை மற்றும் மதுரை-காமராசர் பல்கலைக் கழகங்களின் சட்டங்களில் பாரதியார் மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழகங்களின் சட்டங்களில் காணப்படுகின்ற மேலே சொல்லப்பட்டுள்ள பிரிவினைச் சேர்ப்பதற்குத் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த உத்தேசச் சட்டத்தை அவசரச் சட்டமாகக் கொண்டுவர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால், 19—8—1983 அன்று அவசரச் சட்டமாகத் தமிழ் நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.

இது சட்ட முன்வடிவாக மாற்றப்பட்டு, மேற்கூறியுள்ள முடிவுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்க வகை செய்கின்றது.

---

@ 257-25[illegible] ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பேரவையில் நிறைவேற்றிய வண்ணம் இந்தச் சட்ட முன்வடிவை ஆய்விற்கு எடுத்துக் கொள்ளுமாறும், பின்பு நிறைவேற்றித் தருமாறும் அவைக்குப் பரிந்துரைக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1983 ஆம் ஆண்டு, சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1983) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1983 ஆம் ஆண்டு, சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1983) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1983 ஆம் ஆண்டு, சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1983) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



(3) 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1983).

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1983) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

இதோடு தொடர்புடைய மேலும் நான்கு சட்ட முன்வடிவுகளும் அவையின் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளையும் சேர்த்து மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அடுத்த நான்கு சட்ட முன்வடிவுகளும் இதன் தொடர்புடைய பொருள் பற்றியதாக இருப்பதால் அதற்கான விவாதங் களையும் ஒன்றாகச் சேர்த்துப் பேசிவிடலாம். பிறகு இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றிவிட்டு மற்ற சட்ட முன்வடிவுகளை முன்மொழிந்து விவாதம் இல்லாமல் நிறைவேற்றிவிடலாம்.

முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1983) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

Thiru A. R. DAMODARAN : Hon. Chairman, Sir, the Bills that have been introduced by the Hon. Minister to extend the life of Special Officers in the Panchayat Union Councils as well as the Panchayats, are, perhaps, to some extent, inevitable because of the Judgment that has been given by the Madras High Court and which has been taken in appeal to the Supreme Court.

---

@ 260 ஆம் பக்கத்தில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

I would, however, like to point out that, while in the case of Panchayats and Panchayat Union Councils there is a Court Judgment which may prevent elections being held, there is no such prohibition as far as the Municipalities Act is concerned. When the Hon. Minister convened the all-Party Leaders' Conference, we requested him to conduct elections to Municipalities even before the 15th December 1983. There is at present no Court action, no Court injunction, no bar; and we could have easily proceeded with elections to about 106 Municipalities that existed in Tamil Nadu. Even if people should wish to contest the principle of reservation, either for women or for Scheduled Castes and Scheduled Tribes, then, the same principle could have been taken in appeal to the Supreme Court and both things could have been judged at the same time. Now, what is going to happen is that when the Municipal elections are announced, there will be somebody who is likely to take it to Court, apply on the same principle and again the matter is likely to be delayed. I do not wish to advise this Ministry on the dangers that exist in extending the life of Special Officers in Panchayat Union Councils, Panchayats and Municipalities indefinitely. In my opinion, irreparable damage has been caused to local administration and the number of complaints that have been made about maintenance in our Municipalities arise only because of the absence of elected representatives in these bodies. While the Hon. Minister does try to rectify the situation by having a number of meetings in Municipalities, in Panchayats and even in Corporation limits, I would like to tell him that this efforts will not succeed unless there are elected representatives to point out the various defects that have arisen in the field of local administration.

Sir, since 1920, we have been following the District Municipalities Act. Even a couple of years ago, when the Hon. Minister said that steps would be taken to hold elections to Municipalities and Panchayats, we on this side pleaded that an opportunity could be taken to bring in a comprehensive Bill to amend the Municipalities Act. I remember that such a comprehensive Bill was promised in 1966 when I first entered





the Council and when the Hon. Thiru Bhaktavatsalam was the Chief Minister. We have been promised comprehensive amendments by successive Local Administration Ministers. In spite of this, in 1983, we have had no comprehensive amendment to the District Municipalities Act and the only thing we find today is the unfortunate measures that have been taken to keep on extending the life of Special Officers in all these bodies. In fact, the last time when the Hon. Minister moved his Bills—I think it was about six months ago—I requested him to cyclostyle these Bills leaving the date unfilled because this has become such a routine procedure. I would like to assure him that all the processes that he has envisaged even for holding elections to Panchayats and Panchayat Union Councils will not be completed by the 28th February because after the judgment is delivered by the Supreme Court—as he has himself pointed out, arrangements are being made to refix the strength of the Panchayats, to delimit the Wards and to reserve seats for members of the Scheduled Castes and the Scheduled Tribes—the revision of electoral rolls will have to be taken up after the delimitation of

(பிற்பகல் 12-10)

Wards in the Panchayats is completed. Does the Hon. Minister mean to assure this House that after the Supreme Court judgment is delivered and after all these formalities are undertaken, he is going to have the revision of the electoral rolls completed before February 28? Why is this Legislature being—I should not use the word 'fooled'—misled considerably by frequent promises being made that elections will be held by February 28? In my opinion, the process is so lengthy and so cumbersome that we cannot have election before February 28 and it would be far more honest for the Hon. Minister to say that he wants to extend the life of the Special Officers by at least one year instead of doing it at six months' interval.

[Thiru A. R. Damodaran] [1983 நவம்பர் 21

Then, Sir, another statement has been made that if the elections cannot be held according to the new Act, elections will be held according to the old Act. I am not able to understand how the Government can have elections under the old Act which has been repealed. The Government will, then, have to repeal the new Act and will have to introduce an Ordinance bringing back to life the old Act and will have to start the process of elections again. I do not know why we are trying to delay election to the local bodies which, in my opinion, are the backbone of democratic administration in a State.

We had Taluk Boards, we had District Boards and we had
the Panchayat Union Councils Act in 1959. Not only in Tamil
Nadu but in over 10 to 12 States in India, a determined effort
has been made to wipe out all local administration councils and
centralise authority in the Government either in the States or
at the Centre. As one who believes strongly in decentralisation
of powers, decentralisation of authority and decentralisation of
democratic activity, I feel that this move to postpone perpetually
the elections to Panchayats, Panchayat Union Councils and
Municipalities is deleterious to the welfare of the State and to
the many welfare programmes that this Government want to
implement, whether they are in the field of applied nutrition,
whether they are in the field of welfare activities or whether
they are in the field of improvement of roads, school buildings,
etc., which are managed by Municipalities and local bodies.
I would wish and request that at least on this occasion, the
Hon. Minister will be earnest and sincere in trying to expedite
the appeal before the Supreme Court, and as soon as the
judgment comes, in announcing the elections not only to
Municipalities but to all other local bodies in our State. I am
not saying that there are no Special Officers who are devoting
their special attention to their work in the areas but the
absence of the elected representatives is leaving a big vacuum
in the field of local administration, the vacum which the Hon.



1983 நவம்பர் 21] [Thiru D. R. Damodaran]

Minister himself feels. As I said, I hope the Hon. Minister will have the privilege, during his Ministership, of addressing at least one Chamber of Municipal Chairmen or the Chairmen of Panchayat Union Councils. The previous Local Administration Minister did not have that privilege. I hope that at least during the tenure of the present Minister, he will have at least one occasion when he will be able to call all the 375 Chairmen of Panchayat Union Councils and the Chairmen of 106 Municipalities and at least see their faces before he lays down office in 1985 when the next General Election is due. That is not to say that he is not likely to continue. I only wish that during this period of his Ministership, he will take the occasion to activate our local bodies and earnestly try to complete the elections at the earliest possible moment. Thank you, Sir.

**திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவுகள் அனைத்தையும் நான் எதிர்த்துப் பேசுகிறேன். காரணம் தனி அதிகாரிகளுடைய நிர்வாகம் பல இடங்களிலே நடைபெறவில்லை. சுருக்கமாகச் சொன்னால், 25 சதவிகிதம் அதிகாரிகள் காரியங்களைச் செய்ய முயல்கின்றார்கள். அவர்களும் நேர்மையானவர்கள்தான். ஆனால் அங்கு 75 சதவிகிதம் அளவிற்குக் காரியங்கள் நடைபெறுவதே இல்லை. இப்போது கிராமங்களிலே உள்ள நிலைமையிலே, குறிப்பாக வறட்சி ஏற்பட்டபோது, இன்றைய நிர்வாக அமைப்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்திருந்தால், எந்த அளவுக்குச் செயலாற்றியிருக்க முடியுமோ அந்த அளவுக்குச் செய்யவில்லை. அதிலே கால்பகுதிகூட செயலாற்ற முடியவில்லை. நான் சொல்வது அதிகாரிகள் மீதுள்ள கோபத்தினால் அல்ல. நிர்வாகம் என்பது எப்போதும் தேவையானதுதான். எனவே நிர்வாகத்திலுடைய அவசியத்தை நான் மறுப்பவன் அல்ல. இருப்பினும் இன்றுள்ள நிர்வாகம் சீரழிந்துவிட்டது. குறிப்பாக கிராமங்களிலே இன்றைக்கு நடக்கக்கூடிய வேலைகள் அப்படி இருக்கின்றன. அங்கேயிருந்து விவரங்கள் நமக்கு வருகின்றன. நிர்வாகத்தில் உள்ளவர்கள் தரக்கூடிய விவரங்கள்தான் நமக்கு வருகின்றன. அந்த விவரங்களைத் தான் அரசு நமக்குத் தருகிறது. அமைச்சர் அவர்கள் மூலமாக

அவைகள் நமக்குக் கிடைக்கின்றன. அதிகாரிகள் மட்டத்திலே, கீழ்மட்டத்திலே,
இன்னும் சொல்லப்போனால் சுதந்திரம் அடைந்த பிறகும், அதிகாரிகளை
நம்பியே ஜனநாயகத்தை நடத்துவது என்பது மிகப் பெரிய ஆபத்தில்தான்
முடியும். ஜனநாயகம் வலுவாக இருக்க வேண்டும். ஜனநாயகத்தினுடைய வேர்
என்று சொல்லும்போது, 'கிராஸ்ரூட்ஸ் ஆஃப் தி இந்தியன் டெமாக்ரசி'
என்பதுதான் நேருஜி அவர்களுடைய விளக்கம். அது அழிந்துவிட்டது.
இனிமேல் நீர் ஊற்றி அதை நாம் வளர்க்க வேண்டும். புல்லைப் பொறுத்த
வரையில், அது மழை பெய்தால் முளைத்துவிடும். ஜனநாயகம் என்ற புல்
மழை பெய்தால்தான் முளைக்கும். இன்றைக்கு அது காய்ந்து விட்டது என்ற
நிலையில்தான் இருக்கிறது. ஆக நிர்வாக அதிகாரிகள் காலத்தை சட்டப்படி
தான் அரசு நீட்டிக்கிறது. அது உண்மை என்றாலும், இப்படி அவர்கள் பதவிக்
காலத்தை நீட்டிப்பது என்பது சரியல்ல. தேர்தலைப் பொறுத்தவரையிலும்,
அது எப்போது நடக்கும் என்று சொல்லமுடியாத நிலையில்தான்
இருக்கிறோம். அதுபற்றி யாருக்கும் தெரியாது. நான் இதைச் சொல்லும்
போது, அரசுக்கு முடிவு தெரியாதா என்று கேட்கும்போது, எனக்கும் ஒரு
சந்தேகம். அரசுக்குத் தெரியாது என்று சொல்லலாம். ஏனென்றால் காலத்தின்
சூழ்நிலையைப் பொறுத்து அவர்கள் தீர்மானிக்க முடியாத அளவில்
இருக்கிறது. முதல்வர் அவர்கள் பேரவையிலே அறிவிப்பு செய்கிறார்கள்.
நினைவில் வைத்துக்கொண்டிருக்கிறோம். இருப்பினும் 1984 பிப்ரவரியில் என்ன
நடக்கும் என்று சொல்ல முடியாது. பஞ்சாயத்துத் தேர்தல், நகராட்சித்
தேர்தல், மாநகராட்சித் தேர்தல் நடக்குமா அல்லது வேறு தேர்தல் நடக்குமா?
எதுவும் இறுதியாகவில்லை. ஆகவேதான் இந்தச் சட்ட முன்வடிவுகளை நான்
ஆதரிக்கவில்லை. இருந்தாலும் நான் ஒன்று சொல்கிறேன். கொசுத் தொல்லை.
இதை நாம் பார்க்கிறோம். அந்த அதிகாரிகளை வைத்து கொசுத்
தொல்லையையாவது குறைக்கலாம். ஏற்கெனவே அரசு போட்ட ஜி.ஓ.-படி
ஒரு குறிப்பிட்ட கம்பெனி மருந்து வாங்க வேண்டாம் என்று சொல்லியிருக்
கிறார்கள். ஆனால் அந்த மருந்தை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அதற்குக்
காரணம் அதனால் சில சௌகரியங்கள் இருக்கின்றன. ஆனால் அவர்கள் பலன்
உள்ள மருந்தையும் வாங்க முடியும். அதையாவது செய்ய வேண்டும். குறைந்த
பட்சம் அதைச் செய்ய வேண்டும். தமிழ்நாட்டில் கொசுத் தொல்லை
காரணமாக, அதன் வளர்ச்சி காரணமாக பல்வேறு தொல்லைகள் ஏற்படு
கின்றன. கொசு வளர்ச்சிக்குக் காரணம் நீர்நிலைகள் அசுத்தமாக இருப்பது
தான். பயன் அற்ற மருந்துகளை உபயோகிப்பதாலும் அப்படி இருக்கின்றன.





அதை சரியாகச் செய்ய வேண்டும். ஜனநாயக முறையில் பல்வேறு குறைகள் இருக்கின்றன. அதிலே எல்லாக் குறைகளையும் தீர்க்க முடியாது. ஆனால் குறைந்தபட்சம் கொசுத் தொல்லையைக் குறைப்பதையாவது இந்த அரசு செய்தால், மக்களுக்கு அது உதவியாக இருக்கும். இன்று தமிழகத்தில் நிலைமை எப்படி இருந்தாலும் மெஜாரிட்டியை வைத்து சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றிவிடலாம். ஆனால் இந்தக் காரியத்தை மெஜாரிட்டியை வைத்துச் செய்ய முடியாது. ஆகவே இந்த மருந்தையாவது மாற்றி அதிகாரிகள் காரிய மாற்ற வேண்டும். இதைச் செய்யாவிட்டால், தமிழ்நாட்டில் வறுமை மட்டும் அல்ல, நோயும் அதிகமாகிவிடும் என்று சொல்லிக்கொள்கிறேன். 'நடக்கும் என்று சொன்னால் அது நடக்காது' என்று சொல்வார்கள். அந்தப் பாட்டின் பின்பகுதியை நான் சொல்ல விரும்பவில்லை. இதைச் சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பதற்காக இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மாணிக்கம் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இது ஒரு சடங்காகத்தான் இருக்கின்றது. அப்படித்தான் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலே நாம் எல்லாம், இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் எல்லாம் பல முறை பேசிப் பேசி அலுத்துப்போயிருக்கிறோம். அப்படி அலுத்துவிட்ட பின்னர் அடுத்து அடுத்துப் பேசுவது என்பதும் அரைத்த மாவையே அரைப்பதாகத்தான் இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். இருந்தாலும் மீண்டும் ஒரு முறை இதிலேயுள்ள பிரச்சினைகளைப்பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைப்பற்றிப் பலமுறை பேசியிருப்பதனால், சீக்கிரமாகவே முடித்துக் கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** *

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[1983 நவம்பர் 21

(பிற்பக 12—20)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் நினைக்கிறேன், அவருக்கும் * இருக்கிறார் என்று.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அப்படித்தான் பொருள்படுகிறது. உண்மைதான் என்றாலும், அந்த மாநகராட்சி, நகராட்சிகளில் * அதை பயன்படுத்திக்கொண்டு அப்படியே வைத்திருப்பதா என்றெல்லாம் பல முறை நாங்கள் எடுத்துச் சொல்லி வாதிட்டும், அது பயனில்லாத நிலையிலே இருந்து வருகிறது. இப்போது அதிகாரிகளுடைய ஆட்சி. எந்த ஆட்சியிலேயும் அதிகாரிகளுக்கு ஆட்சிக்குரிய ஒரு நிலையை . . .

**திரு. சி. இராமலிங்கம் :** தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் * என்று சொல்லுகிறாரே, அது என்ன? அதற்கு ஆதாரம் இருக்கிறதா? சொல்லுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வந்திருக்கிற சட்ட முன்வடிவு * பற்றியதல்ல. உள்ளாட்சித் துறையைப் பற்றியது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, *

என்று சொன்னால் அது வேறு பொருள் படக்கூடிய நிலையிலே உறுப்பினர் அவர்கள் பேசுகிறார்கள். அப்படி அவர் பேசலாமா, அது சரிதானா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவரவர்களே, இதற்கெல்லாம் மிகப் பெரிய விளக்கம் தேவையில்லை. அவரவர்களுடைய நெஞ்சிலே கை வைத்துப் பார்த்தால், அவர்களுக்கே நன்றாகத் தெரியும். இதை இத்தோடு விட்டுவிடுகிறேன். ஆக இப்படிப்பட்ட பிரச்சினைக்கு நாம் செல்ல வேண்டிய அவசியமில்லை.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, நான்கூட உண்மையாக, தூய எண்ணத்தோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்துக்களைச் சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன். உண்மையிலேயே

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



1983 நவம்பர் 21] [திரு. ப. குழந்தைவேலு]

வேறு அர்த்தம் இருந்தால், தயவுசெய்து வெளிப்படையாகச் சொல்ல வேண்டும். ஏனென்றால் 1973-லே சென்னை மாநகராட்சி கலைக்கப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தது. மீண்டும் மூன்று ஆண்டுக்காலம் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள் ஏன் தேர்தலை நடத்தவில்லை என்ற கேள்விக்கு, மாநகராட்சி * அதனால் நடத்தவில்லை என்று நான் பதில் சொன்னால் சரியாக இருக்காது. ஆகவே தயவுசெய்து கருத்துக்களை வெளியிடுகின்ற நேரத்தில், என்மீது குற்றச்சாட்டு இருந்தால் வெளிப்படையாகச் சொல்லலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்கிறேன். * என்ற வார்த்தையை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். விவாதம் மேலே போகட்டும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, * என்ற வார்த்தையை மட்டும் தனியே எடுத்துப் பயனில்லை. * முழுத் தொடரையும் நீக்குவதுதான் சரியாக இருக்குமே தவிர, தொடரை வைத்துக்கொண்டு * என்ற வார்த்தையை மட்டும் நீக்கினால் சரியாக இருக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** * நீக்கிவிடலாமே! அப்படியே அவர்கள் பதவி நீக்கம் செய்யப்படுகிறார்கள். (சிரிப்பு)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நான் சொன்ன வார்த்தைகள் பார்லிமென்டரி முறைக்கு உட்பட்டதுதான். அதை மீறவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதில் விவாதம் எதற்கு? நேரமாகிறது. நான் குற்றம் சொல்லவில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** * என்று சொல்லுவது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றுதான். விளக்கம் கேட்கிறார்கள். சொல்லத் தயாராக இருக்கிறேன். எல்லாவற்றையும் எடுத்துவிடுவது என்பது . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தலைவர் தீர்ப்பு கொடுத்த பிறகு, அதுபற்றி விவாதம் வேண்டாம். மேலே பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பேச்சை எடுக்கவில்லை. * என்று சொன்ன பகுதி நீக்கப்படுகிறது.

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** அப்படி நீக்குவதாக இருந்தால் மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்ன * நீக்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவர் சொன்ன * நீக்கப்படுகிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, இதை நான் இவ்வளவு வேகமாகச் சொல்லுவதற்குக் காரணம் இப்படிப்பட்ட பழிச் சொற்கள் எல்லாம் வர வேண்டாமே, சீக்கிரமாகத் தேர்தல்களை நடத்த வேண்டுமென்று நினைக்க வேண்டுமென்பதற்காகத்தான்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** திரும்பத் திரும்ப ஏன் அதற்குள்ளே போகிறார்கள்? விஷயத்திற்கு வர வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** இப்போது நடந்து கொண்டிருப்பது அதிகாரி களுடைய ராஜ்யம். அதிகாரிகளுடைய ராஜ்யத்திலே என்ன நடைபெற்றிருக் கிறது என்பதைச் சொல்லி, அரசுக்குச் சில வேண்டுகோள்கள் விடுக்கிறேன். அரசியல்வாதிகள் யார் யாரோ எப்படியோ சம்பாதித்து, எப்படியோ ஆகிவிட்டார்கள் என்று பொதுப்படையாகப் பேசப்படுகிறது. ஆனால் பதவி நீட்டம் செய்யப்பட்ட அதிகாரிகள் தங்களைக் கேட்க யாரும் இல்லை என்ற அளவிலே, கோடீஸ்வரர்களாகி விட்டார்கள். பினாமி பெயரிலே சம்பாதித்துள்ள சொத்துக்கள் ஏராளம். எனவே அந்த அதிகாரிகள் செய்யும் அட்டூழியங்களை விசாரிக்க குறைந்தபட்சம் ஒரு விசாரணைக் கமிஷன் போட வேண்டும். இதைச் செய்தால், இதனால் இந்த அரசுக்கு ஏற்பட்டுள்ள அவப் பெயரும் தீரும்; அதே நேரத்திலே குற்றம் செய்த அதிகாரிகள் தண்டிக்கப்படவும் வாய்ப்பு இருக்கும்.

இந்தத் தேர்தல்கள் நடக்காததால் ஊராட்சிகளிலும், நகராட்சிகளிலும் பல்வேறு வேலைகள் தடைபட்டிருக்கின்றன. ஒவ்வொரு தடவையும் சொல்கிறோம். மின்சாரம் இல்லை, குடிநீர் இல்லை, சாலை வசதிகள் இல்லை என்று. எங்கு குளங்களை வெட்ட வேண்டுமோ அங்கே வெட்டவில்லை. ஆனால் வெட்டப்பட்டதாகக் கணக்கில் வருகிறது. இப்படிப் பல்வேறு ஊழல்கள் இருக்கின்றன என்று எடுத்துச் சொல்லியும்கூட, தேர்தல்கள் சீக்கிரம் நடை பெறுகின்றனவா என்றால் இல்லை. பிப்ரவரியில் தேர்தல் நடைபெறும் என்று முதல்வரவர்கள் பேரவையில் சொன்னதைச் சுட்டிக் காட்டினார்கள். பிப்ரவரி

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. எந்த பிப்ரவரி என்று சொல்லப்பட வில்லை. 1983 பிப்ரவரியா, 1984 பிப்ரவரியா, 1985 பிப்ரவரியா என்று தெரிய வில்லை. ஆக இப்படியே போய்க்கொண்டிருந்தால், நாம் ஜனநாயக நாட்டில் தான் இருக்கிறோமா என்ற ஐயப்பாடு மட்டுமல்ல, நம்மோடு இவ்வவையிலே உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டிய பல உறுப்பினர்கள் இல்லாமல் இருக்கிறார்களே என்று வருத்தமும் ஏற்படுகிறது.

**திரு. சி. இராமலிங்கம்:** 1983 பிப்ரவரி போய்விட்டது. 1983, 1984 என்று உறுப்பினர்கள் அவர்கள் சொல்லிக் கொண்டு போகிறார். அடுத்து வருவதுதான். பக்கத்து வீட்டுக்காரர் என்றால் அடுத்து இருப்பவர்தான். மூன்றாவது வீட்டுக்காரன் என்றால்தான் மூன்றாவது வீட்டுக்காரரைக் குறிக்கும். புரட்சித் தலைவர் பிப்ரவரி என்றால், ஜனவரிக்கு அடுத்து வருவதுதான்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் விளக்கத் திற்கு நன்றி. அதுதான் என்று அவர்கள் உறுதிப்படுத்திச் சொன்னதால், வெளியே இருப்பவர்களுக்குத் தெரிய வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவர் உறுதிப்படுத்தி விட்டால் போது மென்று உறுப்பினர் நினைக்கிறாரா?

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு தலைவரவர்களே, அதிலும் சந் தேகம் இருக்கிறதென்று தலைவரவர்களே சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். பொதுத்தேர்தல் கூட வருமென்ற ஐயப்பாடு இருப்பதால் இது முடியாமல் போகலாம். ஒவ் வொரு முறையும் பல்வேறு காரணங்களைச் சொல்லுகிறோம். வறட்சி என்கி றோம், மழை என்கிறோம், ஸ்ரீலங்கா தமிழர்கள் பிரச்சினை என்கிறோம். வருங்காலத்தில் பொதுத் தேர்தல் என்று சொல்ல இருக்கிறோமா என்ற நிலை இருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** கவர்னர் பெருமானையும், தலைவர் பெருமானை யும் விவாதத்திற்குள் இழுக்கக்கூடாது. தலைவர் அவர்களே தேர்தல் நடக் காதென்று அபிப்பிராயப்படுகிறார்கள் என்று சொல்லி உங்களை விவாதத்திற் குத் துணைக்கு இழுக்கிறார்கள். அது எவ்வளவு தூரம் சரியானது என் பதை நீங்கள்தான் சொல்ல வேண்டும்.

[1983 நவம்பர் 21

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அந்த எண்ணத்தில் நான் சொல்ல வில்லை. அவரும் அந்தப் பொருளில் சொல்லியிருக்க மாட்டார் என்று கருது கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல, இந்த அமைச்சராவது தேர்தல்களை நடத்த வேண்டும். ஏற்கெனவே இருந்த அமைச்சர் பல முறை சொன்னார்கள். "சொன்னதைச் செய்வேன், செய்வதைச் சொல்வேன்" என்று சொன்னார்கள். அதற்குப் பின்னாலே கூட நான் சொன்னேன். "சொன்னதைச் செய்யேன், செய்வதைச் சொல் லேன்" என்று நீங்கள் பாடினால் நன்றாக இருக்கும் என்று சொன்னேன். அதுதான் உண்மையாகப் போயிற்று. இந்த அமைச்சரும் காலத்தைக் கடத் திக் கொண்டிருக்கிறார்கள். ஊராட்சியிலே, நகராட்சியிலே மக்கள் எவ்வளவு தொல்லைகளை அனுபவிக்கிறார்கள் என்பதை அறிந்து, விரைவிலே தேர்தல் களை நடத்த வேண்டும். ஒரு பாலம் கட்ட வேண்டுமென்றால், உள்ளூரிலே இருப்பவர்கள் பொறுப்பாளியாக இருந்தால்தான், எங்கு வேண்டுமென்பதைப் பார்த்துச் சொல்ல முடியும். வெளியிலே இருந்து வேலைக்கு வந்தவர்களாலே அப்படிச் சொல்ல முடியாது. அவர்களுக்கு எது முக்கியம், எது முக்கியமான தல்ல என்பது தெரியவில்லை. இப்படிப் பல்வேறு பிரச்சினைகள் இருக் கின்றன. ஆசிரியர்களுக்குக்கூட பல தொல்லைகள் இருக்கின்றன. பல்லவ புரம் நகராட்சிபற்றிச் சொன்னேன். இந்த ஆண்டு காதி, கைத்தறிக் கடன் கொடுக்கவில்லை. ஆசிரியர்கள் அல்லல் படுகிறார்கள் என்று எடுத்துச் சொன் னேன். அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள். இவ்வாறு ஒவ்வொரு பிரச்சினையையும் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து செய்ய வேண்டுமென்றால், எவ்வளவு சிரமமானது என்பது தெரியும். அங்கேயே இருப்பவர்கள் தலைவர்களாக இருந்தால் அவர்களே பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்து வைப்பார்கள் எனவே விரைவிலே தேர்தலை நடத்துங்கள், இன்னொரு தடவை நாங்கள் இதுபற்றிப் பேச வாய்ப்பு தராதீர்கள் என்று கோரி, முடிக்கிறேன்.

(பிற்பகல் 12-30)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, ஊராட்சி மற்றும் மாநகராட்சி சம்பந்தமாகக் கொண்டு வந்திருக்கக்கூடிய ஐந்து சட்ட முன்வடிவு களின் மீதும் நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். எல்லோரும்



சொன்ன கருத்துக்களையே நானும் வலியுறுத்துகிறேன். இப்படிப்பட்ட ஜனநாயகத் தேர்தல் உரிய காலத்தில் நடைபெறாத காரணத்தால் பாதிக்கப் படுகின்ற மக்கள் நலிந்த பிரிவினர் தான் என்பதை அரசு உணர்ந்திருக்கிறது என்பது மிகவும் நன்றாகத் தெரிகிறது. காரணம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிகள் இல்லாத காரணத்தால், சாதாரண ஏழையெளிய மக்கள் தங்களுடைய மிகச் சாதாரண குறைகளைக் கூடச் சொல்வதற்கு அதிகாரிகளை நாட முடி யாத அல்லது நாடினாலும் தங்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட முடியாத நிலையில் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்கின்ற அடிப்படையான உண்மையினை நாம் உணர வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இப்படி தேர்தல்களைத் தள்ளிப் போட்டுக் கொண்டே போவதற்கு அரசுக்கு பல்வேறு காரணங்கள் சொல்ல இருந்தாலும் கூட, எந்தக் காரணங்களாக இருந்தாலும், அதனால் நிச்சயமாக பாதிக்கப் படப் போவது ஏழையெளிய சாதாரண அடித்தளத்து மக்கள் தான். அப்படிப் பட்ட மக்களுடைய நல்வாழ்வுக்காகப் பாடுபடுகிற இந்த அரசும் அவர்களுடைய குறைகளைக் களைய வேண்டுமென்ற அடிப்படை உண்மையை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் உணர்ந்த காரணத்தால் தான், சட்ட மன்றப் பேரவையில் அவர்கள் ஒரு உறுதிமொழியை அளித்திருக்கிறார்கள். அந்த உறுதிமொழியில் நாங்கள் நம்பிக்கை வைத்திருப்பதால், இந்தத் துறை யும் அரசும் நன்கு உணர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி யிருப்பது போல், பிப்ரவரி மாதம் அல்லது அதற்கு முன்பாக எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவில் தேர்தலை நடத்த முன்வர வேண்டும். இத னால் மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறவர்கள், ஏழையெளிய மக்கள். அவர்களின் நலன் கருதி விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதற்கிடையில் தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிக்க வழி வகை செய்கின்ற காரணத்தால், இடைக்கால ஏற்பாடாக அமைக்கப்பட்டிருக் கிற மக்கள் ஆலோசனைக் குழுக்கள் சரியான முறையில், சட்டப்படியாக அல்லது நல்ல முறையில் பயன்படுத்தப்படவில்லை என்கிற உண்மையையும் நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தெருநிர்த்த மிகக் கண்டிப்பாக அனைத்து அதிகாரி

களுக்கும் தெரிவிக்க வேண்டும். இடைக்காலத்தில் மக்கள் ஆலோசனைக் குழுக்கள் சரியான முறையில் இயங்க வேண்டும். மக்கள் ஆலோசனைக் குழுவில் மக்களிடையே பல்வேறு தரப்பிலுள்ள துறைகளினுடைய பிரதிநிதிகளும் இடம் பெறச் செய்ய வேண்டும். அதில் எந்த ஒரு தடை இருந்தாலும், அதை நீக்க வேண்டும். மக்களுடைய குறைகளைக் கேட்டு, களையக் கூடிய ஒரு ஜனநாயக அமைப்பாக மக்கள் ஆலோசனைக் குழுக்களை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அமைக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இப்போது நகராட்சிகளால் நடத்தப்படுகின்ற பள்ளிக்கூடங்களைப் பொறுத்தவரையில், பொருளாதார ரீதியில் நலிவு ஏற்பட்டிருக்கிற நகராட்சிகளைப் பொறுத்தவரையில், ஒன்றிரண்டு பள்ளிகளை அவர்களாலே நடத்த இயலவில்லை, அரசே ஏற்று நடத்த வேண்டுமென்ற கோரிக்கை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கடலூர் நகராட்சியைப் பொறுத்தவரையில், தங்களால் அவ்வாறு நடத்த இயலவில்லை, ஆகவே கல்வித் துறையே ஏற்று நடத்த வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அதை அனுப்பி வைத்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இப்படிப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றுகின்ற நிலைமையில் வேறு சில நலிந்த நகராட்சிகளும் இருக்கின்றன. அப்படிப்பட்ட தீர்மானங்களை அரசு ஏற்று, நலிந்த நிலையில் இருக்கின்ற நகராட்சிகளிலுள்ள பள்ளிக்கூடங்களை கல்வித் துறையிடம் ஒப்படைக்க வேண்டும். இப்போது அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற விடுப்புப் பயணச் சலுகை, வீடு கட்ட கடன் வழங்குவது ஆகிய இரண்டு சலுகைகளையும் நகராட்சிகளில் பணிபுரிகின்ற அலுவலாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கையை துரிதப்படுத்த வேண்டுமென்று நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தன்னிறைவுத் திட்டம் நகராட்சிப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப் பட்டிருக்கிறது என்பது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். ஊராட்சிப் பகுதியாக இருந்தாலும் சரி அல்லது நகராட்சிப் பகுதியாக இருந்தாலும் சரி, தன்னிறைவுத் திட்டத்தில் தொடக்கப் பள்ளிகள் கூட சேர்க்கப்பட்டு பல் வேறு இடங்களில் தொடக்கப் பள்ளிக்கூடங்களில் குறைந்த பட்சம் ஒரு கட்டிடம் என்கிற வகையில் திட்டம் தீட்டப்பட்டு செயல்படுத்தி வருவதற்கு



என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நகராட்சிப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் இருக்கிற உயர்நிலைப் பள்ளிக் கூடங்களில் கூட சரியான முறையில் கட்டிடங்கள் இல்லாத காட்சியைப் பார்க்கிறோம். பெயரளவுக்கு ஒரு கட்டிடம் என்கிற முறையில் கூட இல்லாத உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சிப் பகுதிகளில் இருந்தால், அங்கெல்லாம் தன்னிறைவுத் திட்டத்தை விரிவுபடுத்தி அவைகளை இதில் சேர்த்து ஒரு கட்டிடமாவது கட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டும். அந்த வகையில் கட்டிடமே இல்லை என்கிற நிலையில் இருக்கிற எல்லாப் பள்ளிகளுக்கும் குறைந்தபட்சம் ஒரு கட்டிடம் வருவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைச் சொல்லி வாய்ப்பளித்தமைக்கு தலைவருக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டுள்ள ஊராட்சிகள் மற்றும் மாநகராட்சி சம்பந்தமான இந்த ஐந்து மசோதாக்கள் குறித்தும் என் கட்சியின் சார்பில் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். குறிப்பாக தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கான அதிகாரம் கோருகிற மசோதாவை நான் எதிர்க்கிறேன். இப்படி நீட்டிப்பு கேட்பது ஒரு கேலிக்கு உரியதாக ஆகிவிட்டது. நான் இந்த அவையில் கிட்டத்தட்ட 5 வருடங்களாக இருக்கிறேன். 2 உள்ளாட்சித் துறை அமைச்சர்கள் வந்திருக்கிறார்கள். இரண்டு பேரும் ஒப்புக்கு எதாவது காரணத்தைச் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறார்கள். மழை, வறட்சி, ஸ்ரீலங்கா பிரச்சினை இப்படி எந்தப் பிரச்சினை வந்தாலும், அதைக் காரணமாகச் சொல்லி தப்பித்து விடுகிறார்கள். அடுத்து, பிப்ரவரியில் பாராளுமன்றத்திற்குத் தேர்தல் வருவதாகச் சொல்லப்படுகிற இந்த நேரத்தில் இவர்களும் பஞ்சாயத்துக்களுக்கான தேர்தல் வருகிறது என்று சொல்வதாலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் குறிப்பிட்டதுபோல், பிப்ரவரியிலாவது தேர்தல் வருமா என்கிற சந்தேகம் வருகிறது. இனிமேல் காரணத்தைச் சொல்லும்போது "பாராளுமன்றத்திற்கு பிப்ரவரியில் தேர்தல் வருகிறது. ஆகவே பஞ்சாயத்துக்களுக்குத் தேர்தல் வராது" என்று சொல்லுவார்களோ என்னவோ. நான் கேட்கிறேன். இந்த அரசு "எப்படி இருந்தாலும் சனவரி 31-க்கு மேல் போகாது" என்று ஏன் சொல்லக்கூடாது? நோட்டிபிக்கேஷனுக்கு 40 நாட்கள் தான் வேண்டும். இப்போது நாம் நவம்பர் 21-ல் இருக்கிறோம். இப்போதும் பிப்ரவரிக்குக் கொண்டு போகிறார்

களே, இது சரிதானா? ஏனென்றால் பிப்ரவரியில் பார்லிமென்டுக்கான தேர்தல் வருவதாகப் பேச்சு அடிபடுகிறது. அது வந்தால் இதைக் கைவிடக் கூடிய நிலை இருக்கிறது

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் பேசுகிற நேரத்தில், எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் எந்த நாளிலே தேர்தலை நடத்தலாம் என்று சொன்னால், அந்த நாளிலே தேர்தலை வைத்துக்கொள்ளலாம் என்று சட்டமன்றத்தில் அறிவித்தார்கள் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** அறிவிப்பு செய்தபோது, பிப்ரவரி என்று மாதத்தைச் சொன்னார்கள். அதனால் தான் அவர்கள் தேதியைக் கேட்டார்கள். மாதம் என்று சொன்னால் பிப்ரவரி 1ஆம் தேதியும் பிப்ரவரி தான். பிப்ரவரி 28ஆம் தேதியும் பிப்ரவரி தான். அதனால் தான் எந்தத் தேதி என்று கேட்டார்கள். இப்படி பொதுவாக பிப்ரவரி என்று சொன்னதால்தான், எதிர்க் கட்சித் தலைவர்கள் எந்தத் தேதியில் என்று குறிப்பாகச் சொல்ல கேட்டார்கள்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** "தேதியை நீங்களே சொல்லுங்கள், அந்தத் தேதியில் தேர்தலை நடத்துகிறோம்" என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள் என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினருக்கு ஞாபகப் படுத்துகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** 'சனவரி 1-ல் இருந்து 31 ஆம் தேதிக்குள்' என்ற நான் இப்போது சொல்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு உறுப்பினர் இங்கே தேதியைச் சொல் கிறேன் என்று சொல்லிவிட்டு தேதியைச் சொல்கிறார். மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் சொல்வது எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் சேர்த்தா? எல்லா கட்சிக்காரர்களும் அந்தத் தேதியை ஒப்புக்கொள்வார்களா?

**திரு. ஆ. நல்லசிவன் :** எல்லாக் கட்சிக்காரர்களும் சனவரி 31ஆம் தேதிக்குள் எலெக்ஷனை வைக்க வேண்டும் என்று சொல்லியும், அது ஒப்புக்கொள்ளப்பட வில்லை. இப்போது பிப்ரவரி என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே



சனவரி 31-க்குள் தேர்தல் என்று அறிவித்தால்தான், நோட்டிபிக்கேஷன் கொடுப்பதற்கு 40 நாட்கள் டைமும் கிடைக்கும். அந்த வகையில் பிப்ரவரியில் பார்லிமென்டுக்கான தேர்தல் வந்தாலும் பஞ்சாயத்துத் தேர்தலை பாதிக்காது.

அடுத்து, "இப்போது இருக்கிற ரிசர்வேஷன் முறையை 'சேலஞ்ச்' பண்ணித் தான் நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள், ஆகவே பழைய ஆக்ட் படி தேர்தலை நடத்துகிறோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். அதை நீதி மன்றம் "ஸ்டே" செய்யவில்லை. பழைய ஆக்ட் படி செய்கிறோம் என்றால், புதிய ஆக்டை 'ரிப்பீல்' பண்ண ஆவன செய்வார்களா?

**திரு. க. இராமமூர்த்தி :** புது Act வந்த பிறகு பழைய Act இல்லை. இனிமேல் ஆர்டினன்ஸ் தான் வர வேண்டும்.

There is no question of the old Act being in existence.

**திரு. ஆ. நல்லசிவன் :** சுப்ரீம் கோர்ட்டில் இது இருப்பதால், ரிசர்வேஷன் இல்லாதபடி தேர்தலை நடத்தலாம் என்று பார்த்தாலும், பிரச்சினை வருகிறது. புதிய முறையை யாராவது 'சேலஞ்ச்' பண்ணினால் பழைய முறைப்படி தேர்தலை நடத்துவோம் என்று சொன்னார்கள். யாரும் இப்பொழுது 'சேலஞ்ச்' பண்ணவில்லை. ஸ்டேயும் கிடைக்கவில்லை. இனிமேல் தேர்தல் நடைபெறும்போது, புதிய சட்டப்படி பெண்களுக்கு 15 சதவிகிதம் என்றும் அது போல் மற்றவர்களுக்கு அவர்கள் சொல்லியுள்ள சதவிகிதப்படி என்று குறிப்பிட்டுத்தான் நோட்டிபிக்கேஷன் செய்வார்களா? அப்படி என்றால், பிப்ரவரி என்று அறிவித்திருப்பதை நாங்கள் சந்தேகிக்கக் கூடாது என்றால், தயவுசெய்து சனவரி 31ஆம் தேதிக்குள் என்று மாற்றி அறிவிக்க வேண்டும் என்று சொல்லி அமைகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக வந்து மாட்டிக்கொண்டதன் காரணமாக, வேறு வழியில்லாமல் மிகவும் வருத்தத்தோடு இந்த மசோதாக் களைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். (சிரிப்பு)

[திரு. ம. சங்கரலிங்கம்] [1983 நவம்பர் 21

(பிற்பகல் 12-40)

(மாற்றுத் தலைவர் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா தலைமை)

ஆனால் நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த அரசு கொண்டு வருகிற இந்த அத்தனை தீர்மானங்களையும் மிக வன்மையாக எதிர்க்கிறேன். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

காரணம், அவர்களுக்கும் ஜனநாயகத்தில் நம்பிக்கை இருக்கும். இந்த அரசு உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்களைச் சந்திக்க அஞ்சிக் கொண்டிருக் கிறது. இல்லையென்று அவர்கள் பதில் சொன்னால், அல்லது அப்படிப் பதில் சொல்வதைவிட மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சொன்னதைப் போல, இன்று இல்லாவிட்டாலும் நாளையாவது நமது முதலமைச்சர் அவர் களைப் பார்த்து அவர்களுடன் கலந்து எந்தத் தேதிகளை, நோட்டிபிகேஷன் உட்பட வைக்கலாம் என்று ஆலோசித்து, பிப்ரவரி 1984 என்று சொல்வதைவிட ஜனவரி 30 ஆம் தேதிக்குள் வைக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் அறிவித் தால், நான் இந்த அரசு தேர்தலைச் சந்திக்க அஞ்சுகிறது என்று கடுமையாகச் சொன்னதை மன்னிப்போடு, வருத்தத்தோடு, வாபஸ் பெற்றுக் கொள்கிறேன். அப்படி அறிவிக்காத பட்சத்தில், நான் சொன்னது உறுதிப்படுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆட்சி வந்த பிறகு, இத்தகைய ஊராட்சி, ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களை, நகராட்சித் தேர்தல்களை நடத்தாததன் மூலம் சமுதாயத்திற்கு எவ்வளவு பெரிய தீங்கை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம் என்று அருள்கூர்ந்து சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நண்பர் திரு. மாணிக்கம் அவர்கள் கொசுத்தொல்லையைப் பற்றிச் சொன்னார்கள். சிரிப்பதற்காகச் சொல்லவில்லை. இன்றையதினம் ஒரு கிராமத்திலோ நகரத்திலோ, இந்தக் கார்த்திகை மாதத்தில் போய் நம்மால் ஒரு நாள் இரவு தங்க முடியாது என்று சவாலாகச் சொல்லிக்கொள்கிறேன். எந்த ஊரிலும் மின்சார விசிறி, அல்லது கொசுவலை இல்லாமல் படுத்துத் தூங்கவே முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. 61 சதவீத மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பதாகச் சொல்கிறார்கள். அவர்களுக்கு ஃபேன், கொசுவலை ஆகிய 2 வசதிகளும் கிடையாது. இதன் காரணமாக வறுமையோடு, தொந்தர நோய்களையும் அவர்கள் பெறவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள் என்பதை நாம் மறுக்க முடியாது.



1983 நவம்பர் 21] [திரு. ம. சங்கரலிங்கம்]

கிராமப் புறங்களில், அரசு மருத்துவ மனைகளை எடுத்துக் கொண்டால், கொசுக்கடியின் மூலமாகப் பெறும் வியாதிகளுக்காக சிகிச்சை பெறுகிறவர்கள் பெருகிக் கொண்டே இருக்கிறார்கள். வேண்டுமானால் கணக்கெடுத்துப் பார்த்துக் கொள்ளலாம். கொசுக்கடியின் காரணமாக 80 சதவீத மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சில தினங்களுக்கு முன்பு நான் என்னுடைய தோட்டத்திற்குச் சென்று தங்கினேன். என் நாய் ரொம்பவும் மெலிந் திருந்தது. நான் தோட்டக்காரரை அழைத்துக் கேட்டேன். "நாய்க்குச் சாப்பாடு போட 2 ரூபாய் படி வாங்கிக் கொள்கிறாயே, சாப்பாடு போட வில்லையா, மெலிந்து விட்டதே" என்று கேட்டேன். அதற்கு கொசுக்கடி யால் அது ரத்தத்தை இழந்து விட்டது என்றார். நாயைக் கூட கொசு கடிக்குமா என்று கேட்டேன். காலையில் எழுந்து பார்த்தால், நாய் படுத் திருந்த இடத்தில் நிறைய ரத்தம் சொட்டு சொட்டாக இருந்தது. ஏதாவது இரையைத் தின்றதால் ரத்தம் சிந்தியிருக்கும் என்று பார்த்தால், கொசுக்கடி யால்தான் அது ரத்தம் சிந்தியிருக்கிறது என்று தெரிந்தது. நானும் தோட் டக்காரரும் கொசுவலை கட்டிக்கொண்டிருக்கிறோம். நாய்க்கு இல்லை. நான் இதை மிகைப்படுத்திச் சொல்லவில்லை. அந்த அளவுக்கு கொசுக்கள் பெருகியிருக்கின்றன.

நாம் கொசு புக முடியாத அறைகளுக்குள் இருந்துகொண்டு இங்கே வந்து கொசுக்கடியைப்பற்றிப் பேசுகிறோம். ஆனால் கிராமங்களுக் குப் போய்ப் பார்த்தால்தான் புரியும். இதற்குக் காரணம் கிராமங்களின், நகராட்சிகளின் சுகாதாரத்தைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்புடைய ஊராட்சி அமைப்புகள் இல்லை. அவர்கள் அந்த சுகாதாரத்தைப் பேண வில்லை. இப்போதெல்லாம், கொசுக்கடி கூட நமது தலையெழுத்து என்று மக்கள் நம்பவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். கடவுள் நிறைய கொசுக் களை அனுப்புகிறார் என்று மக்கள் நினைக்க வேண்டியிருக்கிறது. கடவுள் நம்பிக்கையில்தான் நாம் காலம் தள்ளுகிறோம். ஆனால் உண்மையான பகுத் தறிவு ஆட்சி இருந்தால், நாமெல்லாம் இருப்போமா என்பது தெரியவில்லை. இப்போதிருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி 378 ஊராட்சி மன்றத் தலை வர்கள் இல்லாததால்தான், நாம் 365 நாளும் நாட்களைக் கடத்திக் கொண்டிருக் கிறோம். ஒவ்வொரு கிராமமாகப் போய் அதிகாரிகளைச் செயல்படச் செய்து, இந்த சுகாதாரக் கேட்டை, இந்தக் கார்த்திகை மாதத்தில் இருக்கும் உச்சகட்ட சுகாதாரக் கேட்டைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1983 நவம்பர் 21

தன்னிறைவுத் திட்டம் என்று அறிவித்தார்கள். இவ்வளவு திட்டங்கள் அறிவிப்பதில், எந்தத் திட்டம் மக்களைப் போய் அடைந்திருக்கிறது என்று தெரியவில்லை. இதற்குக் காரணம் உள்ளாட்சி அமைப்பு இல்லாததுதான். உங்களுக்கு நன்றாகத் தெரியும். தலைவருடைய அனுமதி பெற்று ஒன்றைப் படிக்கிறேன். 1981-82-ம் ஆண்டுக்கான ஆடிட்டர் ஜெனரலுடைய அறிக்கை. அதில் பக்கம் 89-ல் 35-40-வது பத்தியில் ஒன்றை மட்டும் சுட்டிக் காட்டலாம் என்று நினைக்கிறேன். செங்கல்பட்டு மாவட்டத்தில் குன்றத்தூர் பிளாக்கில் ஒரு ரோடு 1979-80-ல் போட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 10 கிலோ மீட்டர் சில்லறை நீளம். அதே ரோட்டை 2 மாதத்திற்குள் திரும்பவும் போட்டதாகக் கணக்குக் காண்பித்து இரண்டரை லட்சம் ரூபாய் எடுக்கப்பட்டிருக்கிறது என்று ஆடிட்டர் ஜெனரல் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இதை செங்கல்பட்டு மாவட்டக் கலெக்டரும் ஒத்துக்கொண்டு அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி, இந்த கேஸ் 1982 அக்டோபரில் வந்திருக்கிறது. இது போன்ற பல சம்பவங்கள். இதற்குக் காரணம் நீங்கள் அல்ல. மற்ற அமைச்சர்களுக்கு இல்லாத பொறுப்பு இந்தத் துறை அமைச்சருக்கு இருக்கிறது. நீங்கள் முதலமைச்சரை இலாக்காவை மாற்ற கேளுங்களேன். உள்ளாட்சி அமைப்புகள்தான் காவல் தெய்வங்கள்.

(குறுக்கீடுகள்)

இதை எடுத்துக் காட்டக் காரணம் பல குறைகள் நடக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய முழு சக்தியைப் பயன்படுத்தி முதலமைச்சர் அவர்களிடம் சொல்லி, ஜனவரி 30 ஆம் தேதிக்குள் தேர்தலை நடத்த வேண்டுமென்று சொல்லி, அதன்படி அறிவித்துவிட்டு நாட்டு மக்களிடத்தில் சுகாதாரக் கேடுகளை நீக்கிவிடப் பாடுபட வேண்டும். உங்களுக்கும் ஜனநாயகத்தில் நம்பிக்கை இருப்பதால், இதைச் செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை அளித்து, இந்தத் திருத்தத்தில் '6 மாதம்' என்று இருப்பதை 4 மாதங்களாகக் குறைத்து திருத்த வேண்டுமென்று சொல்லி, அதை அமைச்சர் அவர்கள் தனது பதிலில் தெளிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை பற்றிய சில சட்ட முன்வடிவுகள் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்வது கடமையென்று கருதுகிறேன்.



1983 நவம்பர் 21] [திரு. க. இராமமூர்த்தி]

உள்ளாட்சித் துறை பற்றிய இந்தச் சட்ட முன்வடிவுகள் ஒவ்வோர் முறையும் கொண்டு வரப்படுகிறபோது, அதற்கான திருத்தங்கள் கொடுக்கப்பட்டு விவாதங்கள் நடத்தப்படுவதை கடந்த ஆண்டுகளில் கண்டோம். ஆனால் திருத்தங்கள் கொடுப்பதில் இனிமேல் பயன் இல்லையென்ற அளவுக்கு ஒரு நிலைமை உருவாகியிருக்கிறது. ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த உள்ளாட்சித் துறைத் தேர்தலைப் பொறுத்தவரையில் ஏற்பட்டிருக்கிற இன்றைய நிலை, இந்த அரசு விரும்பி ஏற்றதாகச் சொல்லமாட்டேன்.—ஆனால் ஒரு சிக்கலில் தானே தன்னையறியாமலேயே மாட்டிக் கொண்டது என்று நம்புகிறேன். இதிலிருந்து விடுபடவில்லையென்று தெரிகிறது.

சீர்திருத்தங்களைக் கொண்டுவர வேண்டுமென்ற ஆர்வம் எப்படியோ ஒரு சிக்கலுக்குள் சிக்கலாக எழுந்து இந்தத் தேர்தலை நடத்துவோம் என்று சொல்லவும் முடியவில்லை, சொல்லாமல் இருக்கவும் முடியவில்லை. அப்படி நம்பவும் முடியவில்லை. இதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் அழகாக எடுத்துச் சொன்னார்கள். நடத்த வேண்டுமென்ற உறுதியான எண்ணம் இருந்தாலும் கூட, எப்படி நடத்த முடியும்? Practically it is impossible ஏனென்றால் இருக்கிற சட்ட நிலைமைகள் அப்படி. அந்த நிலைமைகளுக்குள்ளாக தேர்தலை ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்களுக்குள் நடத்துவது என்பது முடியாது என்று தெரிகிறது. ஆகவே பிரத்யட்ச நிலைமைகளுக்கேற்ப நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்போது என்ன நடக்கிறது என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னார்கள். பழைய சட்டத்தின்படியாவது நடத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்றால், அதற்கும் வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அதைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இனிமேல் ஒரு முழுச் சட்டத்தை அவசரச் சட்டம் மூலமாகக் கொண்டு வந்து அதன் அடிப்படையிலே தேர்தலை நடத்துவது என்பது ஒன்று. இன்னொன்று இப்போது இருக்கின்ற தேர்தலை ஒட்டிய வழக்குகளைத் திரும்பப் பெறுவது, இப்படி பல பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவே இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காண அரசு ஓர் உறுதியான நடவடிக்கையை எடுத்தாக வேண்டும். அதுதான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும். அப்படி இல்லாமல் ஏற்பட்டிருக்கிற நிர்ப்பந்தங்களின் காரணமாக அளிக்கப்படுகிற பதில்கள் என்ற அளவிலே முடிவைக் காணுவது என்பது நிரந்தரப் பரிகாரமாக நிச்சயமாக இருக்க முடியாது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. க. இராமமூர்த்தி] [1983 நவம்பர் 21

(பிற்பகல் 12-50)

அதிலே இன்னுமொன்று. பஞ்சாயத்துக்களைப் பொறுத்த வரையில், ரிபிக்சேஷன் ஆஃப் தி பஞ்சாயத்ஸ் (Refixation of the Panchayats) —அதற்குக் கூட அனுமதி அளித்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது அப்படி நினைக்கவில்லை. அதற்குப் பிறகு இரண்டாண்டுகளுக்கு பஞ்சாயத்துக்களைப் பிரிக்கக்கூடாது, ஏற்கெனவே உள்ளவைகள் அப்படியே இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் பிரிக்க நடவடிக்கை எடுக்கவில்லை. இதைப்பற்றி துறையிலே கேட்டபோது, தனித்தனியாக இப்போது இருக்கின்ற பஞ்சாயத்துக்கள் என்ற அடிப்படையிலே சட்டத்தை வைத்துக்கொண்டு தேர்தலை நடத்துவது என்பதிலும் சங்கடம் இருக்கிறது என்று சொன்னார்கள். காரணம் செலவு அதிகமாக இருக்கிறது. அமால்கமேஷன் ஆஃப் விலேஜஸ் (Amalgamation of Villages) என்ற அளவில் நான்கைந்து கிராமங்களை ஒருங்கிணைத்து பெரிய வையபிள் யூனிட் (Viable units) வைத்துக் கொண்டு வருவதைப் போல இதிலேயும் வைத்துச் செய்யலாமா என்பது சிந்தனை அளவிலே இருக்கிறது. அதற்குப் பிறகு இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ரீபிக்சேஷன் பற்றிய நிலைமை வந்திருக்கிறது. ஏற்கெனவே பிரிக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகப் பிரிக்கலாம், அது குறித்து நடவடிக்கைகளை எடுப்பது என்ற நிலைமை வந்திருக்கிறது. அது எப்போது முடிவது? சிபார்சு செய்யப்பட்ட எல்லா பஞ்சாயத்துக்களையும் பிரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறதா? அதிலும் சில பஞ்சாயத்துக்களுக்கு இருந்து சில பஞ்சாயத்துக்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போகிறது என்ற நிலைமை வருகிறபோது, மீண்டும் இந்தத் தேர்தல் நடத்துவது பற்றிய காலவரையைப்பற்றி ஒரு சந்தேகம் உருவாகிறது. ஆகவே இந்தச் சூழ்நிலையில் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குள்ள சங்கடத்தையும் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு சங்கடம் தமிழக அரசுக்கும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இருக்கிறது. உள்ளாட்சித் துறையிலே ஏற்படுகிற சிக்கல்கள், சங்கடங்கள், தவறுகள், இலஞ்ச ஊழல்கள், நிர்வாகத் திறமையின்மை ஆகியவற்றைப்பற்றி எவ்வளவுதான் நாசூக்காகச் சொன்னாலும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் மீது நேரிடையாகச் சொல்லுகிறார்கள் என்ற உணர்விலேதான் அதை ஏற்க முடிகிறது. அங்கேயுள்ள அதிகாரிகள் நேரிடையாக ஆட்சிப் பொறுப்பிலே தொடர்பு வைத்துச் செயல்பட்டுக்கொண்டிருப்பதால் அவர்களைப்பற்றி எதைச் சொன்னாலும் அது



1963 நவம்பர் 21] [திரு. க. இராமமூர்த்தி]

ஆட்சிக்கு எதிராக, ஆட்சியைக் கண்டிக்கிற குற்றச்சாட்டாகத் தான் அது மாறுகிறது. ஆகவே நேரிடையாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தொடர்பு இல்லையென்றாலும் கூட, உள்ளாட்சித் துறையிலே வருகிற குற்றச்சாட்டுகள், நிர்வாகத் திறமையின்மை, ஊழல் அல்லது தவறுகள் ஆகியவற்றுக்கு அரசியல் ரீதியாகப் பரிகாரம் காணுகிற கட்டாய நிலைமை வருகிறது. அதனால் பல சிக்கல்கள் வந்திருக்கின்றன. ஆரம்பத்திலேயிருந்தே நான் ஒரு வேண்டுகோளை விடுத்துக்கொண்டு வருகிறேன். இதற்குப் பரிகாரம் காண வேண்டுமென்றால், நான் அஃபீஷியல்லை தலைவராகக் கொண்ட மக்கள் குழுவைப் போடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். 374 பஞ்சாயத்து யூனியன்களிலும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நண்பர்கள் தலைவராக இருந்தால்கூட, எனக்கு ஆட்சேபணை இல்லை. அங்கே யாரும் தவறு செய்ய முடியாது. அதிலே ஜனநாயகம் இருக்கிறது. நாம் கட்சி ரீதியாகத் தான் இங்கே சண்டை போடுகிறோம். வெளியே சென்றால் நாம் நண்பர்கள். இன்னும் கீழே கிராமங்கள் அளவிலே சென்றால், மிகவும் இணைந்த நண்பர்கள்தான். ஆகவே அவர்கள் பெரிய தவறுகளைச் செய்ய முடியாது. இன்றைக்கு அங்கேயுள்ள பெரிய அதிகாரிகள் பெரிய தவறுகளைச் செய்துவிட்டு கட்சியை முன்காட்டி தங்களை மறைத்துக்கொள்கிறார்கள். அவர்கள் எவ்வளவு பெரிய தவறுகளைச் செய்தாலும் நாம் அதைப்பற்றிக் கேட்டால் "நீங்கள் என்ன செய்வது? அரசியல் தலையீடுகள் இருக்கின்றன. அவர்கள் வருகிறார்கள், இவர்கள் வருகிறார்கள். நாங்கள் செயல்பட முடியவில்லை" என்று சொல்லி தப்பித்துக்கொண்டு அவர்கள் அடித்துக்கொண்டிருக்கிற கொள்ளைகள் கொஞ்சநஞ்சமல்ல. இதற்கு எப்படிப் பரிகாரம் காண முடியும் என்றால், நான்-அஃபிஷியல்களை சேர்மனாகப் போட்டு கமிட்டி நடத்தினால்தான் முடியும். அப்படிப் போடாத வரையில் முடியாது. பஞ்சாயத்து கமிஷனர்களையும், முனிசிபல் கமிஷனர்களையும் மட்டுமே வைத்துக்கொண்டு எந்தத் திட்டத்தையும் நடத்த முடியாது. அவர்கள் செய்வதை யார் 'செக்' பண்ணுவது? அதுவே அந்தச் சிக்கலைத் தீர்க்க இரண்டு, மூன்று மாதங்களுக்குள் தேர்தலை நடத்துங்கள், அல்லது ஓராண்டிற்குள் நடத்துங்கள். இடையிலே இந்தப் பிரச்சினை தீர வேண்டுமென்றால், நான் சொன்னதுபோல செய்யுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் மனம் நொந்து சொன்னார். தேர்தலுக்கு முன்னதாக குறைந்த பட்சம் கொசு ஒழிப்பதையாவது நாம் வைத்துக்கொள்வோம் என்றார். அந்த அளவிற்கு sanitary condition பெரிய நகராட்சி

மன்றத்திலேயிருந்து சிறிய பஞ்சாயத்து வரையிலும் பணம் செலவழிக்காமலா இருக்கிறோம். யார் கொள்ளையடிக்கிறார்கள்? எல்லாவற்றையும் அரசியல் வாதிகளும் கட்சிக்காரர்களுமா கொள்ளையடிக்கிறார்கள்? அது இல்லை. நான் ஒன்றைச் சொன்னால், தவறாக எண்ணமாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஒரு நிகழ்ச்சி நடந்து முடிந்து ஒரு மாதம் கூட இருக்காது என்று நினைக் கிறேன். மனு நீதிநாள் எங்கள் பகுதியிலே நடந்தது. கலெக்டர் எல்லா வற்றையும் விசாரித்துக் கொண்டிருந்தார். ரொம்ப வேகமாக கட்சித் தோழர் ஒருவர் வந்து "சத்துணவுத் திட்டத்தை செயல்படுத்துகிற அதிகாரிகள் தப்பு பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு சொன்னாலும் கேட்பதில்லை. பஞ்சாயத்துக் கமிஷனரிடம் திரும்பத் திரும்பச் சொன்னாலும், அவர் நட வடிக்கை எடுக்கவில்லை, அவர்களை மாற்றவில்லை" என்று சொன்னார். கலெக்டர் பஞ்சாயத்து கமிஷனரைப் பார்த்து "என் நடவடிக்கை எடுக்க வில்லை?" என்று கேட்டார். பஞ்சாயத்துக் கமிஷனர் எல்லார் முன்னிலை யிலும் சொல்கிறார்: "அவ்வளவு பேரையும் இவர் சொல்லித்தான் போட்டோம். இவர் கொடுத்த லிஸ்டில் உள்ளவர்களைத்தான் போட்டோம். அவரே இப்போது வந்து அவர்களை மாற்ற வேண்டுமென்று சொல்கிறார்." சத்துணவுத் திட்டத்தின் கீழ் வேலை வாங்கியவர்கள் அத்தனை பேரும் அண்ணா தி. மு. க. வினர் என்று நான் சொல்லவில்லை. அப்படி இருக்கவும் முடியாது. அங்கே காங்கிரஸ்காரர்கள் சொல்லுகிறார்கள், தி. மு. க. வினர் சொல்லுகிறார்கள் அண்ணா தி. மு. க. வினர் சொல்லுகிறார்கள், கேட்கிறார்கள், கமிஷனர் கொடுக்கிறார். கொஞ்ச நாட்களுக்குப் பிறகு அவர்களைப்பற்றிக் குறை சொல்லும்போது, "நீங்கள்தானே சொன்னீர்கள்" என்று கூறி, அவர் தன்னுடைய பொறுப்பிலிருந்து தப்ப முடிகிறது. ஆனால் அரசாங்கம் அவரை வைத்துக்கொண்டு உள்ளாட்சித் துறையின் மூலமாக தன் திட்டங் களுக்காக பணம் செலவழித்துக்கொண்டிருக்கிறது.

ரோடுகளைப் பொறுத்தவரையிலும் அப்படித்தான் நடக்கிறது. பல ரோடுகளை தன்னிறைவுத் திட்டத்திலே போட்டிருக்கிறார்கள், இல்லையென்று சொல்லவில்லை. இன்னும் சிறப்பாகச் செய்திருக்க முடியும். தேர்ந்தெடுக் கப்பட்ட கமிட்டி இல்லாமல் செய்ய முடியவில்லை என்பது ஒரு சமாதானம். ஆனால் குறைந்தபட்சம் இந்த அதிகாரிகள் அடங்கிப் போகிற அளவிற்கு, பதில் சொல்லக்கூடிய அளவிற்கு நான்-அஃபீஷியல் சேர்மென் கொண்ட கமிட்டியைப் போட்டிருந்தால், இந்தப் பிரச்சினை வந்திருக்காது. இதைப்பற்றி இனியாவது





சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காண்ட்ராக்டர்கள் கட்சிக் காரர்கள் அல்ல. I will never say that அவர்கள் எந்தக் கட்சி ஆளும் கட்சியாக இருக்கிறதோ அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்று சொல்லிக்கொண்டே இருப்பார்கள். ஆகவே அவர்களை நம்பி எந்த அரசியல் கட்சியும் செயல்படவில்லை. அவர்களின் திறமையின் காரணமாக மிகச் சாதாரண சம்பவங்களுக்குக் கூட அரசியல் மூலாம் பூசுகின்ற நிலைமை வந்து விடுகிறது. வேறு வழியில்லாமல் அரசியல் கட்சிகள் சிக்கிக்கொள்ளும் நிலைமை ஏற்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்கள் திறமையாக, முழுமையாக இயங்கியாக வேண்டுமென்றால், எந்தக் கட்சிக்காரர்கள் தலைமையில், என் பதல்ல, உங்கள் கட்சித் தலைவர்களின் தலைமையிலாவது நான்-அபீஷியல் கமிட்டியைப் போடுங்கள் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். Let it be a check on the administration அதற்குப் பிறகு மனம் திறந்து முழுமையாக இந்தத் தேர்தலை நடத்தி சிக்கல்களை நீக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

பஞ்சாயத்துக்களைப் பிரிப்பதைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே முழுமையாகப் பிரிப்பதற்கான நிலைமைகள் வந்து நிறுத்தப்பட்டிருக்கிறதே அவை எல்லாவற்றையும் பிரிப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். அதை விட்டுவிட்டு, அதாவது அந்தக் கட்சிக்காரர் வருகிறார், முதலியார் வருகிறார், செட்டியார் வருகிறார், ரெட்டியார் வருகிறார், கவுண்டர் வருகிறார் என்று சொல்லி, அதற்குத் தகுந்த மாதிரி பிரிப்பது, அவர் சொல்கின்ற மாதிரி பிரிப் பது என்ற நிலைமைகள் வந்தால், மீண்டும் பொதுமக்களுக்கு அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளிலே நம்பிக்கை போய்விடும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையிலே, இந்த இடைக் காலத்தில் நிர்வாகத்தை நடத்துவதற்கு வேண்டிய மக்கள் பிரதிநிதிகள் உருவாவதைத் தடை செய்துவிட்டது. இந்த 7, 8 ஆண்டுக் கால இடைவெளி பெருமளவுக்கு தடையாக நின்றுவிட்டது. மிக விரைவிலே அந்தச் சிக்கல்களைத் தீர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தச் சூழ்நிலைகளை உருவாக்கியது இன்றைய அமைச்சர் அல்ல. ஆனால் அந்தச் சிக்கலிலே மாட்டிக்கொண்டவர் அமைச்சர். அவராகவே அதிலிருந்து

விடுபடுவதற்கு வேண்டிய நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். நாம் எல் லோரும் அவர் அந்தச் சிக்கலை எடுப்பதற்குத் துணையாக இருக்க முடியும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

மற்றபடி இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையில், இதை எதிர்த்து என்ன பண்ணுவது? ஒருவேளை எதிர்க்காமல் இருந்தாலாவது, தேர்தலை நடத்துவதற்கோ அல்லது நிலைமைகளைச் சீர்திருத்துவதற்கோ அமைச்சர் அவர்கள் ஏதாவது முயற்சி செய்வார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் அதைச் சீக்கிரம் செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த ஐந்து சட்ட முன்வடிவுகளின் மீதும் மாண்புமிகு மேலவை உறுப்பினர்கள் அவர்கள் கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கின் றார்கள். குறிப்பாக கடந்த 12—10—1983 தேதியன்று அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டி அதிலே ஒரு முடிவை நாம் எடுத்திருக் கிறோம்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் மதிப்பிற்குரிய திரு. ஏ. ஆர். தாமோ தரன் அவர்களும், மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், அந்தக் கூட்டத்திலே கலந்துகொண்டு அவர்களுடைய மேலான கருத்துக்களையெல் லாம் தெரிவித்திருக்கிறார்கள். நகராட்சித் தேர்தல்களைப் பொறுத்த அள வில், நாம் தயார் நிலையிலே இருக்கிறோம். அதற்குக் கால நீட்டிப்பு அவசிய மில்லை. ஆனாலும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு, இருக்கக்கூடிய நிலையில், டிசம்பர் மாதத்திலே நாம் தேர்தலை வைத்துக்கொள்ளலாம் என்று பல்வேறு கட்சிகள் சொன்னாலும், அவருடைய யோசனையாக "டிசம்பரிலே வேண்டாம், அதை பிப்ரவரியிலேயே வைத்துக் கொள்ளலாம்" என்ற கருத்தினைத் தெரிவித்தார்கள். ஆகவே தான் பிப்ரவரி மாதத்திலே நகராட்சித் தேர்தலை வைத்துக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு நாம் வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

குறிப்பாக ஊராட்சி மன்ற, ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களைப் பொறுத்த அளவில், ஏற்கெனவே உயர்நீதி மன்றம், இருக்கக்கூடிய ஒதுக்கீடுகள் எல்லாம் செல்லும் என்ற முடிவை தெரிவித்திருந்தாலும், அதற்கு மேலே இன்று உச்ச



நீதி மன்றத்தில், ஒரு மேல் முறையீடு இருந்துகொண்டிருக்கிறது. ஆனாலும் அந்த மேல் முறையீட்டின் மீதும் தடையில்லை. தடையில்லாத காரணத்தி னாலேயே, இந்தத் தேர்தல்களை வருகின்ற பிப்ரவரி மாதத்திற்குள்ளாக நடத் தலாம் என்ற எண்ணத்தில் இன்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஏற்கெனவே 26—11—1982 ஆம் தேதி அன்று அனைத்துக் கட்சித் தலைவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, நாம் உச்ச நீதி மன்றத்திற்கு ஒரு மனுவைக் கொடுத்தோம். அந்த மனுவை கொடுத்ததனுடைய நோக்கம், இருக்கக்கூடிய மேல் முறையீட்டை விசாரித்து சீக்கிரம் தீர்ப்பு அளிக்க வேண்டும் என்பது. நாங்கள் தேர்தலை நடத்தத் தயாராக இருக்கிறோம் என்று அந்த மனு கொடுத்து, கடந்த 26—4—1983-ம் தேதியன்று அது விசா ரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அங்கே இருக்கக்கூடிய முதன்மை நீதிபதி அவர்கள் அந்த மனுவின் மீது தீர்ப்பினைக் கொடுத்தார்கள். சீக்கிர மாக இந்த மனு எடுத்துக்கொள்ளப்படும் என்ற முடிவை அவர்கள் தெரிவித் திருக்கிறார்கள். ஆகவே உச்ச நீதி மன்றத்தில் சீக்கிரமாக எடுத்துக்கொள் ளப்படும் என்றால் எவ்வளவு காலம் என்று உறுப்பினர்கள் கேட்கலாம். அதை நான் அறுதியிட்டுச் சொல்ல முடியாது. ஆனாலும் இன்று தடையில்லை என்கின்ற காரணத்திற்காக, "நாங்கள் தேர்தலை நடத்த வேண்டும், நடத்தித் தீர வேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டோம், ஆகவே தயவுசெய்து தேர் தலை நடத்திக் கொண்டிருக்கின்ற நேரத்தில், தடை விதிக்க வேண்டாம்" என்ற மனுவையும் அவர்களிடத்திலே கொடுத்துவிட்டு, நாங்கள் தேர்தலை நடத்துவதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதை இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசும்போது, "ஏன் அரசு ஜனவரி மாத கடைசியில் 30 ஆம் தேதிக் குள். 31 ஆம் தேதிக்குள் நடத்தக்கூடாது?" என்ற கேள்விக்கணையை நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் தொடுத்தார்கள். இப்போது இருக்கின்ற நிலையில், ஊராட்சி மன்ற, ஊராட்சி ஒன்றியத் தேர்தலை நடத்த வேண்டுமென்று சொன்னால்,

"It is a lengthy and cumbersome process"

என்று திரு. தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட சூழ் நிலையிலே நாம் இருக்கவேண்டியிருக்கிறது. காரணம் சட்டமன்றங்களுக்கு வாக்காளர்கள் பட்டியல்களைத் தயாரித்துக்கொண்டிருக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில் ஒரு 'பேன்' ஆர்டர், தடை உத்தரவு

[திரு. ப. குழந்தைவேலு] [1983 நவம்பர் 21

கூட போடப்பட்டிருக்கிறது. இப்படி சட்டமன்றங்களுக்கு வாக்காளர் பட்டி
யல் தயாரித்துக்கொண்டிருக்கின்ற நேரத்தில், வேறு தேர்தல் நடத்துவதோ,
வேறு வாக்காளர்கள் பட்டியல்களை ஊராட்சி மன்ற, ஊராட்சி ஒன்றியத்
தேர்தல்களுக்கு எடுத்துக்கொள்வதோ சரியாகாது என்று போட்டிருக்
கிறார்கள். ஆனால் அந்தத் தடையைக் கூட தளர்த்தி, இந்தத் தேர்தல்
களை நடத்த இருக்கிறோம். இந்த வாக்காளர் பட்டியலை நாங்கள் திருத்தி
அமைக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு அந்தத் தடையைத் தளர்த்துவதற்
குரிய நடவடிக்கைகள்கூட எடுக்கப்பட்டாகிவிட்டது என்பதைச் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். பல்வேறு நேரங்களில் பலதடவைகள் உங்களிடத்
திலே 6 மாத, 6 மாத காலம் தனி அதிகாரிகளுடைய பதவிக்காலத்தை நீட்டிக்க
வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அன்றெல்லாம் கேட்டுக்கொண்டதற்கு
பல்வேறு காரணங்கள் இருந்தன. காரணங்களைத் தேடி இந்த அரசு
அலைகிறது அல்லது இந்த அமைச்சர் அலைகிறார் என்றெல்லாம் எண்ணு
கின்ற அளவுக்கு தயவுசெய்து உறுப்பினர்களுக்கு எண்ணம் இருக்கவேண்டிய
தில்லை என்று நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மக்களுக்கெல்லாம் சங்கடங்கள் ஏற்படும் வகையில் இந்த அரசு நடந்து
கொண்டிருக்கிறது என்று கூட இங்கே குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே
மக்களுக்குத் தீமை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த அரசு
இல்லை என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக
இந்த ஊராட்சி மன்றத் தேர்தல், ஊராட்சி ஒன்றியத் தேர்தல், நகராட்சித்
தேர்தல் மூலமாக மக்களுக்கு பல்வேறு நன்மைகளைச் செய்யவேண்டுமென்ற
நல்ல எண்ணத்திலேதான் இந்த நீடிப்பே தவிர, தீங்கு ஏற்படுத்தவேண்டு
மென்ற எண்ணத்தோடு அல்ல. ஒரு நேரத்திலே அங்கே நாம் எடுத்துக்
கொண்ட நடவடிக்கைகளின் காரணமாகத்தான் இந்த நீடிப்பு வந்தது என்பது
உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். வேண்டுமானால் நாம் என்ன தூய
காரணங்களை, நல்ல காரணங்களை எடுத்துச்சொன்னாலும்கூட, ஒரு பாடம்
கற்பிக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு அல்லது எதாவது வெளியிலே போய்
சொல்லவேண்டுமென்ற எண்ணத்தோடு எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் வேறு
காரணங்களைச் சொல்ல முடியும். ஆனால் இந்த அரசைப் பொறுத்த அள
வில், இன்று புரட்சிகரமான ஒரு திட்டத்தை நாம் கொண்டு வந்திருக்கிறோம்
என்பதை தயவுசெய்து யாரும் மறுத்துச்சொல்ல முடியாது என்பதைக் குறிப்
பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுவரையிலே ஊராட்சி மன்ற, ஊராட்சி



1983 நவம்பர் 21] [திரு. ப. குழந்தைவேலு]

ஒன்றியத் தேர்தலில் ஒதுக்கீடுகள் இவ்வளவு இல்லை. தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவர், ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவராக இருக்கக்கூடிய வாய்ப்பினை இந்தச் சட்டத் திருத்தங்களின் மூலமாக நாம் உருவாக்கியிருக்கிறோம். அப்படி நாம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளின் காரணமாகத்தான் இந்தப் புதுத் திருத்தங்கள் வந்திருக்கின்றன என்பதை உறுப்பினர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம், மீண்டும் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முன்பெல்லாம், 21 வயது வந்தவர்கள் மட்டுமே ஊராட்சி மன்ற, ஊராட்சி ஒன்றியத் தேர்தலில் வாக்காளர்களாக இருக்க முடியும். ஆனால் இப்போது கொண்டு வந்த சட்டத் திருத்தத்தின்படி 18 வயது வந்த ஆண்களுக்கும், பெண்களுக்கும் வாக்குரிமை அளிக்கின்ற திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே இவைகள் எல்லாம் புரட்சிகரமான திருத்தங்கள் அல்லது சட்டங்கள் என்று நான் சொல்கிறேன். உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வதாக இல்லாவிட்டாலும், நாட்டு மக்கள் அதை ஏற்றுக்கொள்கிறார்கள் என்ற நல்ல எண்ணத்தை மட்டும் நான் இங்கே பிரதிபலிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு திரு. சங்கரலிங்கம் அவர்கள் குறிப்பாக ஒரு கருத்தினைத் தெரிவித்தார்கள். "6 மாதகாலம் என்று நீங்கள் கால நீட்டிப்பு வாங்கிக்கொண்டிருக்கின்றீர்களே, ஏன் நான்கு மாதகாலம் என்று அதைக் குறைத்துக்கொள்ளக்கூடாது?" என்று கேட்டார்கள். இந்தச் சட்டத்திலே ஒரு 'புரோவிசோ' வைத்திருக்கிறோம். நாம் 6 மாத காலத்திற்குள்ளாக தேர்தலை நடத்தினால், எவ்வளவு நாட்களுக்குள் நடத்துகிறோமோ அதற்குத் தக்கவாறு பதவிக் காலத்தைக் குறுக்கி, தேர்தல் நடந்து முடிந்த பின்னாலே தனி அதிகாரிகளுடைய நியமனத்தை நாம் ரத்து செய்கின்ற அதிகாரத்தையும் இந்தச் சட்ட முன்வடிவிலே புகுத்தியிருக்கிறோம் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இன்று மக்கள் ஆட்சி இல்லை, எலெக்டட் பாடி இல்லை, தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்றம் இல்லை, அதன் காரணமாக தன்னிறைவுத் திட்டமாக இருந்தாலும், வறட்சி நிவாரணத் திட்டமாக இருந்தாலும், அங்கே ஊழல்கள் நடைபெறுகின்றன என்பதை எடுத்துக்காட்டாகச் சொல்லி, ஆடிட்டர்-ஜெனரல் அவர்களுடைய அறிக்கையைக்கூட இங்கே உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். நான் அதற்கும்கூட பதில் சொல்கிறேன். **The Auditor-General's Report is not a final Report.** அவர்கள் சில குறியீடுகளைக் கோடிட்டுக்காட்டி, "இவைகள் நடைபெற்றிருக்கின்றன, இதற்கு என்ன விளக்கங்கள்?" என்று கேட்டிருக்கிறார்கள். நாங்கள்

[திரு. ப. குழந்தைவேலு] [1983 நவம்பர் 21

அந்த விளக்கத்தையும் கொடுத்திருக்கிறோம். செங்கற்பட்டு மாவட்டத்தில்
குன்றத்தூர் பகுதியில் 11 ரோடு வேலைகள் எடுக்கப்பட்டன. 10 கிலோ
மீட்டர் தூரத்திற்கு ரோடும் போடப்பட்டது. கடந்த 1979-80 லே வில்லேஜ்
ஓர்க்ஸ் புரோகிராம் என்று கிராம வேலைத் திட்டத்தின் அடிப்படையிலே அந்த
வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அந்த வேலைகள் எடுத்துக்கொள்ளப்
பட்ட நேரத்தில், அந்தச் சாலைகளுக்கான அடர்த்தி (thickness)
7.5 சென்டி மீட்டர் அளவில் போடப்பட்டது. ஆனால் வாகனங்கள் அதிக
மாகச் செல்லக்கூடிய அந்தப் பாதை 7.5 சென்டி மீட்டர் அடர்த்தியில் போட்
டால் தாங்காது என்ற காரணத்திற்காக தன்னிறைவுத் திட்டத்தினை நடை
முறைப் படுத்துகின்ற நேரத்தில், அதே சாலைகளுக்கு மீண்டும் 15 செண்டி
மீட்டர் அடர்த்தியிலே ரோடுகள் போடப்பட்டன. அதற்காக ஆன செலவு
2.5 லட்சம். ஆகவே அது excess expenditure தானே தவிர

(பிற்பகல் 1-10)

fraudulent expenditure அல்ல. இந்த விளக்கத்தை
Comptroller and Auditor-General க்கு எடுத்துச்
சொல்லியிருக்கிறோம். அந்த விளக்கத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டார்களா,
இல்லையா என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டியவர்களாக இருக்
கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்லும் குற்றச்சாட்டுகளை ஏற்றுக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். ஒரு பெரிய திட்டத்தை, மிகப்
பெரிய திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது, 250 கோடி ரூபாயை 3
ஆண்டுக் காலத்தில் தன்னிறைவுத் திட்டத்திற்காகச் செலவழிக்கும்போது, ஒரு
சில முறைகேடுகள் ஆங்காங்கு இருக்கக்கூடும். தேர்ந்தெடுக்கப்பட்ட
மாமன்றம் இருந்தபோதே, போடாத ரோடுகளுக்கு பில் போட்டவர்கள் உண்டு
என்று எடுத்துச் சொல்ல முடியும். இராமநாதபுரம் மாவட்டத்தில் அப்படி
நடந்து, வழக்கு நடைபெற்றது என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்
கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்ற உறுப்பினர்கள் இருக்கும்போது,
அப்படிப்பட்ட நிலை என்றால், தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்ற உறுப்பினர்கள்
இல்லாதபோது, எப்படிப்பட்ட நிலை இருக்கும் என்பதை யோசித்துப் பார்த்
தாலே தெரியும். இந்தக் குறைபாடுகள் இல்லை என்று நான் மறுக்க மாட்
டேன். அந்தக் குறைபாடுகள் எங்கு வந்தாலும், குறைகளாக வந்தாலும்,
குற்றச்சாட்டுகளாக வந்தாலும், அவற்றின்மீது நடவடிக்கை எடுக்கத் தயாராக
இருக்கிறேன். அப்படிப்பட்ட நிலையில் இந்த அரசு பாடுபட்டுக் கொண்டிருக்
கிறது.



1983 நவம்பர் 21] [திரு. ப. குழந்தைவேலு]

மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் இன்னொரு கருத்தைச் சொன்னார்கள். "தேர்தலைக் கண்டு அஞ்சுகிறீர்களா?" என்று கேட்டார்கள். நாங்கள் தேர்தலைக் கண்டு அஞ்சுகிறோமா, எதிர்க்கட்சி வரிசையில் உள்ளவர்கள் அஞ்சுகிறார்களா என்பதற்குப் பல்வேறு பாடங்கள் புகட்டப்பட்டிருக்கின்றன. திண்டுக்கல்லிலிருந்து திருச்செந்தூர் வரையில் வரிசையாக எடுத்துப் பார்த்தால், இந்த இயக்கமோ, இந்த அரசோ, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமோ கண்டிப்பாக எந்தத் தேர்தலைக் கண்டும் அஞ்சத் தேவையில்லை என்று மக்கள் சொல்லியிருக்கிறார்கள். தேர்தலைக் கண்டு அஞ்சும் இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமல்ல என்று அறுதியிட்டு உறுதியாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் தேர்தல்களைப் பொறுத்தவரையில், இன்று இருக்கக்கூடிய வார்டுகளைப் பிரிக்க வேண்டும். அதே நேரத்தில் புதிய பஞ்சாயத்துக்களைப் பிரிப்பதாக இல்லை, புதிய ஒன்றியங்களை ஏற்படுத்துவதாகவும் இல்லை என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நாம் செய்ய வேண்டிய காரியமெல்லாம், ஒதுக்கீட்டின் அடிப்படையில் வார்டுகளைப் பிரிக்க வேண்டும். வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் வார்டுகளைப் பிரிக்க வேண்டும். அதற்குப் பின்னால் மாற்றங்களின் அடிப்படையிலே நோட்டிபிகேஷன் செய்ய வேண்டும். எந்தெந்த வார்டுகள், எந்தெந்த ஒன்றியங்களை ஓட்டுகள் அடிப்படையிலே தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கு, பெண்களுக்குக் கொடுத்திருக்கிறோம் என்பதை நாம் அறிவிக்கையின் மூலமாகத் தெரிவிக்க வேண்டும். அதற்குப் பின்னாலே 15 நாட்கள் அவகாசம் கொடுக்க வேண்டும். ஆட்சேபணை இருந்தால் அந்த ஆட்சேபணைகளை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறதா என்பதைத் தெரிவிக்க, பைனல் லிஸ்ட் என்ற முறையிலே இறுதிப் பட்டியல் கொடுக்க வேண்டும். இதற்கெல்லாம் காலம் தேவை. பைனல் லிஸ்ட் கொடுக்கும் நாளுக்கும், தேர்தலை நடத்தும் நாளுக்கும் இடையே 21 நாட்கள் வேண்டும். இந்தக் கணக்கைப் போட்டுப் பார்த்தால் 3 மாத காலம் தேவையாக இருக்கிறது. அதனாலே பிப்ரவரி கடைசியில் இந்தத் தேர்தலை நடத்த இருக்கிறோம். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கூட பேரவையில், "அனைத்துக் கட்சித் தலைவர்கள்கூடி, பேசி பிப்ரவரி மாதத்தில் எந்தத் தேதியில் தேர்தலை வைத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்யலாம்" என்று தெரிவித்திருக்கிறார்கள். தலைவர்கள்

[திரு. ப. குழந்தைவேலு] [1983 நவம்பர் 21

மீண்டும் கூடிப் பேசி, அதற்குப் பின்னாலே எந்தத் தேதி என்பதை முடிவு செய்ய இருக்கிறோம். எனவே இந்தக் கால நீட்டிப்பை ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். கடைசி முறையாக இந்தக் கால நீட்டிப்பு வருகிறதென்று நான் நினைக்கிறேன். காரணம், இந்தத் தேர்தல்களை வருகின்ற பிப்ரவரி மாதத்திற்குள்ளாக கண்டிப்பாக நடத்தித் தீர வேண்டுமென்ற முடிவிற்கு வந்திருக்கிறோம். எனவே இந்தச் சட்டமுன்வடிவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்களின் விளக்கத்தைக் கேட்ட பிறகும்கூட, எவ்வளவு முற்போக்கான திட்டமானாலும் நிறைவேறுவதில்லை என்பதாலும், வாக்குறுதிகளில் நம்பிக்கை இழந்துவிட்ட நிலையிலும், இந்தச் சட்டத் திருத்தத்தை ஆதரிக்க முடியாமல் ஆட்சேபித்து, வெளி நடப்பு செய்கிறேன்.

(திரு. ப. மாணிக்கம் வெளிநடப்பு செய்தார்.)

**திரு. ஆ. நல்லசிவன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இவ்வளவு நேரம் சிரமப்பட்டு பதில் சொன்னார்கள். செயலில்தான் பார்க்க வேண்டும். சொற்களை வைத்து நம்ப முடியாது. அவருடைய சொற்கள் நம்பிக்கை அளிக்காததால், இன்றைக்குக்கூட மசோதாவை ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில், வெளியேறுகிறேன்.

(திரு. ஆ. நல்லசிவன் வெளி நடப்பு செய்தார்.)

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்களுடைய விளக்கம், தேர்தல்கள் நடக்கும் என்ற உறுதியை எங்களுக்கு ஏற்படுத்தாததாலும், தேர்தல்களை நடத்தாமல் தள்ளிக்கொண்டு போவதுதான் மசோதாவின் நோக்கம் என்பதாலும், இதை எதிர்த்து, திராவிட முன்னேற்றக் கழகம் வெளிநடப்பு செய்கிறது.

(திரு. ம. சங்கரலிங்கம் வெளி நடப்பு செய்தார்.)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் விளக்கம் அளிக்கும்போது, " இதுதான் கடைசி முறையாக இருக்கும் என்று நினைக்கிறேன் " என்று அவர்கள் சந்தேகமாகச் சொன்னதால்,



1983 நவம்பர் 21] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

தேர்தல்கள் வருவது சந்தேகமாக இருக்கிறது என்பதற்கு எடுத்துக் காட்டாக அந்த வாசகம் இப்பதால், தேர்தல்கள் நடைபெறாது என்று எண்ணி, வெளி நடப்பு செய்கிறேன்.

(திரு. க. மீனாட்சிசுந்தரம் வெளிநடப்பு செய்தார்.)

**மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா) :** அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1983) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாற்றுத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1983) நிறைவேற்றப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா) :** அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1983) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(4) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1983)**

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாற்றுத் தலைவரவர்களே,

“ சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 51/1983) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்”

என்று முன்மொழிகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா) :** அவை முன் உள்ள பிரச்சினை—

“ சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 51/1983) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.”

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாற்றுத் தலைவரவர்களே,

“ சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1983) நிறைவேற்றப்பட வேண்டும்.”

என்று முன்மொழிகிறேன்.

---

@ 261 ஆம் பக்கத்தில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா) :** அவை முன் உள்ள பிரச்சினை—

“ சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1983) நிறைவேற்றப்பட வேண்டும்.”

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(5) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1983).**

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாற்றுத் தலைவரவர்களே,

“ சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1983) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்”

என்று முன்மொழிகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா) :** அவை முன் உள்ள பிரச்சினை—

“ சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1983) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.”

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

---

@ 262 ஆம் பக்கத்தில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1983 நவம்பர் 21

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாற்றுத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1983) நிறைவேற்றப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா) :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1983) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## (6) 1983 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/1983)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாற்றுத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1983 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/1983) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

@ 263 ஆம் பக்கத்தில் இணைப்பு IX ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1983 நவம்பர் 21]

**மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா) :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1983 ஆம் மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/1983) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு, விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாற்றுத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1983 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/1983) நிறைவேற்றப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா) :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1983 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு 54/1983) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 1-20)

(7) தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1983).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாற்றுத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1983) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா): அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1983) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாற்றுத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1983) நிறைவேற்றப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

---

@ 264-265 ஆம் பக்கங்களில் இணைப்பு X ஆக அச்சிடப்பட்டுள்ளது.



மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா): அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1983) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(8) தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (திருத்தம்-செல்திறன்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1983).

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாற்றுத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, இந்து சமய-அறக்கட்டளைகள் (திருத்தம்-செல்திறன்) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1983) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா): அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, இந்து சமய-அறக்கட்டளைகள் (திருத்தம்-செல்திறன்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1983) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

---

@ 266-267 ஆம் பக்கங்களில் இணைப்பு XI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1983 நவம்பர் 21

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாற்றுத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, இந்து சமய-அறக்கட்டளைகள் (திருத்தம்-செல்திறன்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1983) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா):** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, இந்து சமய-அறக்கட்டளைகள் (திருத்தம்-செல்திறன்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1983) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(9) 1983 ஆம் ஆண்டு, பணிக்கொடை வழங்கல் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 56/1983).**

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாற்றுத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1983 ஆம் ஆண்டு, பணிக்கொடை வழங்கல் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 56/1983) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

@ 268 ஆம் பக்கத்தில் இணைப்பு XI ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1983 நவம்பர் 21]

**மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா):** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1983 ஆம் ஆண்டு, பணிக்கொடை வழங்கல் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 56/1983) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாற்றுத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1983 ஆம் ஆண்டு, பணிக்கொடை வழங்கல் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 56/1983) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா):** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1983 ஆம் ஆண்டு, பணிக்கொடை வழங்கல் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 56/1983) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 2. அறிவிப்புகள்.

### (3) அலுவல் மாற்றம்.

*மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா)*: தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு, வேளாண் விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 58/1983) நாளை எடுத்துக்கொள்ளப்படும்.

மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, அவை மீண்டும் நாளை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-22)

## 6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

220. Notification issued with G.O. Ms. No. 1459, Agriculture, dated the 11th August 1983 regarding deletion of certain villages from the regulated market at Pudukkottai. [Laid on the table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

221. Annual Accounts of the Tamil Nadu Khadi and Village Industries Board for the years 1976-77 to 1979-80 (Tamil and English). [Laid on the table of the House under section 24(3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]

222. Twelfth Annual Report of the Tamil Nadu Small Industries Development Corporation Limited for the year 1981-82 (Tamil). [Laid on the table of the House under section 619(A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]



223. Notification issued with G.O. Ms. No. 308, Prohibition and Excise (II), dated the 5th May 1983 regarding certain amendments to the Tamil Nadu Toddy and Arrack Shop (Disposal in Auction) Rules, 1981. [Laid on the table of the House under section 54(3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

224. Tenth Annual Report of the Pallavan Transport Corporation Limited for the year 1981-82 (Tamil). [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

225. Notification issued with G.O. Ms. No. 781, Industries, dated the 30th June 1983 regarding an amendment to the Tamil Nadu Societies Registration Rules, 1978. [Laid on the table of the House under section 58(3) of the Tamil Nadu Societies Registration Act, 1975 (Tamil Nadu Act 27 of 1975).]

226. Thirty-second Annual Report and Statement of Accounts of the Tamil Nadu Industrial Investment Corporation Limited for the year 1980-81 (English). [Laid on the table of the House under section 619(A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

227. Thirty-third Annual Report and Statement of Accounts of the Tamil Nadu Industrial Investment Corporation Limited for the year 1981-82 (English). [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

228. Notification issued with G.O. Ms. No. 783, Labour and Employment, dated the 25th March 1983 regarding inclusion of "Electric Goods Manufacturing" to the First Schedule to the Industrial Disputes Act, 1947. [Laid on the table of the House under section 40 of Industrial Disputes Act, 1947 (Central Act XIV of 1947)].

229. Notifications issued with G.O. Ms. No. 80, Prohibition and Excise, dated the 7th February 1983 and G.O. Ms. No. 636, Prohibition and Excise, dated the 22nd July 1983 regarding amendments to the Tamil Nadu Indian made Foreign Spirits (Manufacture) Rules, 1981. [Laid on the table of the House under section 54(3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

*B. Reports, Notifications and Other Papers.*

26. Sixth Five-Year Plan, 1980-85—Tamil Nadu (Tamil).

27. Fifteenth Annual Report of the Tamil Nadu Vigilance Commission for the period from April 1980 to March, 1981 (Tamil and English).

28. Returns of Assets of the following Members of the Tamil Nadu Legislative Council placed on the Table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislative Council on the 28th August 1969 :

Returns as on 30th June 1981.

Thiru G. Swaminathan.

Returns as on 31st March 1982.

1. Hon. Thiru S. Raghavanandham, Minister for Labour.
2. Thiru A. R. Damodaran.
3. Hon. Dr. M. P. Sivagnanam, Chairman.

Return as on 30th June 1982.

Thiru G. Swaminathan.

Returns as on 31st March 1983.

1. Hon. Thiru S. Raghavanandham, Minister for Labour.
2. Thiru J. M. Miakhan.
3. Thiru K. Arunachalam.
4. Thiru P. Manickam.
5. Thiru E. S. Venkatesan.
6. Thiru E. V. A. Vallimuthu.
7. Thirumathi Mandakini Krishnamoorthi.
8. Thiru P. R. Thomas.
9. Thiru V. V. V. Anandham.
10. Thiru M. Sankaralingam.
11. Hon. Dr. M. P. Sivagnanam, Chairman.



* 29. The Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Second Amendment Bill, 1983 (L.A. Bill No. 50 of 1983), as passed by the Assembly.

* 30. Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Second Amendment Bill, 1983 (L.A. Bill No. 51 of 1983), as passed by the Assembly.

* 31. The Tamil Nadu Panchayats (Second Amendment) Bill, 1983 (L.A. Bill No. 52 of 1983), as passed by the Assembly.

* 32. The Madurai City Municipal Corporation (Amendment) Bill, 1983 (L.A. Bill No. 54 of 1983), as passed by the Assembly.

* 33. The Tamil Nadu Panchayats (Third Amendment Bill, 1983 (L.A. Bill No. 53 of 1983), as passed by the Assembly.

* 34. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment and Validation) Bill, 1983 (L.A. Bill No. 38 of 1983), as passed by the Assembly.

* 35. The Payment of Gratuity (Tamil Nadu Amendment) Bill, 1983 (L.A. Bill No. 56 of 1983), as passed by the Assembly.

* 36. The Tamil Nadu Agricultural Produce Markets (Second Amendment) Bill, 1983 (L.A. Bill No 58 of 1983), as passed by the Assembly.

---

* Sent by post to all M.L.Cs. on 19th November 1983.

இணைப்பு 1.

(110-ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 55-க்கான விடையைக் காண்க.)

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். (1) | (2) | ஒரு இளநிலை உதவியாளர்கூட அனுமதிக்கப்படாத பள்ளியின் பெயர். (3) | மாணவ-மாணவியர் எண்ணிக்கை. (4) |
|---|---|---|---|
| 1 சென்னை .. | .. | 1 அரசு உயர்நிலைப் பள்ளி, ஜெனரல் குமாரமங்கலம் காலனி. | 581 |
| | | 2 அரசு உயர்நிலைப் பள்ளி, பக்தவச்சலம் காலனி, வியாசர்பாடி. | 263 |
| | | 3 கேரளா வித்யாலயம், உயர்நிலைப் பள்ளி, சென்னை. | 361 |
| | | 4 புனித ஆண்ட்ரூஸ் உயர்நிலைப் பள்ளி, சென்னை. | 592 |
| | | 5 முத்துக்குமாரசாமி தேவஸ்தானம் உயர்நிலைப் பள்ளி, சென்னை. | 219 |
| | | 6 ஸ்ரீ சம்பலால் பஹாரியா உயர்நிலைப் பள்ளி, சென்னை. | 149 |
| | | 7 அரசு உயர்நிலைப் பள்ளி, எம். ஜி. ஆர். நகர் | 565 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 1 சென்னை (தொடர்ச்சி) | | 8 அரசு உயர்நிலைப் பள்ளி, அரும்பாக்கம் .. | 776 |
| | | 9 டாக்டர் பி. வி. ஆர். உயர்நிலைப் பள்ளி, இராஜா அண்ணாமலைபுரம். | 295 |
| | | 10 ஒய். எம். சி. ஏ. உயர்நிலைப் பள்ளி, நந்தனம் | 502 |
| | | 11 கர்நாடக சங்க உயர்நிலைப் பள்ளி, சென்னை-17. | 499 |
| | | 12 கௌதம்சந்த் கோதாரி ஜெயின் உயர்நிலைப் பள்ளி, சென்னை-13. | 284 |
| | | 13 முர்துசேவியர் ஓரியண்டல் உயர்நிலைப் பள்ளி, சென்னை-5. | 409 |
| | | 14 டாக்டர் கலைஞர் நிர்மலா மகளிர் உயர்நிலைப் பள்ளி, கே. கே. நகர், சென்னை. | 768 |
| 2. செங்கை மாவட்டம். | | 15 அரசு உயர்நிலைப் பள்ளி, போரூர் .. .. | 595 |
| | | 16 அரசு உயர்நிலைப் பள்ளி, மெதூர் .. .. | 169 |
| | | 17 அரசு உயர்நிலைப் பள்ளி, பழைய நாப்பாளையம். | 151 |
| | | 18 அரசு உயர்நிலைப் பள்ளி, திருவெள்ளைவாயல் .. | 180 |
| | | 19 ஸ்ரீ மகாவீர் ஜெயின் உயர்நிலைப் பள்ளி, திருவொற்றியூர். | 108 |
| | | 20 புனித ஜோசப் உயர்நிலைப் பள்ளி, ஈஞ்சம்பாக்கம். | 207 |

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். (1) | (2) | ஒரு இளநிலை உதவியாளர்கூட அனுமதிக்கப்படாத பள்ளியின் பெயர். (3) | மாணவ மாணவியர் எண்ணிக்கை. (4) |
|---|---|---|---|
| 2 செங்கை மாவட்டம் (தொடர்ச்சி) | 21 | அரசு உயர்நிலைப் பள்ளி, செவிலிமேடு .. | 129 |
| | 22 | அரசு உயர்நிலைப் பள்ளி, முசரவாக்கம் .. | 187 |
| | 23 | அரசு உயர்நிலைப் பள்ளி, அவளூர் .. .. | 87 |
| | 24 | அரசு உயர்நிலைப் பள்ளி, நாசரத்பேட்டை .. | 315 |
| | 25 | ஸ்ரீ தண்டபாணி கீழ்த்திசைப் பள்ளி, காஞ்சிபுரம். | 178 |
| | 26 | திரு. வா. தி. மா. உயர்நிலைப் பள்ளி, வாலாசாபாத். | 335 |
| | 27 | ரோமன் கத்தோலிக் உயர்நிலைப் பள்ளி, காமராசநகர். | 199 |
| | 28 | சிறுமலர் உயர்நிலைக் பள்ளி, தெரசாபுரம் .. | 277 |
| | 29 | அரசு உயர்நிலைப் பள்ளி, நெம்மேலி .. .. | 137 |
| | 30 | மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை உயர் நிலைப்பள்ளி, படாளம். | 387 |
| | 31 | ஒரியண்டல் உயர்நிலைப் பள்ளி, மதுராந்தகம் .. | 106 |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 2 செங்கை மாவட்டம் (தொடர்ச்சி) | 32 | அரசு உயர்நிலைப் பள்ளி, நொச்சிலி .. .. | 195 |
| | 33 | அரசு உயர்நிலைப் பள்ளி, வெளிகரம் .. .. | 175 |
| | 34 | அரசு உயர்நிலைப் பள்ளி, செங்காட்டனூர் .. | 84 |
| | 35 | அரசு உயர்நிலைப் பள்ளி, பெரிய நாகப்பூண்டி | 284 |
| | 36 | அரசு உயர்நிலைப் பள்ளி, அய்யநேரி .. .. | 162 |
| | 37 | டி. இ. எல். சி. மேல்நிலைப் பள்ளி, பாண்டூர் .. | 540 |
| | 38 | அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி, திருவொற்றியூர். | 472 |
| 3. தென்னாற்காடு மாவட்டம். | 39 | அரசு உயர்நிலைப் பள்ளி, இராம்பாக்கம் .. | 370 |
| | 40 | அரசு உயர்நிலைப் பள்ளி, தும்பூர் .. .. | 213 |
| | 41 | அரசு உயர்நிலைப் பள்ளி, கோனூர் .. .. | 131 |
| | 42 | அரசு உயர்நிலைப் பள்ளி, ஏனாதிமங்கலம் .. | 178 |
| | 43 | அரசு உயர்நிலைப் பள்ளி, பொன்னியந்தல் .. | 104 |
| | 44 | அரசு உயர்நிலைப் பள்ளி, தென்பேர் .. .. | 160 |
| | 45 | அரசு உயர்நிலைப் பள்ளி, திருப்பாலப்பந்தல் .. | 190 |
| | 46 | அரசு உயர்நிலைப் பள்ளி, பாதூர் .. .. | 189 |
| | 47 | அரசு உயர்நிலைப் பள்ளி, காரணை பெரிச்சனூர் | 160 |

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | | ஒரு இளநிலை உதவியாளர்கூட அனுமதிக்கப்படாத பள்ளியின் பெயர். | மாணவ மாணவியர் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | 48 அரசு உயர்நிலைப் பள்ளி, ஆசனூர் .. .. | 217 |
| 3 | தென்னாற்காடு மாவட்டம் (தொடர்ச்சி). | 49 ஸ்ரீ காமகோடி ஓரியண்டல் உயர்நிலைப் பள்ளி, விழுப்புரம். | 247 |
| | | 50 ஸ்ரீ அகோபிலமடம் ஓரியண்டல் உயர்நிலைப் பள்ளி, விழுப்புரம். | 39 |
| | | 51 அரசு உயர்நிலைப் பள்ளி, எண்டியூர் .. .. | 125 |
| | | 52 அரசு உயர்நிலைப் பள்ளி, கழுப்பெரும்பாக்கம் .. | 161 |
| | | 53 அரசு உயர்நிலைப் பள்ளி, செவலபுரை .. | 148 |
| | | 54 அரசு உயர்நிலைப் பள்ளி, அனுமந்தை .. .. | 209 |
| | | 55 அரசு உயர்நிலைப் பள்ளி, புதுக்குப்பம் .. | 206 |
| | | 56 அரசு உயர்நிலைப் பள்ளி, கள்ளப்புலியூர் .. | 142 |
| | | 57 அரசு உயர்நிலைப் பள்ளி, இல்லோடு .. .. | 258 |
| | | 58 அரசு உயர்நிலைப் பள்ளி, மேல் ஒலக்கூர் .. | 183 |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 3 | தென்னாற்காடு மாவட்டம் (தொடர்ச்சி) | 59 அரசு உயர்நிலைப் பள்ளி, தேவதாளம்பேட்டை .. | 179 |
| | | 60 ஷை கிள்ளை .. .. | 197 |
| | | 61 ஷை வெங்கடாம்பேட்டை | 190 |
| | | 62 ஷை சி. என். பாளையம் .. | 237 |
| | | 63 ஷை கண்டரக்கோட்டை .. | 195 |
| | | 64 ஷை பூங்குளம் .. .. | 159 |
| | | 65 ஷை அங்குச் செட்டி பாளையம். | 222 |
| | | 66 ஷை கீழக்குப்பம் .. | 70 |
| | | 67 ஷை பெரியகுப்பம் .. | 288 |
| | | 68 ஷை பத்ரகோட்டை .. | 171 |
| | | 69 ஷை காணூர் .. .. | 175 |
| | | 70 ஷை பின்னலூர் .. .. | 139 |
| | | 71 ஷை கருப்பூர் .. .. | 152 |
| | | 72 ஷை குதிரைச்சந்தல் .. | 139 |
| | | 73 ஷை கீழக்கால்பூண்டி .. | 102 |

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். (1) | (2) | ஒரு இளநிலை உதவியாளர்கூட அனுமதிக்கப் படாத பள்ளியின் பெயர். (3) | | மாணவ-மாணவியர் எண்ணிக்கை (4) |
|---|---|---|---|---|
| | 74 | அரசு உயர்நிலைப் பள்ளி | கூத்தக்குடி .. .. | 126 |
| 3 தென்னாற்காடு மாவட்டம் (தொடர்ச்சி) | 75 | ஷை | மங்கலூர் .. | 160 |
| | 76 | ஷை | எடுத்தவாய்நத்தம் .. | 161 |
| | 77 | ஷை | அம்மையகரம் .. | 249 |
| | 78 | ஷை | அசகலத்தூர் — | 127 |
| | 79 | ஷை | பெலாந்துறை .. | 89 |
| | 80 | ஷை | மேலக்குப்பம் .. | 179 |
| | 81 | ஷை | மூங்கில்துறைப்பட்டு | 230 |
| | 82 | ஷை | செல்லம்பட்டு .. | 182 |
| | 83 | ஷை | பெருமங்கலம் .. | 46 |
| | 84 | ஷை | நாககுப்பம் .. .. | 149 |
| | 85 | ஷை | அஜீஸ்நகர் .. .. | 249 |
| | 86 | ஷை | அரசம்பட்டு .. | 202 |



| (1) | (2) | (3) | | (4) |
|---|---|---|---|---|
| 3 தென்னாற்காடு மாவட்டம் (தொடர்ச்சி) | 87 | ஷை | பெரிய சிறுவத்தூர் | 214 |
| | 88 | (மகளிர்) திருவண்ணைநல்லூர். | ... | 128 |
| 4 வட ஆற்காடு மாவட்டம். | 89 | ஷை | ஐங்குணம் .. .. | 123 |
| | 90 | ஷை | கூடலூர் .. .. | 120 |
| | 91 | ஷை | மொத்தக்கல் .. | 114 |
| | 92 | செயிண்ட் ஜோசப் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பத்தியவரம். | | 762 |
| | 93 | அரசு உயர்நிலைப் பள்ளி, கார்ணாம்பட்டு .. | | 260 |
| | 94 | ஷை | வடுகந்தாங்கல் .. | 402 |
| | 95 | ஷை | பொன்னேரி .. | 210 |
| | 96 | உஸ்மானியா உயர்நிலைப் பள்ளி, திருப்பத்தூர் .. | | 201 |
| | 97 | கன்காரிடியா உயர்நிலைப் பள்ளி, பேரணாம் பட்டு. | | 315 |
| | 98 | தொமினிக் சேவியர் உயர்நிலைப்பள்ளி, திருப்பத்தூர். | | 676 |
| | 99 | அரசு உயர்நிலைப் பள்ளி, சேரி .. .. | | 242 |
| | 100 | ஷை | கிழ்ப்புதூர் .. | 112 |

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். (1) (2) | ஒரு இளநிலை உதவியாளர்கூட அனுமதிக்கப்படாத பள்ளியின் பெயர். (3) | மாணவ மாணவியர் எண்ணிக்கை. (4) |
|---|---|---|
| வட ஆற்காடு மாவட்டம்—தொடர்ச்சி | 101 அரசு உயர்நிலைப்பள்ளி, கணபதிபுரம் .. | 115 |
| | 102 டிை அல்லியந்தல் .. | 153 |
| | 103 டிை அழிவிடைதாங்கி .. | 139 |
| | 104 டிை நாட்டேரி .. .. | 135 |
| | 105 டிை மேலச்சேரி .. .. | 134 |
| | 106 டிை கோட்டுப்பாக்கம் தேத்துறை .. .. | 124 |
| | 107 இராஜா திருநாவுக்கரசு முதலியார் உயர் நிலைப் பள்ளி, களத்தூர். | 267 |
| | 108 அரசு உயர்நிலைப்பள்ளி, இடையன்சாத்து .. | 278 |
| | 109 செயின்ட் மேரிஸ் மகளிர் உயர்நிலைப் பள்ளி, வேலூர். | 976 |
| | 110 இஸ்லாமியா மகளிர் உயர்நிலைப் பள்ளி, மேல் விஷாராம். .. | 201 |
| | 111 அபிபியா ஓரியண்டல் உயர்நிலைப் பள்ளி, ஆம்பூர். | 308 |



| (1) (2) | (3) | (4) |
|---|---|---|
| 5. திருச்சி மாவட்டம் | 112 ஆபட்மார்சல் ஆர். கே. உயர்நிலைப் பள்ளி, திருச்சிராப்பள்ளி. | 614 |
| | 113 இராமகிருஷ்ணா உயர்நிலைப் பள்ளி, திருப்பராய்த்துறை. | 159 |
| | 114 புனித ஆந்த்ரேயா உயர்நிலைப் பள்ளி, மணப்பாறை. | 212 |
| | 115 ரெங்கசாமி கவுண்டர் உயர்நிலைப் பள்ளி, நடையனூர். | 231 |
| | 116 கலைமகள் உயர்நிலைப்பள்ளி, வெங்கடாசலபுரம். | 107 |
| | 117 புனித அந்தோனியார் உயர்நிலைப் பள்ளி, மஞ்சம்பட்டி. | 440 |
| | 118 அரசு உயர்நிலைப் பள்ளி, சேருகுடி .. .. | 187 |
| | 119 அரசு உயர்நிலைப் பள்ளி, தும்பலம் .. ... | 141 |
| | 120 செயிண்ட் பீட்டர் உயர்நிலைப் பள்ளி, விரகாலூர். | 453 |
| | 121 கீரம்பூர் உயர்நிலைப் பள்ளி, கீரம்பூர் .. .. | 376 |
| | 122 ஓரியண்டல் உயர்நிலைப் பள்ளி, இலால்குடி .. | 96 |
| | 123 அரசு உயர்நிலைப் பள்ளி, தொண்டமாந்துறை. | 169 |
| | 124 டிை பசும்பலூர் .. .. | 99 |

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | | ஒரு இளநிலை உதவியாளர்கூட அனுமதிக்கப்படாத பள்ளியின் பெயர். | மாணவ மாணவியர் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | திருச்சி மாவட்டம்—தொடர்ச்சி | 125 அரசு உயர்நிலைப் பள்ளி, காமரசவல்லி .. | 124 |
| | | 126 ௸ இலந்தைகூடம் .. | 133 |
| | | 127 ௸ வேப்பந்தட்டை .. | 85 |
| | | 128 ௸ இலாடபுரம் .. | 311 |
| | | 129 ௸ மேலப்புலியூர் ... | 157 |
| | | 130 பெரியார் மணியம்மை மகளிர் மேல்நிலைப் பள்ளி, திருச்சிராப்பள்ளி. | 457 |
| | | 131 கலியுக வரதராஜப் பெருமாள் உயர்நிலைப்பள்ளி, கல்லங்குறிச்சி. | 77 |
| | | 132 அலங்கார் அன்னை மகளிர் உயர்நிலைப் பள்ளி, வரதராஜன்பேட்டை. | 213 |
| | | 133 அன்னை ஊர்து பெண்கள் உயர்நிலைப் பள்ளி, தென்னூர். | 285 |
| | | 134 தூய இருதய மகளிர் உயர்நிலைப் பள்ளி, மார்த்தாண்டபுரம். | 420 |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | | 135 உஸ்வத்துறஹசனா ஒரியண்டல் பெண்கள் உயர் நிலைப் பள்ளி, பள்ளப்பட்டி. | 375 |
| 6 | தஞ்சாவூர் மாவட்டம். | 136 அரசு உயர்நிலைப் பள்ளி, மல்லிப்பட்டிணம் .. | 155 |
| | | 137 அரசு உயர்நிலைப்பள்ளி, சங்கரநாதர்குடிகாடு .. | 218 |
| | | 138 அரசு உயர் நிலைப் பள்ளி, பெங்கால் .. .. | 162 |
| | | 139 அரசு உயர்நிலைப் பள்ளி, ஆவணம் .. .. | 240 |
| | | 140 அரசு உயர்நிலைப் பள்ளி, இடையாத்தி .. | 113 |
| | | 141 அரசு உயர்நிலைப் பள்ளி, காலகம் .. .. | 151 |
| | | 142 அரசு உயர்நிலைப் பள்ளி, ஏனாதிக்கரம்பை .. | 134 |
| | | 143 அரசு உயர்நிலைப் பள்ளி, வெங்கரைக்கோட்டைக் காடு. | 123 |
| | | 144 அரசு உயர்நிலைப் பள்ளி, திருமங்கலக்கோட்டை மேற்கு காலனி. | 250 |
| | | 145 அரசு உயர் நிலைப்பள்ளி, களத்தூர் .. .. | 92 |
| | | 146 அரசு உயர்நிலைப் பள்ளி, ஆர். சுத்திப்பட்டு .. | 156 |
| | | 147 அரசு உயர்நிலைப் பள்ளி, செண்டாடங்காடு .. | 204 |
| | | 148 அரசு உயர்நிலைப் பள்ளி, ஆவடிக்குமுளை .. | 123 |
| | | 149 அரசு உயர்நிலைப் பள்ளி, சித்தக்காடு ... .. | 190 |
| | | 150 அரசு உயர்நிலைப் பள்ளி, நாடியம் .. .. | 83 |
| | | 151 அரசு உயர்நிலைப் பள்ளி, நெடும்பாலம் .. | 275 |

| வரிசை எண்ணும் (1) | மாவட்டத்தின் பெயரும். (2) | ஒரு இளநிலை உதவியாளர்கூட அனுமதிக்கப்படாத பள்ளியின் பெயர். (3) | மாணவ மாணவியர் எண்ணிக்கை. (4) |
|---|---|---|---|
| 6, | தஞ்சாவூர் மாவட்டம் —தொடர்ச்சி. | 152 அரசு உயர்நிலைப் பள்ளி, பாலக்குறிச்சி .. | 107 |
| | | 153 அரசு உயர்நிலைப் பள்ளி, விக்ரபாண்டியம் .. | 226 |
| | | 154 அரசு உயர்நிலைப் பள்ளி, மூவாநல்லூர் .. | 120 |
| | | 155 அரசு உயர்நிலைப் பள்ளி, புலிவலம் .. | 478 |
| | | 156 அரசு உயர்நிலைப் பள்ளி, சேங்காலிபுரம் .. | 209 |
| | | 157 அரசு உயர் நிலைப் பள்ளி, கருவாக்குறிச்சி .. | 99 |
| | | 158 அரசு உயர்நிலைப் பள்ளி, கோவில்வண்ணி .. | 133 |
| | | 159 அரசு உயர்நிலைப் பள்ளி, இராயபுரம் .. .. | 116 |
| | | 160 அரசு உயர் நிலைப்பள்ளி, பெரம்பூர் .. .. | 100 |
| | | 161 அரசு உயர்நிலைப் பள்ளி, உள்ளிக்கோட்டை .. | 260 |
| | | 162 குமரன் உயர்நிலைப்பள்ளி, மஞ்சக்கொல்லை .. | 125 |
| | | 163 கௌதியா உயர்நிலைப் பள்ளி, நாகூர் .. .. | 303 |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 6 | தஞ்சாவூர் மாவட்டம் — தொடர்ச்சி | 164 மீ. மா. உயர்நிலைப் பள்ளி, சோழபாண்டி .. | 190 |
| | | 165 புனித ஆரோக்கிய அன்னை உயர்நிலைப் பள்ளி, வேளாங்கண்ணி. | 1,015 |
| | | 166 திருமுருகன் உயர்நிலைப் பள்ளி, மேலவாசல் .. | 169 |
| | | 167 அரசு உயர்நிலைப் பள்ளி, திருவாடுதுறை .. | 187 |
| | | 168 அரசு உயர்நிலைப் பள்ளி, கொல்லபுரம் .. | 251 |
| | | 169 அரசு உயர்நிலைப் பள்ளி, திருக்கண்ணபுரம் .. | 249 |
| | | 170 அரசு உயர்நிலைப் பள்ளி, அணைக்கரை .. | 187 |
| | | 171 அரசு உயர்நிலைப் பள்ளி, செங்கிப்பட்டி .. | 194 |
| | | 172 அரசு உயர்நிலைப் பள்ளி, மேம்பாலம் தஞ்சாவூர். | 274 |
| | | 173 அரசு உயர்நிலைப் பள்ளி, திருக்காவூர் .. | 193 |
| | | 174 அரசு உயர்நிலைப் பள்ளி, கோவிந்தக்குடி .. | 155 |
| | | 175 ஒரியண்டல் உயர்நிலைப் பள்ளி, தஞ்சாவூர் .. | 198 |
| | | 176 ஒரியண்டல் உயர்நிலைப் பள்ளி, கும்பகோணம். | 101 |
| | | 177 வள்ளலார் உயர்நிலைப் பள்ளி, கீழ்க்கோட்டையூர். | 356 |
| | | 178 திரு. அஞ்சுவட்டத்தம்மன் மகளிர் உயர்நிலைப் பள்ளி, கீழ்வேளூர். | 230 |

| வரிசை எண்ணும் | மாவட்டத்தின் பெயரும். | ஒரு இளநிலை உதவியாளர் கூட அனுமதிக்கப்படாத பள்ளியின் பெயர். | மாணவ மாணவியர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 6 | தஞ்சாவூர் மாவட்டம் —தொடர்ச்சி | 179 உமா மகளிர் உயர்நிலைப் பள்ளி, திருச்சிற்றம்பலம் (9 மற்றும் 10 வகுப்புகள் மட்டில்.) | 40 |
| | | 180 அரசு உயர்நிலைப் பள்ளி, அரித்துவாரமங்கலம். | 176 |
| | | 181 அரசு உயர் நிலைப் பள்ளி, கணபதிபுரம் .. | 164 |
| | | 182 அரசு உயர்நிலைப் பள்ளி, புத்தகரம் .. .. | 168 |
| | | 183 அரசு உயர்நிலைப்பள்ளி, உம்பளச்சேரி .. | 169 |
| | | 184 அரசு உயர்நிலைப் பள்ளி, செம்போடை .. | 209 |
| | | 185 அரசு உயர் நிலைப் பள்ளி, கிளாமங்கலம் .. | 156 |
| 7. | புதுக்கோட்டை மாவட்டம். | 186 அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி, கீரமங்கலம் (புதுக்கோட்டை). | 515 |
| | | 187 அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி, கீரனூர் .. | 216 |
| | | 188 நிஜாம் அராபிக் ஓரியண்டல் உயர்நிலைப் பள்ளி, புதுக்கோட்டை. | 282 |
| | | 189 அரசு உயர்நிலைப் பள்ளி, இலக்குமிநரசிம்மபுரம் | 256 |



| (1) | (-) | (3) | (4) |
|---|---|---|---|
| 7 | புதுக்கோட்டை மாவட்டம் — தொடர்ச்சி | 190 அரசு உயர்நிலைப் பள்ளி, பெருமருதூர் .. | 130 |
| | | 191 அரசு உயர் நிலைப்பள்ளி, கரூர் .. .. | 110 |
| | | 192 அரசு உயர்நிலைப் பள்ளி, அமரடக்கி .. .. | 131 |
| | | 193. அரசு உயர்நிலைப் பள்ளி, அம்பலவாநேந்தல் .. | 219 |
| | | 194 அரசு உயர்நிலைப் பள்ளி, அத்தானி .. .. | 190 |
| | | 195 அரசு உயர்நிலைப் பள்ளி, காரக்கோட்டை .. | 156 |
| | | 196 அரசு உயர்நிலைப் பள்ளி, கட்டுமாவடி .. | 144 |
| | | 197 செயிண்ட் ஜோசப் உயர்நிலைப் பள்ளி, வெங்கட்டக்குளம். | 270 |
| | | 198 அரசு உயர்நிலைப் பள்ளி, மேலத்தானியம் .. | 236 |
| | | 199. அரசு உயர்நிலைப் பள்ளி, திருக்களம்பூர் .. | 204 |
| | | 200 அரசு உயர்நிலைப் பள்ளி, கோமாபுரம் .. | 121 |
| | | 201 அரசு உயர் நிலைப்பள்ளி, புதுநகர் .. .. | 102 |
| | | 202 அரசு உயர்நிலைப் பள்ளி, முக்கணாமலைப்பட்டி. | 178 |
| | | 203 அரசு உயர்நிலைப் பள்ளி, புத்தாம்பூர் .. | 163 |
| | | 204 அரசு உயர்நிலைப் பள்ளி, செம்பாட்டூர் .. | 159 |

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | | ஒரு இளநிலை உதவியாளர்கூட அனுமதிக்கப்படாத பள்ளியின் பெயர். | மாணவ மாணவியர் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 8 | மதுரை மாவட்டம் .. | 205 அரசு உயர்நிலைப் பள்ளி, திண்டுக்கல் .. | 313 |
| | | 206 அரசு உயர்நிலைப் பள்ளி, தென்னம்பட்டி .. | 218 |
| | | 207 அரசு உயர்நிலைப் பள்ளி, நாகையகோட்டை .. | 122 |
| | | 208 சாந்திநிகேதன் மேல்நிலைப் பள்ளி, அம்பிளிக்கை. | 750 |
| | | 209 அரசு உயர்நிலைப் பள்ளி, சிலமலை .. .. | 221 |
| | | 210 அரசு உயர்நிலைப் பள்ளி, தர்மபுரி .. .. | 151 |
| | | 211 இலாஹி ஓரியண்டல் அராபிக் பள்ளி, கம்பம் .. | 172 |
| | | 212 நாகம்மாள் நினைவு உயர்நிலைப் பள்ளி, தாண்டிக்குடி. | 223 |
| | | 213 ஜி. ஆர். வி. உயர்நிலைப் பள்ளி, மயிலாடும்பாறை. | 214 |
| | | 214 அரசு உயர்நிலைப்பள்ளி, மாத்தூர் .. .. | 159 |
| | | 215 அரசு உயர்நிலைப்பள்ளி, தெற்குத் தெரு .. | .. |
| | | 216 அப்பர் உயர்நிலைப்பள்ளி, கருப்பாரூரணி .. | 257 |



| (1) | (2 | (3) | (4) |
|---|---|---|---|
| | | 217 கூடக்கோவில் நாடார்கள் உயர்நிலைப் பள்ளி, கூடக்கோவில். | 285 |
| | | 218 தியாகராசர் ஆலைக் குடியிருப்பு உயர்நிலைப் பள்ளி, கப்பலூர். | 182 |
| | | 219 லூர்து அன்னை மகளிர் உயர்நிலைப் பள்ளி, கே.புதூர். | 528 |
| | | 220 திரவியம் மகளிர் உயர்நிலைப் பள்ளி, கமலாபுரம் | 305 |
| | | 221 ஸ்ரீனிவாசா நினைவு மகளிர் உயர்நிலைப் பள்ளி, சத்திரப்பட்டி. | 321 |
| | | 222 முகம்மது பாத்திமா மகளிர் உயர்நிலைப் பள்ளி, உத்தமபாளையம். | 256 |
| | | 223 டி. எம். ஆர். மகளிர் உயர்நிலைப் பள்ளி, வடக்குவாசல், மதுரை. | 235 |
| 9 | இராமநாதபுரம் மாவட்டம். | 224 அரசு உயர்நிலைப் பள்ளி, தென்மாப்பட்டு .. | 235 |
| | | 225 அரசு உயர்நிலைப் பள்ளி, டி. மாரியூர் .. | 130 |
| | | 226 அரசு உயர்நிலைப் பள்ளி, வண்ணான்குண்டு .. | 210 |
| | | 227 அரசு உயர்நிலைப் பள்ளி, முனைவென்றி .. | 130 |
| | | 228 அரசு உயர்நிலைப் பள்ளி, கிளியூர் .. .. | 141 |
| | | 229 அரசு உயர்நிலைப் பள்ளி, பொட்டவயல் .. | 208 |

| வரிசை எண்ணும் (1) | மாவட்டத்தின் பெயரும். (2) | ஒரு இளநிலை உதவியாளர் கூட அனுமதிக்கப்படாத பள்ளியின் பெயர். (3) | மாணவ மாணவியர் எண்ணிக்கை. (4) |
|---|---|---|---|
| 9 | இராமநாதபுரம் மாவட்டம்—தொடர்ச்சி | 230 அரசு உயர்நிலைப் பள்ளி, மேலக்கிடாரம் .. | 104 |
| | | 231 அரசு உயர்நிலைப் பள்ளி, உச்சிநத்தம் .. | 75 |
| | | 232 அரசு உயர்நிலைப் பள்ளி அலங்கானூர் .. | 168 |
| | | 233 அரசு உயர்நிலைப் பள்ளி, அளவிடங்கான் .. | 127 |
| | | 234 முகமதியா உயர்நிலைப் பள்ளி, சித்தார்கோட்டை | 240 |
| | | 235 பள்ளிவாசல் உயர்நிலைப் பள்ளி, முதுகளத்தூர் | 599 |
| | | 236 அரசு உயர்நிலைப் பள்ளி, சங்கரபாண்டியபுரம் | 122 |
| | | 237 அரசு உயர்நிலைப் பள்ளி, வெம்பக்கோட்டை .. | 179 |
| | | 238 நாடார் உறவின்முறை பெ. தேவசகாயம் அன்னத்தாயம்மாள் மேல்நிலைப் பள்ளி, மேலக்கோட்டையூர், சின்னைபுரம். | 353 |
| | | 239 ஸ்ரீ இராவ்பகதூர் ஏ. கே. டி. ஆண்கள் உயர் நிலைப்பள்ளி, இராசபாளையம் .. .. | 356 |
| | | 240 அரசு உயர்நிலைப் பள்ளி, அழகமாநகர் .. .. | 112 |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | | 241 அரசு உயர்நிலைப் பள்ளி, இலுப்பமையூர் .. | 146 |
| | | 242 அரசு உயர்நிலைப் பள்ளி, கட்டனூர் .. .. | 170 |
| | | 243 அரசு உயர்நிலைப் பள்ளி, கோவிலங்குளம் .. | 67 |
| | | 244 அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி, தொண்டி .. | 68 |
| | | 245 அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி, பாகனேரி .. | 139 |
| | | 246 ஆர். எம். எம். மகளிர் உயர்நிலைப் பள்ளி, பள்ளத்தூர். | 203 |
| | | 247 எம். எ. பி. மகளிர் உயர்நிலைப் பள்ளி, கண்டர மாணிக்கம். | 191 |
| | | 248 கே. எம். எஸ். சி. மகளிர் மேல்நிலைப் பள்ளி, நாட்டரசன்கோட்டை. | 183 |
| 10 | திருநெல்வேலி மாவட்டம். | 249 குழந்தை ஏசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, பாளையங்கோட்டை. | 329 |
| | | 250 புனித ஜோசப் மகளிர் உயர்நிலைப் பள்ளி, பாளையங்கோட்டை. | 202 |
| | | 251 பாத்திமா மகளிர் உயர்நிலைப் பள்ளி, வள்ளியூர் | 295 |
| | | 252 தஸ்நேவிஸ் மாதா மகளிர் உயர்நிலைப் பள்ளி, தூத்துக்குடி. | 450 |

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | | ஒரு இளநிலை உதவியாளர்கூட அனுமதிக்கப்படாத பள்ளியின் பெயர். | மாணவ மாணவியர் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| 1)) | (2) | (3) | (4) |
| 10 | திருநெல்வேலி மாவட்டம் —தொடர்ச்சி | 253 புனித மேரி மகளிர் உயர்நிலைப் பள்ளி, கச்சனாவிளை. | 303 |
| | | 254 வள்ளியம்மையார் மகளிர் உயர்நிலைப் பள்ளி, குலசேகரப்பட்டணம் (9 மற்றும் 10 வகுப்புகள் மட்டில்) | 53 |
| | | 255 ஏ. பி. சி. வீரபாகு உயர்நிலைப் பள்ளி, புதுப்பட்டி. | 143 |
| | | 256 டி. டி. டி. ஏ. நல்மெய்யப்பர் உயர்நிலைப்பள்ளி, இடையார்காடு. | 206 |
| | | 257 மத்திய உயர்நிலைப் பள்ளி, காயல்பட்டிணம்.. | 278 |
| | | 258 அரசு உயர்நிலைப் பள்ளி, திருநெல்வேலி டவுன் | 228 |
| | | 259 அரசு உயர்நிலைப் பள்ளி, முன்னீர்பள்ளம் .. | 130 |
| | | 260 அரசு உயர்நிலைப் பள்ளி, நெடுவயல் .. .. | 73 |
| | | 261 எம். எம். உயர்நிலைப் பள்ளி, இடைகால் .. | 231 |
| | | 262 புனித அருளப்பர் உயர்நிலைப் பள்ளி, ஆவுடையனூர். | 480 |



| | | | |
|---|---|---|---|
| | | 263 இந்து உயர்நிலைப் பள்ளி, கழப்புலியூர் .. | 211 |
| | | 264 இரகுமான்யா உயர்நிலைப் பள்ளி, மேலுப்பாளையம். | 283 |
| | | 265 அரசு உயர்நிலைப் பள்ளி, காளம்பட்டி .. | 162 |
| | | 266 அரசு உயர்நிலைப் பள்ளி, வெம்பூர் .. .. | 120 |
| | | 267 அரசு உயர்நிலைப் பள்ளி, சேர்ந்தயங்கலம் .. | 171 |
| | | 268 டி. டி. டி. ஏ. உயர்நிலைப் பள்ளி, எஸ். கைலாசபுரம். | 293 |
| | | 269 அரசு உயர்நிலைப் பள்ளி, பொதுக்குடி .. | 184 |
| | | 270 அரசு உயர்நிலைப் பள்ளி, மருதம்புத்தூர் .. | 85 |
| | | 271 அரசு உயர்நிலைப் பள்ளி, மணிமுத்தாறு .. | 118 |
| 11 | கன்னியாகுமரி மாவட்டம். | 272 புனித ஜோசப் மகளிர் உயர்நிலைப் பள்ளி, அழகப்பபுரம். | 134 |
| | | 273 எல். எம். எஸ். மகளிர் உயர்நிலைப் பள்ளி, சாந்தபுரம். | 204 |
| | | 274 ஸ்ரீதேவி மகளிர் மேல்நிலைப் பள்ளி, கொல்லங்கோடு. | 347 |
| | | 275 உதவிபெறும் மகளிர் உயர்நிலைப் பள்ளி, குன்னங்கல். | 158 |

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். (1) | ஒரு இளநிலை உதவியாளர் கூட அனுமதிக்கப்படாத பள்ளியின் பெயர். (2) | மாணவ மாணவியர் எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| 11 கன்னியாகுமரி மாவட்டம்—தொடர்ச்சி | 276 அரசு உயர்நிலைப் பள்ளி, மீனாட்சிபுரம் (நாகர்கோவில்). | 909 |
| | 277 அரசு உயர்நிலைப் பள்ளி, ஒழுகினசேரி .. | 549 |
| | 278 அரசு உயர்நிலைப் பள்ளி, மேலசூரங்குடி .. | 438 |
| | 279 அரசு உயர்நிலைப் பள்ளி, வெள்ளமடம், தோவாளை. | 452 |
| | 280 எல். எம். எஸ். உயர்நிலைப் பள்ளி, தென் தாமரைக்குளம். | 413 |
| | 281 அரசு உயர்நிலைப் பள்ளி, அம்மாண்டிவிளை | 788 |
| | 282 அரசு உயர்நிலைப் பள்ளி, செருப்பாலூர் | 929 |
| | 283 அரசு உயர்நிலைப் பள்ளி, தெங்கம்புதூர் .. | 790 |
| | 284 அரசு உயர் நிலைப் பள்ளி திருநந்தக்கரை | 653 |
| | 285 அரசு உயர்நிலைப் பள்ளி, வில்லுணிக்கோணம் | 720 |
| | 286 அரசு உயர்நிலைப் பள்ளி, பறக்கை .. .. | 639 |
| | 287 அரசு உயர்நிலைப் பள்ளி, பேயன் குழி .. .. | 662 |
| | 288 அரசு உயர்நிலைப் பள்ளி, மூலச்சி .. .. | 1237 |
| | 289 அரசு உயர்நிலைப் பள்ளி, திருவரம்பு .. .. | 741 |
| | 290 அரசு உயர்நிலைப் பள்ளி, திருவட்டார் .. | 600 |
| | 291 அரசு உயர்நிலைப் பள்ளி, வீயன்னூர் .. .. | 762 |
| | 292 தூய குடும்பம் உயர்நிலைப் பள்ளி, ஆறுகாணி | 277 |
| | 293 உதவிபெறும் புனித மார்கிரி கோரியஸ் சிராத்தூர். | 301 |
| | 294 செயின்ட் ஆண்டனிஸ் உயர்நிலைப் பள்ளி, காப்புக்காடு. | 647 |
| | 295 செயின்ட் அலோசியஸ் உயர்நிலைப் பள்ளி, மார்த்தாண்டம் துறை. | 324 |
| | 296 செயின்ட் ஆண்டனீஸ் உயர்நிலைப் பள்ளி, முள்ளங்கினாவிளை. | 440 |
| | 297 தூய இருதய உயர்நிலைப் பள்ளி, பாகோடு .. | 439 |
| | 298 செயின்ட் பிரான்சீஸ் உயர்நிலைப் பள்ளி, வேங்காடு. | 387 |
| | 299 செயின்ட் தோமஸ் உயர்நிலைப் பள்ளி, நெட்டா | 276 |
| | 300 ஆர். டி. எம். எஸ். எம். எஸ். உயர்நிலைப் பள்ளி, வெங்கஞ்சி. | 738 |

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | ஒரு இளநிலை உதவியாளர் கூட அனுமதிக்கப்படாத பள்ளியின் பெயர். | மாணவ மாணவியர் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 11 கன்னியாகுமரி மாவட்டம் —தொடர்ச்சி | 301 அரசு உயர்நிலைப் பள்ளி, கீழ்குளம் .. .. | 654 |
| | 302 அரசு உயர்நிலைப் பள்ளி, வெள்ளாங்கோடு .. | 1293 |
| | 303 அரசு உயர்நிலைப் பள்ளி, மேல்புறம்.. .. | 1088 |
| | 304 அரசு உயர்நிலைப் பள்ளி, அதங்கோடு .. | 639 |
| | 305 அரசு உயர்நிலைப் பள்ளி, நல்லூர் .. .. | 652 |
| | 306 அரசு உயர்நிலைப் பள்ளி, கஞ்சிரக்கோடு .. | 870 |
| | 307 அரசு உயர்நிலைப் பள்ளி, உதயமார்த்தாண்டம் | 516 |
| 2 தருமபுரி மாவட்டம் | 308 அரசு உயர்நிலைப் பள்ளி, மோளையனூர் ... | 139 |
| | 309 அரசு உயர்நிலைப் பள்ளி, மாம்பட்டி .. | 177 |
| | 310 ஷெ ஆர். கோபிநாதம்பட்டி | 174 |
| | 311 ஷெ கீரைப்பட்டி .. | 240 |
| | 312 ஷெ எ. வேலாம்பட்டி | 150 |
| | 313 ஷெ அரசம்பட்டி .. | 215 |
| | 314 அரசு உயர்நிலைப் பள்ளி கங்கலேரி .. | 247 |
| | 315 ஷெ மகராஜகடை .. | 117 |
| | 316 ஷெ நெடுங்கல் | 105 |
| | 317 ஷெ பெரியகோட்டப்பள்ளி | 102 |
| | 318 ஷெ சோபனூர் .. | 140 |
| | 319 ஷெ திம்மாபுரம் .. | 250 |
| | 320 ஷெ அத்திமுகம் .. | 121 |
| | 321 ஷெ காமன்தொட்டி .. | 162 |
| | 322 ஷெ நெரிகம் .. | 87 |
| | 323 ஷெ பேரண்டப்பள்ளி | 108 |
| | 324 ஷெ அந்தேவனப்பள்ளி | 195 |
| | 325 ஷெ பைரமங்கலம் .. | 96 |
| | 326 ஷை டி. கொத்தூர் .. | 90 |
| | 327 ஷெ ஜவளகிரி .. .. | 98 |
| | 328 ஷெ குந்துமாரணப்பள்ளி. | 74 |
| | 329 ஷெ நாகமங்கலம் .. | 135 |

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | ஒரு இளநிலை உதவியாளர்கூட அனுமதிக்கப்படாத பள்ளியின் பெயர். | | மாணவ மாணவியர் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | | (3) |
| 12 தருமபுரி மாவட்டம் — தொடர்ச்சி. | 330 அரசு உயர்நிலைப் பள்ளி, | பஞ்சப்பள்ளி .. | 167 |
| | 331 டி | சந்தனப்பள்ளி .. | 78 |
| | 332 டி | உளளுக்குறுக்கை .. | 139 |
| | 333 டி | வரட்டனப்பள்ளி .. | 226 |
| | 334 டி | ஆலப்பட்டி .. | 232 |
| | 335 டி | ஐக்க சமுத்திரம் .. | 123 |
| | 336 டி | குருபரப்பள்ளி .. | 225 |
| | 337 டி | மோரனஅள்ளி .. | 254 |
| | 338 டி | புளியம்பட்டி .. | 165 |
| | 339 டி | வேலம்பட்டி .. | 314 |
| | 340 டி | உத்தனப்பள்ளி .. | 158 |
| | 341 டி | அஞ்செட்டி .. | 165 |



| | | | |
|---|---|---|---|
| | 342 டி | பாலதொட்டனப்பள்ளி | 172 |
| | 343 டி | குந்துகோட்டை | 156 |
| | 344 டி | கக்கதாசம் .. | 175 |
| | 345 டி | ஏ. மல்லாபுரம் .. | 216 |
| | 346 டி | அத்திகானூர் .. | 210 |
| | 347 டி | பண்ட ஹள்ளி .. | 181 |
| | 348 டி | ஏரியூர் .. .. | 200 |
| | 349 டி | கடகத்தூர் .. | 79 |
| | 350 டி | காரப்பட்டு .. | 183 |
| | 351 டி | கோணங்கிநாய்க்கன் ஹள்ளி. | 237 |
| | 352 டி | கோட்டப்பட்டி .. | 225 |
| | 352 டி | குன்னத்தூர் .. | 248 |
| | 354 டி | நெருப்பூர் .. | 236 |
| | 355 டி | ஒடசல்பட்டி .. | 241 |
| | 356 டி | பெரும்பாலை .. | 228 |

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | ஒரு இளநிலை உதவியாளர்கூட அனுமதிக்கப்படாத பள்ளியின் பெயர். | மாணவ மாணவியர் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (2) |
| 12 தருமபுரி மாவட்டம்—தொடர்ச்சி | 357 அரசு உயர்நிலைப் பள்ளி சோலைக்கொட்டாய் | 207 |
| | 358 ஷ்டி திருமல்வாடி .. | 137 |
| | 359 ஷ்டி உப்பாரப்பட்டி .. | 83 |
| | 360 அரசு உயர்நிலைப் பள்ளி (மகளிர்), மேகலாசின்னம் பள்ளி | 124 |
| 13 சேலம் மாவட்டம் | 361 அரசு உயர்நிலைப் பள்ளி, கங்கவல்லி .. | 340 |
| | 362 நாசரேத் மகளிர் உயர்நிலைப்பள்ளி, ஏற்காடு.. | 313 |
| | 363 அரசு உயர்நிலைப் பள்ளி, எர்ணாபுரம் .. | 116 |
| | 364 ஷ்டி தொட்டிப்பட்டி .. | 192 |
| | 365 ஷ்டி புளியங்குறிச்சி .. | 118 |
| | 366 ஷ்டி தேவியாக்குறிச்சி .. | 200 |
| | 367 ஷ்டி நாவலூர் .. .. | 101 |
| | 368 ஷ்டி பனமடல் .. | 104 |



| | | |
|---|---|---|
| | 369 ஷ்டி தாண்டானூர் .. | 131 |
| | 370 ஷ்டி மாதநாய்க்கன்பட்டி. | 166 |
| | 371 ஸ்ரீராமகிருஷ்ணா குருகுல உயர்நிலைப்பள்ளி, சின்னதண்டா .. .. .. | 314 |
| | 372 வைத்தீஸ்வரா ஓரியண்டல் உயர்நிலைப்பள்ளி, மேட்டூர் அணை .. .. .. | 311 |
| 14 கோவை மாவட்டம் | 373 வி. எல். பி. ஜானகியம்மாள் மகளிர் உயர்நிலைப் பள்ளி, குனியமுத்தூர். | 211 |
| | 374 முருகப்பா செட்டியார் மகளிர் உயர்நிலைப் பள்ளி, திருப்பூர். | 296 |
| | 375 அழகம்மை ஆச்சி மகளிர் உயர்நிலைப்பள்ளி, பொள்ளாச்சி. .. .. .. .. | 340 |
| | 376 எஸ்.சி.எம். மேல்நிலைப் பள்ளி, வதம்பச்சேரி .. | 326 |
| | 377 பரளி உயர்நிலைப் பள்ளி, பரளி .. .. | 320 |
| | 378 அரசு உயர்நிலைப்பள்ளி, அட்டக்கட்டி .. | 271 |
| | 379 எம். என். எம். உயர்நிலைப் பள்ளி, ஜக்கர் பாளையம் .. .. .. .. | 168 |
| | 380 பழனியம்மாள் உயர்நிலைப் பள்ளி, காளியாபுரம். | 205 |
| | 381 மத்திய மேல்நிலைப் பள்ளி, எ. நாகூர்.. .. | 237 |

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | ஒரு இளநிலை உதவியாளர்கூட அனுமதிக்கப்படாத பள்ளியின் பெயர். | மாணவ மாணவியர் எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 14 கோவை மாவட்டம் — தொடர்ச்சி. | 382 அரசு உயர்நிலைப்பள்ளி, பன்னிமடை .. .. | 237 |
| | 383 அரசு உயர்நிலைப் பள்ளி, சிங்காநல்லூர் .. | 260 |
| | 384 மன்பல் உலூம் உயர்நிலைப் பள்ளி, கோவை .. | 335 |
| | 385 ஸ்ரீ கே. கே. நாயுடு நினைவு உயர்நிலைப் பள்ளி, பீளமேடு, கோவை .. .. .. | 223 |
| | 386 சி. எம். எஸ். உயர்நிலைப் பள்ளி, கோவை .. | 227 |
| 15 பெரியார் மாவட்டம். | 387 கே. ஜி. மகளிர் உயர்நிலைப் பள்ளி, அல்லூர் | 312 |
| | 388 கார்மல் மகளிர் உயர்நிலைப் பள்ளி காங்கேயம். | 346 |
| | 389 புனித அமல அன்னை மகளிர் உயர்நிலைப்பள்ளி, வெள்ளங்கோயில். .. .. .. | 321 |
| | 390 கஸ்தூரிபா கிராம மகளிர் உயர்நிலைப் பள்ளி, கஸ்தூரிபாகிராம் .. .. .. | 268 |
| | 391 அரசு உயர்நிலைப் பள்ளி, பெத்தம்பாளையம். | 150 |
| | 392 அரசு உயர்நிலைப் பள்ளி, சேனியம்பாளையம் | 161 |



| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | ஒரு இளநிலை உதவியாளர்கூட அனுமதிக்கப்படாத பள்ளியின் பெயர். | மாணவ மாணவியர் எண்ணிக்கை |
|---|---|---|
| 15 பெரியார் மாவட்டம் — தொடர்ச்சி. | 393 அரசு உயர்நிலைப் பள்ளி, என். சின்னகவுண்டன்வலசு .. .. .. | 160 |
| | 394 வி.மு.கே.த.வி. மேல்நிலைப்பள்ளி, தாயம்பாளையம் .. .. .. | 620 |
| | 395 மாணிக்கசாமி நாயுடு உயர்நிலைப் பள்ளி, கோவிந்தர்புரம் .. .. .. | 294 |
| | 396 அருள்நெறி திருப்பணி மன்ற உயர்நிலைப் பள்ளி, ஈரோடு .. .. .. | 279 |
| | 397 அரசு உயர்நிலைப் பள்ளி, நெரிஞ்சிப்பேட்டை. | 173 |
| | 398 ஷை மலையப்பாளையம் | 196 |
| | 399 ஷை ஓடத்துறை .. | 179 |
| | 400 ஷை எ. செம்புலிச்சாம்பாளையம் .. .. .. | 177 |
| | 401 கஸ்தூரிபா உயர்நிலைப்பள்ளி, இராசன் நகர் .. | 250 |
| [illegible] உதகை மாவட்டம் .. | 402 புனித மைக்கேல் மகளிர் உயர்நிலைப் பள்ளி, கேத்தி .. .. .. | 424 |
| | 403 சேக்ரட் ஹார்ட் மகளிர் உயர்நிலைப்பள்ளி, உதகை. .. .. .. | 234 |
| | 404 அரசு உயர்நிலைப் பள்ளி, கட்டபெட்டு .. | 269 |
| | 405 ஷை தொரை ஹட்டி .. | 152 |
| | 406 ஷை கெங்கரை .. | 81 |
| | 407 சாந்தி விஜயா உதவிபெறும் உயர்நிலைப்பள்ளி, மசினகுடி. .. .. .. | 112 |

## இணைப்பு II.

[126ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

அரசு மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் தற்காலிக முதுகலைப்பாட ஆசிரியர்களில் தகுதி உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வுகள் வழங்க பள்ளிக் கல்வி இயக்குனரால் அறிவுரைகள் 5—11—1981-ல் வழங்கப்பட்டு, அதன்படி தகுதி உள்ள ஆசிரியர்களுக்கு சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர்களால் ஊதிய உயர்வுகளும் வழங்கப்பட்டுள்ளன.

பின்னர், சில ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க அருகதை நிர்ணயம் செய்ய இயலவில்லையென சில தலைமையாசிரியர்கள் ஐயம் எழுப்பியதால் பள்ளிக் கல்வி இயக்குனரால் முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு 13—9—1982 அன்று உரிய அறிவுரைகள் மீளவும் வழங்கப்பட்டு, இத்தகைய ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கும் பொருட்டு, அருகதைச் சான்று நியமன அலுவலரால் (இணைய இயக்குநர், மேல்நிலைக்கல்வி) வழங்கப்படுவதற்கு ஏதுவாக படிவம் அமைத்து கருத்துருக்கள் கோரப்பட்டன. இவ்வாறு வழங்கப்படும் அருகதைச் சான்றுகளின் அடிப்படையில் தலைமையாசிரியர்களால் ஊதிய உயர்வுகள் வழங்கப்படுகின்றன.

தற்காலிக ஆசிரியர்களின் சார்பில் கருத்துருக்கள் முதன்மைக் கல்வி அலுவலர்களிடம் பெறப்பட்டு, அருகதைச் சான்றுகளும் மேல்நிலைக்கல்வி இணை இயக்குநரால் உடனுக்குடன் வழங்கப்பட்டுள்ளது. சில ஆசிரியர்கள் வெளி மாநில பல்கலைக் கழகத்தின் பட்டச் சான்றுகள் பெற்றுள்ளனர். இத்தகைய ஆசிரியர்களின் பட்டச் சான்றுகளை சென்னைப் பல்கலைக் கழகத்தின் கருத்தைப் பெற்று, மறு மதிப்பீடு செய்யப்பட்ட பின்பு, இவர்களுக்கு அருகதைச் சான்று வழங்கப்பட வேண்டியுள்ளது.

எனினும், இன்னும் அருகதைச் சான்று வழங்கப்பட வேண்டிய ஆசிரியர்கள் சார்பில், சான்று வழங்க கருத்துருக்களை அனுப்பிவைக்குமாறு மீளவும், முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு சுற்றறிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் தகவல் பெறப்படாத தலைமை ஆசிரியரிடமிருந்து உடனடியாக கருத்துருக்களை பெற்றனுப்புமாறும் கோரப்பட்டுள்ளது.

எனவே, இன்னும் அருகதைச் சான்று வழங்கப்பட வேண்டிய ஆசிரியர்கள் சார்பில், முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து கருத்துருக்கள் பெறப்பட்டவுடன் விரைவில் அருகதைச் சான்றுகள் வழங்கப்பட்டு ஊதிய உயர்வுகள் வழங்கப்படும்.



## இணைப்பு III

[128ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

ஓரத்தநாடு அரசு கல்வியியல் கல்லூரி மாணவர்கள் 20—9—1983 முதல் கீழ்க்கண்ட கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தம் செய்தனர்.

(1) மாணவர் சேர்க்கையின் பொழுது கொடுத்த பழைய மாற்றுச் சான்றிதழ் மற்றும் நடத்தை சான்றிதழ்களை திருப்பி அளிக்க வேண்டும்.

(2) கல்லூரி சேர்க்கையின்போது கல்லூரியில் செலுத்திய பல்கலைக் கழகத் தேர்வுக் கட்டணங்களை திருப்பிக் கொடுக்க வேண்டும்.

கல்லூரி முதல்வர் மாணவர்களின் கோரிக்கைகள் குறித்து கல்லூரிக் கல்வி இயக்குநரின் ஆணை பெற்றவுடன் பரிசீலிக்கப்படும் என்று மாணவர்களுக்கு விளக்கமளித்தார். மாணவர்கள் கல்லூரி முதல்வரின் விளக்கத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்தனர். கல்லூரி முதல்வர் கல்லூரிக் குழுவைக் கூட்டினார். கல்லூரிக் குழுவின் தீர்மானப்படி கல்லூரியும், விடுதியும் மூடப்பட்டன.

கல்லூரியை மீளத் திறக்க முதல்வர் எடுத்த நடவடிக்கைகள்:—

1. சான்றிதழ்கள் வழங்குவது குறித்து இயக்குநர் அவர்கள் ஆணை வேண்டப்பட்டது.

2. மாணவர் அமைதியின்மையில் ஈடுபட்ட மாணவர் தலைவர்களில் ஐவரின் பெற்றோர்கள் கல்லூரி முதல்வரைச் சந்திக்குமாறு கல்லூரி முதல்வரின் 22—9—1983 நாளைய கடிதத்தில் கோரப்பட்டனர். ஒரே ஒரு பெற்றோர் மட்டும் முதல்வரை சந்தித்தார்.

3. மாணவர்களுக்கு அறிவுரை கூறுமாறு மாணவர்களின் பெற்றோர்களை கல்லூரி முதல்வர் தனது 3—10—1983 நாளைய கடிதத்தில் கோரியுள்ளார். இக்கடிதங்கள் எல்லா மாணவர்களின் பெற்றோர்களுக்கும் அனுப்பப் பட்டுள்ளன.

4. இந்நிலையில் கல்லூரியை 19—10—1983 அன்று மீளத் திறப்பதாக மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. மாணவர்கள் 20—9—1983 முதல் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்தபின் 20—10—1983 அன்று உண்ணா விரதம் இருக்க வந்தனர்.

[1983 நவம்பர் 21

கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள் திரு. அ. சுப்பிரமணியன், திரு. ந. சண்முகசுந்தரம், விடுதி துணை காப்பாளர், திரு. மு. இராமசாமி. ஒரத்தநாடு வட்டாட்சியர், ஒரத்தநாடு காவல் ஆய்வாளர், மாணவர் தலைவர் திரு. செல்வம், திரு. பாலையன் மற்ற மாணவர்கள் முன்னிலையில் 20—10—1983 மாலை அமைதி பேச்சுவார்த்தை நடைபெற்று கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப் பட்டன :—

1. டி.சி., சி.சி., குறித்து கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு மனு செய்து அனுமதி பெற முடிவு செய்யப்பட்டது.

2. கல்லூரி விடுதி 21—10—1983 முதல் செயல்படுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

3. 25—10—1983 அன்று கல்லூரி திறப்பது எனவும் முடிவு செய்யப் பட்டது.

4. எம்.எட். மாணவர்களுக்கு அவர்களுக்குரிய அறையை தொடர்ந்து உபயோகிப்பது என முடிவு செய்யப்பட்டது.

5. தேர்வுக் கட்டணத்தை திருப்பி அளிப்பதாக முடிவு செய்யப்பட்டது.

6. விடுதி மீட்டர் குறித்து பொதுப்பணித்துறைக்கு எழுதுவதென முடிவு செய்யப்பட்டது.

கூட்ட இறுதியில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளுக்கு ஏற்ப 21—10—1983 முதல் கல்லூரி விடுதியும், 25—10—1983 முதல் கல்லூரியும் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.



## இணைப்பு IV

[129-ஆம் பக்கத்தில் இனம் 5 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L.A. BILL No. 17 OF 1983.

(As passed by the Assembly)

*A Bill to amend the Bharathiyar University Act,* 1981.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fourth Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Bharathiar University (Amendment) Act, 1983.

(2) Sections 2 and 4 shall be deemed to have come into force on the 7th January 1982 and section 3 shall be deemed to have come into force on the 1st April 1982.

2. *Amendment of section 5, Tamil Nadu Act 1 of 1982.*—In the Bharathiar University Act, 1981 (Tamil Nadu Act 1 of 1982) (hereinafter referred to as the principal Act) to sub-section (1) of section 5, the following proviso shall be added, namely:—

"Provided that this sub-section shall not apply to the Defence Services Staff College, Wellington, the Nilgiris district.".

3. *Amendment of section 60, Tamil Nadu Act 1 of 1982.*—In sub-section (1) of section 60 of the principal Act, after the expression "sub-sections (2) to (9)", the expression "and section 60-A" shall be inserted.

4. *Insertion of new section 60-A in Tamil Nadu Act I of 1982.*—After section 60 of the principal Act, the following section shall be inserted, namely:—

"60-A. *Tamil Nadu Act VII of 1923 to apply to the Defence Services Staff College, Wellington, the Nilgiris district.*—Notwithstanding anything contained in section 60 or any other provisions of this Act, the Defence Services Staff College, Wellington, the Nilgiris district, which is a college within the University area and which immediately before the

notified date was affiliated to the University of Madras shall not be deemed to be a college affiliated to the Bharathiar University under this Act, but shall continue to be affiliated to the said University of Madras and accordingly,—

(i) all the provisions of the Madras University Act, 1923 (Tamil Nadu Act VII of 1923) and the statutes, ordinances and regulations made thereunder shall continue to apply to the said college; and

(ii) nothing in this Act except this section shall apply to the said Defence Services Staff College, Wellington, the Niligiris district.".

5. *Repeal and saving.*—(1) The Bharathiar University (Amendment) Ordinance, 1983 (Tamil Nadu Ordinance 9 of 1983) is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act.



இணைப்பு V

[173-ஆம் பக்கத்தில் இனம் 5(2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L.A. BILL No. 39 OF 1983.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Madras University Act, 1923 and the Madurai-Kamaraj University Act, 1965.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fourth year of the Republic of India as follows:—

## PART I.

### PRELIMINARY.

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Madras University and Madurai-Kamaraj University (Amendment) Act, 1983.

(2) It shall be deemed to have come into force on the 19th August 1983.

## PART II.

### AMENDMENT TO THE MADRAS UNIVERSITY ACT, 1923.

2. *Insertion of new section 6-A in Tamil Nadu Act VII of 1923.*—After section 6 of the Madras University Act, 1923 (Tamil Nadu Act VII of 1923) (hereinafter referred to as the 1923 Act), the following section shall be inserted, namely:—

"6-A. *Colleges in the University area not to be affiliated to any other University and recognition of institutions by the University.*—(1) No college within the University area shall be affiliated to any University established by or under any law in force other than the University of Madras.

(2) No institution affiliated to, or associated with, or maintained by any other University established by or under any law in force shall be recognised by the University for any purpose except with the prior approval of the Government and the concerned University.

(3) Notwithstanding anything contained in any other law for the time being in force, any affiliation or recognition granted by any other University established by, or under any law in force to any institution within the University area prior to the 19th August 1983, shall be deemed to have been withdrawn on and from the said date.

*Explanation.*—For the purpose of this section, "University area" means the area comprising the districts of Madras, Chengalpattu, North Arcot, South Arcot, Salem and Dharmapuri in the state of Tamil Nadu.

## PART III.

### AMENDMENT TO THE MADURAI—KAMARAJ UNIVERSITY ACT, 1965.

5. *Amendment of section 5, Tamil Nadu Act 33 of 1965.*—Section 5 of the Madurai-Kamaraj University Act, 1965 (Tamil Nadu Act 33 of 1965) (hereinafter referred to as the 1965 Act), shall be renumbered as sub-section (1) of that section and after sub-section (1) as so renumbered, the following sub-sections shall be inserted, namely:—

"(2) No institution affiliated to, or associated with, or maintained by any other University established by or under any law in force shall be recognised by the University for any purpose except with the prior approval of the Government and the concerned University.

(3) Notwithstanding anything contained in any other law for the time being in force, any affiliation or recognition granted by any other University established by, or under any law in force, to any institution within the University area, prior to the 19th August 1983, shall be deemed to have been withdrawn on and from the said date.



4. *Repeal and saving.*—(1) The Madras University and Madurai-Kamaraj University (Amendment) Ordinance, 1983 (Tamil Nadu Ordinance 10 of 1983), is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the 1923 Act or the 1965 Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the 1923 Act or the 1965 Act, as the case may be, as amended by this Act.

[175-ஆம் பக்கத்தில் இனம் 5 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

இணைப்பு VI

## L.A. BILL No. 50 OF 1983.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Act, 1979.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fourth year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Second Amendment Act, 1983.

(2) It shall be deemed to have come into force on the 9th September 1983.

2. *Amendment of section 4, Tamil Nadu Act 60 of 1979.*—In clause (a) of sub-section (3) of section 4 of the Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Act, 1979 (Tamil Nadu Act 60 of 1979) (hereinafter referred to as the principal Act) for the expression "four years", the expression "four years and six months" shall be substituted.

3. *Repeal and saving.*—(1) The Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Second Amendment Ordinance, 1983 (Tamil Nadu Ordinance 11 of 1983) is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act.



இணைப்பு VII

[208 ஆம் பக்கத்தில் இனம் 5 (4)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L.A. BILL No. 51 OF 1983.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Act, 1977.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fourth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Second Amendment Act, 1983.

(2) It shall be deemed to have come into force on the 9th September 1983.

2. *Amendment of section 4, President's Act 5 of 1977.*—In clause (a) of sub-section (3) of section 4 of the Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Act, 1977 (President's Act 5 of 1977) (hereinafter referred to as the principal Act), for the expression "six years and eight months", the expression "seven years and two months" shall be substituted.

3. *Repeal and saving.*—(1) The Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Second Amendment Ordinance 1983 (Tamil Nadu Ordinance 12 of 1983), is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act.

இணைப்பு VIII

[209 ஆம் பக்கத்தில் இனம் 5 (5)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L.A. BILL No. 52 OF 1983.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Panchayats Act*, 1958

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fourth year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Panchayats (Second Amendment) Act, 1983.

(2) It shall be deemed to have come into force on the 9th September 1983.

2. *Amendment of section* 155, *Tamil Nadu Act XXXV of* 1958.—In section 155 of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958) (hereinafter referred to as the principal Act), in sub-section (1), in clause (*b*) in the proviso, for the expression " six years and two months ", the expression " six years and eight months" shall be substituted.

3. *Repeal and saving.*—(1) The Tamil Nadu Panchayats (Second Amendment) Ordinance, 1983 (Tamil Nadu Ordinance 13 of 1983) is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act.



இணைப்பு IX

[210 ஆம் பக்கத்தில் இனம் 5 (6)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L.A. BILL No. 54 OF 1983.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Madurai City Municipal Corporation Act*, 1971.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fourth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Madurai City Municipal Corporation (Amendment) Act, 1983.

(2) It shall be deemed to have come into force on the 13th September 1983.

2. *Amendment of section* 7, *Tamil Nadu Act* 15 *of* 1971.—In sub-section (1) of section 7 of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971) (hereinafter referred to as the principal Act), for the words, "five members", the words " six members" shall be substituted.

3. *Repeal and saving.*—(1) the Madurai City Municipal Corporation (Amendment) Ordinance, 1983 (Tamil Nadu Ordinance 14 of 1983), is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance, including any notification, rules or orders issued, shall be deemed to have been done or taken or issued under the principal Act as amended by this Act.

## இணைப்பு X

[212 ஆம் பக்கத்தில் இனம் 5 (7)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### L.A. BILL No. 53 OF 1983.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Panchayats Act, 1958.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fourth Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Panchayats (Third Amendment) Act, 1983.

(2) It shall come into force at once.

2. *Amendment of section 36-AB, Tamil Nadu Act XXXV of 1958.*—In section 36-AB of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958), including the proviso thereto, for sub-section (3) the following sub-sections shall be substituted, namely:—

"(3) After the expiry of fifteen days from the date of the publication of the draft notification and after considering the objections, if any, forwarded to the Government by the authorities referred to in sub-section (2), the Government shall confirm the draft notification, if there is no modification. The notification as so confirmed shall be finally published in the *Tamil Nadu Government Gazette* under section 30-A or section 30-B or section 36-AA or section 36-AAA, as the case may be.

(4) (*a*) Where in pursuance of any objection, the draft notification published under sub-section (1) is proposed to be modified, the draft of the modified notification shall be published in the *Tamil Nadu Government Gazette* and also in such other manner as the Government may deem fit.



(*b*) Within fifteen days from the date of the publication of the draft of the modified notification in the *Tamil Nadu Government Gazette*, any objection to anything contained in the draft of the modified notification so published shall be submitted to the Government through such authority as may be specified in the said notification.

(*c*) After the expiry of fifteen days from the date of the publication of the draft of the modified notification and after considering the objections if any, the Government shall confirm the said notification, if there is no further modification. The notification as so confirmed shall be finally published in the *Tamil Nadu Government Gazette* under section 30-A or section 30-B or section 36-AA or section 36-AAA, as the case may be.

(*d*) Where the modified notification is proposed to be further modified, the provisions in clauses (*a*), (*b*) and (*c*) shall apply and accordingly the procedure in the said clauses shall be followed in respect of each such subsequent modified notification.".

இணைப்பு XI

[213 ஆம் பக்கத்தில் இனம் 5 (8)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L.A. BILL No. 38 OF 1983.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fourth year of the Republic of India as follows:—

1. *Short title and Commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment and Validation) Act, 1983.

(2) Section 3 shall be deemed to have come into force on the 1st June 1982 and the rest of the Act shall come into force at once.

2. *Amendment of section 4, Tamil Nadu Act 22 of 1959.*—In section 4 of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Tamil Nadu Act 22 of 1959) (hereinafter referred to as the principal Act), for the words "The Government may, by notification, exempt", the words "The Government may, by notification, exempt whether prospectively or retrospectively," shall be substituted.

3. *Insertion of new section 36-B in Tamil Nadu Act 22 of 1959.*—After section 36-A of the principal Act, the following section shall be inserted, namely :—

"36-B. *Utilisation of surplus funds for making contribution towards any fund for the purpose of feeding the poor, etc.*— Notwithstanding anything contained in sections 36, 36-A and in any other provision of this Act and subject to such conditions and restrictions as may be prescribed, the trustee of a religious institution may, in addition to the purposes mentioned in sections



36 and 36 A, appropriate any portion of the surplus fund referred to in section 36 for making any contribution towards any fund constituted for the purpose of—

(i) feeding the poor; or

(ii) constructing any building, shed or centre for feeding the poor.

4. *Validation.*—Notwithstanding anything contained in any judgment, decree or order of any court or other authority, any appropriation of the surplus fund referred to in section 36 of the principal Act made during the period commencing on the 1st June 1982 and ending with the date of publication of this Act in the *Tamil Nadu Government Gazette*, by the trustee of a religious institution for making contribution towards any fund mentioned in section 36-B of the principal Act, shall for all purposes be deemed to be and to have always been validly made in accordance with law, as if section 3 had been in force at all material times when such appropriation was made.